Sangathamil

# சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 57 | சர்வதேச மின் செய்தித்தாள் | 15 செப்டம்பர் 2023





**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 · 647-989-6298
647-748-6444 · www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

RAMACHANDRAN LAW
Professional Corporation
Family Law
Real Estate
Civil Litigation
Wills & Estates
Corporate Law
BARRISTER & SOLICITOR
VITHU RAMACHANDRAN
J.D., B.Com (Honours) | LSO 70103E
416.902.8225
Vithu@Ramachandran.Law
WWW.RAMACHANDRAN.LAW
908-305 Milner Ave. Toronto ON M1B 3V4

Muhunthan Sivathasan (Danny)
Printers Inc
Design, Print & Die Cutting
5040 Maingate Drive, Unit# 06
(Eglinton & Tomken)
Mississauga ON L4W 1X5
905 629 8089
437 423 5460
silverprinthouse@gmail.com

RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kenndy Rd, Unit 03
Scarborough ON M1P 2L5
Office: 416.270.1111
Fax: 416.270.7000
Kajenpillai@gmail.com
www.remaxace.com
Kajan Kasippillai
Sales Representative
Dir: 416.930.4608

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $99.99 +
OIL CHANGE $49.99 +
USED TIRE $59.99 +
BRAKES JOB $249.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
JRSAUTOTECH@HOTMAIL.CA

# விளம்பரத்துக்கு அழையுங்கள்:

# 437.345.4203




## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**தான்**
**நேசித்த மக்களுக்காக,**
**தான்**
**நேசித்த மண்ணுக்காக,**
**ஒருவன்**
**எத்தகைய உயர்ந்த**
**உன்னதமான தியாகத்தைச்**
**செய்யமுடியுமோ**
**அந்த அற்புதமான**
**அர்ப்பணிப்பைத்தான்,**
**திலீபன்**
**செய்திருக்கிறான்.**







# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**
437 345 4203
**மின்னஞ்சல்** (Email)
sangathamilcanada@gmail.com
**இணையத்தளம்** (Website)
www.sangathamil.ca


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# திலீபன் இப்போதும் பசியோடுதான் இருக்கிறான்...

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் முதலாம் நாள்

**ஈகைப் பயணம் தொடர்வதற்கான ஆரம்பம்...**

காலை ஒன்பது மணியிருக்கும் பாடசாலைப் பிள்ளைகள் வரிசையாக வந்து திலீபனை சந்தித்து விடைபெறுகிறார்கள். எல்லோருடனும் அவர் அன்பாக பேசுகிறார். வோக்கிடோக்கியில் தலைவருடன் சில நிமிடங்கள் பேசுகிறார். பேசிவிட்டு அந்த மண்ணிற வாகனத்தை நோக்கி நடக்கிறார். எல்லோரும் பின் தொடர்ந்தோம். ஆம் அவரது ஈகைப் பயணம் ஆரம்பமாகிவிட்டது. மிக மிடுக்காக நடந்து முன் ஆசனத்தில் போய் ஏறினார்.

வரது பக்கத்தில் சொர்ணம், அன்ரன் மாஸ்ரர், முரளி. பின் ஆசனத்தில் காசி ஆனந்தன், ராஜன், நான் வேறும் சிலர். வாகனம் நல்லூர் கந்தசாமி கோவிலை நோக்கி ஒடுகிறது. பாதையின் இரு பக்கத் திலும் மாணவர்களும், பொதுமக்களும் கையசைத்து வழியனுப்புகிறார்கள். நல்லூர் கந்தசாமி கோவிலை சென்றடைந்தோம். வாகனம் நின்றது. திலீபன் உண்ணாவிரத மேடை நோக்கிச் செல்கிறார். நாங்களும் பின்னால் போய்க் கொண்டிருக்கிறோம்.

### தமிழீழ தாயின் எதிர்பாராத ஆசியினை பெறுகின்றார்



எதிர்பாராத விதமாக அந்த நிகழ்ச்சி நடந்தது. வயதான ஓர் அம்மா. தள்ளாத சிவந்த நிற மேனி. பழுத்த தலை. ஆனால் ஒளிதவளும் கண்களில் கண்ணீர் மல்க திலீபனை மறித்து தன் கையில் சுமந்து வந்த அர்ச்சனை சரையில் இருந்து நடுங்கும் விரல்களால் திருநீற்றை எடுத்து திலீபனின் நெற்றியில் பூசுகிறார். சுற்றியிருந்த கமராக்கள் எல்லாம் அந்த காட்சியை கிளிக் செய்தது. வீரத்திலக மிடுகிறார் அந்தத் தாய். தாயற்ற திலீபன் அந்த தாயின் பாச உணர்வில் மூழ்கிப்போனார்.

### போராளி பிரசாத் இன் ஆரம்ப உரை (மேஜர் பிரசாத்)



காலை மணி 9.45 உண்ணாநோன்பு

மேடையிலே நாற்காலியிலே திலீபனை அமர வைத்தோம். திலீபனின் அருகே நான், ராஜன், பிரசாத், சிறி ஆகியோர் அமர்ந்திருந்தோம். திலீபனின் ஈகைப் பயணம் ஆரம்பமாகிவிட்டது. அன்று பக்கத்திலிருந்த மேடையில் பிரசாத்தின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. திரு. நடேசன், கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் திலீபனின் உண்ணா விரதம் எதற்காக ஆரம்பிக்கப்படுகிறது என்பதனைபற்றி விளக்கம் அளித்தார்கள். தமிழ் மக்களினதும், தமிழர் தாயகத்தினதும் உரிமைகளை பேணும் நோக்கமாக இந்தியமக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்ட ஜந்து கோரிக்கைகளும் விளக்கப்பட்டன.

### ஐந்து அம்ச கோரிக்கை

1) பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இன்னமும் தடுப்புக்காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்படல் வேண்டும்.

2) புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நாடாத்தப்படும் சிங்கள குடி யேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

3) இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்படல் வேண்டும்.

4) வடகிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

5) இந்திய அமைதிப்படையின் மேற் பார்வையில் ஊர்காவல் படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திரும்பப்பெறப்பட்டு தமிழ்க்கிராமங்கள், பள்ளிக் கூடங்களில் குடி கொண்டுள்ள இராணுவ , பொலிஸ் நிலையங்கள் மூடப்படவேண்டும்.

பிரசாத் அவர்களால் மேற்படி ஜந்து கோரிக்கைகளும் வாசிக்கப்பட்டன. இதே கோரிக்கையை இரண்டு நாட்ளுக்கு முன்பு இந்திய உயர்ஸ்தானிகரின் கையில் நேரடியாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி 24 மணித்தியால அவகாசமும் விடுதலைப்புலிகளால் வழங் கப்பட்டிருந்தது. ஆனால் 15 திகதி வரையும் தூதுவரிடமிருந்து எந்த பதில்களும் கிடைக் காத காரணத்தினால் சாகும் வரை உண்ணா நோன்பும் மறியல் போராட்டமும் நடத்துவது என தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதேசப்



பொறுப்பாளர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

### வாசிப்பதற்கு புத்தகங்கள் கேட்ட திலீபன்

அதன்படிதான் இந்த ஈகைச்செம்மலின் ஈகைப்பயணம் ஆரம்பித்தது. பிற்பகல் 2.00 மணி இருக்கும் திலீபன் கம்பீரமாக வீற்றிருந்தார். உண்ணாநோன்பு ஆரம்பிக்கப்பட்டு இரண்டு மணித்தியாலங்கள் முடிந்து விட்டன. இரண்டாவதுமேடையிலே நடைபெற்றுக் கொண்டிருந்த உண்ணாநோன்பு விளக்கக் கூட்டம் முடிவடைந்து விட்டது. படிப்பதற்கு புத்தகம் வேண்டும் என என்காதில் குசுகுசுத்தார் திலீபன். நான் ராஜனிடம் சொன்னேன்.

15 நிமிடங்களில் பல அரிய நூல்கள் மேடைக்கு வந்தன. விடுதலைப் போராட்டங்கள் பற்றி அறிவதற்கு திலீபனுக்கு ஆர்வங்கள் எப்போதும் உண்டு. பிடல் காஸ்ரோ, சேகுவரோ, கொஜீமின். யசிர் அரபாத் போன்றவர்களின் வாழ்க்கையை பற்றிய நூல்களை நேரம் கிடைக்கும் போதெல்லாம் படிப்பார். பலஸ்தீன மக்களின் வாழ்க்கையை பற்றி படிப்பதென்றால் அவருக்கு பலாச்சுளை மாதிரி பிடிக்கும். பலஸ்தீன கவிதை என்ற நூலை அவரிடம் கொடுத்தேன்.

### மாணவர்கள் இளையோர்களின் உணர்ச்சி கவிதைகள்

அதை மிகவும் ஆர்வத்துடன் படிக்கத் தொடங்கினார். மாலை ஜந்து மணிக்கு பக்கத்து மேடையில் மீண்டும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயிற்று. பாடசாலை மாணவிகள் போட்டி போட்டுக்கொண்டு கவிதைகளை வாசிக்கத் தொடங்கினர். சுசிலா என்ற மாணவி மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் தனது கவிதையை வாசித்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு கட்டத்தில் அவர் அழுதேவிட்டார். “அண்ணா திலீபா இளம் வயதில் உண்ணாமல் தமிழினத்திற் காக நீ தவமிருக்கும் கோலத்தைக் காணும் தாய்க்குலத்தின் கண்களில் வடிவது செந்நீர்.” சுசிலாவின் விம்மல் திலீபனின் கவனத்தை திருப்பியது.

கவிதைத்தொகுப்பை மூடிவைத்து விட்டு கவிதை மழையில் நனைய தொடங்கினார். அவர் விழிகளில் முட்டிய நீர் தேக்கத்தை ஒரு கணம் என் கண்கள் காணத்தவற வில்லை. எத்தகைய இளகிய மனம் அவருக்கு இந்த இளம் குருத்து இன்னும் எத்தனை நாட்களுக்கு ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் வாடி வதங்க போகிறது. அகிம்சை போராட்டத்திற்கே ஆணி வேராக திகழ்ந்த அண்ணல் காந்தியடிகள் கூட தன்னுடைய உண்ணா விரத போராட்டங்களை நீராகாரம் அருந்தித் தானே நடத்தினார்.

### திலீபனின் ஈகைப்பயணம் ஓர்...

ஐரிஸ் போராட்ட வீரர் பொபிஸ் ஆன்ஸ் என்ன செய்தார்? சிறைக்குள் நீராகாரம் அருந்தித் தான் உண்ணாநோன்பு போராட்டத்தை ஆரம்பித்து உயிர் நீத்தார். இந்த உண்ணா நோன்பு அரசின் தலையீட்டினால் வெற்றி பெறுமானால் அந்த வெற்றி திலீபனையே சாரும். அதுபோல் இந்திய அரசு நடவடிக்கை எடுக்காமல் இறுதி உண்ணாநோன்பு இருந்தே திலீபன் இறக்க நேரிட்டால் அதில் கிடைக்கும் தோல்வியும் திலீபனுக்கு கிடைக்கும் மாபெரும் வெற்றிதான்.

### நல்லூர் ஓர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம்

உலகின் புதிய அத்தியாயம் ஒன்றின் சிருஸ்டி கர்த்தா என்ற பெருமை அவனையே சாரும். ஆனால் அதற்காக எங்கள் குல விளக்கை நாமே அணைக்க வேண்டுமா? இறைவா திலீபனை காப்பாற்றிவிடு. கூடியிருந்த மக்கள் நல்லூர் கந்தனிடம் அடிக்கடி இப்படி வேண்டிக் கொள்கிறார்கள். இதை நான் அவதானித்தேன். பழம் தமிழ் மன்னனாகிய சங்கிலியன் அரசாண்ட நல்லூர் அரச தானியிலே, தமிழ்க் கடவுள் ஆகிய குமரனின் சந்நிதியில் ஓர் இளம் புலி உண்ணாமல் துவண்டு கிடந்தது. ஒரு நல்ல முடிவு கிடைக்க வேண்டும். இல்லையேல் உலகில் நீதி செத்து விடும். எனக்குள் இப்படி எண்ணிக்கொண்டேன்.

அப்போது ஓர் மேடையில் முழங்கிக் கொண்டிருக்கிறான். திலீபன் அண்ணாவின் கோரிக்கைகள் மட்டுமல்ல, தமிழ் மக்களின் கோரிக்கைகளும் இதுதான் இதை நிறை வேற்ற வேண்டியது இந்திய அரசின் கடமையாகும். அவர் தமிழீழம் தாருங்கள் என்பதற்காக உண்ணாவிரதம் இருக்க வில்லையே. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப் பட்டுள்ள ஜந்தே ஜந்து கோரிக்கைகளை நிறைவேற்றும்படி வற்புறுத்தித்தான் சாகும் உண்ணா நோன்பை ஆரம்பித்திருக்கிறார்.

### தமிழீழ தேசிய தலைவர் திலீபனை பார்க்க வருகின்றார்



இந்தக்காரணத்தாலாவது இந்திய அரசு இதை நிறைவேற்ற தவறுமானால் திலீபன் அண்ணா இறப்பது நிச்சயம். திலீபன் அண்ணா இறந்தால் ஒரு பூகம்பம் இங்கே வெடிக்கும். ஒரு புரட்சி இங்கே வெடிக்கும். இதுதான் என்னால் கூற முடியும். அவரின் பேச்சு முடிந்ததும் அங்கு கூடியிருந்த மக்கள் அப்பேச்சை வரவேற்பதுபோல் கைகளை தட்டி ஆரவாரித்தனர். அந்த ஒலி அடங்க வெகு நேரம் பிடித்தது. அன்று இரவு 11.00 மணியளவில் தலைவர் பிரபாகரன் திலீபனை பார்ப்பதற்காக மேடைக்கு வருகிறார்.

அவருடன் சொர்ணம், இம்ரான், அஜித், சங்கர், ஜொனி இப்படி பலரும் வருகின்றனர். வெகுநேரம் வரை தலைவருடன் உரையாடிக் கொண்டிருந்தார் திலீபன். யாரையும் அதிக நேரம் பேச அனுமதிக்க வேண்டாம் என்று போகும் போது என்னிடம் கூறிவிட்டுச் சென்றார் தலைவர். நீர், உணவு உட் கொள்ளாத ஒருவர் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தால் விரைவில் களைப்படைந்து விடுவார். இதனால்தான் தலைவர் அப்படி கூறிவிட்டுச் சென்றார்.

### பத்திரிகையாளர் வருகை

அன்றிரவு பத்திரிகை நிருபர்களும் பத்திரிகை துறையை சார்ந்தவர்களும் திலீபனை பார்க்க மேடைக்கு வந்திருந்தனர். முரசொலி ஆசிரியர் திருச்செல்வம், ஈழமுரசை சேர்ந்த பசீர் போன்றோருடன் திலீபன் மனம் திறந்து பேசினார். அவரை கட்டுப்படுத்த எனக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அதிகம் பேசி உடம்பை கெடுத்துக்கொள்ள போகிறாரே என்பதால் அவரை அன்பாக கடிந்து கொண்டேன். இரவு 11.30 மணியளவில் கஸ்டப்பட்டு சிறுநீர் கழித்து விட்டு 12.00 மணியளவில் படுக்கைக்குச் சென்றார்.

முதல் நாள் முடிவு, அதிகாலை 1.30 இற்கு உறங்கினார்.

அவர் ஆழ்ந்து உறங்கத்தொடங்கியபோது நேரம் 1.30 மணி. அவரின் நாடித்துடிப்பை பிடித்து அவதானித்தேன். நாடித்துடிப்பு 88. சுவாசத்துடிப்பு 20. அவர் சுய நினைவோடு இருக்கும் போது வைத்திய பரிசோதனைக்கு அனுமதிக்க மாட்டார். தனக்கு உயிர் மீது ஆசை இல்லை என்பதால் பரிசோதனை தேவை இல்லை என்று கூறுவார். அவர் விருப்பத்திற்கு மாறாக உணவோ, நீரோ, மருத்துவமோ இறுதிவரை அளிக்கக்கூடாது என்று முதல் நாளே என்னிடம் சத்தியம் வாங்கிவிட்டார். மேடைக்கு முன்பாக மகளிர் அமைப்பு உறுப்பினர்களும், பொதுமக்களும் கொட்டக் கொட்ட கண்விழித்துக் கொண்டிருந்தனர்.

இந்த ஈகைச்சுடரின் உண்ணாநோன்பு போராட்டத்தின் முதல்நாள் முடிவு பெற்றது.

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் இரண்டாம் நாள்

இந்த நாளில் ஈகைச்சுடர் அவர்கள் எந்த நோக்கங்களிற்காக தனது உயிரை உருக்கி யாழ் நல்லூர் கோவில் முன்பாக தனது உயிரை ஆகுதியாக்கினாரோ அந்த நோக்கங்கள் தற்போதய நிலையிலும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றது.

அன்று சிங்கள அரசாங்கம் பாரத தேசத்தினை வைத்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை ஓர் சூழ்ச்சிபொறிக்குள் தள்ளியதோ அவ்வாறுதான் இந்த ஆண்டிலும் சிங்கள அரசு, இந்திய அரசினை மட்டுமன்றி சர்வதேச நாடுகளையும் தனது பயங்கரவாதம் என்ற சூழ்ச்சி திட்டத்தில் சிக்குற செய்து எமது விடுதலை போராட்டத்தினை இக்கட்டான சிக்கலிற்குள் தள்ளி விட்டிருக்கின்றது சிங்கள பௌத்த பேரினவாதம்.

இந்த நிலையில் ஈகைச்சுடரின் முதல் நாள் பயணத்தில் (1987 செப்டெம்பர் 15) முக்கியமான விடயங்கள் இங்கு தரப்படுகின்றன. 1987 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 16ம் திகதி. இது திலீபனுடன் இரண்டாம் நாள். அன்று அதிகாலை 5.00 மணிக்கே திலீபன் உறக்கத்தைவிட்டு எழுந்து விட்டார். முகம் கழுவி தலைவாரிக்கொண்டார். சிறுநீர் கழித்தார் ஆனால் மலம் இன்னும் போக வில்லை. அவர் முகம் சோகமாக காணப்பட்டாலும் அதைக்காட்டிக்கொள்ளாமல் எல்லோருடனும் சிரித்து பேசிக்கொண்டிருந்தார்.

சகல தினசரி பத்திரிகைகளையும் ஒன்று விடாமல் படித்து முடித்தார். பத்து மணியளவிலே பக்கத்து மேடையில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. நிகழ்ச்சிகளுக்கு தேவர் தலைமை தாங்கிக்கொண்டிருந்தார். கவிதைகளை படிப்பதற்காக இளம் சந்ததியினர் முண்டியடித்து தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண்டிருந்தனர். நிதர்சனம் ஒளி பரப்பாளர்களின் ஒளிப்பதிவுக் கருவிகள் நாலா பக்கமும் சுழன்று படம்பிடித்துக் கொண்டிருந்தன.

மேடைகளில் கவிதைகள் முழங்கிக் கொண்டிருந்போது திலீபன் என் காதுக்குள் குசுகுசுத்தார். "நான் பேசப்போகிறேன் மைக்கை வேண்டி தாங்கோ வாஞ்சி அண்ண." சாப்பிடாமல் குடிக்காமல் இருக்கிறிங்கள் களைத்து விடுவீர்கள்... என்று அவரை தடுக்க முயன்றேன். "இரண்டு நிமிடம் மட்டும்... நிப்பாட்டி விடுவன். ப்ளீஸ் மைக்கை வாங்கித்தாங்கோ" என்று குரல் தளதளக்க கூறினார். அவரை பார்க்க பரிதாபமாக இருந்தது. கண்கள் குழி விழுந்து, முகம் சோர்ந்து காணப்பட்டாலும் அந்த பசுமையான சிரிப்பு மட்டும் இன்னும் மாறா மல் அப்படியே இருந்தது.

இரண்டு நிமிடத்திற்கு மேல் பேசக்கூடாது என்ற நிபந்தனையுடன் மேடையில் நின்ற தேவரிடம் மைக்கை பெற்றுக் கொடுத்தேன். திலீபன் பேசப்போவதை தேவர் ஒலி பெருக்கியில் அறிவித்ததும் மக்கள் கூட்டம் மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தது. திலீபன் பேசுகிறார். "எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய மக்கள் அனைவருக்கும் வணக்கம். நின்று கொண்டு பேச முடியாத நிலையில் இருப்பதால் இருந்து பேசுகிறேன். நாளை நான் சுயநினைவுடன் இருப்பேனோ என்று தெரியாது அதனால் இன்று உங்களுடன் பேச வேண்டும் என்று விரும்பினேன். நான் எமது இலட்சியத்தில் உறுதியாக இருக்கின்றோம். 650 பேர் வரையில் இன்று வரை சாவடைந்துள்ளோம்.

மில்லர் இறுதியாகப்போகும் போது என்னிடம் ஒரு வரி கூறினான். நான் அவனுடன் இறுதி வரை இருந்தேன். "நான் எனது தாய் நாட்டிற்காக உயிர் துறப்பதை எண்ணும் போது மகிழ்ச்சியும், திருப்தியும் அடைகிறேன். மக்கள் விடுதலை அடையும் காட்சியை என் கண்களால் காண முடியாது என்பதே ஒரே ஏக்கம்" என்று கூறிவிட்டு வெடி மருந்து நிரப்பிய பார ஊர்தியை எடுத்துச்சென்றான். இறந்த 650 பேரும் அனேகமாக எனக்கு தெரிந்துதான் சாவடைந்தார்கள். அதனை நான் மறக்க மாட்டேன். உண்ணாநோம்பு போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு தலைவரின் அனுமதியை கேட்டபோது அவர் கூறிய வரிகள் என் நினைவில் உள்ளன.

திலீபா நீ முன்னால் போ...நான் பின்னால் வருகிறேன் என்ற அவர் கூறினார். இத்தகைய ஒரு தெளிவான தலைவனை தனது உயிரை சிறிதும் மதிக்காத தலைவனை நீங்கள் பெற்று இருக்கிறீர்கள். அந்த மாபெரும் வீரனின் தலைமையில் ஒரு மக்கள் புரட்சி இங்கு வெடிக்கட்டும். அது நிச்சயமாக தமிழீழத்தினை தமிழர்களின் அடிப்படை உரிமைகளை பெற்றுத்தரும். இதனை வானத்தில் இருந்து இறந்த மற்ற போராளிகளுடன் சேர்ந்திருந்து நானும் பார்த்து மகிழ்வேன்.

நான் மனரீதியாக ஆத்மார்த்தமாக எமது மக்கள் விடுதலை அடைவார்கள் என உணர்கிறேன். மகிழ்ச்சியுடனும் பூரண திருப்தியுடனும் உங்களிடமிருந்து விடை பெறுகிறேன். விடுதலைப்புலிகள் உயிரினும் மேலான சிறுவர்களை, சகோதரிகளை, தாய்மார்களை, தந்தையர்களை நினைக்கிறார்கள். உண்மையான உறுதியான இலட்சியம். அந்த இலட்சியத்தினை எமது தலைவருடன் சேர்ந்து நீங்கள் அடையுங்கள் எனது இறுதி விருப்பமும் இதுதான்."

மிகவும் ஆறுதலாக சோர்வுடன் ஆனால் திடமுடன் பேசிய அவரின் பேச்சைக்கேட்டு மக்கள் கண்ணீர் சிந்தினர். அன்றிரவு தலைவர் வந்து திலீபனை பார்த்தார். சோர்வுடன் படுத்திருந்த திலீபனின் தலையை தனது கரங்களால் வருடினார். ஒரு தகப்பனின் அன்பையும் தாயின் பாசத்தையும் ஒன்றாக குழைத்தது போலிருந்தது அந்த வருடல். இரண்டு இமய மலைகளையும் என் கண்கள் விழுங்கிக்கொண்டிருந்தன. இரவு பனிரெண்டு மணிக்கு திலீபன் உறங்கத் தொடங்கினார். நானும் அவர் அருகிலேயே படுத்து விட்டேன்.

திலீபனின் வீட்டில் குணபாலன் என்ற சிறுவன் வேலை செய்வதற்காக இருந்தான். அவனது வறுமை நிலையைக் கண்ட திலீபன் தன் கையில் கிடைக்கும் பணத்தை அவனிடம் அடிக்கடி கொடுப்பார். யாழ். இந்துவில் அவர் படிக்கும்போது, வீட்டுக்கு வரும்போதெல்லாம் குணபாலனுக்காக கைநிறைய "டொபி" களுடன் வருவார். குணபாலனுக்கு ரீ.வி. பார்க்கும் பழக்கம் இருந்தது. தன் வேலைகளை முடித்துவிட்டு இரவு எட்டு மணிக்குப்பின், பக்கத்துவீட்டிற்குச் சென்று அவன் ரீ.வி. பார்ப்பது வழக்கம். குணபாலனுக்காகத் திலீபன் தன் தந்தையிடம் ஒரு ரீ.வி. வாங்கி வைக்குமாறு பலமுறை கெஞ்சிக் கேட்டார்.

இவரது தொல்லை தாங்கமுடியாமல் இராசையா ஆசிரியர் ஒருநாள் ரீ.வி. யை வாங்கி வந்துவிட்டார். குணபாலனும் அன்றிலிருந்து எதுவித சிரமமுமின்றி ரீ.வி. பார்த்து வரத் தொடங்கினான். யார் மீதும் எளிதில் அன்பு வைப்பதிலும், இரக்கம் காட்டுவதிலும் திலீபனுக்கு நிகர் அவரேதான். அதற்கு இது ஒரு நல்ல உதாரணம். திலீபன் யாழ். இந்துவில் படிக்கும் போது அவரது நெருங்கிய நண்பனாக இருந்தவர்களில் கணேசன் என்பவரும் ஒருவர்: இவர் இப்போது ஒரு வைத்தியராக இருக்கின்றார். ஒருநாள் திலீபன், கணேசன் மற்றும் சிலர் ஊரெழு விலுள்ள திலீபனின் வீட்டுக்கு வந்தனர்.

அப்போது யாழ். இந்துவில் பொருட்காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. திலீபனின் வீட்டிலே சில மாதங்களுக்கு முன் ஒரு நாய் செத்து விட்டதால், அதை ஒரு மரத்தின் கீழ் கிடங்கு வெட்டித் தாட்டிருந்தார்கள். திலீபனும் நண்பர்களும் அந்தக்கிடங்கைக் கிண்டி நாயின் எலும்புக் கூட்டை வெளியில் எடுத்துத் துப்புரவு செய்தார்கள். அப்போது ஏற்பட்ட துர் நாற்றம் காரணமாக வீட்டில் இருந்தவர்கள் வெளியே போனாலும், திலீபனும் நண்பர்களும் அதைப் பொருட்படுத்தாமல் தமது வேலையை முடித்துவிட்டு, அந்த எழும்புக் கூட்டை அன்றே எடுத்துச்சென்று பொருட் காட்சியில் வைத்தனர். எதையும் ஆராய்ச்சி செய்து பார்ப்பதில் திலீபனுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. அதனால்தான் தான் இந்த உண்ணா நோன்புப் பாராட்டத்தில் இறக்க நேரிட்டால் தனது உடலை யாழ். வைத்திய பீடத்துக்கு ஆராய்ச்சிப் படிப்புக்காக அனுப்பிவைக்கும்படி அவர் கூறினார் போலும்?

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் மூன்றாம் நாள்

காலை ஆறு மணிக்குத் துயில் எழும்பிய திலீபனின் முகத்தைப் பார்த்த எனக்கு, ஒரு கணம் அதிர்ச்சியாயிருந்தது. காரணம் அவரின் உதடுகள் இரண்டும் பாளம்பாளமாக வெடித்து வெளிறிப்போயிருந்தன. கண்கள் நேற்றைக்கு இருந்ததைவிட இன்னும் சற்று உள்ளேபோயிருப்பது போல் தோன்றியது... முகம் வரண்டு, காய்ந்து கிடந்தது, தலை குழம்பியிருந்தது

"பல் விளக்கி முகம் கழுவவில்லையோ?"

"இல்லை வாஞ்சியண்ணை... வேண்டாம்."

கலைந்திருந்த தலைமயிரை நானே அவரருகில் சென்று வாரி விடுகிறேன். அவர் இன்னும் சிறுநீர் கழிக்கவில்லை. "வெளிக்குப் போகேல்லையோ?" என்று மெதுவாகக் கேட்கிறேன்.

"போகவேணும் போலதான் இருக்கு."

"சரி கீழே இறங்கி வாருங்கோ" என்று கூறிவிட்டு, மேடையை விட்டு நானே முதலில் இறங்கி, கீழே இறங்குவதற்கு உதவி செய்ய முயன்றேன்.

"வேண்டாம் விடுங்கோ... நானே வருகின்றேன்" என்று என் கையை விலக்கிவிட்டு தானே கீழே குதிக்கின்றார்...

மனதை எவ்வளவு திடமாக வைத்திருக்கின்றார் என்று எனக்குள்ளேயே ஆச்சரியப்பட்டேன்.

மறைவிடத்துக்குச் சென்ற அவர், சிறுநீர் கழிக்க முடியாமல் சிரமப்பட்டார்.



5 நிமிடம்...

10 நிமிடம்...
15 நிமிடம்...
20 நிமிடம்...

நிமிடங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆனால், எதுவித பயனும் ஏற்படவில்லை. அவரைப் பார்க்க எனக்கு வருத்தமாக இருந்தது. என் கண்கள் என்னையறியாமலே கலங்குகின்றன. மேடையின் வலப் புறத்தில் ஏறி அமர்ந்த திலீபன், தூரத்தில் தெரியும் வழக்கமான ஆட்களை அழைத்து உரையாடத் தொடங்கினார். “கண்டபடி பேசினால் களைப்பு வரும்... கொஞ்சம் பேச்சைக் குறையுங்கோ...” என்று அவரைத் தடுக்க முயல்கிறேன். ஆனால், என்னால் முடிய வில்லை. தனக்கே உரிய சிரிப்பை என் வார்த்தைகளுக்குப் பதிலாக்கிவிட்டுத் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

கடைசியாக அவர் நீர் அருந்தி 45 மணித்தியாலங்கள் முடிந்து விட்டன. இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் அவர் இப்படி தன்னைத்தானே வருத்தப்போகிறார்?

இப்போதே சிறுநீர் கழிக்க முடியாமல் கஷ்டப்படத் தொடங்கிவிட்டார். இன்னும் இரண்டு நாட்கள் போனால் என்னென்ன நடக்குமோ? என்று எண்ணிய நான், அவரின் காதுக்குள் குசு குசுக்கிறேன்.

“என்ன பகிடியா பண்ணுறீங்க?... ஒரு சொட்டுத் தண்ணீரும் குடிக்கமாட்டேன் என்ற நிபந்தனையுடன்தானே இந்த உண்ணா நோம்பைத் தொடங்கினனான்... பிறகு எப்படி நான் தண்ணீர் குடிக்க வேண்டுமென்ற கேட்டீங்க?”...

என்று ஆவசத்துடன் என்மீது பாய்கிறார்.

“இல்லை...... இப்பவே உங்களுக்குச் சலம் போறது நின்று போச்சு...... இனியும் நீங்கள் தண்ணீர் குடிக்காமல் இருந்தால் மேலும் மேலும் கஷ்டமாக இருக்குமே... அதுக்காகத்தான் கேட்டனான்...” என்று அசடு வழியக் கூறிவிட்டு, வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.

“இனிமேல் என்னைத் தண்ணி குடிக்கச் சொல்லிக் கேட்கவேண்டாம்... சரியோ?... உண்ணாநோன்பு என்றால் என்ன?... தண்ணீர், குளுக்கோஸ், இளநீர் எல்லாமே உணவுதான்... இந்த உணவுகளை எடுத்துக் கொண்டு எவ்வளவு நாளும் உயிர் வாழலாம். ஆனால், அது உண்ணாநோன்பு இல்லை. உண்ணாநோன்பு எண்டால் அதுக்கு அர்த்தம் வேணும்... ஒரு புனித இலட்சியம் நிறைவேற வேணுமெண்டதுக்காகத்தான் எங்களை நாங்கள் வருத்திக்கொண்டு உண்ணா நோன்பு இருக்கிறது... இது வெறும் அரசியல் லாபத்துக்காக தொடங்கப்பட்டதல்ல... வயிறு முட்டக் குடித்துவிட்டு மக்களையும் ஏமாற்ற என்னால் முடியாது.”

அவரின் பேச்சில் இருந்த உண்மைகள் எனக்கும் தெரியும். ஆனால், திலீபனின் உயிர் மிகவும் பெறுமதி மிக்கது... அதை இப்படி வருந்த விடுவதா? என்ற ஏக்கத்தில்தான் அப்படிக் கேட்டேன். ஆனால் அவர் தன் உயர்ந்த சிந்தனையால் என் பேச்சுக்கு ஆப்பு வைத்துவிட்டார்.

நேரம் செல்ல செல்ல நல்லூர் ஆலய மைதானம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. கடந்த இரு நாட்களாக ஆயிரக்கணக்காக வந்திருந்த சனக்கூட்டம், இன்று இலட்சத்தைத் தாண்டியிருந்தது. யாழ்ப்பாண நகரத்தில் உள்ள கல்லூரிகளிலிருந்து மாணவ - மாணவிகள் காலை 9 மணி முதல் வரிசை வரிசையாக, வெள்ளைச் சீருடையில் அணி வகுத்து வந்து மைதானத்தை நிறைக்கத் தொடங்கினர்.

திலீபன் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒர் அங்கத்தவர் என்ற நினைப்பு விடுபட்டு, “தமிழ் இனத்தின் பிரதிநிதி” என்ற எண்ணம்தான் அந்தச் சனக்கூட்டத்தினர் மத்தியில் நிறைந்திருந்தது. தாய்க்குலம் - திலீபன் வாடி வதங்கியிருந்த கோலத்தைக் கண்டு கண்ணீர் சிந்தியது. அந்தக் கண்ணீர் மழையில் இதயம் கனிந்து விட்ட வருண பகவான் கூடத் தீடீரென்று பலமாகக் கண்ணீர் சொரியத் தொடங்கிவிட்டான்.

ஆம்!

அனலாகக் கொதித்துக்கொண்டிருந்த சூரியன், ஒரு பிள்ளையின் உடலை வெப்பத்திலிருந்து பாதுகாப்பதற்காகத், தன்னைத் தானே கருமேகத்தின் போர்வைக்குள் மூடிக் கொண்டான் மழைநீர் கோவில் மைதானத்தில் ஆறாக ஓடிக்கொண்டிருந்தது. ஆனால், பொதுமக்களில் ஒருவர்கூட எழும் பால் அப்படியே இருந்தனர். அப்பப்பா! மக்களின் உணர்வு மழைக்கு முன்னிலையில் அந்த வருணனின் மழைநீர் வெகு சாதாரணமானது என்ற எண்ணம் நிதர்சனமாகத் தெரிந்தது.

வாடிய நிலையிலும், சோர்ந்த நிலையிலும் தன் உயிரினும் மேலான மக்கள் மழையில் நனைவதைக் கண்ட திலீபன், அவர்களை நனைய வேண்டாம் என்று கைகளை அசைத்துச் சைகை காட்டினார். ஆனால், அவர்களோ அசைவதாக இல்லை. “உன்னால் மட்டும் தானா தமிழினத்துக்காக மெழுகாக உருக முடியும்?... உன் உயர்ந்த இலட்சியத்துக்கு முன் இந்த மழை வெகு சாதாரணமானது!” என்று கூறுவதுபோல், அவர்கள் நின்று கொண்டிருந்தனர்.

முரளியும் - நிரஞ்சனும், வேறு சிலரும் படங்குகளை விரித்துக் கட்டிக் கொண்டிருந்தனர்.

ஒலிபெருக்கியில் காசி ஆனந்தனின் கவிதையொன்று முழக்கமிட்டுக்கொண் டிருந்தது.

“திலீபன் அழைப்பது சாவையா? - இந்த

சின்ன வயதில் இது தேவையா?” ...

மூன்றாம் நாளான இன்று இராண்டாவது மேடையில் சூடான பேச்சுக்களும், கண்ணீர்க் கவிதைகளும் முழங்கிக்கொண்டிருந்தன. பேச்சாளர்களில் ஒருவரும், எமது தீவிர ஆதரவாளருமான காங்கேசன்துறை கருணானந்தசிவம் ஆசிரியர் அவர்கள் இப்படிப் பேசினார்:

“தியாகி திலீபனின் உயிர் விலைமதிப்பற்றது. அவர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மட்டும் உரியவர் அல்ல... அவர... தமிழ் இனத்துக்கே சொந்தமானவர்... அப்படிப்பட்ட திலீபன் அவர்கள் ஒரு சொட்டு நீராவது அருந்தி தன் உடலைக் காப்பாற்ற வேண்டும். ஆவர் தன் பிடிவாதத்திலிருந்து இறங்கி நீர் உணவு அருந்தி எம் கவலையைப் போக்க வேண்டும்... இது எனது வேண்டுகோள் மட்டுமல்ல: இங்கே வந்திருக்கும் இலட்சக் கணக்கான மக்களின் வேண்டுகோளும் இதுதான்.”

அந்தப் பேச்சைக் கேட்ட திலீபனின் முகம் வாடியதை நான் அவதானித்தேன்... தான் பேசப்போவதாகக் கூறினார். அவரிடம் ஒலி வாங்கியைக் கொடுத்தேன்.

“இந்த மேடையில் பேசிய ஓர் அன்பர் என்னை நீர் உணவு அருந்தும்படி கூறியது என்னை அவமானப்படுத்துவது போல் இருக்கிறது... நான் இந்த மேடையிலே நீராகாரம் எதுவும் எடுக்காமல் தான் உண்ணாநோன்பை ஆரம்பித்தேன்... இறுதிவரை இந்த இலட்சியத்தில் இருந்து மாறமாட்டேன். நீங்கள் இந்தத் திலீபனை நேசிப்பது உண்மையாக இருந்தால், தயவு செய்து இனிமேல் என்னை யாரும் நீராகாரம் அருந்தும்படி வற்புறுத்த வேண்டாம். உங்கள் திலீபனுக்கு நிறைந்த மனக்கட்டுப்பாடும் தன்னம்பிக்கையும் உண்டு... என் கோரிக்கைகளை இந்திய அரசு நிறைவேற்றா விட்டால் நீரே எடுக்காமல் இறப்பேனே தவிர, இந்த அற்ப உயிரைக் காப்பாற்றுவதற்காக என் இலட்சியத்திலிருந்து ஒரு போதும் பின் வாங்க மாட்டேன்.” அவர் பேசி முடித்ததும், மழை ஓய்ந்துவிட்டது.

திலீபனுடன் சேர்ந்து அவன் கோரிக்கைகள் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக தினமும் நல்லூர்க் கோவில் மைதானத்தில் அடையாள உண்ணாவிரதம் இருப்போர் தொகை அதிகாரித்துக் கொண்டே வந்தது.

பலர் தாமும் சாகும் வரை திலீபனைப்போல் ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் உண்ணா நோன்பு இருக்க விரும்புவதாக, எம்மிடம் வந்து கூறினர். அவர்களின் வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியாமல் திணறினோம்.

செல்வி. சிவா துரையப்பா என்ற பெண் அச்சுவேலியைச் சேர்ந்தவர்... 17.09.1987 இல் திலீபனுக்கு ஆதரவாக மூன்றாவது (சிறிய) மேடை ஒன்றில் தனது உண்ணா நோன்பு போராட்டத்தை ஆரம்பித்தார்...




அன்றிரவு திலீபன் சிறுநீர் கழிக்க முடியாமல் மிகவும் அவஸ்தைப்பட்டார். வைத்தியர் ஒருவரை அழைத்துவந்து அவரைப் பிரிசோதிக்க ஏற்பாடு செய்தோம் ஆனால், திலீபன் அதை மறுத்துவிட்டார். எந்தவித பரிசோதனையும், சிகிச்சையும் தான் இறக்கும் வரை தனக்கு அளிக்கக்கூடாதென்று உறுதியாகக் கூறிவிட்டார்.

அன்று அவர் கஷ்டப்பட்டு உறங்கும்போது நேரம் நள்ளிரவு 1.00 மணி.
அவரின் நாடித்துடிப்பு :- 11, சுவாசம் — 24.

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நான்காம் நாள்

கடந்த மூன்று நாட்களாக மேடையில் திலீபனுடன் சேர்ந்து ஒரு சொட்டு நீர் கூட அருந்தாது இருந்தேன். மானசீகமாகத் திலீபனின் நட்புக்கு உயரிய மதிப்பளிப்பவன் நான். அதனால் தான் என்னால் எதுவும் அருந்த முடியவில்லை. திலீபன் ஒன்றும் அருந்தவில்லையே, உண்ணவில்லையே, என்ற வேதனைதான் என்வாய்க்கு பூட்டுப் போட்டதே தவிர வேறு ஒன்றுமே இல்லை.

கடந்த மூன்று நாள்களாக ஒன்றுமே நான் உண்ணாமல் அருந்தாமால் இருந்தது சிறிது களைப்பை ஏற்படுத்தி இருந்தாலும் திட மனத்துடன் அதைச்சமாளித்துக் கொண்டேன். நான்காம நாளான இன்றுதான் எனக்குச் சற்று நாவறர்ச்சியாக இருந்தது. ஆனாலும் அதைப் பொருட்படுத்தாமல் யாரிடமும் என் நோன்பைப்பற்றிக் கூறாமல் இருந்தேன். இரண்டு மூன்று முறை ராஜனும், நவீனும் என்னைச் சாப்பிட அழைத்த போது நான் பிடிவாதமாக மறுத்து விட்டேன்.

திலீபன் இருக்கும் நிலையைப் பார்க்கும் போது என்னால் எதுவும் அருந்த முடியவில்லை. இது என்னால் தாங்க முடியவில்லை. விம்மி விம்மி அழத்தொடங்கி விட்டேன். என் வாழ்க்கையில் எத்தனையோ சோகச் சம்பவங்கள் நடந்து முடிந்து விட்டன. ஒன்றுக்குமே நான் அழுததில்லை. இன்று?...

ஆனால் இன்று காலை 10 மணியளவில் தலைவர் பிரபாகரன் என்னை அழைத்துவரச் சொன்னதை அறிந்து, என் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. தலைவர் மிகவும் கண்டிப்பானவர். ஏன்ன சொல்லப் போகிறாரோ என்ற கேள்வியை எனக்குள் பலமுறை கேட்டுக் கொண்டேன்.

தலைவரின் அறைக்குள் பயத்துடன் சென்றேன்.

“இருங்க வாஞ்சி அண்ணா” என்ற அன்பான குரல் என்னை வரவேற்றது. ஆச்சரியத்தால் என் கண்கள் அகன்றுவிட்டன. சாப்பிடாத மயக்கத்தில் என் கண்களும் மயங்கி விட்டனவா என்று, ஒரு கணம் சிந்தித்தேன்.

இல்லை! என் முன் இருப்பவர், தலைவர் பிரபாகரன் தான்! துறு, துறுவென்று பார்க்கும் அதே கண்கள். வட்ட முகம், கூரிய அழகான பெரிய மூக்கு, அளவாக அழகாக நறுக்கி விடப்பட்ட நீண்ட மீசை.

“நீங்க படிச்சவர். வயதில் மூத்தவர். நான் சொல்ல வேண்டியதில்லை. திலீபனில் அன்பு இருக்கவேண்டியது தான். அதற்காக இப்படியா சொல்லாமல் கொள்ளாமல் எதுவும் குடிக்காமல், சாப்பிடாமல் இருப்பது? நீங்கள் அவரைப் பார்க்க வேண்டியவர். உங்கள் உடம்பில் சக்தி இருந்தால்தான் அதற்கு உங்களால் முடியும். நான் திலீபனில் அன்பில்லாதவன் என்றா நினைத்திருக்கிறீர்கள்? திலீபன் என் பிள்ளையைப் போன்றவன். நானே அவனை இந்த உண்ணாநோன்புப் போராட்டத்திற்கு அனுமதித்திருக்கிறேனென்றால் என் மனத்தைக் கல்லாக்கித்தான் அதைச் செய்திருக்கிறேன்.

இந்த உண்ணாநோன்புப் போராட்டத்திற்கு தேவையான மனோதிடம் திலீபனிடம் இருப்பதனால்தான், உண்ணாநோன்பை அவன் நடத்த விரும்பியபோது நான் அதற்குச் சம்மதித்தேன். ஒவ்வொருவராக இந்தப் போராட்டத்தில் ஈடுபடுவதுதான் நல்லது. திலீபனுக்கு அடுத்த சந்தர்ப்பம் உங்களுக் குத்தர முயற்சிக்கிறேன். அதுமட்டும் நீங்கள் வழக்கம்போல் சாப்பிட்டு, குடித்து இருக்க வேண்டும். திலீபனை வடிவாகக் கவனித்துக் கொள்ளுங்கள். இப்போது எதையாவது குடித்து உங்கள் பிடிவாதத்தை விட்டு விடுங்கள்.”

என்று கூறிய தலைவர், சொர்ணனை அழைத்து குளுக்கோசும் எலுமிச்சம் பழமும் வரவழைத்து, தானே தன் கைப்படக் கரைத்து, அந்தக் கிளாசை என்னிடம் நீட்டினார். ஆவ்வளவு கூறியபின் என்னால் எதுவும் திருப்பிக் கூற முடிய வில்லை. மடமடவென்று வாங்கிக் குடித்தேன்.

தலைவர் பிரபாகரன் கண்டிப்பானவர் என்பது தெரியும். ஆனால் அவரின் அன்பான வார்த்தைகள் எமது வாயைத் தானாகவே அடைக்கச் செய்துவிடும் என்பது எனக்கு இன்றுதான் புரிந்தது.

திலீபனின் உண்ணாநோன்புச் செய்தி இலங்கையில் மட்டுமன்றி உலகம் முழுவதும் பரவத் தொடங்கியது. பிரித்தானியா, பிரான்ஸ்,

ஜேர்மனி, சுவிற்சர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளில் இருந்தும், அரபு நாடுகளிலிருந்தும் தொலைபேசி அழைப்புக்கள் வந்து கொண்டேயிருந்தன.

ஏன்? இந்தியாவின் தமிழகத்திலும் இந்தச் செய்தி, உணர்வு அலைகளைக் கொந்தளிக்கச் செய்து கொண்டிருப்பதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழகம் உட்பட பல நாட்டுப் பத்திரிகைகள் திலீபனின் உண்ணா நோனபிற்கு ஆதரவாகத் தலைப்புச் செய்திகளைப் போட்டிருப்பதாக, எமது தகவல் தொடர்பு அறிக்கைகள் கூறுகின்றன.

இன்று திலீபன் உண்ணாநோன்பு ஆரம்பித்து நான்காவது நாள், அவரது உடல் மிகவும் அசதியாகக் காணப்பட்டது... பயற்றங் காயைப் போல் வாடி வதங்கி, கட்டிலின்மேல் அவர் சுருண்டு கிடந்த தோற்றம், பார்ப்பவர் நெஞ்சங்களைப் பதை பதைக்க வைத்தது. அப்படியிருந்தும் அவர் இன்று மக்கள் முன் உரை



யாற்றினார். அவரின் உரை பின் வருமாறு:

“அன்பார்ந்த தமிழீழ மக்களே !

விளக்கு அணையுமுன்பு பிரகாசமாக எரியுமாம். அதுபோல இன்று நானும் உற்சாகத்துடன் இருக்கிறேன் என்பது தெரிகிறது. இன்று தாராளமாகப் பேசமுடிகிறது. போராடத் தயாராகுங்கள்! எனக்கு விடை தாருங்கள்! ஒருவரும் என்னை இந்தப் போராட்டத்தைக் கைவிடுமா கேட்க வேண்டாம். நானும் எனது தலைவரும் சேர்ந்து எடுத்த முடிவுதான் இது. மறைந்த போராளிகள் 650 பேருடன் சேர்ந்து 651 ஆவது ஆளாகி மேலிருந்து பார்ப்பேன். எங்கள் உயிர் உங்களுடன் ஒட்டிவிடும். என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். எனது அவயவங்கள் செயலிழப்பதனால், இனிமேல் மனிதனாக வாழ முடியாது என்பது எனக்குத் தெரியும்.

எமது வீரர்கள் கொள்கைக்காக உயிரைக் கொடுப்பவர்கள். கொள்கைக்காக என்னைத் தொடர்ந்து வருவார்கள். அவர்களையும் தடுக்காதீர்கள். நாங்கள் ஐந்து ஆறு பேர் சாவதால் எவ்வித தீங்கும் வந்துவிடாது. முக்கள் புரட்சி வெடிக்கட்டும். நான் மூன்று தடவைகள் பேசியுள்ளேன். மூன்று தடவைகளும் ஒரே கருத்தைத்தான் பேசியுள்ளேன்”.

நேற்று இரவு முழுவதும் அவர் ஆழ்ந்து தூங்கினார். இன்று காலை ஒன்பது மணி ஆகியும் துாக்கத்தைவிட்டு அவர் எழுந்திருக்கவில்லை.

இளைஞர்களான “நவீனன்கள்” இருவரும், அவரின் இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலுமாக அமர்ந்திருந்து விசிறியால் ஆள்மாறி ஆள் வீசிக்கொண்டிருக்கிறார்கள்.

நேற்று இரவு வழக்கத்தைவிட நாடித்துடிப்பு 110 ஆக அதிகரித்திருந்ததில் இருந்து அவர் உடல் நிலை பாதிப்படையத் தொடங்கிவிட்டது என்பதை நான் அறிந்து கொண்டேன். சூரியனின் கதிர்கள் பூமியெங்கும் வியாபித் திருந்தன.

அவரருகே சென்று அவரின் நாடித்துடிப்பை மெதுவாகப் பரிசோதித்துக் கொண்டு சுவாசத்தையும் எண்ணுகின்றேன்.
நாடித்துடிப்பு -120
சுவாசத்துடிப்பு - 24

ஆம். சாதாரண நிலையிலிருந்து மிகவும் அசாதாரணமாகக் கூடிக்கொண்டிருக்கிறது நாடித்துடிப்பு. (நாடித்துடிப்பு - சாதாரணம் 72-80), (சுவாசம் - 16-22)

நான்கு நாட்களாக நீராகாரம் உட்கொள்ளாத காரணத்தினால் உடலில் திரவநிலை குறையத் தொடங்கிவிட்டதால், இருதயத்திற்கும் நுரையீரல்களுக்கும் செல்லும் இரத்தத்தின் அளவும், கனமும் குறையத் தொடங்கி விட்டது. அதனால்தான் இருதயமும், சுவாசமும் பலமாக வேலை செய்யத்தொடங்கியிருந் தன. இதைவிட இரண்டு நாட்களாகச் சிறுநீர் கழியவில்லை.

தொடர்ந்து இன்னும் இரண்டு நாட்களுக்குச் சிறுநீர் கழியாமல் இருக்குமானால் சிறுநீரகத் தளர்ச்சி (Kidney Failiure) ஏற்படலாம். “கிட்னி பெயிலியர்” ஏற்படுமானால் அது இருதயத்தில் தாக்கத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தி இறப்பை உண்டுபண்ணலாம்.

எனக்கு தெரிந்தவரை வழக்கமான நடைபெறக்கூடி இந்த நிகழ்சிகளினால் திலீபனின் உயிர் பறிக்கப்பட்டக்கூடிய வாய்பு எந்த நேரத்திலும் ஏற்படலாம்.

நல்லூர்க் கந்தனிடம் முறையிட்ட மக்கள் நாச்சிமார் கோயில் அம்மனிடமும் மனமார வேண்டுவதைக் காதல் கேட்கிறேன்.

“தாயே உன் பிள்ளையொன்று உண வில்லாமல் செத்துக் கொண்டிருக்கிறது. அதை நீதானம்மா கடைசிவரையும் காப்பாற்ற வேண்டும்...” நீண்ட, நாட்களுக்குப் பின், திலீபனுக்காக மக்களுடன் சேர்ந்து நானும் இப்படி வேண்டிக் கொள்கின்றேன். வெகு நேரத்தின்பின் கண் விழித்த திலீபன், எழும்புவதற்குச் சத்தியின்றி படுக்கையிலேயே கிடக்கிறார்.

மைதானம் சனக்கூட்டத்தினால் நிரம்பிக் கொண்டிருக்கிறது. திலீனைப் பார்ப்பதற்குகாக அணியணியாக மேடைக்கு முன் புறம் மக்கள் வந்து போய்க்கொண்டிருந்தனர்... ஒருவர் முகத்திலாவது மகிழ்ச்சி இல்லை. சில தாய்மார்கள் திலீபன் படுத்திருக்கும் பரிதாப நிலை கண்டு பொறுக்க முடியாடல் விம்மி விம்மி அழுகின்றனர்.

கிறிஸ்தவ பாதிரியாரும், பல வருடங்காய் சிறையில் அடைபட்டுத் தாங்க முடியாத சித்திர வதைகளை அனுபவித்தவரும், 1983 யூலையில் வெளிக்கடைச் சிறைச்சாலையில் 52 தமிழ்க் கைதினள் சிங்கள இனவாதப் பூதங்கால் கொல்லப்பட்ட சமயம் எதிர்பாராத விதமாகத் தம்பியவரும் ஆகிய, வண, பிதா சிங்கராயர் அவர்கள், திலீபனை பார்ப்பதற் காக மேடைக்கு வந்தார்.

ஒரு துறவியாக இருந்தாலும் திலீபனின் கோலத்தைக் கண்டதும் அவர் அழுதே விட்டார். திலீபனின் கரங்ளைப் பற்றி அவர் அன்போடு வருடினார். உடல் சோர்வுற்று இருந்த போதிலும் திலீபன் அவருடன் மனம் திறந்து வெகுநேரம்வரை பேசிக்கொண் டிருந்தார்.

திலீபனின் பிடிவாதத்தையும், திடமனத்தையும் நன்கு அறிந்தவர் துறவி அப்படிருத் தும் திலீபன் படுத்திருக்கம் கோலத்தைக் கண்டு பொறுக்க முடியாடல் விசும்பினார். கொஞ்சமாவது தண்ணீர் அருந்திவிட்டு உண்ணா நோன்பைத் தொடருமாறு அவர் வற்புறுத்தினார்.

பாதர் சிங்கராயர் மீது திலீபனுக்கு எப்போதும் மிகுந்த மதிப்பும் பாசமும் உண்டு. அப் படியிருந்தும் தனக்கே உரிய புன்முறுவலைக் காட்டி, அதையே அவரின் வேண்டு கோளுக்குப் பதிலாக்கிவிட்டு மௌன மாகினார் திலீபன்.

பாதர் சிங்கராயர் சென்ற பின் ஈரோஸ் இயக்கத் தலைவர் பாலகுமாரும், இயக்க யாழ். மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப் பாளரும் “பரா” வும் வந்தனர்.

எந்த இயக்கத்தவர்களானாலும் அவர்ளுடன் சகஜமாகப் பேசுவதில் திலீபனுக்கு நிகர் திலீபன்தான்.

அவர்களும் திலீபனைத் தண்ணீராவது அருந்தும் படிவற்புறுத்தினார். அனால், அவர்களுக்குக் கிடைத்த பதிலும் மௌனம் தான்.

செல்வி குகசாந்தினி, திருமதி நல்லையா ஆகிய இரு பெண்கள் திலீபனுக்கு ஆதரவாக, சாகும் வரையிலான உண்ணா நோன்பினை ஆரம்பித்தனர். ஆத்துடன், வல்வெட்டித் துறையில் 05 தமிழர்கள் ஏற்கெனவே உண்ணா நோன்பை ஆரம்பித்துவிட்டதாக பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது.

இன்று மாலை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள், திலீபனை வந்து சந்தித்தார். இந்திய அரசிடமிருந்தோ, இந்தியத் தூதுவரிடமிருந்தோ இதுவரை எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என்று. அவர் திலீபனிடம் கூறினார். அவருடன் திரு யோகியும் வந் திருந்தார்.

திலீபனின் பொறுப்புக்களையெல்லாம் தன் தலைமீது சுமந்து கொண்டிருப்பவர் யோகி. சில நாட்களுக்குமுன் இந்திய அமைதிகாக்கும் படையின் பாரபட்சமான நடவடிக் கைகளையும் சிங்கள இராணுவத்துக்கு ஆதரவான நடவடிக்கைளையும் கண்டித்து, ஒரு நாள் அடையாள மறியற் போராட்டம், சகல இராணுவ முகாம்களிலும் பொது மக்களால் நடத்தப்பட்டபோது, யாழ் கோட்டையின் முன்பாக அன்றைய மறியல் போராட்டத்தை முடித்துவைத்து திலீபன் பேசிய பேச்சு என் நினைவுக்கு வருகின்றது.

“இந்த யாழ்ப்பாணக் கோட்டையியே சில நூற்றாண்டுகளுக்கு முன் தமிழனின் கொடி பறந்த அந்த கொடியை போர்த்துக்கேயர் பறித்தெடுத்தனர்... போர்த்துக்கேயரிடம் இருந்து ஒல்லாந்தரும் ஒல்லாந்தரிடமிருந்தும் ஆங்கிலேயரும் கைப்பற்றிக் கொண்டனர். ஆங்கிலேயரிடமிருத்து சிங்களவர் கடைசியில் கைப்பற்றினர். அதாவது புலிக்கொடி பறக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை. அந்த தமிழ்க் கொடியைப் பறக்க விடுவதற்காக, ஒவ் வொருவரும் எமது உயிரை அர்பணித்துக் கொண்டு வருகிறோம். அதில் என் பங்கு எப்போது...? என்பது தான் எமது கேள்வியாக இருக்க வேண்டும் தவிர, பதவிகள் எமக்கு பெரியதல்ல... பதவிகளைத்தேடிச் செய்பவர்கள் புலிகள் அல்ல. அதற்கு வேறு ஆட்கள் இங்கே இருக்கிறார்கள்!”

அந்த தீர்க்கரிசனப் உயிர்வடிவம் கொடுப்பதற்குற்காகத்தான், திலீபன் சாகும்வரை உண்ணாநோன்புப் போராட்டத்தை ஆரம்பித்தான்.

திலீபன் ஒரு சிறப்பான சதுரங்க வீரன். தனது பள்ளிப் பருவத்தில் பல பரிசுகளை இதற்காக அவர் பெற்றுள்ளார். ஆரசியலில் எந்த காயை எப்படி, எந்த நேரத்தில், நகர்த்த வேண்டும் என்பது அவருக்கு நிச்சயமாகத் தெரிந்துருக்க வேண்டும்.

அகிம்சைப் போராட்டத்துக்கு மதிப்பளிக்கும் இந்திய நாட்டின் சமாதான படையினரின் கண்களைத் திறப்பதற்கு, இந்த சாகும் வரையிலான உண்ணாநோன்புப் போராட்டத்தை ஆரம்பித்தது முற்றிலும் பொருத்த மானதே. இந்தியா உள்ப்பூர்வமாக அண் ணல் காந்தியைப் பின்பற்றும் நாடாக இருந்தால், நிச்சயம் பதில் சொல்லியே ஆகவேண்டும். இல்லையேல் உலகத்தின் பார்வையில் இருந்து அது தப்பவே முடியாது.

அன்றிரவு திலீபனுக்குத் தெரியாமல் அவரது இரத்த அழுத்தத்தைப் பதிவு செய்து விட்டடேன்.
அது 100/65
நாடித்துடிப்பு - 114சுவாசம் - 25

இந்தியா என்ன செய்யப்போகிறது? ஏனக்கு ஒன்றும் புரியவில்லை. “வெள்ளையனே வெளியேறு” என்று ஆங்கிலேயரை வெளியேற்றுவதற்கதாகப் போராட்டம் நடாத்திய காந்தி இன்று இருந்திருந்தால் என்ன செய்திருப்பார்? ஆனால் திலீபனோ இந்தியப் படையை வெளியேறு என்று கூடக் கேட்கவில்லையே! இவர்கள் திலீபனின் சாதாரண கோரிக்கைகளுக்கு ஏன் மௌனம் சாதிக்கிறார்கள்? எனக்கு எதுவும் புரியவில்லை.

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் ஐந்தாம் நாள்

“ஈகையர் லெப்.கேணல் திலீபன் பாரதப் படைகளுக்கெதிராக நீராகாரம் கூட அருந்தாது பன்னிரண்டு நாட்கள் உண்ணாநோன் பிருந்து வீரச்சாவடைந்தவர். அவருக்கு உதவியாளராக இருந்த முன்னாள் போராளி கவிஞர் மு.வே.யோ. வாஞ்சிநாதன் அவர்கள் அந்தப் பன்னிரண்டு நாட்களையும் தொகுத்து “திலீபனுடன் பன்னிரண்டு நாட்கள்” என்ற புத்தகமாக வெளியிட்டிருந்தார். அத்தொடரை, திலீபனின் உண்ணாநோன்புக் காலமாகிய இக் காலத்தில் தருகிறோம்.”

வழக்கம்போல் காலையில் சகல பத்திரிகைகளையும் வாசிக்கும் திலீபனால் இன்று எதுவுமே செய்யமுடியவில்லை. யாழ்ப்பாண குடா நாடு முழுவதும் இருந்து தனியார் பஸ் வண்டிகளில் மக்கள் வெள்ளம் போல் வந்து நிறைய தொடங்கிவிட்டனர்.

இன்னும் திலீபன் போர்வைக்குள்ளேயே புதைந்து கிடக்கிறான். அவனால் எழும்ப முடியவில்லை. உடல் பயங்கரமாக வியர்த்து கொட்டியது. மின்விசிறி அவர் பக்கத்தில் வேகமாக சுழன்று கொண்டிருந்தது. ஒரு மனித இயந்திரம் தன் முழுச்சக்தியையும் பிரயோகித்து இயங்கிக் கொண்டிருக்கிறது. அன்றைய பத்திரிகைகளில் முக்கிய செய்திகளாக வழக்கம்போல் திலீபனைபற்றிய செய்திகளே இடம் பெற்றிருந்தன. திலீபன் சோர்ந்து வருகிறார். மெழுவர்த்தியைப் போல அவர் சிறிது சிறிதாக உருகிக்கொண்டிருக்கிறார். அவரது சிறுநீரகம் பாதிப்படையத் தொடங்கிவிட்டது. இருதயம் பலமாக இயங்கிக்கொண்டிருக்கிறது.

தொடர்ந்து அவர் நீராகாரம் எடுக்காவிட்டால் நிலமை மேலும் மோசமாகி எந்த வேளையிலும் எதுவும் நடக்கலாம்.

பத்திரிகைகளைப் படிக்கும்போது என் கைகளுடன் உள்ளமும் சேர்ந்து நடுங்கியது. திலீபன் என்ற ஒரு இனிய காவியத்தின் கடைசி அத்தியாயத்திற்கு வந்து விட்டதுபோல் பிரமை எனக்கு ஏற்பட்டது. அதற்கிடையில் ஓர் செய்தி காற்றோடு காற்றாக கலந்து வந்து என் செவியில் விழுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவைச்சேர்ந்த திலகர் அவர்கள் இந்தியாவுக்குச் சென்றிருக்கிறார் என்பதுதான் அது. புலிகளின் சார்பாக திம்பு பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டவர்களில் திலகரும் ஒருவர். அப்படியானால் பிரதமர் ராஜீவ்காந்தியிடமிருந்து ஏதாவது அழைப்பு வந்திருக்குமா என்ற நப்பாசை என் மனதில். விசாரித்தபோது எந்த விதமான அழைப்பும் வரவில்லை வழமைபோல சாதாரண விசயங்களை கவனிப்பதற் காகத்தான் திலகர் போய் இருக்கிறார் என்று கேள்விப்பட்டதும் ஏன் கேட்டோம் என்றிருந்தது.

திலகரின் இந்தியப்பயணம் பற்றி கேட்டு அறியாமல் விட்டிருந்தால் ஓரளவு மன நிம்மதியாவது கிடைத்திருக்கும். ஆனால் விதியே உன் கரங்கள் இத்தனை கொடியதா ? பம்பரம் போல் கள்ளமில்லாத வெள்ளையுள்ளத்துடன் கலகலவென்று சிரித்துக் கொண்டு எம்மையே சுற்றி வரும் திலீபனை சித்திரவதை பள்ளத்தில் தள்ளுவதுதான் உன் கோர முடிவா? அப்படி அவர் என்ன குற்றம் செய்து விட்டார். தமிழினத்திற்காக தனது தந்தை சகோதரங்களை பிரிந்து வந்தாரே அது குற்றமா? தமிழினத்திற்காக தன் வைத்திய படிப்பையே உதறி எறிந்தாரே அது குற்றமா? தமிழினத்திற்காக இரவும் பகலும் மாடாக உழைத்தாரே அது குற்றமா? தமிழினத்திற்காக தனது வயிற்றிலுள்ள குடலின் 14 அங்கலத்தை வெட்டி எறிந்தாரே அது குற்றமா? தமிழினத்திற்காக இன்று தன்னையே சிறிது சிறிதாக அழித்துக் கொண்டு உண்ணாநோன்பு இருக்கிறாரே அது குற்றமா? எது குற்றம்?

வானத்தைப்பார்த்து வாய்விட்டு கத்த வேண்டும் போல் இருக்கிறது. கதறித்தான் என்ன பயன் ஏற்படப்போகிறது. இலட்சக் கணக்கான மக்கள் கடந்த ஐந்து நாட்களாக கண்ணீர் சிந்திக்கொண்டு இருக்கிறார்களே. யாருக்காக? திலீபனுக்காக, தமிழினத்திற்காக அப்படி இருக்க அந்த கண்ணீரை ஏக்கத்தை இன்னும் யாருமே புரிந்து கொள்ள வில்லையே. ஏன்? உலகில் மனித தர்மமே செத்துவிட்டதா? காந்தி இறந்ததற்காக கண்ணீர் வடிக்கும் உலகம் காந்தியத்தின் காலடியில் சிறிது சிறிதாக எரிந்து கொண்டிருக்கும் திலீபன் என்னும் மெழுகுவர்த்தியைக் காணவில்லையா? அல்லது கண்டும் காணாது போய்விட்டதா? எத்தனையோ முறை திலீபன் சாவின் விளிம்பில் இருந்து தப்பியிருக்கிறார்.

1983ம் ஆண்டு அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் நவாலிப்பிரதேச பொறுப்பாளராக இருந்தபோது ஓர் நாள் நவாலி கத்தோலிக்க தேவாலயத்தின் அருகே நின்று பொது மக்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது திடீரென்று இரண்டு ஜீப் வண்டிகள் அவரருகே முன்னும் பின்னுமாக வந்து நின்றன. சிறீலங்கா இராணுவத்தினர் கண்சிமிட்டும் நேரத்தில் சுற்றி வளைத்து விட்டதை உணர்ந்த திலீபன் எது வித பதற்றமும் அடையாமல் நிதானமாக நின்றார். அவரின் மதி நுட்பம் மிகவும் தீவிரமாக வேலைசெய்யத்தொடங்கியது. யாரோ ஒரு தமிழ்த்துரோகியால் வழங்கப்பட்ட தகவலை வைத்துக்கொண்டு திலீபனை அடையாளம் கண்டு கொண்ட சிங்கள இராணுவத்தினர் ஜீப் வண்டியில் ஏறுமாறு உத்தரவிட்டனர். அவரது கையிலே ஆயுதம் அடங்கிய சிறிய சூட்கேஸ் ஒன்று இருந்தது. அவரருகே இரு இராணுவத்தினர் சேர்ந்து வந்தனர்.

ஜீப் வண்டியில் ஏறும்போது எதிர்பாராத விதமாக பக்கத்தில் வந்து கொண்டிருந்தவர்கள் மீது பாய்ந்து சூட்கேஸினால் மின்னல் வேகத்தில் தாக்கிவிட்டு பக்கத்திலிருந்த பனந்தோப்பை நோக்கி ஓடத் தொடங்கினார் திலீபன். எதிர்பாராத தாக்குதலினால் நிலை குலைந்து விட்ட இராணுவத்தினர் என்ன செய்வது என்று திகைத்து நின்றனர். மறு கணம் அவர்களின் கைகளிலிருந்த துப்பாக்கிகள் பயங்கரமாக திலீபனை நோக்கி உறுமத் தொடங்கின.

அவரது கை ஒன்றை துளைத்துக்கொண்டு சென்றது துப்பாக்கிகுண்டு. இரத்தம் சிந்த மனதை திடமாக்கிக்கொண்டு வெகுநேரமாக



ஓடிக்கொண்டிருந்தார் திலீபன். இராணுவத்தினரால் அவரை பிடிக்கமுடியவில்லை. இந்த ஏமாற்றத்தினால் பல பொதுமக்களை அவர்கள் அன்று கண்மூடித்தனமாக சுட்டுத் தள்ளிவிட்டுச்சென்றனர். யாழ் பெரியாஸ்பத்திரியில் 1986ம் ஆண்டின் இறுதியில் வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற இராணுவத்தினருடனான மோதலின்போது திலீபன் தன் துப்பாக்கியால் பலரை சுட்டுத் தள்ளினார்.

ஆனால் எதிரிகளின் ஓர் குண்டு அவர் குடலை சிதைத்துவிட்டிருந்தது. யாழ் பெரியாஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டபோது அவர் குடலின் 14 அங்குலத்துண்டை சத்திரசிகிச்சை நிபுணர்கள் அகற்றிவிட்டனர். சுமார் மூன்று மாதங்களாக வைத்தியசாலையிலேயே வாழ்ந்தபின்தான் அவர் பூரண குணமடைந்தார். இப்படி எத்தனையோ துன்பங்களை தமிழினத்திற்காக அனுபவித்தவர்தான் திலீபன். ஆயுதப்போராட்டத்தினால் மாத்திரமன்றி அகிம்சையாலும் தன்னால் சாதனை புரிய முடியும் என திலீபனுக்கு அசையாத நம்பிக்கை இருந்தது.

அதனால் இந்தப்போராட்டத்தில் அவர் தானாகவே முன்வந்த எத்தனையோ பேர் தடுத்தும் கேளாமல் குதித்தார். இன்று மாலை இந்திய சமாதானப்படையினரின் யாழ் கோட்டை இராணுவ முகாம் பொறுப்பாளர் கேணல் தரார் அவர்கள் திலீபனை பார்க்க வந்தார். அவர் சனங்களிடையே நடந்து வரும்போது பலதாய்மார்கள் அவர் மீது கல்களை வீச தயாராகிக் கொண்டிருந்தனர். அவர்களை தடுத்து அவருக்கு தகுந்த பாதுகாப்புக்கொடுத்து மேடைக்கு அருகே அழைத்துச்சென்றனர் விடுதலைப் புலிகள். திலீபனின் உடல் மோசமாகி வருவதால் பொதுமக்களும், இயக்க உறுப்பினர்களும் மிகுந்த உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருக்கிறார்கள் என்பதை யோகியும் வேறு சிலரும் எடுத்துக் கூறினர்.

தான் சென்று தகுந்த நடவடிக்கை எடுப்பதாக அவர் கூறிவிட்டுச் சென்றார். அவர் மூலமாவது திலீபனின் உயிர் காப்பாற்றப்படாதா என்று எங்களில் சிலர் நிம்மதியாக இருந்தோம். களைப்புடன் திலீபன் உறங்கிவிட்டார்.

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் ஆறாம் நாள்

அதிகாலையில் ஒரு அதிசயம் நிகழ்ந்திருந்தது. ஆம் ! இன்று திலீபன் காலை 5 மணிக்கே படுக்கையை விட்டு எழுந்து விட்டார். அதுமட்டுமன்றி தான் சிறுநீர் கழிக்கப்போவதாகக் கூறினார். அவர் இருக்கும் நிலையிலே படுக்கையை விட்டு எழுந்து செல்வது என்பது முடியாமல் இருந்ததால் படுக்கையிலேயே சலப்போத்தலைக் கொடுத்தேன்.

ஆனால் சலம் போகவில்லை. வயிற்றை வலிப்பதாகவும் சலம் போவதற்குக் கஷ்டமாக இருப்பதாகவும் கூறினார். சுகிச்சையின் மூலம் கொஞ்சமாவது சிறுநீர் கழிக்க முடியும். ஆனால் அதைப்பற்றி பேசினாலே எரிந்து விழுவார் என்பதற்காக ஒன்றும் பேசாமல் இருந்தேன்.

நாளைந்து நாட்களாகப் படுக்கையிலே கிடப்பதாலும் நீர் அருந்தாமல் இருப்பதாலும் அவரது சலப்பை பாதிக்கப்பட்டிருக்கலாம்... இதை அவரிடம் எப்படிக் கூறுவது? தூன் மறைவிடம் சென்று சிறுநீர் கழிக்கப் போவதாகக் கூறினார். ஆவரின் விருப்பத்துடன், அவரைக் கைத்தாங்கலாகப் பிடித்து இறக்கி மேடையின் பின்பக்கம் கொண்டு சென்றோம் பதினைந்து நிமிடங்களாக வயிற்றைப் பொத்திக் கொண்டு மிகுந்த கஷ்டப்பட்டார்.

அதன்பின் ஆச்சரியப்படுமளவிற்கு சுமார் அரை லீற்றர் அளவு சலம் போனது. ஏனக்கு அது மிகுந்த அதிர்ச்சியைத் தந்தது. ஐந்து நாட்களாக எதுவும் குடிக்காமல் இருக்கும் ஒருவரால் இது எப்படிச் சாத்தியமாக முடியும்? அன்று வைத்திய நிபுணர் சிவகுமார் அவர்களிடம் இதுபற்றி மறக்காமல் கேட்டேன். அவர் எந்தப் பதிலுமே கூறாமல் மௌனமாக சிரிப்பை உதிர்த்துவிட்டுச் சென்றார்.

அன்று மத்தியானம் எமது இதயத்துக்கு மகிழ்ச்சியைத்தரும் ஓர் இனிய செய்தி எனது செவிகளில் விழுந்தபோது இனந்தெரியாத நிம்மதி என்னிடம் குடிவந்தது. கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரகத்திலிருந்து ஓர் முக்கிய நபர் இன்று வரப்போகிறாராம். ஆவர் நமது அரசியல் பிரிவினருடன் திலீபனைப் பற்றிப் பேசப் போகிறாராம்...

என் பிரார்த்தனை வீண்போகாது திலீபனின் உயிர் காப்பாற்றப்படப் போகின்றது...

இந்தியத் தூதுவரகத்திலிருந்து யாராவது வருவதானால் நிச்சயமாக பிரதமர் ராஜீவ் காந்தியின் ஆலோசனைப்படிதான் வருவார்கள்... அப்படி வருபவர்கள் உணர்ச்சி பொங்கும் தாய்க்குலத்தின் கண்ணீரைக் கண்டாவது இரங்கமாட்டார்களா?

திலீபனை எண்ணித் துடிதுடித்துக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் மனங்களிற்கு அந்த ஆறுதல் செய்தி நிச்சயம் சாந்தியளிக்கத்தான் செய்யும்.

திலீபா ! நீ ஆரம்பித்து வைத்த அகிம்சைப் போர் எங்களது ஆயுதங்களுக்கு மதிப்பில்லாமல் செய்யப்போகிறது. போலும்? உன் அகிம்சைப் போரினால் அப்படி ஒரு நிலை எமக்கு வருமானால் அதை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

ஏமக்கு மட்டும் ஆயுதங்களை தூக்கி கண்டபடி சுட்டுத்தள்ள வேண்டும் என்று ஆசையா என்ன? முப்பது வருடங்களாக எமது மூத்த அரசியல் தலைவர்கள் தந்தை “செல்வா” தலைமையில் முயன்று முடியாத நிலை யில்... எமது தமிழ்ச் சமுதாயத்தை அழிவிலிருந்து காப்பாற்றத்தானே வேறு வழியின்றி ஆயுதம் ஏந்தினோம்.

நாம் அகிம்சைக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் நம் எதிரி அகிம்சையைப் பற்றி ஒன்றுமே தெரியாதவன்... அவனுக்கு அது புரியாதது. அவனுக்கு தெரிந்ததெல்லாம் கத்தியும், துப்பாக்கியும்தான்...

ஒருவன் கத்தியையும், துப்பாக்கியையும் தன் பலமாக எண்ணும்போது அவனெதிரில் நிற்பவனால் என்ன செய்ய முடியும். நீண்ட கசப்பான அனுபவங்கள் தான் எமது கரங்களில் துப்பாக்கிகளைத் தந்தன. 1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்த தாகக் கூறப்படும் நாளில் இருந்து, சிங்கள இனவாதிகளால் தமிழர்கள் காலத்துக்குக் காலம் அழிக்கப்பட்டு வருகின்ற கொடுமை எப்பொழுது முடியும்? தங்கத் தமிழர்கள் வாழ்வில் பொங்கும் மகிழ்வும், பூரிப்பும் எப்பொழுது மலரும்?

அண்ணல் காந்தி அகிம்சைப் போரிலே வெற்றி கண்டார் என்றால் அதற்கு அவர் கையாண்ட அகிம்சைப் போராட்டங்கள் மட்டும் காரணமல்ல. காந்தியின் போராட்டத் தளம் இந்திய மண்ணிலே இருந்தது... காந்தியின் போராட்டத் தளத்திலே மனித நேயம் மிக்க ஆங்கிலேயர்கள் இருந்தார்கள்... ஆகவே அகிம்சையைப் புரிந்து கொள்வதற்கு அந்த வெள்ளைக்காரர்களால் முடிந்தது.

ஆனால் நமது மண்ணில் அப்படியா?

எத்தனை சந்தர்ப்பங்களில் நமது தலைவர்கள் குண்டாந்தடிகளால் தாக்கப்பட்டிருப்பார்கள்? எத்தனை இனக்கலவரங்களில் நமது இனத்தவர்களின் தலைகள் வெட்டப்பட்டு தாப் பீப்பாக்களுக்குள் போடப்பட்டிருக்கும்? எத்தனை பெண்கள் தம் உயிரினும் மேலான கற்பை இழந்திருப்பர்?

அப்போதெல்லாம் நாம் ஆயுதங்களையா தூக்கினோம்?

அகிம்சை ! அகிம்சை ! அகிம்சை !

இந்த வார்த்தைகள் தான் எங்கள் தாரக மந்திரமாக இருந்தது. இந்தக் தாரக மந்திரத்தைத் தூக்கி எறிந்து விட்டு எமது கைகளிலே ஆயுதங்களைத் தந்தவர்கள் யார்? நாமாகப் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்டகளாகத் தான் தந்தார்கள்... மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் தான் தந்தன... தலைவர் பிரபாகரனின் பின்னே ஆயிரமாயிரம் வேங்கைகள் அணிதிரண்டு நிற்பதற்குக் காரணம் யதார்? சிங்களப் பேரினவாதம்தான் !

இன்று காலையிலிருந்து நல்லூர்க் கந்தசாமி கோவிலில் திலீபன் பெயரில் நூற்றுக் கணக்கான அர்ச்சனைகள் செய்யப்பட்டு அவை பொதுமக்கள் மூலம் மேடைக்கு வந்தவண்ணமிருந்தன. பிற்பகல் மூன்று மணியிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளியிலிருந்து சனங்கள் பஸ்களில் வந்து குவியத் தொடங்கினர். எங்கே பார்த்தாலும் மக்கள் அலைகள் தான் !

தளபதி கிட்டு அண்ணாவின் தாய், திலீபனை வாரி அணைத்து உச்சி முகர்ந்து அழுத காட்சி என் நெஞ்சை தொட்டது. துரோகிகளினால் வீசப்பட்ட வெடிகுண்டினால் தன் மகன் ஒரு காலை இழந்த போது அந்தத் தாய் கூறிய வார்த்தைகள் இன்னும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

"ஒரு கால் போனால் என்ன? இன்னும் ஒரு கால் இருக்கு... இரண்டு கையிருக்கு... அவன் கடைசி சரையும் போராடுவான்..."

போர் முனையில் தன் மகனின் மார்பில் வேல் பாய்ந்திருப்பதைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் விட்ட வீரத் தமிழ்த்தாயின் கதையை இது எனக்கு நினைவூட்டியது.

உதவி இந்தியத் தூதுவர் திரு.கென் அவர்கள் விமான மூலம் பலாலிக்கு வந்து விட்டா ராம்... அவருடன் பேச்சு வார்த்தை நடத்து வதற்காக திரு அன்ரன் பாலசிங்கம், போயிருக்கின்றனர்... ஏன்ற செய்தியை "சிறி" வந்து சொன்னபோது மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தேன். திலீபனுக்கும் அதைத் தெரிவித் தேன்.

காலையில் சிறுநீர் கழித்ததால் திலீபன் சற்றுத் தெம்பாக இருந்தார். பேச்சுவார்த்தை முடிந்து அதில் சாதகமாக முடிவு கிடைக் குமானால்... உண்ணாநோன்பை நிறுத்திவிட்டு திலீபனை யாழ். பேரியாஸ்பத்திரியில் அனுமதிக்க வேண்டும்... அங்கே அவசர சிகிச்சைப் பிரிவில் அவருக்குவேண்டிய சிகிச்சைகளை உடனடியாக அளிக்கத் தொடங்கினால்... இரண்டு மூன்று நாள்களில் திலீபன் வழக்கம் போல் எழும்பி நடக்கத் தொடங்கி விடுவார்.

இப்படி எனக்குள்ளேயே கணக்குப் போட்டுக் கொண்டேன்.

இயக்க உறுப்பினர்கள் திலீபனுடன் பேசிக் கொண்டிருந்தனர். அவரை சந்திக்க வந்த மகளிர் அமைப்பு உறுப்பினர்கள், தம்மைக் கட்டுப்படுத்த முடியாமால் விம்மி விம்மி அழுத என் நெஞ்சைத் தொட்டது.

தளபதி சூசை, பிரபா, ரகு அப்பா, தளபதி புலேந்திரன், தளபதி ஜொனி போன்றோர் கண் கலங்கி திலீபனின் தலையை வருடி... பேசி விட்டுச் சென்றனர்.

அவர்கள் போனதும் திலீபன் என்னை அழைத்தார்.

"கிட்டண்ணையைப் பார்க்க வேணும்போல இருக்கு..." என்று மெதுவாகக் கூறும்போது அவர் முகத்திலே "ஏக்கம் படர்திருந்தது. ஒரு கணம் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

கிட்டண்ணா, குட்டிசிறி, ஐயர்... இவர்கள் எல்லாரும் இந்தியாவில் இருக்கின்றனர்.

திலீபனுக்கு என்ன பதில் சொல்லதென்று தெரியாமால் தவித்தேன்... கிட்டு அண்ணர் இந்தியாவில் தெரியும்... ஆனால் இந்த நிலையில், அவர் கிட்டு அண்ணாவைக் காண விரும்பியது நியாயம்தான்.

இரவு வெகுநேரம்வரை போச்சுவார்த்தையின் முடிவு வரும் வருமென்று பார்த்துக் கொண்டிருந்தோம்... ஆனால், அது வரவேயில்லை.

இன்று மாலை சிறீலங்கா நவ சமமாசக் கட்சித் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்கார, மற்றும் அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் வந்து திலீபனைப் பார்த்துவிட்டுச் சென்றனர். இரவு வெகுநேரம் வரை எனக்குத் தூக்கமே வரவில்லை.. ஆனால், திலீபன் தன்னை மறந்து நன்றாக உறங்கினார்.

அவரின் இரத்த அழுத்தம் 85 . 60
நாடித்துடிப்பு- 120
சுவாசம் -22

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் ஏழாம் நாள்

இன்று காலையில் எழுந்ததும் முதல் வேலையாக யோகியை என் கண்கள் தேடின...

நேற்றைய பேச்சுவார்த்தையின் முடிவு என்னவாக இருக்கும்...? இந்தக் கேள்விதான் இதயத்தின் பெரும் பாகத்தை அரித்துக்



கொண்டிருந்தது. காலை 10 மணிவரை எவ்வளவோ முயன்றும் அவர்கள் இருவரும் என் கண்களில் படவேயில்லை. ஆனால், திடீரென்று "இந்தியா ருடே" (India Today) பத்திரிகை நிருபரும் இந்திய துரதஷனின் (இந்தியத் தொலைக்காட்சி ஸ்தாகனம்) வீடியோப் படப்பிடிப்பாளரும், யோகியுடன் வந்து திலீபனைப் படம்பிடிக்கத் தொடங்கினர். "இந்தியா ருடே" நிருவர் என்னிடம் திலீபனின் உடல் நிலையைப்பற்றித் துருவித் துருவித் கேட்டுத் தெரிந்துகொண்டார். என்னால் முடிந்தவரை முதல் நாள் உண்ணா நோன்பிருந்து இன்றுவரை அவரின் உடலின் நிகழ்ந்த மாற்றங்கள் அனைத்தையும் விரிவாக எடுத்துக் கூறினேன்.

அவர்கள் சென்ற பின் யோகியை அழைத்து, என் மனதுக்குள் குடைந்துகொண்டிருந்த அந்தக் கேள்வியைக் கேட்டேவிட்டேன். அதற்கு யோகி கூறிய பதில் எனக்கு அதிர்ச்சியைத் தந்தது.

"இந்திய அமைதி காக்கும் படையின் மூத்த தளபதி ஒருவரும் பிரிகேடியர் ராகவன், எயர் கொமாண்டர் ஜெயக்ககுமார், கடற்படைத் தளபதி அபயசுந்தர் ஆகியோரும் வந்து பேசியதாகவும், உதவித்தூதுவர் வரவில்லை என்றும், திலீபனின் பிரச்சினையில் அவர்கள் ஒரு தீர்க்கமான முடிவை இதுவரை எடுக்கவில்லை" என்றும் யோகி கூறினார்.

அந்தப் பதிலைக் கேட்டால் அதை ஜீரணிக்க என் மனத்துக்கு வெகுநேரம் பிடித்தது. அந்தப் பேச்சுவார்த்தை பற்றிய முழு விபரத்தைம் யோகியும் யோகி திலீபனிடம் விளக்கிக் கூறி, என்ன செய்யலாம்...? என்று கேட்டார்.

பேசச் சத்தியற்று, நடக்கச் சத்தியற்று துவண்டு கிடந்த அந்தக் கொடி, தன் விழிகளைத் திறந்து பார்த்துவிட்டு வழக்கம் போன்றுதன் புன்னகையை உதிர்த்தது.

"எந்த முடிவும்... நல்ல முடிவாக இருக்க வேணும். ஐந்து கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதாக அவர்கள் எழுத்தில் தர வேணும்... இல்லையெண்டால்... நான் உண்ணாநோன்பைக் கடைசி வரைக்கும் ... கைவிடமாட்டன்."

ஒவ்வொரு வார்தையாக கரகரத்த குரலில் வெளிவந்தது திலீபனின் பதில்.

படபடவென்று நடுங்கிய நடுங்கிய குரலில் மெதுவாகத் திடமாகத் திலீபன் கூறிமுடித்த போது யோகி மேடையில் இருக்கவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாடு விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டுக்குள் 1985 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் வந்த பின்னர் அரசியல்ப் பிரிவுப் பொறுப்பாளராக திலீபன் இருந்து மிகச் சிக்கலான பிரச்சனைகளை யெல்லாம் பொது மக்கள் மத்தியில் தீர்த்து வைத்திருக்கின்றார்.

1986 ஆம் ஆண்டு அச்சுவேலியில் ஏற்பட்ட ஒருசிறு பூசல் காரணமாக மினிபஸ்களின் சொந்தக்காரர்கள் ஒருவாரகாலமாக பஸ்களை ஓடவிடாமல் வழிமறிப்புப் போராட்டம் நடத்தியதால் மக்கள் மிகுந்த துன்பப்பட்டனர்.

திலீபன் தனக்கேயுரிய புன்முறுவலுடன் அவர்களை அணுகி மிகவும் எளிமையாக அவர்களுடன் பேசி இரண்டு மணித் தியாலத்தில் பஸ்களை ஓடச்செய்தனர். யாழ்ப்பாண மாவட்ட மீனவர்களுக்கு இடையே நடைபெறும் பூசல்கள் கடல் எல்லையிலே ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் தொழிலாளர்களுக்கு இடையே ஏற்படும் சில சிக்கலான பிரச்சினைகள்

பல்கலைக்கழகத்தில் ஏற்படும் சிக்களான பிரச்சினைகள், கடை முதலாளிகள் - தொழிலாளர்களின் பிரச்சினைகள், மூட்டை தூக்குவோர், வண்டி ஓட்டுவோர் - ரச்சிக்கரர்கள், மாநகரசபை ஊழியர்கள், ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள், டாக்ரர்கள், தாதிமார், வைத்தியசாலை சிற்றூழியர்கள், வழக்கறிஞர்கள், லொறிச் சொந்தக்காரர்கள் இப்படிப் பலரகமானவர்களின் பிரச்சினைகளை யெல்லாம் உடனுக்குடன் பேசிச் சமரசமாகத் தீர்த்து வைத்தவர் திலீபன்.

யாழ்ப்பாணக் கரையோரக் கிராமமான நாவாந்துறையில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பலமான இனக்கலவரம் ஏற்பட்டது. கத்தகள், பொல்லுகள் கைக் குண்டுகள், துப்பாக்கிகள் எல்லாம் தாராளமாகப் பாவிக்கப்பட்டன. ஒரே நாளில் பலர் இருபக்கத்திலும் மாண்டனர். பலர் படுகாய முற்றனர்.

திலீபன் தன்னந்தனியாக இரு சமூகத்தவர்களையும் இரவிரவாகச் சென்று சந்தித்தார். முடிவு? அடுத்த நாள் பெருமழை பெய்து ஓய்ந்தது போல் கலவரம் நின்றுவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தமிழீழ மக்கள் மத்தியில் மாபெரும் செல்வாக்கு இருப்பதற்குக் காரணம் இவர்கள் சிங்கள இராணுவத்தின் அட்டூலியங்களிலிருந்து தம் உயிரையே அர்ப்பணித்து மக்களைக் காப்பாற்றுவது மட்டுமல்ல எந்தச் சிக்கலான சமூகப் பொருளாதாரப் பிரச்சினையானாலும் புலிகளின் அரசியல்ப் பிரிவுத் தலைவர் திலீபனால் அவை நிச்சியமாகத் தீர்க்கப்படும். என்ற உயர்ந்த நம்பிக்கையாலும் ஏற்பட்ட செல்வாக்குத்தான். அது.

மற்றவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இரவு பகலாக உறங்காது வேளாவேளைக்கு உணவின்றி அயராது உழைப்பதில் திலீபனுக்கு நிகர் திலீபன் தான். ஆவர் சுயமாக எப்போதாவது மினுக்கிய மடிப்புக் கலையாத ஆடைகள் அணிந்ததையும் நான் பார்த்ததில்லை.

அவரிடம் இருப்பதெல்லாம் ஒரேயொரு நீளக் காற்சட்டை (ட்ரவுசர்) ஒரேயொரு சேர்ட் தான். அரசியல் விசயமாக ஊரெல்லாம் சுற்றி பல பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டு காய்ந்த வயிற்றுடன் இரவு 12.00, 1.00 மணிக்கு தலைமை அலுவலகத்திற்கு வருவார். ஆந்த நள்ளிரவில் அழுக்கேறிய தன் உடைகளைக்களைந்து தோய்த்து காயப்போட்டுவிட்டே படுக்கச் செல்வார். பின்னர் அந்த இயந்திரம் அதிகாலையிலேயே தன் இயக்கத்தை மீண்டும் ஆரம்பித்து விடும்.

இப்படிப்பட்ட திலீபன் இன்று வாடி, வதங்கி தமிழினத்துக்காக தன்னையே அழித்துக் கொண்டிருக்கின்றாரே? ஏத்தனையே பேரின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்த இவரின் பிரச்சினையை, தமிழினத்தின் பிரச்சினையை யார் தீர்க்கப் போகின்றார்கள்.

சீலமுறு தமிழன் சிறப்பினை இழப்பதோ?
சிங்கள இனத்தவர் நம்மை மிதிப்பதோ?
கோலமுறு திரு நாடினிக் கொள்ளையர்...
விரித்த வலையினில் வீழ்ந்து அழிவதோ?
காலனெனும் கொடும் கயவனின் கையினால்...
கண்ணை இழந்து நாம் கவலையில் நலிவதோ?
நீலமணிக்கடல் நித்தமும் அழுவதோ..?
நாடு பெறும்வரை நம்மினம் தூங்குமோ...?

"ஈழமுரசு" பத்திரிகையில் வெளிவந்த இந்தக் கவிதையை ஒருநாள் திலீபன் வாசித்துவிட்டு என் தோள்களைத் தட்டிப் பாராட்டியதை இன்று எண்ணிப்பார்க்கின்றேன்.

வாரா வாரம் பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கும் எனது கவிதைகளை ஒரு தொகுப்பாக்கி வெளிவிட வேண்டும். என்ற திலீபனின் ஆசையை நிறைவேற்றுவதற்காக சென்ற வாரம் தான் அவைகளை ஒன்று சேர்த்து பிரதிகள் எடுத்து ஒருபிரதியை ராஜனிடமும் மறு பிரதியை யோகியிடமும் கொடுத்திருந்தேன்.

தலைவர் பிரபாகரன் "முன்னுரை" எழுத வேண்டும் என்ற என் விருப்பத்தை திலீபனிடம் வெளியிட்ட போது அவரும் அதற்குச் சம்மதித்தார். உண்ணாவிரதம் முடிந்த பின் முதல் வேலையாகத் தலைவரிடம் சகல கவிதைகளையும் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

தலைவர் பிரபா ஓர் "இலக்கிய ரசிகன்" என்பது பலருக்குத் தெரியாது.

அந்த நெஞ்சுக் கூட்டிற்குள் நிறைந்து கிடக்கும் இராணுவத் திட்டங்களும், அரசியல்ப் புரட்சிக் கருத்துக்களும், இலக்கியக் குவியல்களும் மலை போன்ற தமிழுணர்வும்... அப்பப்பா! ஏராளம் ஏராளம்.! அப்படிப்பட்ட ஒரு தலைவனின் வழிவந்த திலீபனின் ஏழாம் நாள் தியாகப் பயணம் தொடர்கின்றது.

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் எட்டாம் நாள்

இன்று அதிகாலையிலே நிரஞ்சன் குழுவின் கொட்டகை போடும் வேலையை ஆரம்பித்து விட்டனர். முதல் நாள் இலட்சக்கணக்கான மக்கள் வந்திருந்ததால் போடப்பட்டிருந்த கொட்டகைகள் எல்லாம் சனக்கூட்டத்தினால் நிரம்பி வழிந்தன. ஏராளமானோர் சுடு வெயிலில் கால்கடுக்க நிற்கவேண்டி ஏற்பட்டதால் நல்லூர் கோவில் மைதானம் முழுவதிலும் படங்குகளினால் கொட்டகை போடத் தொடங்கியிருந்தார்கள்.

உண்ணாவிரதம் ஆரம்பிக்கும்போது இத்தனை சனக்கூட்டம் வருமென் யாருமே எதிர்பார்க்கவில்லை. இலங்கையில் மட்டு மன்றி, இந்தியா மற்றும் பல வெளிநாடுகளில் கூட திலீபனின் தியாகப் பயணம் பற்றியே மக்கயில் பெரும்பாலானோர் பேசிக் கொண்டிருப்பதாகப், பத்திரிகைகளில் போட்டிருந்தார்கள்.

அத்துடன் தமிழீழத்தின் பல பாகங்களிலும் பரவலாக மக்கள் அடையாள உண்ணா நோன்புகளை மேற்கொண்டு தம் எழுச்சியைக் காட்டிக் கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாநகரில் "மதன்" என்ற இளம் தளபதி ஒருவர், மக்களின் ஆதரவுடன் தன் போராட்டத்தைத் திலீபனின் வழியில் இன்னும் இரண்டு நாட்களில் ஆரம்பிக்க விருப்பதாக என்னிடம் மாத்தா கூறினார். இந்த மதனைத் தெரியாதவர்களே மட்டக்களப்பில் இல்லை. 1985ம் ஆண்டு நான் இந்தியாவில் இருந்தபோது மதன் தமிழீழத்துக்குச் சென்றார். பல போர்க்களங்களைத் தன் இளம் வயதில் சந்தித்தார்.

திருகோணமலையிலுள்ள குச்சவெளிப் பொலிஸ் நிலையத்தைத் தகர்த்தவர்களுள், இந்த மதனும் ஒருவர். இதே குச்சவெளிப் பொலிஸ் நிலையத் தாக்குதல்களில் முக்கிய பங்கெடுத்தவர்கள் என் மனதில் மட்டுமன்றி தமிழ் மக்களின் மனங்களிலும் நீங்காத இடம் பிடித்திருக்கின்றார்கள். அவர்கள் வேறு யாரமல்ல...

லெப்டினன்ட் கேர்ணல் சந்தோஷம், லெப்டினன்ட் கேர்ணல் குமரப்பா, லெப்டினன்ட் கேர்ணல் புலேந்திரன் ஆகியோர்தான்.

தமிழீழத்தின் முல்லைத்தீவு மாவட்டத்திலே திருச்செல்வம், என்ற போராளியும், அவருடன் சேர்ந்து பல பொது மக்களும், உண்ணா நோன்புப் போராட்டத்தினை நாளை தொடங்க விருப்பதாகச் செய்திகள் வெளி வந்தன.

தமிழீழம் எங்குமே அஹிம்சைப் போர் தீப் பிளம்பாக எரிந்து கொண்டிருக்கிறது.

திலீபன் ஓர் மகத்தான மனிதன் தான். இல்லையென்றால் அவன் வழியிலே இத்தனை மக்கள் சக்தியா…?

வல்வெட்டித்துறையிலே திலீபனுக்கு ஆதர வாக உண்ணாவிரதம் இருக்கும் ஐந்து தமிழர்களைத், தலைவர் பிரபாகரன் நேரில் சென்று சந்தித்தபோது எடுக்கப்பட்ட படத்தை யும், திலீபனின் படத்தையும், பத்திரிகைகளில் அருகருகே பிரசுரித்திருந்தார்கள்.

"ஈழமுரசு" பத்திரிகையில் திலீபனுக்கு அடுத்த மேடையிலே சாகும் வரை (நீராகாரம் அருந் தாமல்) உண்ணாநோன்பு இருந்து கொண் டிருக்கும் திருமதி நல்லையா, செல்வி. குக சாந்தினி, செல்வி. சிவா துரையப்பா ஆகி யோரின் படங்களைப் போட்டிருந்தார்கள். மொத்தத்தில் எல்லாமே திலீபனின் அகிம் சைப் போருக்கு வெற்றி முரசு கொட்டிக் கொண்டிருந்தன. பத்திரிகைகளில் வெளி வரும் செய்திகள் மட்டுமன்றி ஒவ்வொரு ஊரிலிருந்தும் பல பொதுசன அமைப்புக்கள் அணியாக வந்து உண்ணாநோன்புப் போராட் டத்தில் பங்குபற்றுவதோடு திலீபனுக் காக கவிதை வடிவில் ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்களையும் அச்சடித்து விநியோகித்து வந்தன.

இந்த எழுச்சியை, மக்களின் வெள்ளத்தைப் பார்ப்பதற்கு என்றே தினமும் யாழ்ப்பாண நகரத்தைச் சுற்றி சுற்றி வட்டமிட்டுக் கொண் டிருந்தன. இந்திய சமாதானப் படையின் ஹெலிகொப்டர்கள்.

புலிகள் ஆயுதப் போராட்டத்தில் மட்டுமல்ல. அஹிம்சைப் போராட்டத்திலும் சாதனை படைக்கும் திறன் பெற்றவர்கள் என்ற பேருண்மை, உலகம் முழுவதும் பரவிக் கொண்டிருந்தது.

திலீபனின் சாதனை உலக அரங்கிலே ஓர் சரித்திரமாகிக் கொண்டிருக்கிறது. உலகிலே முதன் முதலாக ஒரு சொட்டு நீர் கூட அருந் தாமல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட் டத்தை ஆரம்பித்து ஏழு நாட்களை வெற்றிகர மாக முடித்தவர். என்ற பெருமையுடன் அதோ கட்டிலில் துவண்டு வதங்கி, உறங்கிக் கொண் டிருக்கிறார் திலீபன்.

அவரது கண்கள் இரண்டிலும் குழிகள் விழுந்து விட்டன. முகம் சருகைப்போல் காய்ந்து கிடக்கிறது. தலைமயிர்கள் குழம்பிக் கிடக்கின்றன… வயிறு ஒட்டிவிட்டது. நீரின்றி வாடிக்கிடக்கும் ஓர் கொடியினைப் போல் வதங்கிக் கிடக்கின்றார். அவரால் விழிகளைத் திறக்க முடியவில்லை. பார்க்க முடிய வில்லை…
பேச முடியவில்லை…
சிரிக்க முடியவில்லை…

ஆம் ! தூங்க மட்டும்தான் முடிகிறது. இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் இந்தக் கோல நிலவு தன் எழிலை இழந்து வாடி வதங்கப் போகிறது?

முரளியின் பொறுப்பிலுள்ள மாணவர் அமைப் பைச் (S.O.L.T) சேர்ந்த மாணவ-மாணவிகள் சனக்கூட்டத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக் கின்றனர்.

மகளிர் அமைப்பு உறுப்பினர்கள், சனங்களை வழிநடத்திக் கொண்டிருக்கின்றனர். பக்கத்து மேடையிலே நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி விட் டன. பெரும்பாலானோர் அழுதழுது கவிதை படிக்கின்றார்கள்.

"சிந்திய குருதியால்
சிவந்த தமிழ் மண்ணில்
சந்ததி ஒன்று
சரித்திரம் படைக்க…
முந்திடும் என்பதால்…
முளையிலே கிள்ளிட…
சிந்தனை செய்தவர்
சிறுநரிக் கூட்டமாய்…
"இந்தியப்படையெனும்"
பெயருடன் வந்தெம்
சந்திரன் போன்ற…
திலீபனின் உயிரைப்
பறித்திட எண்ணினால்…
பாரிலே புரட்சி…
வெடித்திடும் என்று…
வெறியுடன் அவர்களை…
எச்சரிக்கின்றேன் !"

மேடையிலே முழங்கிக் கொண்டிருந்த இந்தக் கவிதை என் மனத்திலே ஆழமாகப் பதிகிறது. இன்று திலீபனின் உடல் நிலை மிகவும் மோச மாகி விட்டது என்பதை அவரின் வைத்தியக் குறிப்புகள் எடுத்துக் காட்டுகின்றன.

இரத்த அழுத்தம் - 80/50
நாடித் துடிப்பு - 140
சுவாசம் - 24

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் ஒன்பதாம் நாள்

அதிகாலை 5 மணியிருக்கும். கிழக்குப் பக் கத்தே தேர்முட்டி வாசலில் நின்றிருந்த வேப்ப மரத்தினின்று குயில் ஒன்று கூவிக் கொண் டிருக்கிறது. "கூ… கூ…குக்…கூ…" அதன் குரலில் தொனித்த விரக்தியின் சாயலைக் கேட்ட நான், திலீபனை ஏக்கத்துடன் பார்க் கின்றேன். அந்தக் குயில் எதை இழந்து



இப்படிக் கூவுகிறதோ தெரியவில்லை.

ஆனால் இந்தக் குயில்…?

எம்மை - எம் இனத்தைக் காக்க தன்னையே இழந்து கொண்டிருக்கிறதே… இந்த சிறு குயிலின் சோக கீதம் உலகத்தின் காதுகளில் இன்னுமா விழவில்லை…?

திலீபனை நன்றாக உற்றுப் பார்க்கிறேன். அவரின் உடலிலுள்ள சகல உறுப்புகளும் இன்று செயலற்றுக் கொண்டிருக்கின்றன. உதடுகள் அசைகின்றன. ஆனால் சத்தம் வெளிவரவில்லை. உதடுகள் பாளம், பாள மாக வெடித்து வெளிறிவிட்டிருந்தன. கண்கள் இருந்த இடங்களில் இரு பெரிய குழிகள் தெரிகின்றன.

இன்று காலை எட்டரை மணியில் இருந்து, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பதினேழு பாட சாலைகளிலிருந்து சுமார் 5000 மாணவ மாணவிகள் அணிவகுத்து வந்து திலீபனைப் பார்த்துக் கண்கலங்கியவாறு மைதானத்தை நிறைத்துக் கொண்டிருந்தனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களும், ஊழியர்களும் ஏராளமாக வந்து பார்த்தனர். காலை ஒன்பது மணியளவில் யாழ். கோட்டை இந்திய இராணுவ முகாம் முன்பாக ஆயிரக் கணக்கான பொதுமக்கள் பிரதான வாசலில் அமர்ந்து, இந்தியப் படையினர் வெளியே வராதவாறு மறியல் செய்யத் தொடங்கினர்.

பொதுவாக திலீபனின் உடல் நிலை மோச மடைந்து வந்த அதே வேளை பொது மக் களின் குமுறலும் அதிகரிப்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. திலீபன் தங்கள் குடும்பத் தில் ஒருவன் என்ற எண்ணமே ஒவ் வொருவர் மனதிலும் நிறைந்திருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

இன்று காலையில் இந்தியப் படையின் தென் பிராந்தியத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் திபேந்தர் சிங் அவர்கள் ஹெலிகொப்டர் மூலம் யாழ் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்தித்தார். பின்னர் இருவரும் தனித் தனி யான வாகனங்களில் புறப்பட்டு யாழ் கோட்டை இராணுவ முகாமுக்குள் சென் றனர். ஒரு மணி நேரத்துக்கு மேலாக இரு வரும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்… ஆனால் கிடைத்தது ஏமாற்றம்தான் !

கோட்டை வாசலில் மறியல் செய்த ஆயிரக் கணக்கான பொது மக்களின் எழுச்சியைக் கண்ட பின்னர் தான் தளபதியவர்கள் தலைவர் பிரபாகரனைக் காணப்பறந்து வந் திருக்க வேண்டும்.

இன்று காலை 10 மணியளவில் திலீபனின் மேடைக்கு அருகேயுள்ள மேடையில் நிகழ்ச் சிகள் ஆரம்பமாயின.

இந்திய வம்சாவழியினர் சார்பில் பேசிய திரு. கணேசராசா என்பவர் "பாரத அரசு விடு தலைப் புலிகளின் ஐந்து அம்சக் கோரிக் கையை ஏற்று திலீபனின் உண்ணா நோன்பை முடித்து வைக்க வேண்டுமென் றும் இல்லையேல் இதனால் ஏற்படப்போகும் விளைவுகளுக்கு இந்திய அரசே பொறுப் பேற்க வேண்டும்" என்றும் பேசினார்.
திலீபனை பார்வையிட வருவோர் தங்கள் கருத்துக்களை சில நாட்களாக எழுத்து மூலம் வழங்கி வருகின்றனர். இதற்காக நான்கு போராளிகள் கை ஓயாமல் ஓர் மூலையில் அமர்ந்திருந்து எழுதிக் கொண்டிருக்கின் றனர். இதுவரை 1500 இற்கும் மேற்பட்டோர் தமது கருத்துக்களை மிக உருக்கமாக எழுதி யிருந்தனர்.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சகல அரச அலு வலகங்களிலும் வேலைகள் நடைபெறாத வண்ணம் பொதுமக்கள் மறியல் செய்து வருகின்றனர்.

சங்கானை உதவி அரச அதிபர் பிரிவிலும் புங்குடுதீவு அரசாங்க அதிபர் பிரிவிலும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் திலீபனுக்கு ஆதரவாக ஒரு நாள் அடையாள உண்ணா நோன்பையும் மறியலும் இருந்தனர். இதைப் போல் பல கிராமங்களில் சிறு சிறு குழுக் களாகச் சேர்ந்து மக்கள் உண்ணா நோன்பு கடைப்பிடித்தனர்.

எங்கும் - எதிலும் திலீபன் என்ற கோபுரம் மக்கள் சக்தியினால் உயர்ந்து விட்டதைக் காண முடிந்தது. ஆம் ! மக்கள் புரட்சி வெடிக் கத் தொடங்கிவிட்டது.

திலீபனின் ஐந்து கோரிக்கைகளை நிறை வேற்றுமாறு பல தொண்டர் நிலையங்கள், இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு மகஜர்களை இன்று அனுப்பி வைத்திருப் பதாகச் சில தமிழ்ப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக் கின்றன.

1. யாழ் பிரஜகள் குழுக்களின் இணைப்புக் குழு. (இந்தியத் தூதுவர் ஊடாக அனுப்பப் பட்டது)
2. வட பிராந்திய மினி பஸ் சேவைச் சங்கம். (பிரதி தமிழக முதல்வருக்கும் அனுப்பப் பட்டது)
3. வட மாகாணம் பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம்
4. தொண்டைமானாறு கிராம மட்ட கடற் தொழில் சமூக அபிவிருத்திச் சங்கம்
5. வட பிராந்திய போக்குவரத்து ஊழியர் சங்கம் என்பன அவற்றில் சிலவாகும்.

இன்று மன்னாரிலுள்ள இந்திய அமைதிப் படை முகாமுக்கு முன், திலீபனுக்கு ஆதரவாக மகஜர் ஒன்றைக் கொடுப்பதற்காக ஆயிரக் கணக்கான பொதுமக்கள் திரண்டு சென்ற போது ஆத்திரமடைந்த இந்திய அமைதிகாக் கும் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது ஒருவர் அதில் இறந்து விட்டதாகவும், 18 பேர் படுகாயமடைந்ததாகவும் எமது தகவல் தொடர்புச் சாதனச் செய்திகள் கூறுகின்றன.

இன்று மாலை என் காதில் ஓர் இனிய செய்தி வந்து விழுந்தது. இந்தியத் தூதுவர் டிக்ஷிற்-தலைவர் பிரபாவைச் சந்திப்பதற்கு வந்திருக் கிறார் என்பது தான் அது! ஆம் பிற்பகல் 1-30 மணியிலிருந்து பிற்பகல் 6-30 மணிவரை, இரு குழுக்களும் அமைதியாகப் பேச்சுவார்த் தைகளை நடத்தின. இந்தியத் தரப்பில் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டவர்கள்:- தூதுவர் திரு. ஜெ. என். டிக்ஷிற், இந்தியப் படையின் தென் பிராந்தியத் தளபதி, லெப் டினன்ட் ஜெனரல் திபேந்தர் சிங், அமைதி காக்கும் படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹர்கீத் சிங், பிரிகேடியர் பெர்னான்டஸ், இந்தியத் தூதரகப் பாதுகாப்பு அதிகாரி, கப்டன் குப்தா ஆகியோர்

விடுதலைப் புலிகளின் தரப்பில்:- தலைவர். திரு. வே. பிரபாகரன், திரு. அன்ரன் பால சிங்கம் (அரசியல் ஆலோசகர்), திரு. செ. கோஸ்வரன் (வழக்கறிஞர்), திரு. சிவானந்த சுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருப்பதாகச் செய்தி வந்ததும், என்னை அறியாமலே என் மனம் துள்ளிக் குதித்தது. ஒன்பதாம் நாளான இன்று ஒரு நல்ல முடிவு எப்படியும் ஏற்படும்… அந்த நல்ல முடிவு ஏற்பட்டதும் உடனடியாக திலீபனை யாழ். பெரியாஸ்பத்திரியில் அனு மதித்து அவசர சிகிச்சைப் பிரிவில் விசேட சிகிச்சைகள் அளித்தால் 24 மணித்தியாலங் களில் அவர் ஓரளவு பழைய நிலைக்குத் திரும்பிவிடுவார்…

எமக்காக இத்தனை நாட்களாகத் துன்பப்பட்டு அணு, அணுவாகத் தன்னை வருத்திக்

கொண்டிருக்கும் அந்த நல்ல இதயம், நிச்சயம் பூத்துக் குலுங்கத்தான் போகிறது… என்ற கற்பனைக் கடலில் இரவு 7-30 மணிவரை நானும், என் நண்பர்களும், மிதந்து கொண்டிருந்தோம்.

இரவு 7-30 மணிக்கு அந்தச் செய்தி என் காதில் விழுந்தபோது இந்த உலகமே தலைகீழாக சுற்றத் தொடங்கியது… அந்தக் கற்பனைக் கோட்டை ஒரே நொடியில் தகர்த்து தவிடு பொடியாகியது.

ஆம் ! பேச்சுவார்த்தையின் போது இந்தியத் தூதுவரால் வெறும் உறுதி மொழிகளைத் தான் தர முடிந்தது… திலீபனின் உண்ணாநோன்புப் போராட்டம் ஒரு தொடர் கதையாகவே ஆகிவிட்டது. எழுத்தில் எந்தவித ஊறுதி மொழிகளையும் தர இந்தியத் தரப்பு விரும்பவில்லை என்பதை அவர்களின் நடத்தை உறுதி செய்தது. திலீபனின் சாவுப் பயணம் இறுதியானது என்பதையும் அது உணர்த்தியது.

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் பத்தாம் நாள்

பெற்றோர், பிள்ளைகள், சகோதரர், உற்றார், உறவினர், நண்பர் இவர்களின் யாராவது நம் கண் முன்னாலே இறக்க நேரிடும்போது மனம் துன்பத்தில் மூழ்கிவிடுறது. கண்கள் கண்ணீரைச் சொரிகின்றது. ஆனால், இவர்களின் ஒருவர் அணுஅணுவாகச் செத்துக் கொண்டிருபதைப் பார்க்கும் போது… துயரத்தின் எல்லைக்கே நாம் போய்விடுகின் றோம். உலகமே சில வினாடிக்குள் வெறுத்துப் போய்விடும். கண்களில் அழுவதற்குக் கண்ணீர் கூட எஞ்சியிருக்காது.

ஆனால், இவர்களில் ஒருவர் ஒருசொட்டு நீர் கூட அருந்தாமல் 10 நாட்களாக எம் கண் முன்னால் அணு அணுவாகச் சாவின் விளிம்பில் நின்று தத்தளிப்பதைப் பக்கத்தில் இருந்து பார்த்துக்கொண்டிருக்கும் போது ஏற்படும் மன வேதனை இருக்கிறதே - அப்பப்பா! அதை வாய்விட்டுச் சொல்ல முடியாது. ஆத்துனை கொடுமை அது. அனுபவித்தவர்களுக்கு மட்டும் புரியும்.

அதை நான் என் வாழ்நாளில் முதல்முறையாக அனுபவிக்கிறேன். இதையெல்லாம் என் கண்களால் பார்க்கவேண்டும். என்று முன்பே தெரிந்திருருமால், நான் திலீபன் இருந்த பக்கமே தலைவைத்துப் படுத்திருக்கமாட்டேன்.

நான் முற்றுமுழுதாக நினைத்திருந்த தெல்லாம் இதுதான். இந்தியா ஒரு பழம்பெருமை மிக்க ஜனநாயக நாடு. காந்தி பிறந்த பொன்னான பூமி. அகிம்சையைப் பற்றியும் - உண்ணாநோன்பைப் பற்றியும் உலகில் பெருமைப்படக்கூடிய அளவுக்கு காந்தியடிகள் மூலம் புகழ்பெற்ற நாடு. அப்படிப்பட்ட ஒரு நாட்டிடம் நீதிகேட்டு அகிம்சை வழியில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த திலீபன், உண்மையிலேயே பாக்கியசாலி தான்.

ஏனெனில், மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருந்த நாடு நிச்சயமாக திலீபனுக்கும் ஒரு நல்ல வழியைக் காட்டத்தான் செய்யும்… ஆதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகளை ஓரளவாது இந்திய அரசு நிறைவேற்றத் தான் போகிறது… என்ற எண்ணத்தில்தான் மூடிக்கொண்டு… இந்தத் தியாக வேள்வியில் என்னால் முடிந்த பங்கைச் செலுத்துவதற்குத் தயாரானேன். நான் நினைத்ததெல்லாம்… இவ்வளவு விரைவில் மாயமான் ஆகிவிடும் என்று நான் கனவு கூடக்கண்டிருக்க வில்லை… எத்தனை பெரிய ஏமாற்றம் எத்தனை பெரிய தவிப்பு?

இன்றைய நிலையில் திலீபன் இருந்த நிலையைப் பார்த்தபோது. நம்பிக்கையே அற்றுவிட்டது. இனி ஒரு நல்ல திர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதன் பிறகு திலீபனை ஆஸ்பத்திரிக்கு அனுமதித்தாலும் காப்பாற்ற முடியுமா என்பது என்னைப் பொறுத்த அளவில் கேள்விக்குறிதான்.

அப்படியிருக்க… கடவுளே! மனித தர்மத்துக்கு கிடைக்கப் போகும் பரிசு இதுதானா?

திலீபனைக் கொல்வதற்கு அவர்கள் திடமனம் பூண்டுவிட்டனர். என்பது புரிந்துவிட்டது.

அதோ வானத்தில் ஓர் வயோதிப உருவம் முகில்களைக் கிழித்துக்கொண்டு என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறது. அவ்வுருவத்தின் தலையிலே மயிரைலே… கண்களிலே வெள்ளை கண்ணாடி… அந்தக் கண்களில் அருவியாக வழிந்து கொண்டிருக்கிறது…அது என்ன? இரத்தமா? அந்த “மனிதன்” இரத்தக் கண்ணீர் சொரிகிறாரே… ஏன்? ஏன்? ஏன்? அடுத்து வேறு ஒரு உருவம்!

அதன் தலையிலும் மயிரைக் காணவில்லை … வர்னத்தின் நடுவலே வெள்ளரசு மரத்தின் அடியிலே அமர்ந்திருக்கும் அந்த உருவம் எம்மை, இல்லை திலீபனையே பார்த்துக் கொண்டிருக்கிறது. பௌர்ணமி நிலவில் அந்தக் கருணை முகத்திலே… கருணை யைத் தேடுகின்றேன்… ஆனால் காணமுடியவில்லை… ஏன்… ? ஏன்…?

இந்திய மண்ணில் என்றோ தோன்றி மறைந்துவிட்ட அந்த இரு சோதிகளும் அல்ல, உருவங்களும் வெகுநேரம் திலீபனைப் பார்க்க முடியாமல் வெட்கித் தலை குனிந்த வாறு சிறிது சிறிதாக என் கண்களை விட்டு மறைந்து கொண்டிருக்கின்றன…

நேற்று சிறிதளவாவது அசைந்து கொண்டிருந்த திலீபனின் கை, கால்கள் இன்று அசைவற்று சோர்ந்து விட்டன. உள்மூச்சு மட்டும் பலமாக இழுத்துக்கொண்டிருக்கின்றது. கண்கள் உச்சியிலே குத்திவிட்டு நிற்கின்றன. உடலின் நிறம் சிறிது நீலமாக மாறத்தொடங்கி விட்டது.

நாடித்துடிப்பைப் பரிசோதிக்கின்றேன் 52.
இரத்த அழுத்தம் -80/50.

சராசரி மனிதனின் அளவுகளைவிட எல்லாமே மிகவும் குறைந்துள்ளன. இனித் திலீபனுக்கு எந்த நிமிடமும் எதுவும் நடக்கலாம். ஐயோ அதைநினைத்துப் பார்க்கவே நெஞ்சம் வெடித்துவிடும் போலிருக்கின்றது. நெஞ்சே இந்தக் கணமே நீ வெடித்து விடக்கூடாதா?





அன்று திலீபன் கிட்டுஅண்ணாவைப் பார்க்க வேண்டும் என்றாரே? இதற்காகத்தானா? இந்திய அரசு தன் கோரிக்கைகளை நிறைவேற்றாது என்பதை அவர் உள்ளுர அறிந்தவர் போல் அன்று உண்ணாவிரத மேடையிலிருந்து எவ்வளவு தீர்க்கதரிசியாக இதைக் கூறினார்.

“நான் இறப்பது நிச்சயம்… ஆப்படி இறந்ததும் வானத்திலிருந்து என் தோழர்களுடன் சேர்ந்து… தமிழீழம் மலர்வதைப்பார்ப்பேன்…”

இந்த வார்த்தைகளை இன்று ஆயிரக்கணக்கான மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

திலீபன், கிட்டு அண்ணா மீது எவ்வளவு பாசம் வைத்திருந்தானோ அதைப் போல் அவரும் திலீபன் மீது உயிரையே வைத்திருப்பது எனகக்குத் தெரியும்.

கிட்டு அண்ணா யாழ் மாவட்ட தளபதியாக இருந்த காலத்தில் யாழ்ப்பாணக் குடா நாட்டை புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக அரும் பாடுபட்டு உழைத்தவர். திட்மிடும் சாதுர்யம் அதை நிறைவேற்றுவதில் மிகச் சாதுர்யம்… எதிரியைப் பந்தாடுவதில் ராஜதந்திரம். இவற்றுடன் குறிதவறாமல் சுடுவதிலும் தன்னிகரற்றவரான தளபதி கிட்டுவும், யாழ் மாவட்ட அரசியல் பிரிவுத் தலைவன் திலீபனும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்த மாபெரும் பொக்கிசம் என்று தான் கூறவேண்டும். இவர்களை உறுப்பினர்களாகப் பெற்ற உறுதி மிக்க தலைவனை நாம் பெற்றுள்ளோம்.

கிட்டு அண்ணாவைப் பார்க்கவேண்டும் என்று திலீபன் அன்று மேடையிலிருந்து கூறிய போது அதை நான் பெரிதாக எடுக்கவில்லை. ஆனால் இன்று…? இந்த நிலையில் அவரது அந்த ஆசை நிறை வேறாமலேயே என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

இதை என்றோ ஒரு நாள் கிட்டு அண்ணாவிடம் கூறும் போது அவர் மனம் எவ்வளவு வேதனையடையும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க எனக்கு இந்த உலகத்தின் மீது வெறுப்பு வருகின்றது. இந்த மண்ணிற்காக நாம் எத்தனை அரும்பெரும் உயிர்களையெல்லாம் இழந்திருக்கின்றோம்.

நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. தமது துப்பாக்கிகளைச் சிங்கள இராணுவத் திடமிருந்து காப்பாற்று வதற்காக காயப்பட்டு நடக்க முடியாத நிலையில் தம்மைச் சுட்டு விட்டு ஆயுதங்களை எடுத்துக் கொண்டு தப்பி ஓடும் படி கட்டளையிட்ட சீலன், ஆனந்தன்…

இயக்க இரகசியங்கள் அடங்கிய முக்கிய விடையங்களையும் கோப்புக்கனையும் காப்பாற்றுவதற்காக கடைசிவரையும் தாக்குப் பிடித்து அவகளை மற்றவர்களிடம் எடுத்து அனுப்பிவிட்டு தன் உயிரைத் தியாகம் செய்த “பண்டிதர்”.

இயக்கப் போராளிகள் குடியிருந்த இடமொன்றில் வெடிகுண்டின் கிளிப் எதிர்பாராமல் விலகிவிட மற்றவர்களை அந்த அழியிலிருந்து காப்பாற்றுவதற்காக வெடிகுண்டை தன் வயிற்றுக்குள் அமுக்கிக் கொண்டு குப்புறப்படுத்து தன் உடலையே சிதறப்பண்ணி மற்றவர் களை அழிவினின்றும் காப்பாற்றிய தியாக வீரன் “அன்பு”.

இவர்களைவிட அவ்வப்போது சிங்கள இராணுவத்திடம் பிடிபடும் நிலையில் இயக்க ரகசியங்களை காப்பாற்றுவதற்காக சயனைட்டைத் தின்று ஈகைச் சாவடை ந்தவர்கள் உலக வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குத்தான் ஏராளம் ஏராளம்.

இந்த வழிகளையெல்லாம் விட தன் வழி மிகவும் வேறுபட்டதாக இருக்கட்டும் என்பதற்காக திலீபன் இந்த முடிவிற்கு வந்தார்?

இன்று மாலை வசாவிளான் என்ற ஊரைச் சேர்ந்த ஒரு ஆதரவாளர் அங்கிருந்து உண்ணாநோன்பு மேடை வரை தூக்குக் காவடியுடன் அழுதழுது வந்தது எல்லோரையும் கவர்ந்த ஒன்றாகும்.

வட்டுக்கோட்டை சிவன் கோவிலடி, அச்சுவேலி மகாவித்தியாலயத்திற்கு முன்பாக, மற்றும் சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள் போன்ற இடங்களிலெல்லாம் அடையாள உண்ணாநோன்பும் மறியல் போராட்டமும் பரந்தளவில் நடைபெற்றது.

பளையிலிருந்து நாவற்குழி வரையுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 6000 மாணவ மாணவிகள் அழுத கண்களும் சிந்திய மூக்குமாக ஊர்வலமாக வந்து நல்லுர் மைதானத்தை நிறைத்தனர். அவர்களின் ஊர்வலத்தில் பார்க்குமிடமெல்லாம் புலிக் கொடிதான் பறந்துகொண்டிருந்தன.

நாவந்துறையைச் சேர்ந்த மக்களின் உணர்ச்சி வெள்ளத்தை இன்று வந்த அவர்களின் ஊர்வலத்தின் மூலம் தான் அறிய முடிந்தது.

முல்லைத்தீவு மாவட்டமெங்கும் எங்கும் உண்ணாநோன்பும் மறியலும் நடக்காத இடமே இல்லை என்று கூறிவிடலாம்.

“திலீபன்” என்ற இந்தச் சிறிய கூட்டிற்குள்

இருக்கும் இதயத்தை எத்தனை இலட்சம் மக்கள் தான் நேசிக்கிறார்கள்." மன்னிக்கவும் இலட்சமல்ல கோடி! தமிழ் நாட்டிலும் ஏன்? ஏனைய ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் உள்ள தமிழர்கள் எல்லோருமே திலீபனுக்காக கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கின்றார்கள்.

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் பதினோராம் நாள்

இன்று திலீபனின் உடல் நிலையைப் பற்றி எழுத முடியாதவாறு என் கை நடுங்குகிறது. அவரது உடலின் சகல உறுப்புகளும் உணர்ச்சியின்றிக் காணப்பட்டன. கை, கால்கள் சில சமயம் தானாகவே அசைக்கின்ற. அவர் இன்னும் உயிரோடு இருக்கிறார் என்பதை இதன் மூலம்தான் அறிய முடிகிறது.

"கோமா" வுக்கு முந்திய நிலையில் (Semi Coma) ஒரு நோயாளி எவ்வளவு கஷ்டப்படுவாரோ அதைப்போல், அவர் உடல் தன்னை அறியாமலே அங்குமிங்கும் புரளத் தொடங்கியது. அவர் படுத்திருந்தது சிறிய கட்டில்... ஆகையால், தேவரிடம் சொல்லி, பெரிய கட்டிலொன்று கொண்டுவரச் செய்து, அதில் திலீபனைப் படுக்க வைத்தோம்.

அப்போதுதான் அவர் கட்டிலில் ஏற்கனவே சிறுநீர் கழித்திருந்ததைக் காண முடிந்தது. மாறன், நவீனன், தேவர் ஆகியோர் மிகக் கஷ்டப்பட்டு அவரது ஆடைகளை மாற்றி, புத்தாடை அணிவித்தனர். அவர் சுயநினைவோடு இருக்கும்போது புது ஆடைகளை அணியும்படி பலமுறை நான் கேட்டபோது, பிடிவாதமாக மறுத்து விட்டார்.

"சாகப் போகிறவனுக்கு எதுக்கு வாஞ்சி அண்ணை புது உடுப்பு?" என்று, தனக் கேயுரிய சிரிப்புடன் கேட்டார்... அதை இப்போது நினைத்துப் பார்க்கிறேன்...

பிற்பகல் 4 மணியளவில் திலீபனின் உடல் நிலை மிகவும் மோசமான நிலைக்கு வந்தது. ஆம் அவர் முழுமையான கோமாநிலைக்கு வந்துவிட்டார்...

மைதானத்தில் கூடியிருந்த சனக் கூட்டத்தினர் திலீபனின் நிலைகண்டு மிகவும் வருந்தினர்... ஒவ்வொருவர் முகத்திலும் சோகத் திரை படர்ந்திருந்தது.

இன்று காலையிலிருந்து, இலட்சக்கணக்கான மக்கள் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வந்து குவிந்து கொண்டிருந்தனர். லொறிகள், பஸ்கள், வான்கள், கார்கள், ஏன்? மாட்டு வண்டிகளிற் கூட அவர்கள் சாரி, சாரியாக



வந்து நிறையத் தொடங்கினர். யாழ்ப்பாணத்திலோ, அல்லது இலங்கையின் எந்தப் பகுதியிலோ இதுவரை எந்த நிகழ்சிக்கும் இப்படி மக்கள் வெள்ளம்போல் நிறைந்ததாகச் சரித்திரமே இல்லை.

வட்டுக்கோட்டையில் இருந்து மட்டும் 50 மாட்டு வண்டிகள் புலிக்கொடிகளை ஏந்தியவாறு, மக்களை நிறைத்துக் கொண்டு வரிசையாக வந்து சேர்ந்தன.

இன்று பிற்பகல் 1.30 மணியுடன் முல்லைத்தீவில் உண்ணாநோன்புப் போராட்டத்தை ஆரம்பித்த திருச்செல்வம் என்ற விடுதலைப் புலி உறுப்பினர், 60 மணித்தியாலங்களை வெற்றிகரமாகத் தாண்டிவிட்டார்.

மட்டுநகரில் மதன் என்ற விடுதலைப் புலி இன்று காலை 10.40 மணிக்கு, சாகும் வரை உண்ணாநோன்புப் போராட்டத்தைத் திலீபனுக்கு ஆதரவாக ஆரம்பித்தார்.

அதேபோல் திருக்கோணமலையிலும் "கிருபா" என்ற போராளி இன்று மாலை ஆரம்பித்துவிட்டார். திருக்கோணமலை. முல்லைத்தீவு, மட்டுநகர் ஆகிய மாவட்டங்களில்தான் கடந்த 10 ஆண்டுகளாக, சிறீலங்கா அரசு திட்டமிட்டவாறு சிங்கள மக்களைக் குடியேற்றி வருகின்றது.

1983 ஆம் ஆண்டு கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையிலே படுகொலை செய்யப்பட்ட தமிழர்களில் தங்கத்துரை, குட்டிமணி போன்றோர் மிக முக்கியமானவர்கள். ஜெயிலிலிருந்த சிங்களக் கைதிகளைத் தூண்டிவிட்டு 52 பேர்களைக் கொல்வதற்குத் திட்டம் வகுத்துக் கொடுத்தது வேறு யாருமல்ல, கனம் ஜே. ஆர். ஜெயவர்த்தனாதான்.

52 பேர்களைத் திட்டமிட்டபடி கொலைசெய்த நூற்றுக்கணக்கான சிங்கள ஆயுள் தண்டனைக் கைதிகளும் என்ன பரிசு அளிப்பதென்று ஜே. ஆர். ஒரு வருடமாக மண்டையைப் போட்டு உடைத்தார். கடைசியில் அனைவரையும் அவர்களின் குடும்பங்களுடன் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள "டொலர் பாம்", "கென்ற் பாம்" ஆகிய இடங்களில் நவீன வீடுகளைக் கட்டிக்கொடுத்து, குடி அமர்த்தினார்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5000 ரூபா பணமும், 2 ஏக்கர் நிலமும், குடியிருக்க வீடும் வழங்கப்பட்டன. இது மட்டுமா? கொலைகாரர்களின் பிள்ளைகள் படிப்பதற்கு பாடசாலைகளும் ஏற்படுத்தப்பட்டன. இது வெறும் பொய்யல்ல நடந்த உண்மை. என்ன ஆச்சரியம்? உலக வரலாற்றில் எந்த நாட்டிலாவது இப்படி நடந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

அப்படிப்பட்ட ஜே. ஆர். என்ன சொல்கிறார் தெரியுமா? தான் உண்மையான "காந்தியவாதி" என்று கூறுகிறார். என்ன கேலிக்கூத்து இது! காந்தீயம் அத்தனை மலிவானதா?

இத்தனை இனத்துவேசியான ஜே. ஆருடன் "தமிழர் நலம் காப்பது" என்ற பெயரில் ஓர் ஒப்பந்தம் செய்வதென்றால், அது நடைபெறக் கூடிய காரியமா? அல்லது நடக்கத்தான் விடுவாரா அந்தக் குள்ளநரி?

ஒப்பந்தம் சரிவர அமுலாக வேண்டும் என்பதற்காகத்தான். அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள ஐந்து கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கேட்டு - திலீபன் சாகும்வரை உண்ணாநோன்புப் போராட்டத்தை ஆரம்பித்தார். அவர் "தமிழீழத்தைப் பிரித்துத் தா" என்று கேட்டு உண்ணாவிரதமிருந்தால் அதை எதிர்ப்பதில் நியாயம் உண்டு: இதை ஏன் எதிர்க்கிறார்கள்? புரியவேயில்லை!

நீங்கள் இருவரும் கையெழுத்துப் போட்ட



ஒப்பந்தத்தை ஒரு திலீபன் சரிவர நிறைவேற்றும் படி கேட்கிறான். இது நியாயமான கோரிக்கையா இல்லையா...? இதைத் தமிழ் மக்களே முடிவு செய்யட்டும்.

இன்று (25.09.87) இலங்கைக் கொம்னிஸ்ட் கட்சியின் வடபிராந்தியக் குழு “இந்திய இராணுவத்தின் அத்துமீறலைக் கண்டிக்கிறோம்.” என்ற தலைப்பில் ஓர் அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு வெளியிட்டிருந்தது. வடக்கும் - கிழக்கும் இணைந்த பிரதேச சுயாட்சியையும், நியாயமான சகல உரிமைகளையும் வழங்க முன்வர வேண்டுமென்று அது தன் அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தது.

இன்று திருகோணமலையில் விறகு ஏற்றிச் சென்ற எட்டு அப்பாவித் தமிழர்கள் சிங்களக் குடியேற்றவாசிகளால் வெட்டிக் கொல்லப்பட்டதாக, பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தது.

நாளைமுதல் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து அரச அலுவலகங்களும், தனியார் நிறுவனங்களும், போக்குவரத்துச் சேவை ஊழியர்களும் திலீபனுக்கு ஆதரவாக உண்ணாநோன்பும் மறியலும் செய்து, தமது வேலைகளைப் பகிஷ்கரிக்கப் போவதாக சகல பத்திரிகைகளிலும் செய்திகள் வெளியாகி இருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் “நிதர்சனம்” தொலைக்காட்சிச் சேவை கடந்த 10 நாட்களாக தினமும் இரவு 7 மணிமுதல் விசேட நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகின்றது.

இன்றிரவு திலீபனின் உடல்நிலை மேலும் மோசமடையத் தொடங்கியது. அவர் சுவாசிப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

திலீபன் சுயநினைவுடன் இருந்தபோது அவரால் விரும்பிக் கேட்கப்படும் பாடல் ஒன்றை, இன்றிரவு மேடையில் ஒலிபரப்பினார்கள்.

அந்தப் பாடல் எனக்கு மட்டுமன்றி, திலீபன் இருந்த அந்த நிலையில் அனைவரினது கண்களில் இருந்தும் கண்ணீரை வர வழைத்து விட்டது.

ஓ! மரணித்த வீரனே!
உன்ஆயுதங்களை எனக்குத் தா
உன்சீருடைகளை எனக்குத் தா
உன்பாதணிகளை எனக்குத் தா
(ஓ! மரணித்த)

கூட்டத்திலே சில பெண்கள் இந்தப் பாடலைக் கேட்டதும் விம்மி விம்மி அழத் தொடங்கினர்.

அந்த வேதனைமிக்க இரவு சிறிது சிறிதாக மறைந்து கொண்டிருக்கிறது. இரவே! நீ ஏன் இரக்கமில்லாமல் எமைவிட்டு மறைந்து கொண்டிருக்கிறாய்?

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் பன்னிரண்டாம் நாள்

1987ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ம் திகதி தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தில் மகத்தான சரித்திரம் படைத்த நாள்.

இன்று அதிகாலை 5 மணிக்கு ஓர் எதிர்பாராத நிகழ்ச்சி நடந்து விட்டது! திடீரென்று மின்சாரம் தடைப்பட்டு விட்டது. எங்கும் ஒரே இருள் மயம். காற்றும் பலமாக வீசத் தொடங்கியது.

பல நாட்களாக திலீபனுடன் சேர்ந்து நானும் எனது நண்பர்களும், முழுமையான தூக்கமில்லாமல் இருந்ததால் இன்று மிகுந்த சோர்வுடன் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தோம். மாறன், ராஜன், தேவர், இரு நவீனங்கள், திலீபனின் அண்ணன் இளங்கோ, எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு தூங்கினோம். பன்னிரண்டு நாட்கள் உடல்களைச் சாறாகப் பிழிந்தெடுத்த அசதித் தூக்கமின்றி, அது வேறொன்றுமில்லை. மேடைக்கு முன்னே அமர்ந்திருந்த ஒருவர் என்னை வந்து தட்டி எழும்பியதும் நான்தான் முதலில் திடுக்கிட்டு எழும்பினேன். கும்மிருட்டில் என்ன செய்வதென்று தெரியாமல். “நவீனன்...” என்று அழைத்தபடி திலீபனின் கட்டிலில் கையை வைத்தேன். அவர் ஆடாமல் அசையாமல் படுத்திருந்தார். அதனால் மனம் அமைதியடைந்தது. அவரின் உடல் “ஜில்” லென்று பனிக்கட்டியைத் தொடுவது போல் குளிர்ந்து காணப்பட்டது.

மனம் “பட பட” வென்று அடிக்கத் தொடங்கியது... மீண்டும் “நவீனன்” என்று அழைத்தேன். நவீனன் எழும்பி விட்டான். ஐந்து நிமிடங்களில் மேடையில் ஒரு பெரிய மெழுகுவர்த்தி எரியத் தொடங்கியது... மெழுகுவர்த்தியின் ஒளியிலே திலீபனின் முகம் நன்றாகத் தெரிந்தது... ஒரே வினாடி தான்! அதற்குள் அந்த மெழுகுவர்த்தி காற்றின் வேகத்தினால் அணைந்துவிட்டது. பலத்து வீசிய காற்று அதை மீண்டும் எரிய விடுமா? என்பது சந்தேகமாகத்தான் இருந்தது... ஆனால், ஐந்து நிமிடங்களில் மின்சாரம் வந்துவிட்டது... திலீபனின் நிலை எல்லையைக் கடந்துவிட்டது என்பது எனக்கு நன்றாகப் புரிந்துவிட்டது. அதனால், என்மீதே எனக்கு வெறுப்பு ஏற்பட்டது... நாடித்துடிப்பைப் பரிசோதிக்கிறேன். கணிக்க முடிய வில்லை... மிகவும் மெல்லியதாக அடிக்கிறது... உடனே இரத்த அழுத்தத்தைக் கணிக்கின்றேன்... அது மிகவும் குறைவாக இருக்கிறது... 50/? என்ற நிலையில் ஒரு நோயாளியால் இன்னும் எத்தனை மணித்தியாலங்கள் உயிர் வாழ முடியும் என்பது எனக்குத் தெரியும். உலகமே தலைகீழாகச் சுற்றுவது போல் இருந்தது.

திலீபன் அடிக்கடி கூறிய வார்த்தைகள் எனக்கு நினைவுக்கு வருகின்றன. “வாஞ்சி அண்ணை! எனக்கு என்ன நடந்தாலும் நீங்கள் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட பலவந்தமாக வோ, சுய நினைவற்ற நிலையிலோ தர முயற்சிக்கக்கூடாது... அப்படி என் கோரிக்கைகள் நிறைவேறாவிட்டால் நான் இறக்குமட்டும் எனக்கு எந்தவிதமான சிகிச்சையும் அளிக்கக் கூடாது... சுயநினைவோடு என்றாலும் சரி... சுய நினைவில்லை என்றாலும் சரி... இதுக்குச் சம்பதிக்கிறனெண்டு சத்தியம் செய்து தாருங்கோ...” என்று விடாப்பிடியாக நின்று என்னிடம் சத்தியம் வாங்கிய பிறகுதான் உண்ணா நோன்புப் போராட்டத்தை ஆரம்பித்தார் அவர். அப்படியிருக்க, அவர் விருப்பத்துக்கு மாறாக எப்படி அவருக்குச் சிகிச்சையளிப்பேன்? எப்படி அவருக்கு நீர் ஊட்டுவேன்? மனிதநேயத்தையும் - அதன் தார்ப்பரியங்களையும் மதிக்கும் ஓர் வைத்திய சேவையாளன் என்ற நிலையைத் திலீபன் விஷயத்தில் நிறை வேற்ற விடாமல் என் கைகளைக் கட்டிப் போட்டது எது?... எது? ஆம்ளூ “சத்தியம்!” என்ற இந்த ஐந்து எழுத்துக்களுக்காகத் தானே திலீபன், “அகிம்சை” என்ற நான்கு எழுத்துக்களைக் கொண்ட போராட்டக் களத்தில் குதித்தான்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று உயரிய அம்சங்களினால் வேரூன்றி வளர்த்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவன் என்பதால், “கட்டுப்பாடு“ என்ற நல்வழியிலே கொடுத்த சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காகத் திலீபனை என் கண்ணெதிரிலேயே “பலி” கொடுப்பதைத் தவிர, வேறு வழியொன்றும் எனக்குத் தெரியவில்லை. என் கடமையைச் செய்வதற்காக மேடையின் பின் பக்கம் இறங்கிச் செல்கிறேன். அங்கே பிரதித் தலைவர் நிற்கிறார். அவரிடம் திலீ பனின் உடல் நிலையின் அபாயகரத்தைப் பற்றி எடுத்துரைக்கிறேன். திலீபனின் உடல் நிலை மோசமாகிவிட்ட விடயம் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் பரவத் தொடங்கியது விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் பொதுமக்களும் மேடையைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். திலீபனுக்கு கடைசி நிமிடம் வரையும் ஒருவித சிகிச்சையும் அளிக்க முடியாமல் எமது கைகள் கட்டப்பட்டிருந்ததற்கு வேறு முக்கிய காரணமும் ஒன்று இருந்தது. எமது காதில் விழக்கூடியதாகவே பல எதிரணி உறுப்பினர்களும், எமது இயக்கத்துக்கு எதிரானவர்களும் பேசியதைக் காதால் கேட்டவர்களில் நானும் ஒருவன்.

“புலிகள் தந்திரமாக மக்கள் மனத்தை மாற்றுவதற்காக உண்ணாநோன்பு என்ற பெயரிலே தண்ணியைக் குடிச்சுக்கொண்டு இருப்பார்கள்... ஆர் இதைக் காணப்போகினம்? கடைசியில் 5 தீர்மானங்களும் நிறைவேறு மட்டும் வைத்தியம் செய்து ஆளைச் சாக விடமாட்டினம்... இதுதான் இந்த சாகும் வரை நீர் அருந்தாமல் உண்ணாநோன்பு இருப்பதன் உண்மை...” இப்படியான பேச்சுக்களுக்கு உண்மை வடிவம் கொடுத்து, “புலிகள் பொய்யர்கள்” என்ற கெட்ட பெயரை வர விடாமல் காப்பாற்றுவதற்காகவும் எம் கைகள் கட்டப்பட்டிருந்தனவே தவிர, வேறு ஒன்றுக்காகவும் அல்ல.

எம் கைகள் மட்டும் கட்டுப்படாமல் இருந்திருந்தால், எமது உயிரினும் மேலான, ஈகைச்சுடர் திலீபனை எமது உயிர்களைக் கொடுத்தாவது காப்பாற்றியிருப்போம்... ஆனால்... முடியவில்லையே? விதி! தன் வலிய கரங்களை மிக





நன்றாகவே திலீபனின் கழுத்தில் இறுக்கிவிட்டான். உயிருடன் அந்த மனித தெய்வம் நீண்ட நேரம் போராடிக் கொண்டிருப்பதை என் கண்களால் பார்க்கவேண்டிய நிலை ஏற்பட்டமைக்காக, நான் வெட்கப்பட்டேன். வேதனைப்பட்டேன். ஆனால், என்ன செய்ய முடியும்? 265 மணித்தியாலங்கள் தனது சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை வெற்றி கரமாக நடாத்தி முடித்த அந்த ஈகையர் திலீபன், இன்று காலை (26.09. 1987) 10.48 மணியளவில், எம்மையெல்லாம் இந்தப் பாழும் உலகில் பரி தவிக்க விட்டு விட்டுத் தான் மட்டும் போய் விட்டான்.

ஆம்! தமிழர்தம் விளக்கு அணைந்து விட்டது! அணைந் தேவிட்டது! வைத்தியர் சிவகுமார் அவர்கள், திலீபன் இறந்த பின் அவரைப் பரிசோதனை செய்து தனது இறுதியான முடிவைச் சொல்லிவிட்டு, திலீபனின் பாதங்களில் விழுந்து வணங்கி எழுந்த போது, மக்கள் கதறி அழத் தொடங்கினர்... எங்கும் அழுகைச் சத்தம்... விம்மல் ஒலி... சோக இசை... வானமே இடிந்து விட்டதைப் போன்ற வேதனை எல்லோரையும் ஆக்கிரமித்திருந்தது. வானத்து நிலவு கீழே விழுந்து விட்டது போன்ற உணர்வு! காலை 11 மணிக்கு “என்பார்ம்” செய்வதற்காக, அவரது உடலை யாழ். வைத்தியக் கல்லூரிக்கு எடுத்துச் சென்றோம். பிற்பகல் 4.15 மணியளவில் திரும்பவும் அதே மேடைக்கு முன்பாக அவரின் புகழுடம்பு பொதுமக்களின் வணக்கத்துக்காக வைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் புள்ளி போட்ட, பச்சையும் - கறுப்பும் கலந்த இராணுவ உடையும், தொப்பியும் திலீபனுக்கு அணியப்பட்டு, “லெப்டினனட் கேணல்” என்ற பட்டமும் அவருக்கு வழங்கப்பட்டது. அவர் செய்த தியாகத்துக்கு அவருக்கு எந்தப்பட்டமும் தகுதியில்லை, அல்லது ஈடாகாது என்பது எமக்குத் தெரி யும்...

ஆனால், என்ன செய்ய முடியும்? அவரைப் படுக்க வைத்திருந்த பேழையை, விடுதலைப் புலிகளின் சிவப்பு நிறத்திலான கொடி அலங்கரித்திருந்தது. தந்தை, சகோதரங்கள், உறவினர்கள் ஆகியோர் உடலை வந்து தரிசித்துச் சென்றனர். பெட்டியைத் திறந்ததுமே அவரது அன்புத் தந்தையும், ஓய்வு பெற்ற ஆசிரியருமான, திரு. இராசையா அவர்கள் “ஓ...” என்று அலறியவாறு அவர் உடல்மீது விழுந்து புரண்டு அழத் தொடங்கிவிட்டார். அவரின் அழுகையைத் தொடர்ந்து பொது மக்களும், சிறு பிள்ளைகளைப் போல் குலுங்கிக் குலுங்கி அழுத காட்சி நெஞ்சை உருக்கியது. பொது மக்கள் மணிக்கணக்காகக் காத்திருந்து, நீண்ட வரிசையிலே வந்து தமது இறுதி வணக்கத்தை மண்ணின் மைந்தனுக்குச் செலுத்தினர். ஈரோஸ் இயக்கத் தலைவர் திரு. பாலகுமார், தமிழகத்திலிருந்து வருகைதந்து தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ் தலைவர் திரு. நெடுமாறன், கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் கலங்கி அழுதவாறு தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

தலைவர் பிரபாகரன், சொர்ணம், குமரப்பா, புலேந்திரன், சந்தோசம், ஜொனி, பிரபா, இம்ரான், அன்ரன் மாஸ்ரர், சங்கர் அண்ணா, நடேசன் மற்றும் ஏனைய இயக்க உறுப்பினர்களும் தத்தம் இறுதி வணக்கத்தை தமது தோழனுக்குச் செலுத்தினர்.

சாஜகான், நரேன், அருணா, சிறி, ராஜன், தினேஸ் போன்றோர் தம்மைச் சமாளிக்க முடியாமல் விம்மி விம்மி அழுதனர்.

திலீபனின் ஈகைப் பயணத்தில் 12 நாட்கள் அவரின் கூட இருந்து, அவரின் போராட்டத்தில் பங்குபற்றி, வேதனையின் எல்லைக்கே சென்று வந்த எனக்கு, இந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு இன்னும் எத்தனை நாட்கள் தேவையோ நானறியேன்.

ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம்! திலீபனின் உயிர் அநியாயமாகப் போகவில்லை அதற்குப் பதிலாக அவர் ஒரு படிப்பினையை எமக்குக் கற்பித்து விட்டுப் போயுள்ளார்... அகிம்சைப் போராட்டம் என்பது மனித நேயமும், உயர் பண்பும் மிக்கவர்களிடம்தான் நல்ல விளைவுகளை ஏற்படுத்தும்... ஆயுதங்கள் தான் எமது தமிழீழப் போராட்டத்தைப் பொறுத்தவரை சரியான பதில் தரமுடியும் என்பதையும், திலீபன் மறைமுகமாக உணர்த்திவிட்டுப் போயிருக்கிறார் என்பதே எமது கணிப்பு... அந்தத் ஈகைச்சுடரின் இலட்சியங்கள் நிறைவேற, எம்மை நாம் அர்ப்பணிப் போமாக!

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”




# முல்லைத்தீவு நீதிமன்றம்; குருந்தூர்மலை தொடர்பாக வரலாற்றுச்சிறப்பு மிக்க தீர்ப்பு!

செப்டம்பர் 02, 2023

குருந்தூர்மலை விவகாரத்தில் நீதிமன்றக் கட்டளைகள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளன் நீதிமன்றக் கட்டளையை தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர்நாயகம் பாதுகாக்கத் தவறியுள்ளார் .

நீதிமன்றம் வழங்கிய கட்டளையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர்நாயகத்திற்கு இருந்தும், குருந்தூர்மலை தொடர்பில் நீதிமன்றால் இதற்குமுன் வழங்கப்பட்ட கட்டளைகளை தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சரிவரப் பின்பற்றவில்லை எனவும், நீதிமன்றக் கட்டளைகள் உதாசீனம் செய்யப்பட்டிருப்பதாகவும் முல்லைத்தீவு நீதிமன்றம் கட்டளைவழங்கியுள்ளது.

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளைகளையை மீறி தொடர்ந்தும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் மதிப்புறு துரைராசா ரவிகரன் அவர்களால் கடந்த 23.02.2023ஆம் திகதி முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய, முல்லைத்தீவு நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கின் கட்டளையே இன்று முல்லைத்தீவு நீதிமன்றால் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.









# திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதி விகாரைக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள 14 பேருக்கு தடை!


செப்டம்பர் 02, 2023

திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதியில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ள பொரலுகந்த இரஜமகா விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாளைய தினம் (03) மனித சங்கிலிப் போராட்டம் ஒன்றுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள சிலருக்கு தடை விதித்து தடையுத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலை - நிலாவெளி காவல் துறையால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் திருகோணமலை நீதிவான் நிதிமன்றினால் 14 பேருக்கு எதிராக குறித்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த தடையுத்தரவானது தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் இளைஞர் அணித் தலைவர் கிருஷ்ண பிள்ளை பிரசாத், தமிழ்ப் பேரவையின் தலைவர் ஆர்.ஜெரோம், செயலாளர் ரமேஸ் நிக்லஸ், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், குச்சவெளி முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் பொன்னையா வைத்தியலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உட்பட மற்றைய தரப்பாக பௌத்த பிக்குகள் உட்பட 7 பேருக்கும் எதிராக இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.





# ஆக்கிரமிப்பைத் தடுக்க தமிழினம் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை!

## நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்

செப்டம்பர் 03, 2023

தமிழீழத்தை சிங்கள மயமாக்கும் - பௌத்த மயமாக்கும் நோக்குடன் சிங்கள - பௌத்த அடிப்படைவாதிகள் மிகத் தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த ஆக்கிரமிப்பைத் தடுக்கத் தமிழ்ச் சமூகம் வீதியில் இறங்கிப் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

தென் தமிழீழம், திருகோணமலை, இலுப்பைக்குளம் பகுதியில் பொரலுகந்த ரஜமகா விகாரை அமைக்கப்படவுள்ளதை எதிர்த்து நேற்று (03) மனித சங்கிலிப் போராட்டம் திருகோணமலை, சாம்பல் தீவு பாலத்துக்கு அருகில் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே கஜேந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

திருகோணமலை மாவட்டத்தில் இனங்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்தும் வகையில் சிங்கள - பௌத்த இனவாதிகள் செயற்பட்டுக் கொண்டிருக்கையில் அவர்களுக்குப் பொலிஸாரும் ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். அவர்கள் உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்கி நீதிமன்றத்தைத் தவ221றாக வழிநடத்த முற்படுகின்றனர்.

இதனூடாக எமது உரிமைப் போராட்டத்துக்கு எதிராகத் தடை உத்தரவுகளையும் பொலிஸார் பெறுகின்றனர். வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தின் தலைநகராகத் திருகோணமலை விளங்குகின்றது.

இலங்கைக்கு 1948ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைக்கின்றபோது திருகோணமலை மாவட்டத்தில் 4 வீதமான சிங்களவர்கள் மாத்திரமே வாழ்ந்தார்கள். ஆனால், இன்று இம்மாவட்டத்தில் சிங்களவர்களின் எண்ணிக்கை 30 வீதமாக அதிகரித்துள்ளது.

கிட்டத்தட்ட 800 வீதமாக சிங்களவர்களின் வளர்ச்சி திருகோணமலை மாவட்டத்தில் காணப்படுகின்றது. சட்டவிரோத திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் இந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ந்தும் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி - பௌத்த விகாரைகளை அமைத்து தமிழர்களின் இருப்பை அழிக்கின்ற செயற்பாடுகளை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். எங்கள் உரிமைக்காக நாங்கள் தொடர்ந்தும் போராடிக்கொண்டே இருப்போம் என்றார்.

# திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதியில் விகாரை நிர்மாணிப்புக்கு எதிராக மனிதச்சங்கிலிப் போராட்டம்!

செப்டம்பர் 03, 2023

திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதியில் பொரலுகந்த இரஜமகா விகாரை அமைக்கப்படவுள்ளதை எதிர்த்து இன்று (03) மனித சங்கிலிப் போராட்டமொன்று திருகோணமலை, சாம்பல் தீவு பாலத்துக்கு அருகில் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோருடன் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது குறித்த விகாரை அமைக்கப்படவுள்ளதை எதிர்க்கும் வகையில், "பௌத்தர்கள் இல்லாத இடத்தில் பௌத்த விகாரை எதற்கு?", "பெரியகுளம் விகாரை கட்டுமானத்தை உடனடியாக நிறுத்து", "தொல்லியல் திணைக்களம் பௌத்தத்துக்கு மட்டுமா?", "தொல்லியல் திணைக்களமே இனவாதத்தை தூண்டாதே" போன்ற வாசகங்களை ஏந்தியவாறும், பலவாறு கோஷங்களை எழுப்பியும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

முன்னதாக அப்பகுதிகளில் இடம்பெறும் ஆர்ப்பாட்டத்தை தடுக்கும் வகையில் திருகோணமலை - நிலாவெளி பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில், திருகோணமலை நீதிவான் நிதிமன்றினால் இப்போராட்டத்தில் கலந்துகொள்வதற்கு 14 பேருக்கு எதிராக தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் இளைஞர் அணித் தலைவர் கிருஷ்ணபிள்ளை பிரசாத், தமிழ்ப் பேரவையின் தலைவர் ஆர்.ஜெரோம், செயலாளர் ரமேஸ் நிக்லஸ், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், குச்சவெளி முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் பொன்னையா வைத்தியலிங்கம், பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உட்பட மற்றைய தரப்பில் பௌத்த பிக்குகள் உள்ளிட்ட 7 பேருக்கும் எதிராக இத்தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.


இந்நிலையில், இன்றைய தினம் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு நிலாவெளி பொலிஸாரினால் குறித்த தடையுத்தரவு வாசித்துக் காட்டப்பட்டதையடுத்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் சாம்பல்தீவு பாலத்துக்கு அப்பால் சென்று தமது எதிர்ப்புப் போராட்டத்தை தொடர்ந்தார்கள்.

திருகோணமலை, இலுப்பைக்குளம் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அண்ணளவாக 540 குடும்பங்களைச் சேர்ந்த 2202 தமிழ் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

அத்துடன், இதனை சூழவுள்ள பெரியகுளம், ஆத்திமோட்டை, சாம்பல் தீவு மற்றும் சல்லி போன்ற கிராமங்களில் தமிழர்கள் மட்டுமே காலகாலமாக வாழ்ந்து வருகிறார்கள்.

சிங்கள பௌத்தர்கள் இல்லாத இப்பிரதேசத்தில் பௌத்த விகாரை நிறுவப்படுமானால், அது மூவின மக்களினதும் ஒற்றுமையை சீர்குலைத்து இன வன்முறைக்கும் வித்திடும் என அப்பகுதி மக்கள் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்துகின்றனர்.

இதேவேளை, குறித்த இடத்தில் பௌத்த விகாரை அமைக்க கிழக்கு ஆளுநரால் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த மாதம் 12ஆம் திகதி பெரியகுளம் சந்திப் பகுதியிலும் 28ஆம் திகதி மாவட்ட செயலகத்துக்கு முன்னால் ஏ6 வீதியை மறித்தும் பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்ததோடு, அன்று கச்சேரியில் இடம்பெற்றுக்கொண்டிருந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலும் புகுந்து சில பௌத்த பிக்குகள் குழப்ப நிலையை விளைவித்திருந்தனர் என்பதும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



















# முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு போன்று திருகோணமலையிலும் ஏற்படும் நிலை!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஸ்

செப்டம்பர் 03, 2023

முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு போன்று திருகோணமலையிலும் ஏற்படும் நிலை –சுகாஸ்!
டீல யுனஅைெ –ளுநிவநஅடிநச 4, 202308
ளுாயசந டீn குயஉநடிழழம வுறநநவ டீn றூயவளயிி

பேரினவாத ஆக்கிரமிப்புக்களை தடுத்து நிறுத்தாவிட்டால் முள்ளிவாய்க்கால் பகுதியில் இடம்பெற்ற இனப்படுகொலை சம்பவம் போன்று தென் தமிழீழம் திருகோணமலையிலும் ஏற்படும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

திருகோணமலை – சாம்பல்தீவு பாலத்திற்கு அருகில் சட்டவிரோத பொரலுகந்த ரஜமகா விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் தலைநகரமான திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ந்தும் திட்டமிடப்பட்ட வகையில் சூட்சுமமாக சிங்கள – பௌத்த பேரினவாதம் கபளீகரம் செய்து வருகின்றதை ஏற்றுக் கொள்ள முடியாது என கனகரத்தினம் சுகாஸ் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், சைவ கிறிஸ்தவ ஆலயங்கள் அதிகம் காணப்படும் பகுதிகளில் திட்டமிடப்பட்ட வகையில் சட்டவிரோதமாக பிரதேசசபையின் அனுமதி இன்றி இன்னொரு பௌத்த விகாரை கட்டப்பட்டு வருகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச நிறுவனங்கள் நாட்டில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு காலதாமதம் செய்யாது சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்.



இல்லையென்றால் முள்ளிவாய்க்காய் பகுதியில் இடம்பெற்ற இனப்படுகொலை சம்பவம் போன்று திருகோணமலையிலும் இடம்பெறும் எனவும் கனகரத்தினம் சுகாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# “மருந்தும் இரத்தமும் வெளியேறுகிறது என சொன்ன போதும் தாதியர்கள் அக்கறையின்றி இருந்தனர்! – சிறுமியின் தாத்தா

செப்டம்பர் 04, 2023

எனது பேத்தியின் இந்த நிலைக்கு விடுதியில் இருந்த தாதியரின் அசண்டையீனமே காரணம் என சிறுமியின் தாத்தா குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் 08 வயது சிறுமியின் இடது கை, மணிக் கட்டின் கீழ் அகற்றப்பட்டுள்ள நிலையில் சிறுமி தொடர்ந்தும் யாழ் போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பில் சிறுமியின் தாத்தா சுப்பையா கனகநாயகம் தெரிவிக்கையில்,

கடந்த மாதம் 22 ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டிருந்தது, அதற்கு சரவணபவன் வைத்தியர் மூலம் மருந்துகளை பெற்றுக் கொண்டோம்.

மருந்துகளை எடுத்தும் தொடர்ந்தும் காய்ச்சல் இருந்ததால் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் விடுதியில் அனுமதித்தோம்.

அங்கு இருக்கின்ற தாதியர்கள் எனது பேத்திக்கு கையில் ஊசி மருந்து செலுத்துவதற்கான ஊசியை ஏற்றி இருந்த போது, எந்த தப்பும் நடந்ததாக அப்போது எங்களுக்கு தெரியவில்லை, பின்னர் மருந்துகளை ஏற்றியபோது கை வீங்கி இருந்தது.

இது தொடர்பில் அங்கிருந்த தாதிக்கு தெரியப்படுத்திய போதும் அவர் அதனை கண்டு கொள்ளவில்லை.

தொடர்ந்து அந்த இரவு 11 மணி அளவில் மருந்து ஏற்றும் போது மருந்து மற்றும் ரத்தம் வெளியில் வருகிறது என்று சொன்ன அப்போதும் அவர்கள் கவனம் செலுத்தவில்லை.

அதற்கு அடுத்த நாள் வைத்தியரிடம் சொல்லிய போது தான் வைத்தியர் பார்வையிட்ட போது கை முழுமையாக செயலிழந்து விட்டதாகவும், அதற்குரிய மருந்துகளை செய்து அந்த கையை பழைய படி கொண்டு வருவோம் என்று சொல்லிய போதும் கடந்த இரண்டு நாளைக்கு முதல் கை கழட்டப்பட்டு அதற்குரிய மருந்துவம் செய்யப்பட்டு கொண்டிருக்கிறது.





தற்போதும் அவசர சிகிச்சை பிரிவிலேயே எனது பேத்தி உள்ளார் இதுவரை எதுவும் அறிவிக்கவில்லை, இதற்கு முழுமையான காரணம் அந்த விடுதியில் இருந்த தாதியரின் அசண்டையீனமே, நான் ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் இனிமேல் இப்படி ஒரு சம்பவம் நடக்கவே கூடாது, நாங்கள் தற்போது வருகின்ற வேதனை இன்னும் ஒருவர் படக்கூடாது என்பதனை தாழ்மையாக கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

# “சிறையில் பரீட்சை எழுதிய மகன் எங்கே?” 17 வருடமாக மகனை தேடி அலையும் தந்தை கேள்வி!

செப்டம்பர் 06, 2023

கடந்த 2006ஆம் ஆண்டு கைது செய்து காணாமல் ஆக்கப்பட்ட மகன், 2007ஆம் ஆண்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள கைதிகளை அமைச்சர்கள் சந்தித்த போது, எடுத்த புகைப்படத்தில் காணப்படுகிறார். ஆனாலும் இன்று 17 வரு டங்கள் கடந்தும் மகனின் நிலைமை தொடர்பில் எந்த தகவலும் இல்லை. நான் இறப்பதற்கு முன்னர் எனது மகனை மீட்டு தாருங்கள் என காணாமல் ஆக்கப்பட்டவரின் தந்தையான யாழ்ப்பாணம் கல்வியங்காட்டை சேர்ந்த சுந்தரலிங்கம் அருண கிரிநாதர் தெரிவித்துள்ளார்.



அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2006ம் ஆண்டு 10ம் மாதம் 25ம் திகதி நல்லூர் அரசடி இராணுவ சோதனைச் சாவடியில் இராணுவத்தினால் எனது மகன் அருணகிரிநாதன் சுதன் பிடித்து செல்லப்பட்டார். அதன் பின்னர் சில காலம் எனது மகனை இராணுத்தினர் வைத்திருந் ததை எமது உறவினர்கள் நண்பர்கள் பலரும் கண்டு எனக்கு தெரியப்படுத்தியிருந்தனர்.

குறித்த விடயத்தை பல்வேறு தரப்பினருக்கும் தெரியப்படுத்திய போதும் அப்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந் தித்து பேசிய போது 48 பேர் கொண்ட கைதிப்பட்டியலில் தனது மகனும் இருப்பதை உறுதிப்படுத்திய நிலையில் மகனின் விடுதலையை கோரிய போதும் அது சாத்தியப்படவில்லை.

“நாங்கள் நிரபராதிகள் விடுதலைக்கு உதவுங்கள் - பூசாவில் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் அமைச்சர்களிடம் வேண்டு கோள்” எனும் தலைப்பில் 2007 செப்டம்பர் 8ம் திகதி தினக் குரல் பத்திரிகையில் வெளியான செய்தியில் உள்ள புகைப படத்தில் எனது மகனும் சிறைக்குள் இருப்பது தெரிய வந்தது.



மேலும் தினக்குரலில் வெளியான செய்தியின் படி அப்போது இருந்த, அமைச்சர் ராஜித சேனராத்ன பிரதி அமைச்சர்களான பி.ராதாகிருஸ்ணன், கே.ஏ.பாயிஸ் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவ நாதன் கிஷோர், உள்ளிட்ட பலரும் பூசா முகாமில் கைதிகளை பார்வையிட்டனர் என்றுள்ளது.

இது தொடர்பில் தற்போதும் பாராளுமன்ற உறுப்பினராக இருக் கும் ராஜித சேனாரட்ன உள்ளிட்டவர்கள் உண்மை நிலையை தெளிவுபடுத்த வேண்டும்.

அதேபோன்று சிறைச்சாலையில் இருந்து பரீட்சை எழுதும் கைதிகள் தொடர்பாக மேலுமொரு இணைய ஊடகமொன்றில் வெளியான புகைப்படத்தில் எனது மகன் இருப்பதும் அறிய வந்தது.

இவ்வாறு எனது மகன் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் 0776323036 என்ற இலக்கம் ஊடாக தொடர்பு கொள் ளுங்கள்.

எனது மகன் பற்றிய விடயங்களை காணாமலாக்கப்பட்டவர் களுக்கான அலுவலகம், மனித உரிமைகள் ஆணைக்குழு, சிறைச்சாலைகள் என இதுவரை பல இடங்களுக்கு சென்ற போதும் உரிய பதில் கிடைக்கவில்லை.

அண்மையில் காணாமலாக்கப்பட்டவர்களின் அலுவலகம் குறிப்பிட்ட சிலரை கண்டுபிடித்தாக தெரிவிக்கப்பட்டது. இந் நிலையில் எனது மகனை கண்டுபிடித்து தர வேண்டும் என்றார்.

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு விவகாரம் சர்வதேசக் கண்காணிப்பின்றி அகழ்வு முன்னெடுக்கப்படுவதில் திருப்தியில்லை!

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

செப்டம்பர் 06, 2023



முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு விவகாரம், சர்வதேச கண்காணிப்பின்றி இடம்பெறுவது திருப்தியளிக்கவில்லை என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.



அதேவேளை இந்த அகழ்வுப் பணியில் தொல்லியல் துறையினர் மீதும் தமக்கு நம்பிக்கை இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், அந்த அகழ்வுப் பணிகளைப் பார்வையிட்டபின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி தொடர்பான விடயத்தில், கடந்த ஜுலை மாதம் இடம்பெற்ற ஆரம்பக்கட்ட அகழ்வுப் பணிகளில் 13உடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக தகவல்கள் வெளிவந்தன.

அதன் பின்னர் அந்த அகழ்வுப் பணிகள் நிறுத்தப்பட்டு, கடந்த 05ஆம் திகதி மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் முல்லைத்தீவு மாவடத்தில் நிலவிய சீரற்ற காலநிலைகாரணமாக அகழ்வுப் பணிகள் தாமதமாகி, செப்ரெம்பர் 06ஆம் திகதி இந்த அகழ்வுப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த அகழ்வுப்பணி தொடர்பில் கடந்த ஜுலை மாதம் 13ஆம் திகதி முல்லைத்திவு நீதிமன்றில் இடம்பெற்ற கலந்துரையாடலில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறை சார்ந்தவர்களும் இந்த அகழ்வுப் பணிகளில் இணைத்துக் கொள்ளப்படவேண்டும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனால் இங்கு அவ்வாறு யாழ் பல்கலைக்கழகத் தொல்லியல் துறைசார்ந்தவர்கள் இணைத்துக்கொள்ளப்படவில்லை.

தற்போது மக்கள் மத்திலில் தொல்லியல் துறையினர் மீது பாரிய சந்தேகங்கள் எழுந்துள்ளன.

ஏன் எனில் குருந்தூர்மலை விவகாரத்தில், தொல்லியல் துறை தொடர்பில் முல்லைத்தீவு நீதிமன்று கடந்த ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி கட்டளை வழங்கியிருந்தது. அக் கட்டளையில் தொல்லியல் துறையினர் நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளையை மூன்று தடவைகள் மீறியதுடன், குருந்தூர் மலையில் விகாரை கட்டுவதற்கு ஒத்துழைத்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிலையில் தொல்லியல் துறையினர் இந்த அகழ்வுப் பணி விடயத்திலும் சரியாக நடந்துகொள்வார்களென நாம் எதிர்பார்க்க முடியாது.

அதேவேளை இந்த மனிதப்புதைகுழி விவகாரத்தில் சர்வதேசகண்காணிப்புத் தேவை எனவும், சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையிலேயே இந்த அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும் எனவும் எமது தமிழ் மக்கள், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

நாங்கள் நீதிமன்றையும், சட்டவைத்திய அதிகாரிகளையும் மதிக்கின்றோம். ஆனால் அனைத்துத் தரப்பினரும் இந்த விடயத்தில் சரியாக செயற்படுவார்கள் என எதிர்பார்க்க முடியாதுள்ளது.

குறிப்பாக இங்கு பொலிசார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஆகியோரே இங்கு அதிகமாகக் காணப்படுகின்றனர்.

இந் நிலையில் மக்கள் சார்பாக அங்கு சட்டத்தரணிகள் மாத்திரமே புதைகுழி வளாகத்திற்குள் செல்லமுடியும். மக்களின் பிரதிநிதிகளாக வேறு யாரும் புதைகுழிப் பிரதேசத்திற்குள் செல்லமுடியாது.

எனவே எமக்கு சந்தேகங்கள் எழாதவாறு இந்த அகழ்வுப் பணிகள் இடம்பெறுவதுடன், உண்மைத் தன்மை வெளிப்படவேண்டும்.


சர்வதேச மற்றும், ஐ.நாவின் கண்காணிப்புக் குழுக்கள் இல்லாமல் இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படுவதில் எமக்குத் திருப்தி இல்லை என்பதையும், தொல்லியல் திணைக்களத்தினையும் நாம் நம்பப் போவதில்லை எனவும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் – என்றார்.

# யாழ். செம்மணிப்படுகொலையின் 27ஆம் ஆண்டு நினைவேந்தல்!

செப்டம்பர் 07, 2023

யாழ்.செம்மணிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மாணவி குமாரசாமி கிருசாந்தியின் 27ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று மாலை செம்மணி பகுதியில் இடம் பெற்றது.







இதன்போது செம்மணிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட, அங்கு புதைக்கப்பட்ட ஏனையவர்களும் நினைவு கூரப்பட்டு, அவர்களுக்கும் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

# முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இரு பெண்களின் ஆடைகளுடன் மனித எச்சங்கள் மீட்பு!

செப்டம்பர் 07, 2023



முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணியின் போது இன்று பெண்களின் உள்ளாடைகளுடன் இரண்டு மனித எச்சங்களும், இரு சன்னங்கள் உள்ளிட்ட சில தடயபொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் இரண்டாம் நாள் அகழ்வு இன்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இரண்டாம் நாள் அகழ்வுப் பணிகளில் இரண்டு மனித உடல்களின் மனித எச்சங்கள் பகுதியளவில் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், இரண்டு துப்பாக்கிச் சன்னங்கள், துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்த ஆடைகள் உள்ளிட்ட பல்வேறு தடையப் பொருட்களும் அகழ்வின்போது மீட்கப்பட்டுள்ளன.



குறித்த இரண்டாம் நாள் அகழ்வுப் பணி தொடர்பில் முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி கே.வாசுதேவா கருத்துத் தெரிவிக்கையில், இரண்டாம் நாள் அகழ்வுப் பணிகளில் இரண்டு மனித உடல்களின் எச்சங்கள் பகுதியளவில் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், துப்பாக்கிச் சன்னங்கள் எனச் சந்தேகிக்கப்படும் இரண்டு உலோகத் துண்டுகளும் வேறு சில ஆதாரப் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பகுதி அளவில் இதுவரை எடுக்கப்பட்ட மனித எச்சங்களில் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டமைக்கான அடையாளங்கள் எவையும் இல்லை. இருப்பினும் மீட்கப்பட்ட ஆடைகளில் துப்பாக்கிச் சன்னங்கள் பட்டிருப்பதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன.


எது எவ்வாறாயினும் இவற்றை விரிவாக ஆராய்ந்து, பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே இதுதொடர்பில் கூற முடியும் என்றார்.



மேலும் குறித்த அகழ்வுப்பணி இடம்பெறும் இடத்தில் யாழ்ப்பாண மாவட்ட சட்டவைத்திய அதிகாரி, சட்டத்தரணிகளான கே.எஸ்.நிரஞ்சன், ரனித்தா ஞானராசா, தடையவியல் பொலிசார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூகசெயற்பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன் உள்ளிட்டவர்களும் பிரசன்னமாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.





















# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியிலிருப்பது இறுதிக்கட்டயுத்தத்தில் இராணுவத்திடம் சரணடைந்தவர்களின் மனித எச்சங்களே; தடையப்பொருட்கள் அதையே உணர்த்துகின்றன!

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

செப்டம்பர் 07, 2023

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியிலிருப்பது, 2009ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சரணடைந்த முன்னாள் போராளிகளின் மனித எச்சங்களே என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

குறித்த மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்படுகின்ற உடைகள், கண்களைக் கட்டுவதற்குப் பயன்படுத்தியிருக்கலாமெனச் சந்தேகிக்கக்கூடிய துணிகள், துப்பாக்கிச் சன்னங்கள் உள்ளிட்ட தடயப்பொருட்கள் அதையே உணர்த்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி இரண்டாம்நாள் அகழ்வாய்வுகளை அவதானித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி இரண்டாம் நாள் அகழ்வுப் பணிகளின்போது, துப்பாக்கிச் சன்னங்கள், துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்த பெண்களுடைய ஆடைகள், கண்களுக்கு கட்டுவதற்கு பயன்படுத்தியிருக்கலாம் எனச் சந்தேகிக்கக்கூடிய வகையிலான துணி, என்பன தடையப் பொருட்களாக மீட்கப்பட்டுள்ளதுடன், மனித எச்சங்களும் பகுதியளவில் மீட்கப்பட்டுள்ளன.

இந் நிலையில் இங்கு இன்னும் பல மனித எச்சங்கள் இனங்காணப்படலாம் என்ற எதிர்ப்பார்ப்பே காணப்படுகின்றது.

இவற்றையெல்லாம் அவதானிக்கும்போது, கடந்த 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின்போது இராணுவத்திடம் சரணடைந்த முன்னாள் போராளிகளை இங்கு கொண்டுவந்து கண்களைக் கட்டி, சித்திரவதைக்குட்படுத்தி, துப்பாக்கியால் சுட்டு படுகொலைசெய்து இங்கு புதைத்துள்ளார்கள் என்பதே எனதும் மக்கள் பலருடையதும் நிலைப்பாடாகவிருக்கின்றது.

மேலும் கடந்த ஜூலை மாதம் 06ஆம் திகதி இந்தப் பகுதியில் முதற்கட்ட அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டபோது, இந்த இடங்களில் புலனாய்வாளர்கள் விதைக்கப்பட்டுள்ளார்கள் என எம்மால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந் நிலையில் கடந்த செப்ரெம்பர் (06) வியாழனன்று இங்கு முதல்நாள் அகழ்வுப் பணிகள் முடிவுறுத்தப்பட்டதன் பிற்பாடு, மனிதப் புதைகுழி வளாகம் பொலிசாரின் பாதுகாப்பிலிருந்தபோது புலனாய்வாளர்கள் உள்நுழைந்து புகைப்படங்கள் எடுத்துள்ளனர். எனவே இங்கு பாதுகாப்புக்கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிசார் என்ன பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

எனவேதான் நாம் இந்த அகழ்வுப்பணிகளில் சர்வதேச கண்காப்பைத் தொடர்ந்து கோரிவருகின்றோம்.

இவ்வாறு புலனாய்வாளர்களின் அத்துமீறல் செயற்பாடு இருந்தமையினால்தான், இரண்டாவதுநாள் அகழ்வுப் பணிகளில் முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி முழுமையான அவதானத்தைச் செலுத்தியிருந்தமை அவதானிக்க முடிந்தது. அந்தவகையில்



நாம் நீதிமன்றை முழுமையாக நம்புகின்றோம்.

எனினும் குருந்தூர்மலை விவகாரத்தில் மூன்றுமுறை நீதிமன்றக் கட்டளையை மீறிய தொல்லியல் துறையினர் மீது எமக்கு அதிர்ப்தியிருக்கின்றது.

அகையினாலேயே யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தொல்லியல் பீடத்தினரை இந்த அகழ்வுப் பணிகளில் இணைத்துக்கொள்ளுமாறு கூறுகின்றோம். இந் நிலையில் தமிழ் தொல்லியல் ஆய்வாளர் பரமு புஸ்பரட்ணம் அவர்கள் மூன்றாம் நாள் அகழ்வாய்வுகளில் பங்கேற்பார் எனவும் அறியக்கூடியவாறுள்ளது.

மேலும் இந்த மனிதப் புதைகுழி தொடர்பான உண்மைத் தன்மைகள் வெளிப்படவேண்டும் என்பதே எனது நிலைப்பாடு - என்றார்.

# கொக்குத்தொடுவாய் மனிதபுதைகுழியில் கண்கள் கட்டப்பட்டு சுட்டுப்படுகொலை!

செப்டம்பர் 08 2023

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் சரணடைந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் பெண் போராளிகளையே கொன்று புதைத்திருக்கிறார்கள் என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.



சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்த தகவல் பிரகாரம் துப்பாக்கி குண்டு உடையில் துளைத்திருப்பதனை காணக்கூடியதாக இருந்தது. ரொபி கடதாசி ஒன்றும் அதில் பகுப்பாய்விற்கு எடுத்து வைக்கப்பட்டிருந்தது.

அதனை விட கண்கள் கட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டமைக்கு சான்றாக கண்ணுக்கு கட்டும் துணி கூட எடுத்ததை காணமுடிந்தது.

இவ்வகையில் 2009 ஆம் ஆண்டு இறுதி பகுதியில் சரணடைந்த விடுதலை புலிகளை கண்ணை கட்டி துப்பாக்கியால் சுட்டு அல்லது சித்திரவதை செய்து கொலை செய்து புதைத்திருக்கிறார்கள் என்பது உறுதியாகியுள்ளதாகவும் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இதனிடையே மனிதப் புதைகுழி மூன்றாம் நாள் அகழ்வாய்வுகளில் தொல்லியல் ஆய்வாளர் புஸ்பரட்ணம் இன்று இணைந்துள்ளார்.

மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த புதன்கிழமையன்று உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

மூன்றாம்நாள் அகழ்வாய்வுகள் (08) இன்று தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால்



முன்னெடுக்கப்பட்ருந்தது.

இந்நிலையில் மூன்றாம் நாள் அகழ்வாய்வுகளில் தொல்லியல் ஆய்வாளர் பரமு புஸ்பரட்ணம் மற்றும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் இணைந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி வளாகத்தில் பொலிசார் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தியது, கண்டனத்திற்குரியது!

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

செப்டம்பர் 08, 2023

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய், மனிதப் புதைகுழி அகழ்வில் மூன்றாம் நாள் அகழ்வாய்வுகள் இடம்பெற்றபோது அங்கு செய்திசேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்களான விஜயரத்தினம் சரவணன் மற்றும், பாலநாதன் சதீஸ் ஆகியோர் பொலிசாரால் அச்சுறுத்தப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் பொலிசாரின் குறித்த அச்சுறுத்தல் செயற்பாடு



கண்டனத்திற்குரியதென முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி மூன்றாம் நாள் அகழ்வாய்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் மூன்றாம் நாள் அகழ்வாய்வுகளில் விடுதலைப் புலிகள் அமைப்பின் பெண் போராளிகள் என நம்பப்படும் இருவருடைய மனித எச்சங்கள் முற்றுமுழுதாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அந்த மனித எச்சங்களில் துப்பாக்கி ரவைகள் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளதுடன், மனித எச்சங்களுடன் மீட்கப்பட்ட சில ஆடைகளிலும், உள்ளாடைகளிலும் இலக்கங்கள் இருந்ததையும் அவதானிக்க முடிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிலைரில் குறித்த மூன்றாம் நாள் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும்போது, இங்கு செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்களைப் பொலிசார் தள்ளி அங்கிருந்து விலகிச் செல்லுமாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமையையும் அவதானிக்கப்பட்டிருந்து.

ஏற்கனவே இந்த அகழ்வுப் பணி தொடர்பிலான கலந்துரையாடல்கள் இடம்பெறும்போது, ஊடகவியலாளர்களுக்கு செய்தி சேகரிப்பதற்கு அனுமதி வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறிருக்க அகழ்வாய்வுப் பணிகளை செய்தி அறிக்கையிடவந்த ஊடகவியலாளர்கள் பொலிசாரால் அச்சுறுத்தப்பட்டமை கண்டனத்திற்குரிய விடயமாகும்.

அத்தோடு இந்த மனிதப் புதைகுழி அகழ்வுகள் இலங்கையில் ஏற்கனவே 33 தடவைகள் இடம்பெற்றுள்ளதாக அறியக்கூடியதாகவுள்ளது.

அதேவேளை இவ்வாறு ஏற்கனவே இடம்பெற்ற மனிதப் புதைகுழி அகழ்வுகளுக்கு சரியான முடிவுகள் கிடைக்கவில்லை என்பதையும் அறியமுடிகின்றது.





இந்நிலையில் இந்த அகழ்வுப்பணிகளில் பெண்களுடைய மனித எச்சங்கள் மீட்கப்பட்டுவருகின்றன. அவ்வாறு மீட்கப்படுகின்ற மனித எச்சங்களில் துப்பாக்கி ரவைகள் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளதுடன், இப்பகுதி மக்களை சோகத்திலும் ஆழ்த்தியுள்ளது.

இப்படி நிலைமைகள் இருக்கும்போதே இந்த விடயங்களை வெளிக்கொணரும் ஊடகவியலாளர்களுக்கு இங்கு அனுமதி மறுப்பது கண்டிக்கத்தக்க விடயமாகும்.

# கொக்குத்தொடுவாய் மனிதபுதைகுழியில் மேலும் பல தடயங்கள்!

செப்டம்பர் 09 2023

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் செப்ரெம்பர் (06) உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் நான்காம் நாள் அகழ்வாய்வுகள் இன்று முல்லைத்தீவு  நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர் மற்றும், தொல்லியல் ஆய்வாளர் பரமு புஷ்பரட்ணம், யாழ்ப்பாணம் சட்டவைத்திய அதிகாரி ஆகியோரால், சட்டத்தரணி எஸ்.துஸ்யந்தி ஆகியோரின் பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த மனிதப் புதைகுழி இரண்டாம் நாள் அகழ்வாய்வின் போது துப்பாக்கி சன்னங்கள் என சந்தேகிக்கப்படும் உலோக துண்டுகள், துப்பாக்கி சன்னங்கள் துளைத்திருக்கலாம் என சந்தேகிக்கப்படும் ஆடைகள் தடையப்பொருட்களாக மீட்கப்பட்டிருந்தன.

மூன்றாம் நாள் அகழ்வில் தமிழீழ விடுதலை புலிகளின் பெண் போராளிகள் உடையது என சந்தேகிக்கப்படும் உடல் எச்சங்கள் இரண்டு முழுமையாக மீட்கப்பட்டதுடன் குறித்த உடல்களுடன் காணப்பட்ட ஆடைகளில் சில இலக்கங்களும் பொறிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் இன்றையதினம் நான்காவது நாள் அகழ்வின் போது சில முக்கிய தடையப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும் இது தொடர்பாக அதிகார பூர்வமாக கருத்து தெரிவிப்பதற்கு அதிகாரிகள் மறுப்பு தெரிவித்துள்ளனர். குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அடையாள இலக்கத் தகடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.



இருந்த போதிலும் இது தொடர்பில் அதிகார பூர்வமாக தகவல் வெளியிட இன்று பொறுப்பாக இருந்த யாழ் சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவன் மறுப்பு தெரிவித்துவிட்டார். அகழ்விற்கு பிரதானமாக செயற்படுகின்ற சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவா இன்று விடுமுறையில் சென்றுள்ளதாக தெரியவருகின்றது.

இன்றும் குறித்த மனிதப் புதைகுழி வளாகத்தை பார்வையிடுவதற்கென யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் குழு ஒன்று வருகை தந்திருந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளக விசாரணைகள் மூலம் பிரதான சூத்திரதாரிகள் யார் என்பதை அறிந்து கொள்ள முடியுமா?

## பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

செப்டம்பர் 10, 2023

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னணியில் ராஜபக்ஷக்களே உள்ளனர் என்பது தற்போது அம்பலமாகியுள்ளது. உள்ளக விசாரணைகள் மூலம் தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மைகளை வெளிக்கொணர முடியாது. குற்றம் சாட்டப்பட்ட ராஜபக்ஷ தரப்பினரே பாராளுமன்றத்தில் தெரிவு குழுவொன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொள்வது என்பது குற்றவாளி ஒருவர் தனது குற்றத்தை தானே விசாரிப்பது போன்றது என்பதுடன் அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் தற்போதைய அரசாங்கமே உள்ளது என வெளிக்கொணரப்பட்டுள்ள விடயங்கள் என்பது எங்களுக்கு ஒன்றும் புதிதல்ல.

இது ஒரு ஆச்சரியமான விடயமும் அல்ல. சனல் 4 காணொளியில் உள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தாக்குதலின் போது இடம்பெற்ற உயிரிழப்புகள் மற்றும் சேதங்கள் காரணமாக நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள சிங்கள மக்களும் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

எவ்வாறாயினும் ஆட்சிப்பீடம் ஏறுவதற்கும், ஆட்சி அதிகாரங்களை தக்கவைத்துக்கொள்வதற்கும், அதனை வெற்றி கொள்வதற்கும் இராணுவத்தை பயன்படுத்தி இவர்கள் எந்தவொரு உச்சக்கட்டத்துக்கும் செல்வார்கள்.

தமது மக்களையும் இழப்பதற்கு தயார் என்பதை சரியான கோணத்தில் அறிந்துகொள்ள முயற்சித்தால் இந்த தாக்குதலின் பின்னணி குறித்த உண்மைகள் அனைத்தையும் சிங்கள மக்கள் விளங்கிக்கொள்வார்கள் என நான் நினைக்கிறேன்.

மேலும் நாட்டின் உள்ளக விசாரணைகள் மூலம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணி மற்றும் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் யார் என்பதை அறிந்து கொள்ள முடியுமா என்பது கேள்விக்குறியாகும்.

பாராளுமன்றத்தில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அரசாங்கத்திற்கு ஆதரவாகவே பெரும்பான்மை காணப்படுகிறது.

இந்த பெரும்பான்மை, அரசாங்க தரப்பினரையே இன்று சனல் 4 நிறுவனம் குற்றவாளிகளாக அடையாளப்படுத்தியுள்ளது.



தாக்குதலின் பின்னணியில் ராஜபக்ஷ தரப்பினரே உள்ளனர் என்பதை இந்த காணொளி மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், குற்றம் சாட்டப்பட்ட ராஜபக்ஷ தரப்பினரே பாராளுமன்றத்தில் தெரிவுக் குழுவொன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொள்வது என்பது வேடிக்கையானது.

அதாவது குற்றவாளி ஒருவர் தன்னுடைய குற்றத்தையே தானே விசாரிப்பது போன்றது. இது போன்ற முட்டாள்தனமான விடயத்துக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்றார்.

# நாட்டை ஆண்டவர்கள் சர்வதேச விசாரணையை கோருகின்றனர்!

## நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்

செப்டம்பர் 12, 2023

நாட்டை ஆண்டவர்கள் சர்வதேச விசாரணையை கேட்கின்றார்கள் ஆனால் தமிழர்கள் மீதான இனப்படுகொலை விடயத்தில் மாறிமாறி ஆட்சியில் இருந்து மறுத்து வந்திருக்கிறார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு நடைபெறும் இடத்தினை பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஈஸ்டர் குண்டு தாக்குதலில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூட சர்வதேச விசாரணை தேவையென கேட்டிருக்கின்றார். அவர்கள் இந்த நாட்டை ஆளுகின்றவர்களாக அல்லது ஆட்சி அதிகாரம் வலிமைமிக்கவர்களாக இருக்கின்ற போது தங்களுக்கு அந்த விடயங்களை



கண்டறிவதற்கு சர்வதேச விசாரணை வேண்டும் என கோருகின்றார்கள்.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் என வருகின்ற போது நீதியான விசாரணை தேவை என அதிக பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரக்கூடிய சூழல் இருக்கிறது. அப்படி இருக்கையில் உள்ளக விசாரணை மூலம் ஈஸ்டர் குண்டு தாக்குதலுக்கு தீர்வினை பெற முடியாதென ஒரு பகுதி பெரும்பான்மையின பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது நாட்டை ஆண்டவர்கள் சர்வதேச விசாரணையை கேட்கின்றார்கள் ஆனால் தமிழர்கள் மீதான இனப்படுகொலை விடயத்திலே நாடாளுமன்றத்திலே இருக்க கூடிய ஆளும்தரப்பு, எதிர்தரப்பிலே இருக்ககூடிய ஒட்டு மொத்த சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களும் இங்கு அப்படி குற்றமே நடைபெறவில்லையென மாறிமாறி ஆட்சியில் இருந்து மறுத்து வந்திருக்கிறார்கள்.

14 ஆண்டுகளாக எங்களுக்கான நீதி கிடைப்பதற்கான வழிவகைகள் எந்த இடத்திலும் விட்டு வைக்கவில்லை. அவ்வாறான சூழலில் எமக்கான இனப்படுகொலைக்கு நீதி கிடைக்க வேண்டுமாக இருந்தால் சர்வதேச விசாரணை ஒன்றின் மூலமாக மாத்திரம் தான் சாத்தியப்படும்.

சிங்கள தரப்புகள் இனவாதம் என்ற அடிப்படையில் சிந்திக்காமல் உங்களுக்கு ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கின்ற போது சர்வதேச விசாரணையை கோருகின்ற நீங்கள் இந்த நாட்டில் மக்களாக இருக்க கூடிய ஒன்றரை இலட்சம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கும் ஒரு சர்வதேச விசாரணை வேண்டும் என்பதனையும் நீங்கள் வலியுறுத்த வேண்டும். அது நாடு முன்னோக்கி அபிவிருத்தி பாதையில் செல்வதற்கான ஒரு சூழலை உருவாக்கும். ஏனென்றால் இனப்படுகொலையாளிகள் தூக்கிலிடப்பட வேண்டும்.



அத்தோடு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் அகழ்வுகள் நடைபெறுகின்ற போது ஊடகவியலாளர்கள் அதனை ஆவணப்படுத்துவதற்கு குறிப்பிட்ட கால வரையறை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த இடத்தில் கிடைக்கப்பெற்ற தடயங்களை மறைக்ககூடும் என்ற சந்தேகம் பாதிக்கப்பட்டிருக்கின்ற தமிழ் மக்கள் மத்தியிலே இருக்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளை உறுதிப்படுத்துகின்ற தகடு , இலக்கங்கள் எடுக்கப்படுகின்ற போது அதனை மறைக்கின்ற நிலமை காணப்படுமாக இருந்தால் உடல்கள் யாருடையது என்பது தெரியாமல் இருக்கும். முழுமையான ஆவணப்படுத்தலை ஊடகவியலாளர்கள் ஆவணப்படுத்த வேண்டும் .

ஏனெனில் அகழ்கின்ற தரப்பு அரச தரப்பாக இருக்கின்றபடியால் அரச தரப்பே தமிழ் மக்களின் இனப்படுகொலைக்கு காரணமாக இருக்கும் நிலையில் குறிப்பாக பொலிஸ் திணைக்களம் ஊழல் நிறைந்ததாக இருக்கிறது. இராணுவ தரப்பு குற்றங்களிலே ஈடுபட்டிருக்கிறது.

இது ஒரு நம்பகத்தன்மையாக மக்களால் பார்க்கப்படவில்லை. என்னை பொறுத்தமட்டில் பக்கச்சார்பற்ற விசாரணை நடைபெற வேண்டும். சர்வதேச சமூகம் இந்த விடயத்திலே அக்கறை கொள்ள வேண்டும்.

தொடர்ச்சியாக சர்வதேச குற்றவியல் விசாரணையை வலியுறுத்தி கொண்டிருக்கின்றோம். இம்முறையும் சர்வதேச மனித உரிமைகள் பேரவையிலே இவ் விடயங்களை வலியுறுத்த இருக்கின்றோம்.

சர்வதேச நீதிமன்றத்தின் முன்பாக இன படுகொலை குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அதுமட்டும் தான் இனங்கள் ஐக்கியப்பட்டு நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான ஒரே வழியாக இருக்கும் என மேலும் தெரிவித்தார்.

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி 06 ஆம் நாள் அகழ்வு! இதுவரை 06 மனித எலும்புக்கூட்டுத் தொகுதி மீட்பு!

செப்டம்பர் 12, 2023

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் செப்ரெம்பர் (06) புதனன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.



இந் நிலையில் ஆறாம்நாள் அகழ்வாய்வுகள் செப்ரெம்பர் (12) இன்று முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இடம்பெற்றது.



அதேவேளை குறித்த அகழ்வாய்வுகளில் தொல்லியல் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி கே.வாசுதேவா, சட்டத்தரணி கே.எஸ்.நிரஞ்சன், தடையவியல் பொலிசார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஆகியோரின் பங்கேற்புடன், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப் பட்டது.

குறித்த ஆறாம்நாள் அகழ்வாய்வுகள் தொடர்பில் முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா கருத்துத் தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாய் ஆறாவதுநாள் அகழ்வாய்வில் ஒரு மனித எலும்புக்கூட்டுத் தொகுதி முற்றுமுழுதாக அகழ்ந்தெடுக்கப் பட்டிருந்ததுடன், செப்ரெம்பர் (11) திங்களன்று பகுதியளவில் அகழந்தெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூட்டுத் தொகுதியின் மிகுதிப் பாகங்களும் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டன.

அத்தோடு குறித்த ஆறாம் நாள் அகழ்வாய்வில் துப்பாக்கி ரவை ஒன்றும், கழிவு நீரினைச் சுத்திகரித்து அருந்துவதற்கு



பயன்படுத்தப்படும், ரஷ்யத் தயாரிப்பு நீர் சுத்திகரிப்புக் கருவி ஒன்றும் தடையப் பொருட்களாக பெறப்பட்டுள்ளன.

அதேவேளை இவ்வாறு அகழ்ந்தெடுக்கப்படும் மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் கண்கள் கட்டப்பட்ட நிலையிலேயோ, கைகள் கட்டப்பட்ட நிலையிலேயோ மீட்கப்படவில்லை.

இந்த அகழ்வாய்வுப் பணிகள் இடம்பெறும்போது காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் சார்பில், இரண்டு சட்டத்தரணிகள்





அகழ்வாய்வுகள் ஆரம்பமாகி முடிவடையும்வரை நேரடியாக நின்று பார்வையிடுகின்றனர்.

இதனைவி தடையவியல் போலிசார் அகழ்வுப்பணிகளின்போது புகைப்படங்களை எடுத்து ஆவணப்படுத்துகின்றனர்.

இவ்வாறான சூழலில் இங்கு அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப் பட்டுவரும்நிலையில் கைகள் கட்டப்பட்டநிலையில் எலும்புக் கூட்டுத் தொகுதிகளோ, கண்கள் கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட துணிகளோ இதுவரை இனங்காணப்படவில்லை என்றார்.

# யாழ். தையிட்டியில் தனியார் காணி அளவிடும் பணி தற்காலிகமாக இடைநிறுத்தம்!

செப்டம்பர் 12, 2023

யாழ்ப்பாணம் தையிட்டியில் விகாரை அமைக்கப்பட்டுள்ள தனியார் காணியினை அளவிடும் பணி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த காணியை சுவீகரிப்பதற்காக இன்றைய தினம் காணி அளவீடு மேற்கொள்ளப்படவிருந்ததாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி அறிவித்திருந்தது.

இந்த நிலையில் குறித்த திட்டத்தை தடுத்து நிறுத்த மக்களுக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்திருந்தது. இதற்கமைய மக்கள் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கையில்



தையிட்டியில் விகாரை அமைக்கப்பட்டுள்ள காணியினை அளவிடும் நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் மக்கள் பிரதிநிதிகள், காணி உரிமையாளர்கள், மற்றும் பொது மக்கள் பங்கேற்றிருந்ததாக



தெரிவிக்கப்படுகின்றது.

# வவுனியாவில் இராணுவத்தின் தாக்குதலில் இளைஞன் வைத்தியசாலையில் !

செப்டம்பர் 13, 2023

வவுனியா கனகராயன் குள பகுதியில் உள்ள கரப்புகுத்தி குளத் தில் அத்துமீறி மீன்பிடிக்க முயன்ற இராணுவத்தினருக்கும் உள்ளூர் தமிழ் மக்களிற்குமிடையே இடம்பெற்ற கைகலப்பில் இளைஞன் காயமடைந்து மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை (12) இரவு கரப்புக்குத்தி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் வலைகளைப்போட்டு சட்டவிரோதமாக குளத்தில் மீன்பிடியில் ஈடுபட்டு வந்திருந்தனர். எனினும் குளத்தில் "மீன்பிடிக்க வேண்டாம்" என உள்ளூர் மக்கள் இராணுவத்திற்குத் தெரியப்படுத்தியபோதும் இராணுவத்தினர் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் மீன்பிடிக்க வேண்டாம் என இராணுவத்தை உள்ளூர் மக்கள் மறித்த போது இராணுவத்தினர் தம்வசம் வைத்திருந்த வாள்களால் தாக்கியுள்ளனர்.

தாக்குதலில் கரப்புக்குத்தியைச் சேர்ந்த சிறீதரன் சுஜீபன் (வயது 29) என்ற இளைஞன் காயமடைந்து மாங்குளம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காகக் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் .



யுத்தத்தின் பின்னராகவும் தொடர்ந்தும் வடகிழக்கில் குவிக்கப் பட்டுள்ள படையினரது பிரசன்னமே பொதுமக்களுடனான மோதல்களாக வலுத்துவருகின்றது.

# கிளிநொச்சி கிராஞ்சி பிரதேச செயலக பிரிவில் உள்ள பொன்னாவெளி பகுதியில் 40 நாட்கள் கடந்து தொடரும் மக்களின் போராட்டம்!

செப்டம்பர் 13, 2023

கிளிநொச்சி கிராஞ்சி பிரதேச செயலக பிரிவில் உள்ள பொன்னாவெளி கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட மக்களின் விவசாய நிலங்களை ஆக்கிரமித்து அமைக்கப்படவுள்ள சீமெந்து தொழிற்சாலைக்கு எதிராக 41ஆவது நாளாக அப்பகுதி மக்கள் நேற்று செவ்வாய்க்கிழமை (12) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஏற்கனவே தனியார் நிறுவனங்களால் இப்பகுதியில் அமைக்கப்பட்ட 40க்கு மேற்பட்ட கிணறுகள் மற்றும் குடிநீர் செயற்றிட்ட வேலைகளாலும் மக்கள் குடிநீரின்றி அவதிப்படுவதாக கூறும் அப்பகுதி மக்கள், தற்போது சீமெந்து தொழிற்சாலைக்காக அப்பகுதியில் சுண்ணக்கள் அகழ்வு இடம்பெறுகிறது இதனால் நன்னீர் உவர் நீராக மாறி வருகிறது எனவும் தெரிவித்துள்ளனர்.

குடிநீர் வசதியின்மை உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பில் 40 நாட்களுக்கு மேலாக தாங்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாகவும் பல்வேறு பொறுப்பு வாய்ந்த அரச நிறுவனங்கள் மற்றும் கிளிநொச்சி அபிவிருத்திக் குழு தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உட்பட பலருக்கு தெரியப்படுத்திய போதிலும், இதுவரை தங்கள் பகுதிக்கு அரச அதிகாரிகளோ அமைச்சர்களோ கிராம அலுவலரோ யாரும் வந்து சந்திக்கவில்லை இதுவரை தங்கள் முறைப்பாடுகளுக்கு சாதகமான பதில் வழங்கப்படவில்லை என்கிற குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.



இந்நிலையில், மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினர் நேற்று (12) மாலை குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை சந்தித்ததுடன், இப்போராட்டம் தொடர்பாக மக்களின் நிலைப்பாடு குறித்தும் அறிந்துகொண்டனர்.

எனினும், குறித்த பிரதேச மக்கள் தற்போது எதிர்நோக்கி வரும் சீமெந்து தொழிற்சாலை அமைக்கப்படுவது, குடிநீரின்மை உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை தமது போராட்டம் தொடரும் என பாதிக்கப்பட்டோர் தெரிவித்தனர்.

# முல்லை கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி 07ஆம் நாள் அகழ்வாய்வு!

செப்டம்பர் 12, 2023

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் ஏழாம் நாள் அகழ்வாய்வுகள் செப்ரெம்பர் (13) இடம்பெற்றநிலையில், மூன்று மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டதுடன், விடுதலைப் புலிகளின் சைனட் குப்பி ஒன்றும், இரண்டு இலக்கத் தகடுகளும் தடையப் பொருட்களாக எடுக்கப்பட்டன.



இந்நிலையில் ஏழுநாட்கள் அகழ்வாய்வுப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் இதுவரை 09மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த ஏழாம்நாள் அகழ்வாய்வுகள் தொடர்பில் முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா கருத்துத் தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் ஏழாம்நாள் அகழ்வாய்வில், மூன்று மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டதுடன், சைனட் குப்பி ஒன்றும், இரண்டு இலக்கத் தகடுகளும் தடையப் பொருட்களாக எடுக்கப்பட்டன.

இந்த புதைகுழியிலுள்ள எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மிக நெருக்கமாக, ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்து காணப்படுவதால், அகழ்வாய்வு செய்வதற்கு அதிக நேரத்தைச் செலவிடவேண்டியுள்ளது.

அகழ்வாய்வுகள் மேற்கொள்ளும்போது, சில நாட்களில் ஓரிரு எலும்புக்கூட்டுத் தொகுதிகளையே அகழ்ந்தெடுக்கமுடிகின்றது.

குறித்த மனிதப்புதைகுழியிலுள்ள எலும்புக்கூட்டுத் தொகுதிகளையும், தடையப்பொருட்களையும் எடுத்தாலே, இது தொடர்பில் சரியான ஆய்வுகளை மேற்கொள்ளமுடியும்.

எனவே குறித்த அகழ்வாய்வுப் பணிகளின் காலத்தை வரையறுக்க முடியாதுள்ளது.

ஏற்கனவே அகழப்பட்டுள்ள குழியிலிருந்து மனித எச்சங்களையும், தடையப்பொருட்களையும் முழுமையாக அகழ்வாய்வு செய்து எடுப்பதற்கு ஒரு சில வாரங்கள் நீடிக்கலாம் என நினைக்கின்றேன்.

அதனைவிட இன்னும் மேலதிகமாக குழியைத் தோண்டி அகழ்வாய்வுகள் மேற்கொள்வதற்கு எவ்வளவு காலம்எடுக்கும் எனக்கூறமுடியாது.

இந்தப் புதைகுழி தொடர்பிலான அறிக்கைகள், அகழ்வாய்வு செய்யும் குழுவினால், முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றிற்கு சமர்ப்பிக்கப்படும்.

அகழ்வாய்வில் எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளும், தடையப்பொருட்களும் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள பிரேதசாலையில், விசேட அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த அகழ்வாய்விற்கென 5.7மில்லியன் நிதி ஒதுக்கீடு கிடைகப்பெற்றது. இவ்வாறு கிடைக்கப்பெற்ற நிதி ஒதுக்கீட்டினைப் பயன்படுத்தி, புதைகுழிக்குரிய தகரப் பந்தல், தங்குமிட வசதி, மலசலகூட வசதி உள்ளிட்ட விடயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.


இவ்வாறு ஒருக்கின்ற நிதி மூலத்தை வைத்து கடந்த வாரத்தில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இந்தவாரத்திலும் அகழ்வாய்வுகளை மேற்கொண்டுவருகின்றோம்.

அடுத்தவாரமும் அகழ்வாய்வுகளை மேற்கொள்வதற்கு ஒதுக்கப்பட்ட நிதி போதுமாகவுள்ளது.

தொடர்ந்து அகழ்வாய்வுகளை மேற்கொள்வதற்கு நீதவான் உத்தரவிடுவாரெனில் அகழ்வாய்வுகளைத் தொடர்ந்து மேற்கொள்வோம்.







எடுக்கப்பட்ட தகட்டிலக்கம் தொடர்பாக, அவை எந்தக் காலத்துக்குரியவை போன்ற விடயங்களை ஆராய்ந்து வருகின்றோம். அதன்பின்னர் தகட்டிலக்கங்கள் தொடர்பன விபரங்கள் அறியத் தரப்படும் என்றார்.

மேலும் இந்த அகழ்வாய்வு இடம்பெறும் இடத்திற்கு முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா பல்கலைக்கழக மாணவர் வரவேற்பு பதாதையில் தமிழ் மொழி புறக்கணிப்பு!

செப்டம்பர் 14, 2023

வவுனியா பல்கலைக் கழகத்தில் 2021 (22) ஆம் வருடத்தில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி வவுனியா பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகியுள்ள பிரயோக விஞ்ஞான பீட மாணவர்களை உள்வாங்கும் நடவடிக்கை வவுனியா பல்கலைக் கழகத்தில் நேற்று முன்தினம் (12) முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த மாணவர்களை வரவேற்கும் முகமாக பல்கலைக்கழக விடுதி மற்றும் அதனுடன் இணைந்த பகுதியில் வரவேற்பு பதாதைகள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. குறித்த பதாதையில் சிங்கள மொழிக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளதுடன், ஆங்கில மொழியும் காணப்படுகின்றது. தமிழ் மொழி முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் உள்ள இரண்டாவது பல்கலைக கழகமும், தமிழ் மக்கள் வாழும் பகுதியில் உள்ள வன்னிக்கான பல்கலைக்கழகமுமான வவுனியா பல்கலைக் கழகத்தில் ஆரம்பித்து இரண்டு வருடங்கள் முடிவதற்கு முன்னரே தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு சிங்கள மயமாக்கல் இடம்பெறுவது குறித்து சமூக ஆர்வலர்கள் பலரும் சமூக வலைத்தளங்களில் விசனம் வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# முல்லை கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி 08ஆம் நாள் அகழ்வாய்வில் 05 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்தெடுப்பு!

செப்டம்பர் 14, 2023

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் எட்டாம் நாள் அகழ்வாய்வுகள் செப்ரெம்பர் (14) இடம்பெற்றநிலையில், ஐந்து மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப் பட்டதுடன், தடையப் பொருளாக துப்பாக்கி ரவை ஒன்றும் ஆடைகளும் மீட்கப்பட்டன. இவ்வாறு மீட்கப்பட்ட ஆடைகளில், நீளக்காட்சட்டையில் (இ1124) இலக்கம் இடப்பட்டுள்ளது.





இந்நிலையில் எட்டுநாட்கள் அகழ்வாய்வுப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் இதுவரை 14மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

# நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன் மற்றும் எஸ். வினோ நோகராதலிங்கம் ஆகியோர் கைதாகி பின் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்!

செப்டம்பர் 14, 2023

நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன் மற்றும் எஸ். வினோ நோகராதலிங்கம் ஆகியோர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர் மலை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரையில் பௌத்த துறவிகளின் வழிபாட்டுக்கு தடை ஏற்படுத்தியதாக தொடரப்பட்ட வழக்கு விசாரணை இன்று(14) முல்லைத்தீவு நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

வழக்கு விசாரணையின் போது நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன் மற்றும் எஸ். வினோ நோகராதலிங்கம் ஆகியோர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.



நீதிமன்றில் வழக்கு விசாரணைகளின் போது சமூகமளிக்காத நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கு பிடியாணை வழங்கப்பட்டு கைதாகியுள்ளனர்.




# கனடாவில் ஆளும் லிபரல் கட்சியின் ஆதரவு சரிவு!

செப்டம்பர் 01, 2023
கனடாவில் ஆளும் கட்சியின் ஆதரவில் சரிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடொ தலைமையிலான லிபரல் கட்சிக்கான ஆதரவு சரிவடைந்துள்ளது.

குறிப்பாக இளம் கனடியர்கள் மத்தியில் லிபரல் கட்சிக்கான ஆதரவு வீழ்ச்சியடைந்துள்ளது.

நானோஸ் ஆய்வு நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பு மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

கொன்சேவடிவ் கட்சிக்கான ஆதரவு லிபரல் கட்சிக்கான ஆதரவு விடவும் 23 வீதம் அதிகம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

18 முதல் 29 வயது வரையிலான இளம் கனடியர்கள் மத்தியில் லிபரல் கட்சிக்கான ஆதரவு சடுதியாக குறைந்துள்ளது.

கருத்துக் கணிப்பில் பங்கேற்ற இளம் கனடியர்களில் 15.97 வீத மானவர்கள் மட்டுமே லிபரல் கட்சிக்கு ஆதரவு தெரிவித் துள்ளனர்.

கொன்சவேடிவ் கட்சிக்கு 39.21 வீத ஆதரவு காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.





# கனடாவில் வட்டி வீதத்தை அதிகரிக்க வேண்டாம் என பிரிட்டிஷ் கொலம்பிய முதல்வர் கோரிக்கை!

செப்டம்பர் 02 2023

கனடாவில் வங்கி வட்டி வீதங்களை அதிகரிக்க வேண்டாம் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வட்டி வீத அதிகரிப்பினை இடைநிறுத்துமாறு பிரிட்டிஷ் கொலம்பிய மாகாண முதல்வர் டேவிட் எபி கோரியுள்ளார்.

நாட்டின் மத்திய வங்கியின் ஆளுனர் ரிக் மெக்கலமிடம்இந்தக் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் வாரத்தில் வட்டி வீதங்கள் உயர்த்தப்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான ஓர் பின்னணியில் வங்கி வட்டி வீதங்களை அதிகரிக்க வேண்டாம் என பிரிட்டிஷ் கொலம்பிய முதல்வர் கோரியுள்ளார்.

வங்கி வட்டி வீத அதிகரிப்பினால் மக்களுக்கு ஏற்படக்கூடிய தாக்கத்தை கருத்திற் கொள்ளுமாறு அவர் வலியுறுத்தி யுள்ளார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் மக்கள் பாதிக்கப்பட் டுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே வட்டி வீதங்களை உயர்த்தக் கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.






# கனடாவில் வட்டி வீதத்தை அதிகரிக்க வேண்டாம் ஒன்ராரியோ முதல்வர் கோரிக்கை!

செப்டம்பர் 04, 2023

நாட்டில் வங்கி வட்டி வீதத்தை உயர்த்த வேண்டாம் என ஒன்ராரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கை தொடர்பில் போர்ட், மத்திய வங்கியின் ஆளுனர் ரிப் மெக்கலத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத் துள்ளார்.

வட்டி வீத அதிகரிப்பினால் மாகாண மக்களும் வர்த்தகர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.




அண்மைய சில மாதங்களாக கனடிய மத்திய வங்கி வட்டி வீதம் தொடர்ச்சியாக உயர்த்தி செல்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

வட்டி வீத அதிகரிப்பு மக்கள் அனைவரையும் அழுத்தங்களக்கு உள்ளாக்கியுள்ளது என முதல்வர் போர்ட் தெரிவிதுள்ளார்.

இதேவேளை, வட்டி வீதங்களை அதிகரிக்க வேண்டாம் என ஏற்கனவே பிரிட்டிஷ் கொலம் பியாவின் முதல்வ டேவிட் எபியும் கோரியிருந்தார்.

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# கனடாவில் வட்டி வீதம் குறித்த கனடா மத்திய வங்கி முக்கிய அறிவிப்பு!

செப்டம்பர் 06, 2023

கனடாவில் வட்டி வீதம் தொடர்பில் விசேட அறிவிப்பு வெளியிடப் பட்டுள்ளது.

வட்டி வீதங்களை அதிகரிக்கப் போவதில்லை என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி வங்கி வட்டி வீதங்கள் ஐந்து வீதமாகவே காணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட வட்டி வீதங்கள்




பொருளாதாரத்தில் தாக்கத்தை செலுத்துவதற்கு கால அவகசாம் வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

வட்டி வீதத்தை உயர்த்த வேண்டாம் என இரண்டு மாகாணங் களின் முதல்வர்கள் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் காட்டுத் தீ குறித்து விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை!

செப்டம்பர் 09, 2023

கனடாவில் காட்டுத்தீ காரணமாக 165000 சதுர கிலோமீட்டர் பரப்பு தீக்கிரையாகியுள்ளது.

இந்த ஆண்டில் இதுவரை நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம் பெற்ற காட்டுத்தீ சம்பவங்களினால் இவ்வாறு அழிவு ஏற்பட் டுள்ளது.

நாட்டில் சுமார் 6174 இடங்களில் காட்டுத்தீ பரவியதாகவும் இதில் தற்பொழுது சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட இடங்களில் காட்டுத்தீ பரவுகை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நிலவி வரும் காட்டுத்தீ பரவுகைகளில் சுமார் 800 இடங்கள் கட்டுக்கு அடங்காதவை என தெரிவிக்கப்படுகிறது.

காட்டுத்தீ காரணமாக இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர நேரிட்டது எனவும் பெரும் எண்ணிக்கையிலான சொத்துக் களுக்கு சேதம் ஏற்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காட்டுத் தீ காரணமாக ஏற்பட்ட சொத்து நஷ்டங்கள் தொடர்பில் இதுவரையில் மதிப்பீடு செய்யப்படவில்லை.

இந்த செப்டம்பர் மாதத்திலும் காட்டுத்தீ பரவுகை தொடர்ந்தும் நீடிக்கும் என கனடிய இயற்கை வள முகவர் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் பல இடங்களில் காட்டுத்தீ பரவுகை ஏற்படக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# கனடாவில் வீட்டு வாடகை தொடர்ச்சியாக அதிகரிப்பு!

செப்டம்பர் 13, 2023

கனடாவில் வீட்டு வாடகை தொகைகள் தொடர்ச்சியாக அதிகரித்து செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

சராசரியாக புது வாடகை குடியிருப்பாளர் ஒருவர் மாதம் ஒன் றுக்கு 2117 டாலர்களை வாடகையாக செலுத்த நேரிட்டுள்ளது.

பிரபல இணையத்தளமான Rentals.ca வெளியிட்டுள்ள அண் மைய அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.




கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின் சராசரி வாடகை தொகை யானது சுமார் 9.6 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

கடந்த மே மாதம் முதல் சராசரியாக வீட்டு வாடகை தொகை யானது சுமார் நூறு டாலர்களினால் மாதாந்தம் அதிகரித்துச் செல்லும் போக்கு பதிவாகியுள்ளது என சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

நாட்டின் அநேக பகுதிகளில் வாடகை தொகை தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கனடாவில் வீடுகளுக்கு தட்டுப்பாடு நிலவும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது!

செப்டம்பர் 14, 2023

கனடாவில் வீடுகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

Canada Mortgage and Housing Corp என்ற நிறுவனம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

அந்த நிறுவனத்தைச் சேர்ந்த பொருளியலாளர் அலிடெக் லொர்வித், வீடுகளுக்கு ஏற்படக்கூடிய தட்டுப்பாடு குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் 2030 ஆம் ஆண்டு அளவில் கனடாவில் சுமார் 3.5 மில்லியன் வீடுகளில் தேவைப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய அரசாங்கங்களினால் முன்னெடுத்து வரும் வீட மைப்பு திட்டங்கள் சரியான முறையில் அமுல்படுத்தப்பட்டாலும் இவ்வாறு பெருந்தொகை வீடுகளுக்கு தட்டுப்பாடு நிலவும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் 3.5 மில்லியன் வீடுகளை நிர்மாணிக்க முடியும் என அரசாங்க தரப்பினர் தெரிவிக்கின்றனர்.





"நான் என்னுயிரினும் மேலாக நேசிக்கும் மக்களே!
உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கிறேன்.
நீங்கள் அனைவரும் பரிபூரணமாகக் கிளர்ந்தெழவேண்டும்.
இங்கு ஒரு மாபெரும் புரட்சி வெடிக்கட்டும்.

*- ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் -*

# தமிழக செய்திகள்



# பல்லடம் படுகொலைகளுக்குக் காரணமான மதுவிற்பனையை தமிழ்நாடு அரசு முற்றிலுமாக நிறுத்தவேண்டும்! – சீமான்

செப்டம்பர் 05, 2023

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே கள்ளக்கிணறு பகுதியில் தோட்டத்தில் அமர்ந்து மது அருந்தியவர்களை தட்டிக்கேட்ட ஒரே குடும்பத்தை சேர்ந்த செந்தில்குமார், மோகன்ராஜ், ரத்தினாம்பாள், புஷ்பவதி ஆகிய நால்வரை, போதை கும்பல் வெட்டி படிகொலை செய்த நிகழ்வு பெரும் அதிர்ச்சியும், மிகுந்த மனவேதனையும் அளிக்கிறது. ஒவ்வொரு நாளும் பல இலட்சக்கணக்கான தமிழ்க்குடும்பங்களின் அழிவுக்குக் காரணமாக உள்ள மதுவினை தடைசெய்யாமல் வேடிக்கைப்பார்க்கும் திமுக அரசின் அலட்சியப்போக்கே இப்படுகொலைகளுக்கு முழு முதற் காரணமாகும். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆறுதலைக் தெரிவித்து, துயரில் பங்கெடுக்கிறேன்.





தமிழ்நாட்டில் அரசே நடத்தும் மலிவுவிலை மதுக்கடைகளால் சட்டம்-ஒழுங்கு முற்றாகச் சீரழிந்து கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமைகள் உள்ளிட்ட கொடுங்குற்றங்கள் வேகமாகப் பெருகிவருகின்றன. சொந்த இரத்த உறவுகள் கூட சிறு சிறு முன்பகைக்காக தங்களுக்குள் ஒருவருக்கொருவர் வெட்டிக்கொண்டு சாகும் சமூகப்பேரவலம் நிகழ்வதற்கு அரசு விற்கும் மதுதான் அடிப்படை காரணமாகிறது. அதுமட்டுமின்றி திமுக அரசு பொறுப்பேற்ற பிறகு கஞ்சா விற்பனை கட்டுக்கடங்காத அளவிற்கு வளர்ந்து கஞ்சா விற்பனையின் தலைநகராக தமிழ்நாடு மாறியுள்ளது.

தலைநகர் சென்னையில் நடக்கும் படுகொலைகள் பெரும்பாலும் கஞ்சா போதையில்தான் நடைபெறுகிறது. எனவே அரசு மது விற்பனையை தடைசெய்தாலே தமிழ்நாட்டில் நடைபெறும் 95% கொடுங்குற்றங்கள் நடைபெறாமலேயே தடுத்து நிறுத்த முடியும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். கடந்த அதிமுக ஆட்சிக்காலத்தில் மதுவிலக்கினை நடைமுறைப்படுத்த போராடிய திமுக, தமது ஆட்சிக்காலத்தில் நடைமுறைப்படுத்த மறுப்பது ஏன்? இத்தனை உயிர்கள் பறிபோன பிறகும் திமுக அரசு மதுவிற்பனையைத் தடைசெய்ய மறுத்து அமைதி காப்பது வெட்கக்கேடானது. மக்களின் நலனைவிட அரசின் வருமானம் திராவிட மாடல் அரசிற்கு முதன்மையானதா? என்ற கேள்வியும் எழுகிறது.

ஆகவே, தமிழ்நாடு அரசு சீரழியும் தமிழிளம் தலைமுறையைக் காப்பதற்கு போர்க்கால அடிப்படையில் தீவிர தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் பெருகும் கஞ்சா விற்பனையை முற்று முழுதாக தடுக்க வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன். மேலும், பல்லடம் படுகொலைகளைச் செய்த குற்றவாளிகளை விரைந்து கைது செய்து கடும் தண்டனைப் பெற்றுத்தர வேண்டுமெனவும் தமிழ்நாடு அரசினைக் கேட்டுக்கொள்கிறேன்.

# கூடங்குளம் அணு உலைகளுக்கான ஜெனரேட்டர்களை ஏற்றி வந்த இழுவைக்கப்பல் தரைதட்டியது!

செப்டம்பர் 09, 2023

திருநெல்வேலி மாவட்டம் கூடங்குளத்தில் அமைக்கப்பட்டு வரும் 5 மற்றும் 6-வது அணு உலைகளுக்கான நீராவி இயந்திரங்களை ஏற்றிவந்த இழுவைக் கப்பல் தரைதட்டி நின்றது.



கூடங்குளத்தில் தலா ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி திறனுள்ள முதல் மற்றும் 2-வது அணு உலைகளில் மின்உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இங்கு 3 மற்றும் 4-வது அணுஉலைகள் அமைக்கும் பணிகள் 85 சதவிகிதம் நிறைவடைந்துள்ளன. 5 மற்றும் 6-வது அணுஉலைகளை அமைக்கும் பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதற்காக முக்கிய உபகரணங்கள் ரஷ்யாவிலிருந்து கொண்டு வரப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் ரஷ்யாவிலிருந்து கப்பல் மூலம் தூத்துக்குடி துறைமுகத்துக்கு 300 டன் எடையுள்ள 2 ஜெனரேட்டர்கள் கொண்டுவரப்பட்டிருந்தன. இந்த ஜெனரேட்டர்கள் இழுவை கப்பல் மூலம் கடல் மார்க்கமாக கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டது. அணுமின் நிலையம் அமைந்துள்ள வங்காள விரிகுடா கடற்பகுதியில் சிறிய துறைமுகத்தினுள் இந்த இழுவை கப்பல் வந்தபோது திடீரென்று காற்றின் வேகம் அதிகரித்தது. இதனால் கப்பலை கரையிலிருந்து ரோப் கயிறுகள் மூலம் இழுக்கும் முற்சியில் தொய்வு ஏற்பட்டது. ஒருகட்டத்தில் ரோப் கயிறு அறுந்ததை அடுத்து அந்த கப்பல் சில மீட்டர் தூரம் இழுத்து செல்லப்பட்டு தரைதட்டி நின்றது.

இது குறித்து தெரியவந்ததும் அணுமின் நிலைய நிர்வாகம் மற்றும் கடலோர பாதுகாப்பு குழுமத்தை சேர்ந்தவர்களும், ஒப்பந்தக்காரர்களும் அந்த கப்பலை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். அணுமின் நிலையத்தின் சிறிய துறைமுக பகுதியில் இருந்து 1 கி.மீ. தூரத்தில் பாறை இடுக்குகளில் இழுவை கப்பல் சிக்கியிருப்பதாகவும், கடலின் நீர்மட்டத்தின் உயர்வு மற்றும் காற்றின் வேகத்தை பொருத்து மீண்டும் அது அணுமின் நிலைய சிறிய துறைமுகத்திற்கு விரைவில் கொண்டுவரப்படும் என்றும் அணுமின் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஒரே நாடு ஒரே தேர்தல் சாத்தியம்தானா? சமத்துவ மக்கள் கட்சி தலைவர் சரத்குமார்

செப்டம்பர் 12, 2023

மத்திய அரசு ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது சாத்தியம் தானா என ஆராய்ந்து அமல்படுத்த வேண்டும் என சமத்துவ மக்கள் கட்சி தலைவர் சரத்குமார் தெரிவித்துள்ளார்.

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் 17-வது ஆண்டு தொடக்க விழா பொதுக்கூட்டம், திருப்பூர் பாண்டியன் நகரில் நடந்தது. இதில் கட்சியின் நிறுவன தலைவர் நடிகர் சரத்குமார் தலைமை வகித்து பேசியதாவது: திருப்பூரில் நூல் விலை நிரந்தரமாக இல்லை என்ற பிரச்சினை இருந்து வருகிறது. அடிக்கடி நூல் விலை உயர்ந்து கொண்டிருக்கிறது.

இதனால் தொழில்துறையினர் பாதிக்கப்பட்டுள்ளனர். பின்னலாடை தொழிலும் பாதித்துள்ளது. இதற்கு உரிய தீர்வு காண வேண்டும். 16 ஆண்டுகள் இந்த இயக்கத்தை நடத்தியிருக்கிறோம். சமத்துவம் இருந்தால் மட்டுமே இந்த நாடும் முன்னேறும், நாமும் முன்னேறுவோம் என்ற அடிப்படையில் தான் சமத்துவ மக்கள் கட்சி செயல்பட்டு வருகிறது.

2026-ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் கஷ்டமோ, நஷ்டமோ சமத்துவ மக்கள் கட்சி தனியாக போட்டியிட வேண்டும். மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் தீட்டுகிற திட்டங்கள் மற்றும் தீர்மானங்கள் குறித்து மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். பணம் சம்பாதிக்கும் நோக்கில் அரசியலுக்கு நான் வரவில்லை.

வாக்களிக்க மக்கள் பணம் வாங்கக் கூடாது. மத்திய அரசு ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது சாத்தியம் தானா என ஆராய்ந்து அமல்படுத்த வேண்டும். 1967 வரை நாடாளுமன்றத் தேர்



தலும், சட்டப்பேரவைத் தேர்தலும் ஒன்றாகத்தான் நடந்து வந்தது. இதன் பிறகு ஆட்சிகளை கலைக்கலாம் என்று எப்போது மத்திய அரசு முடிவு செய்ததோ, அன்றுமுதல் தேர்தல் மாறி மாறி வருகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

# உலக செய்திகள்

## திரு. தர்மன் சண்முகரத்தினம் அவர்கள் சிங்கப்பூர் ஜனாதிபதியாக தெரிவு!

செப்டம்பர் 01, 2023



யாழ்ப்பாணம் ஊரெழுப் பகுதியை பூர்வீகமாகக் கொண்ட தர்மன் சண்முகரத்தினம் சிங்கப்பூர் ஜனாதிபதித் தேர்தலில் 70 வீதத்துக்கு மேலான வாக்குகளை பெற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆசிய நாடான சிங்கப்பூரின் தற்போதைய அதிபர் ஹலிமாவின் ஆறு ஆண்டு பதவிக்காலம் அடுத்த மாதம் 13ம் தேதியுடன் முடிவடைகிறது.

இதையடுத்து புது அதிபர் தேர்தலுக்கான போட்டியில் தமிழரான தர்மன் சண்முகரத்னம் 66, சீன வம்சாவளிகளான இங் கொக் செங் 76, டான் கின் லியான் 75, ஆகியோர் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

இதையடுத்து அதிபர் தேர்தலில் மும்முனைப் போட்டி ஏற்பட்டது. இன்று தேர்தல் நடந்தது. இதில் தமிழரான தர்மன் சண்முகரத்தினம் 70 சதவீத வாக்குகளுடன் பெரும்பான்மை பெற்று வெற்றி பெற்றார். இதையடுத்து சிங்கப்பூர் அதிபராக தேர்வானார்.

இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த தர்மன் சண்முகரத்னம் கடந்த 2001-ல் சிங்கப்பூரின் ஜூரோங் தொகுதியில் இருந்து எம்.பி.யாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சிங்கப்பூர் நாணய வாரியத்தின் தலைவர் பிரதமரின் ஆலோசகர் நிதியமைச்சர் கல்வி அமைச்சர் துணை பிரதமர் என பல்வேறு பதவிகளை வகித்துள்ள இவருக்கு இந்த அதிபர் தேர்தலில் ஆளும் மக்கள் செயல் கட்சி ஆதரவு அளித்துள்ளது.

அதிபர் தேர்தலில் 27 இலட்சத்திற்கும் அதிகமானோர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். 1991-ம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின்படி இது பொதுமக்களே நேரடியாக அதிபரை தேர்ந்தெடுக்க வழிவகை செய்யப்பட்ட பின் நடக்கும் மூன்றாவது தேர்தல் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனாவின் புதிய வரைபடம்; இந்தியா கடும் எதிர்ப்பு!

செப்டம்பர் 02, 2023






சீனா வெளியிட்டுள்ள புதிய வரை படத்தில் இந்தியாவின் அருணாச்சல பிரதேசம், அக்ஷய் சின் பகுதிகள் இடம்பெற்றுள்ளன.

சீனாவின் இயற்கை வளத்துறை அமைச்சகம் தேசிய வரைபட விழிப்புணர்வு வாரத்தை ஜெஜியாங் மாகாணத்தின் டெகிங் பகுதியில் நேற்று கொண்டாடியது. இதை முன்னிட்டு இந்தாண்டுக்கான தேசிய வரைபடம் வெளியிடப்பட்டது. அதில் அருணாச்சல பிரதேசத்துக்கு தெற்கு திபெத் என பெயரிட்டும், கடந்த 1962-ம்ஆண்டு போரில் ஆக்கிரமித்த பகுதியை அக் ஷய் சின் என்றும் சீனா கூறியுள்ளது.

இதேபோல் தைவான் மற்றும் சர்ச்சைக்குரிய தெற்கு சீன கடல் பகுதியையும், தனது பகுதியாக புதிய வரைபடத்தில் சீனா தெரிவித்துள்ளது. தெற்கு சீன கடலின் பெரும் பகுதியை தனது பகுதியாக சீனா உரிமை கொண்டாடியுள்ளது. இந்த தெற்கு சீன கடல் பகுதியில் வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, புரூனே ஆகிய நாடுகளும் உரிமை கொண்டாடுகின்றன.

தென் ஆப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க்கில் நடந்த பிரிக்ஸ் உச்சி மாநாட்டுக்கு இடையே சீன அதிபர் ஜின்பிங்கை சந்தித்து பிரமதர் மோடி பேசினார். அப்போது இந்தியா-சீனா எல்லை பகுதிகளில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் கவலையளிப்பதாக தெரிவித்தார். இந்தியா-சீனா உறவு இயல்பு நிலைக்கு திரும்ப எல்லையில் அமைதி நிலவுவது முக்கியம் என பிரதமர் மோடி அப்போது வலியுறுத்தியதாக இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் வினய் க்வத்ரா தெரிவித்தார்.

புதிய வரைபடம் குறித்து சீனஇயற்கை வளங்கள் துறை அமைச்சகத்தின் திட்டமிடல் துறை தலைவர் வூ வென்சாங் கூறும்போது, "நாட்டின் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் வரைபடம் புவியியல் அமைப்பு தகவல்கள் முக்கிய பங்காற்று கின்றன. இயற்கை வளங்கள் மேலாண்மை, சூழலியல் மற்றும் நாகரீகங்களை உருவாக்கவும் இது உதவுகிறது" என்றார்.

சீன அதிபர் ஜி ஜின்பிங் தலைமையிலான அரசு, சர்வதேச விதிமுறைகளை மீறி, அடுத்த நாடுகளின் எல்லைகளை உரிமை கொண்டாடுவதில் மிக மோசமான வியூகங்களை பயன்படுத்துகிறது.

இது குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கூறுகையில், "இது சீனாவின் பழைய பழக்கம். நமது பகுதிகள் என்ன என்பதில் இந்த அரசு மிக தெளிவாக உள்ளது. அபத்தமாக உரிமை கோருவதன் மூலம், அடுத்த நாட்டின் பகுதிகள் சீனாவுடையது ஆகாது" என்றார்.

இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் அரிந்தம் பாக்சி கூறும் போது, "சீனா இதுபோல் கூறுவதுமுதல் முறையல்ல. இது போன்ற முயற்சிகளுக்கு, இந்தியா ஏற்கெனவே கண்டனம் தெரிவித்துள்ளது.

அருணாச்சல பிரதேசம் இந்தியாவின் பிரிக்க முடியாத பகுதி. புதிதாக பெயர் வைப்பதால், உண்மை நிலவரத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது" என்றார்.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# ஜி–20 உச்சி மாநாடு டெல்லியில் இன்று கோலாகலமாக தொடங்கியது!

செப்டம்பர் 09, 2023




ஜி20 உச்சி மாநாடு, டெல்லி பிரகதி மைதானத்தில் இன்று (சனிக்கிழமை) தொடங்குகிறது. இந்த மாநாட்டை பிரதமர் மோடி தலைமை தாங்கி நடத்துகிறார். இன்றும், நாளையும் நடைபெறும் இந்த 2 நாள் மாநாட்டில் பசுமை எரிசக்தி பரிமாற்றம், பருவநிலை மாற்றம் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான முயற்சிகள் குறித்து உறுப்பு நாடுகளின் தலைவர்கள் விவாதிக்க உள்ளனர். மேலும், உக்ரைன் போரின் எதிரொலியாக நிகழ்ந்து வரும் பொருளாதாரம் மற்றும் சமூக தாக்கங்களை முறியடிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் மாநாட்டில் ஆலோசனை நடத்தப்படுகிறது.

இதைத்தவிர வறுமை மற்றும் உலக சவால்களை எதிர்கொள்வதற்காக உலக வங்கி உள்ளிட்ட வளர்ச்சி வங்கிகளின் திறனை அதிகரிப்பது குறித்தும் பேச்சுவார்த்தை நடைபெறும் என தெரிகிறது. ஜி20 அமைப்பின் தலைவர் என்ற முறையில் உள்ளடக்கிய வளர்ச்சி, டிஜிட்டல் புத்தாக்கம், பருவநிலை நிலைத்தன்மை, சமமான உலகளாவிய சுகாதார அணுகல் உள்ளிட்ட பிரச்சினைகளில் இந்தியா கவனம் செலுத்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக அமெரிக்க அதிபர் ஜோ பைடன், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக், வங்காள தேச பிரதமர் ஷேக் ஹசீனா, இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி, அர்ஜென்டினா அதிபர் ஆல்பர்ட்டோ பெர்னாண்டஸ், ஆப்பிரிக்க ஒன்றிய தலைவரும், கொமோரஸ் அதிபருமான அசாலி அசவுமானி ஆகியோர் அடுத்தடுத்து டெல்லி வந்தடைந்தனர். ஓமன் துணை பிரதமர் சயித் பகத் மின் மக்மூத் அல் சாயித், ரஷிய வெளியுறவு மந்திரி செர்ஜெய் லவ்ரோவும் தலைநகரை அடைந்தனர்.ஐ.நா. பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்டரெஸ், சர்வதேச நிதிய தலைவர் கிறிஸ்டினா ஜார்ஜீவா உள்ளிட்டோரும் வந்துள்ளனர்.

டெல்லி வந்துள்ள வெளிநாட்டு தலைவர்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் தலைவர்களை விமான நிலையத்தில் மத்திய மந்திரிகள் வரவேற்றனர். நாட்டுப்புற



கலைஞர்களின் பாரம்பரிய நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளும் இந்த வரவேற்பில் இடம் பெற்றன.

வல்லரசு நாடுகளின் தலைவர்கள் மற்றும் பல வளர்ந்த நாடுகளின் தலைவர்கள் டெல்லியில் முகாமிட்டுள்ளதால் தலைநகரில் உச்சக்கட்ட பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. துணை ராணுவம் மற்றும் போலீசார் என 1.30 இலட்சத்துக்கு மேற்பட்ட வீரர்கள் பாதுகாப்புக்கு குவிக்கப்பட்டுள்ளனர். மாநாடு நடைபெறும் அரங்கம் மற்றும் தலைவர்கள் தங்கும் விடுதிகள் அனைத்தும் பல அடுக்கு பாதுகாப்பு வளையத்துக்குள் வைக்கப்பட்டுள்ளன. விமானப் படையும் இந்த பாதுகாப்பு பணிகளில் களமிறக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மொரோக்கோ நிலநடுக்கம் பலியானவர்கள் எண்ணிக்கை 2000ஐ கடந்தது!

செப்டம்பர் 10, 2023

வடஆப்பிரிக்கவின் மொரோக்கோவில் ஏற்பட்ட அதி பயங்கர நிலநடுக்கத்தில் 2,100-க்கும் மேற்பட்டோர் பலியாகியிருப்பதாக மொரோக்கோ உள்துறை அமைச்சகம் தெரிவித்திருக்கிறது. மாரகேஷ் (Marrakesh) பகுதியின் தெற்கே 70 கிலோமீட்டர் தொலைவிலுள்ள அட்லஸ் மலைகளில் (Atlas Mountains) அதிகளவில் சேதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலநடுக்கம் குறித்து அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் (United States Geological Survey) ரிக்டர் அளவில் 6.8 ஏற்பட்டதாகவும், அதைத் தொடர்ந்து, 4.9 ரிக்டர் அளவில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும் தெரிவித்திருக்கிறது.

அதைத் தொடர்ந்து மொரோக்கோவின் தேசிய நில அதிர்வு கண்காணிப்பு மற்றும் எச்சரிக்கை நெட்வொர்க் (National Seismic Monitoring and Alert Network) ரிக்டரில் 7-ஆக பதிவாகியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறது. பின்னர் இந்த நிலநடுக்கம் குறித்து மொரோக்கோ உள்துறை அமைச்சகம், “இந்த நிலநடுக்கத்தில் குறைந்தது 2,012 பேர் பலியாகியிருக்கின்றனர். பெரும்பான்மையானவர்கள் அல்-ஹவுஸ், மையப்பகுதி மற்றும் தாரூடன்ட் மாகாணங்களில் வாழ்ந்தவர்கள். மேலும் 2,059 பேர் காயமடைந்திருக்கிறார்கள். இதில் 1,404 பேர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து மூன்று நாள்கள் தேசிய துக்க தினம் அனுசரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது, அனைத்து பொது கட்டடங்களிலும் நாட்டின் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருக்கிறது” எனத் தெரிவித்திருக்கிறது. மராகேஷில் உள்ள இரத்ததான மையம் காயமடைந் தவர்களுக்கு அதிக அளவில் இரத்தம் தேவைப் படுவதால், நாட்டு மக்களிடம் இரத்த தானம் வழங்க அழைப்பு விடுத் திருக்கிறது.

மொரோக்கோவின் அண்டை நாடாகவும், போட்டியாளர் நாடாகவும் கருதப்படும் அல்ஜீரியா தனது வான்வெளி வழியாக அனைத்து மொராக்கோ விமானங்களுக்கும் உதவி விநியோகம் மற்றும் மருத்துவ உதவிகளைச் செயல்படுத்த இரண்டு ஆண்டுக்கால தடையை நிறுத்தி வைப்பதாக அறிவித்திருக்கிறது. அமெரிக்க அதிபர் ஜோ பைடன், ”உயிரிழப்பு மற்றும் பேரழிவு குறித்து ஆழ்ந்த






வருத்தம்” எனத் தெரிவித்திருக்கிறார்.

# லிபியாவில் புயலினால் குறைந்தது 2084 பேர் பலி 10,000 மேல் காணவில்லை!

செப்டம்பர் 12, 2023

வடகிழக்கு லிபியாவில் வெள்ளைத்தை ஏற்படுத்திய புயலில் குறைந்தது 2084 பேர் இறந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளனர். மேலும் 10,000 பேர் காணப் போயுள்ளனர். 20,000 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

லிபியாவை டேனி புயல் தாக்கியது. மத்திய தரைக்கடல் பகுதியில் லிபியா அமைந்துள்ளதால் புயலின் தாக்கம் மிகவும் அதிகமாக இருந்தது. புயலுடன் கனமழையும் கொட்டித்தீர்த்தது. இதன் காரணமாக அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

உள்நாட்டுப்போர் நடைபெற்று வரும் லிபியாவின் கிழக்கு பகுதியை கிளர்ச்சியாளர்களும், மேற்கு பகுதியை வெளிநாட்டு ஆதரவு பெற்ற அரசும் நிர்வகித்து வருகின்றன.

கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள அந்நாட்டின் டெர்னா, பெடா, சுசா உள்பட பல்வேறு நகரங்களை புயல் தாக்கியது.

பெங்காசியை தளமாகக் கொண்ட லிபியாவின் கிழக்கு நிர்வாகம், 3,000 பேர் இறந்ததாக மதிப்பிடுகிறது.

கிழக்கு துறைமுக நகரமான டெர்னாவில் மட்டும் 1,000 பேர் இறந்துள்ளதாக அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர். மேலும் இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று எச்சரித்துள்ளனர்.



வார இறுதியில் பெய்த கனமழையால் அணைகள் உடைந்து, முழு மாவட்டங்களையும் அடித்துச் சென்றதால், இடிபாடுகளில் இருந்து நூற்றுக்கணக்கான உடல்களை மீட்புக் குழுக்கள் மீட்கத் தொடங்கியுள்ளன.

லிபியாவில் உள்ள ஐஆர்எஃப்சி தூதுக்குழுவின் தலைவர் டேமர் ரமதான், இறந்தவர்களின் எண்ணிக்கை மிகப்பெரியது மற்றும் ஆயிரக்கணக்கானவர்களை எட்டக்கூடும் என்று கூறினார்.

காணாமல் போனவர்களின் எண்ணிக்கை இதுவரை 10,000 பேரைத் தாண்டியுள்ளது என்பதை எங்களின் சுயாதீன தகவல் மூலங்களிலிருந்து நாங்கள் உறுதிப்படுத்த முடியும் என்று அவர் மேலும் கூறினார்.

உதவி செய்வதாக ஐரோப்பிய ஒன்றியம் உறுதியளிக்கிறது. ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகாரத் தலைவர் ஜோசப் பொரெல், அவர்கள் நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும், ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

# சுவிஸ் நாட்டினை அண்மிக்கின்றது மனித நேய ஈருளிப்பயணம்!

செப்டம்பர் 13, 2023

பிரித்தானியாவில் இருந்து ஆரம்பித்த ஈருருளிப்பயணம்…

14ம் நாளாக தொடரும் மனித நேய ஈருறுளிப்பயணம் சுவிஸ் நாட்டினை அண்மிக்கின்றது.

13.09.2023 காலை முலூஸ் மாநகர சபை முன்றலில் அக வணக்கத்தோடு ஆரம்பித்த மனிதநேய ஈருறுளிப்பயணம்.

நேற்று பிரான்சில் முலூஸ் மாநகரசபைகளிலும் தமிழர் களுடைய நியாயமான கோரிக்கை அடங்கிய மனுக்களைக் கையளித்திருந்தது,

நேற்று 12.09.2022 வித்தனைம், கிங்கர்சைம், முல்கவுசு போன்ற மாநகரசபைகளில் முக்கிய அரசியற் சந்திப்புக்கள் நடத்தப்பட்டது. சிறீலங்கா பேரினவாத அரசின் பொய் முகத் திரை கிழிக்கப்படுவது மாத்திரமின்றி திட்டமிட்டு தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தமிழின அழிப்பிற்கு அனைத்துலக சுயாதீன விசாரணைக்காக அரசியல் முன்னெடுப்புக்கள் முக்கிய பங்காற்றுகின்றன.

27 தடவையாக தொடரும் அறவழிப்போராட்டத்தின் தொடர்ச் சியினையும் இவ்விரு மாநகரசபைகளும் நன்கு அறிந்திருந்த நிலையில், தொடர் போராட்டத்தின் பலனாக மிக உறுதியான நம்பிக்கை வாக்குறுதிகளும் தரப்பட்டன. குறிப்பாக தாம் பிரான்சு நாட்டின் வெளி நாட்டமைச்சிற்கும் அரச அதிபருக்கும் இதுவரை தமிழர்கள் நிலை சார்ந்து அனுப்பிய கடிதங்கள் மற்றும் இம்முறை இறுதியாக அனுப்பிய கடிதங்கள் போன்றவற்றை மனித நேய ஈருருளிப்போராட்டம் மேற்கொள் வோரிடம் சமர்ப்பித்தனர்.



தொடர்ந்தும் எமது போராட்டம் எழுச்சியோடு பயணிப்பது கண்டு மெச்சிக்கொண்ட முதல்வர்கள் சிறீலங்கா பேரினவாத சர்வாதிகார அரசு தமிழின அழிப்பிற்கு பொறுப்புக்கூறும் வகையில் அனைத்துலக குற்றவியல் நீதி மன்றத்தில் நீதி விசாரணைக்கு முகம் கொடுக்க வேண்டும், அதற்கு தாமும் ஆவன செய்வதோடு அல்சாசு மாநிலம் தமிழர்களின் போராட்டங்களுக்கு நிச்சயம் ஆதரவு நல்கும் எனவும் கூறப் பட்டது.

# ரஷ்யா மற்றும் வடகொரியா அதிபர்கள் சந்திப்பு!

செப்டம்பர் 13, 2023

அமெரிக்காவின் கடும் எச்சரிக்கையின் மத்தியிலும் வட கொரியாவின் தலைவர் கிம் ஜாங் உன், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை புதன்கிழமை சந்தித்து பரபரப்பை ஏற் படுத்தினர்.

இரு நாட்டுத் தலைவர்களும் ரஷ்யாவின் தூர கிழக்கில் உள்ள வோஸ்டோச்னி காஸ்மோட்ரோமுக்கு வந்தடைந்தனர். இரு தலைவர்களும் தொலைதூர சைபீரிய ராக்கெட் ஏவுதளத்தில் சந்தித்தனர். மேலும் சோயுஸ்-2 விண்வெளி ராக்கெட் ஏவு தளத்தை ஆய்வு செய்யத் தொடங்கினர்.

இந்த இடத்தில் சந்திப்பதற்கான அவர்களின் முடிவு, இராணுவ செயற்கைக்கோள்களை உருவாக்குவதற்கு கிம் ரஷ்ய உதவியை நாடுவதாகக் கூறலாம்.

உயர்மட்ட இராணுவத் தலைவர்கள் மற்றும் மூத்த அரசாங்கப் பிரமுகர்களுடன் சேர்ந்து, கிம் ஜாங் உன் ரஷ்ய ஜனாதிபதி யிடம் உக்ரைன் மீதான மாஸ்கோவின் படையெடுப்பை ஆதரிப்பதாக மறைமுகமாகக் கூறினார்.

ரஷ்யா தனது இறையாண்மை மற்றும் பாதுகாப்பை மேலாதிக்க சக்திகளுக்கு எதிராக பாதுகாக்க ஒரு புனிதமான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது என்று அவர் செய்தியாளர்களிடம் கூறினார். புடினின் அனைத்து முடிவுகளையும் வடகொரியா ஆதரிக்கிறது என்றார்.

ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் நாங்கள் ஒன்றாக இருப்போம் என்று நான் உறுதியாக நம்புகிறேன் என்று கிம் முன்னதாக கூறினார்.

இராணுவ ஒத்துழைப்புக்கான சாத்தியக்கூறுகள் குறித்து செய்தி யாளர்கள் கேட்டபோது எல்லாம் மேசையில் இருப்பதாக புடின் பரிந்துரைத்ததாக ரஷ்யாவின் அரசுக்கு சொந்தமான செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இந்த ஜோடி வோஸ்டோச்னி காஸ்மோட்ரோம் எனப்படும் ராக் கெட் அசெம்பிளி மற்றும் ஏவுதளத்தை பார்வையிட்டது, ரஷ்ய தலைவர் வட கொரியா செயற்கைக்கோள்களை உருவாக்க உதவுவதாக உறுதியளித்தார்.

வட கொரியாவின் தலைவர் ராக்கெட் தொழில்நுட்பத்தில் அதிக ஆர்வம் காட்டுகிறார், அவர்கள் தங்கள் சொந்த விண்வெளி திட்டத்தை உருவாக்க முயற்சிக்கிறார்கள், என்று புடின் செய்தியாளர்களிடம் கூறினார்.




இந்த சந்திப்பு இரு நாடுகளுக்கும் இடையே ஆயுத ஒப்பந்தத் திற்கு வழிவகுக்கும் அமெரிக்கா கூறுகிறது.

வட கொரியா ரஷ்யாவிற்கு ஆயுதங்களை வழங்கியதாக அமெரிக்கா முன்னர் குற்றம் சாட்டியது, இருப்பினும் ஏதேனும் டெலிவரி செய்யப்பட்டதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

உக்ரைன் படையெடுப்பு மற்றும் கிரிமியாவை இணைத்ததை வட கொரியா பகிரங்கமாக ஆதரித்தது.

# சிங்கப்பூரின் ஒன்பதாவது ஜனாதிபதியாக ஈழத்தமிழரான தர்மன் சண்முகரத்னம் பதவியேற்றுள்ளார்!

செப்டம்பர் 14, 2023

சிங்கப்பூர் ஜனாதிபதியாக இன்றைய நாள் (14-09-2023) இலங்கைத் தமிழரான தர்மன் சண்முகரத்னம் பதவியேற்றார்.

சிங்கப்பூரில் கடந்த 1-ம் தேதி அதிபர் தேர்தல் நடந்தது. இந்த தேர்தலில் ஈழத்தமிழருமான தர்மன் சண்முகரத்னம் 70.4 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

இதையடுத்து, சிங்கப்பூரின் ஒன்பதாவது அதிபராக அவர் இன்று பதவியேற்றார். சிங்கப்பூரின் புதிய அதிபர் தர்மன் சண்முக ரத்னத்தின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் ஆகும்.

சிங்கப்பூரின் முதல் பெண் அதிபர் ஹலிமா யாகூப்-ஐ தொடர்ந்து அந்நாட்டின் ஒன்பதாவது அதிபராக தர்மன் பதவியேற்று இருக்கிறார்.

முன்னாள் அதிபர் ஹலிமா யாகூப்-இன் பதவிக்காலம் நேற் றுடன் (செப்டம்பர் 13) நிறைவு பெற்றதைத் தொடர்ந்து இன்று சிங்கப்பூர் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சுரேஷ் மேனன் புதிய அதிபருக்கு பதவி பிரமானம் செய்து வைத்தார். 2019 முதல் 2023 வரையிலான காலக்கட்டத்தில் தர்மன் சண்முக ரத்னம் மூத்த அமைச்சராக பதவி வகித்து வந்துள்ளார்.



(செப்டம்பர் 14) தர்மன் சண்முகரத்னம் பதவியேற்றுள்ளார்.

மே 2011 முதல் மே 2019 வரை தர்மன் சண்முகரத்னம் சிங்கப் பூரின் துணை பிரதமராகவும் பதவி வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், தர்மன் சண்முகரத்னம் இதற்கு முன்னர் சிங்கப்பூர் நாணய வாரியத்தின் தலைவர், பிரதமரின் ஆலோசகர், நிதி அமைச்சர், கல்வி அமைச்சர், துணை பிரதமர் என பல்வேறு பதவிகளை வகித் துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# MORTGAGE

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- ⇒ Private Mortgage (No Income Verification)
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- ⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4




## சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# தியாகி திலீபன் ஒரு இலட்சிய நெருப்பு...!

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**




“எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் புரிந்திருக்கிறது; வீரகாவியங்களைப் படைத்திருக்கிறது; அர்ப்பணிப்புக்களைச் செய்திருக்கிறது. இவை எல்லாம் எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீரசாதனைகள்; ஆனால், எனது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது. வியக்கத்தக்கது; எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது. சாத்வீகப் போராட்டக்களத்தில் தன்னை பலிகொடுத்து, ஈடு இணையற்ற ஒரு மகத்தான தியாகத்தைத் திலீபன் புரிந்தான். அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி; தமிழீழப் போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி. தமிழீழத் தேசிய ஆன்மாவைத் தட்டி எழுப்பிய நிகழ்ச்சி; பாரத நாட்டைத் தலைகுனியவைத்த நிகழ்ச்சி; உலகத்தின் மனச்சாட்சியைச் சீண்டிவிட்ட நிகழ்ச்சி.

திலீபன் யாருக்காக இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தமென்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக, மக்கள் எல்லோரையுமே எழுச்சிகொள்ளச் செய்த ஒரு புரட்சிகர நிகழ்ச்சியாக அமைந்தது?

திலீபன் உங்களுக்காக இறந்தான்; உங்கள் உரிமைக்காக இறந்தான்; உங்கள் மண்ணுக்காக இறந்தான்; உங்கள் பாதுகாப்பிற்காக, உங்கள் சுதந்திரத்திற்காக, உங்கள் கௌரவத்திற்காக இறந்தான்.

தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக, ஒருவன் எத்தகைய உயர்ந்த – உன்னத – தியாகத்தைச் செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான் அவன் செய்திருக்கிறான்.

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால், உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்.

நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதிவாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன்மீது அளவுகடந்த பாசம் எனக்குண்டு. அவன் துடிதுடித்துச் செத்துக்கொண்டிருக்கும் பொழுதெல்லாம், என் ஆன்மா கலங்கும். ஆனால், நான் திலீபனை ஒரு சாதாரண மனிதப் பிறவியாக பார்க்கவில்லை. தன்னை எரித்துக் கொண்டிருக்கும் ஒரு இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக்கண்டேன். அதில் நான் பெருமைகொண்டேன். இலட்சிய உறுதியின் உச்சக்கட்டமாக திலீபன் தன்னை அழித்துக்கொண்டான். அவன் உண்மையில் சாகவில்லை; காலத்தால் சாகாத வரலாற்றுப் புருஷனாக அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

திலீபனின் மரணம் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கிறது. இது அர்த்தமற்ற சாவு என இந்தியத் தூதர் கூறியிருக்கிறார். தமது உறுதிமொழிகளை நம்பியிருந்தால் திலீபன் உயிர் தப்பியிருப்பான் என்று சொல்லியிருக்கிறார். ஆனால், உண்மையில் நடந்து என்ன? நடந்து கொண்டிருப்பது என்ன? என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

எமது உரிமைகள் வழுங்கப்படும்; எமது மக்களுக்கும் எமது மண்ணுக்கும் பாதுகாப்பு அளிக் கப்படும்; தமிழ் மக்கள் தமது பாரம்பரிய தாயகப்பூமியில் தம்மைத்தாமே ஆளும் வாய்ப்பு அளிக்கப்படும் – இப்படியெல்லாம் பாரத அரசு எமக்கு அளித்த வாக்குறுதிகளை நம்பி, நாம் எமது ஆயுதங்களைக் கையளித்தோம்; எமது மக்களினதும் மண்ணினதும் பாதுகாப்பை, இந்தியா வுக்குப் பொறுப்பளித்தோம்.

அதனையடுத்து என்ன நடைபெற்றது என்பதெல்லாம், எமது மக்களாகிய உங்களுக்குத்தெரியும்.

தமிழ் அகதிகள் தமது சொந்தக்கிராமங்களுக்குச் செல்ல முடியாது முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்க, சிங்களக் குடியேற்றம் துரிதகதியில் தமிழ் மண்ணைக் கபளீகரம் செய்தது. சிங்கள அரசின் பொலீஸ் நிர்வாகம் தமிழ்ப் பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்டது.

அவசர அவசரமாக சிங்கள இனவாத அரசயந்திரம் தமிழ்ப் பகுதிகளில் ஊடுருவியது. சமாதான ஒப்பந்தம் என்ற போர்வையில் சமாதானப்படையின் அனுசரணையுடன் சிங்கள அரசு ஆதிக்கம் தமிழீழத்தில் நிலை கொள்ள முயன்றது.


இந்தப் பேராபத்தை உணர்ந்து கொண்ட திலீபன் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி காணத் திடசங்கற்பம் கொண்டான்.

சிங்கள அரசுடன் உரிமை கோரிப் போராடுவதில் அர்த்தமில்லை. பாரதம் தான் எமது இனப் பிரச்சனையில் தலையிட்டது. பாரதம்தான் எமது மக்களின் உரிமைக்கு உத்தரவாதமளித்தது. பாரதம் தான் எம்மிடம் ஆயுதங்களை வாங்கியது. பாரதம்தான் எமது ஆயுதபோராட்டத்தை நிறுத்திவைத்தது. ஆகவே, பாரத அரசிடம்தான் நாம் உரிமை கோரிப் போராட வேண்டும். எனவேதான் பாரதத்துடன் தர்மயுத்தம் ஒன்றைத்தொடுத்தான் திலீபன். அத்தோடு பாரதத்தின் ஆன்மிக மரபில் பெறப்பட்ட அகிம்சை வடிவத்தை ஆயுதமாக எடுத்துக்கொண்டான்.

மக்களின் ஒன்றுதிரண்ட சக்தி மூலமே மக்களின் ஒருமுகப்பட்ட எழுச்சி மூலமே நாம் – எமது உரிமைகளை வென்றெடுக்கலாம். திலீபனின் ஈடு இணையற்ற தியாகத்திற்கு நாம் செய்யும் பங்களிப்பு இது தான்.”

“எனது மக்களின் விடுதலக்காக“ என்ற கருத்துத்தொகுப்பிலிருந்து








## INVESTMENT PROPERTY CONDO (KENNEDY & HWY 401)

**3 Bed Rooms + Den,**
**Central A/C + Heater,**
**Swimming Pool & Sauna**
**Jym & 2 Car Parking**
**Garage Indoor, Party Room**
**Dishwasher, Kitchen,**
**Washer Dryer,**
**One & Half Bath Room**

**Surrounding Area:**
**Kenndy Common, School,**
**Resort Park, Metro,**
**Foody World Super Market**
**LA . Fitness, Park & More!**

**Please Contact**

# 647-294-2996



# பார்த்தீபன் இப்போதும் பசியோடுதான் இருக்கிறான்

திலீபனிற்கு
தீபம் ஏற்றுவோரே
பார்த்தீபனின்
பாதம் தொழுவோரே
ஈகச் சிகரத்திற்கு
மாலை தொடுப்போரே
அதிசய வள்ளலுக்காய்
கசிகின்ற நெஞ்சோரே
மனதிலேற்றுங்கள்...
எங்கள்
பார்த்தீபன்
இப்போதும்
பசியோடுதான் இருக்கிறான்...

சிறுகச் சிறுகச் சேர்த்து
நிமிரக் கட்டிய மனையும்
உயிரைப் பிரியும் பொழுதில்
தந்தை
உயிலாய்த் தந்த வளவும்
இன்பம்
பெருகப் பெருக
நாங்கள்
ஓடித்திரிந்த தெருவும்
உள்ளம்
உருக உருகக் கண்ணீர்
விட்டுப்பிரிந்த ஊரும்
திரும்பக் கிடைக்கும்
காலம் வரைக்கும்,
எங்கள்
பார்த்தீபன்
பசியோடுதான் இருப்பான்...

நாளும் பொழுதும்
கண்ணைக் கரைத்து
நாளை வருவார்
நாளை வருவார்
என்றே தங்கள்
இதயம் வதைத்து
கொலைஞர் பிடித்த
உறவை நினைத்துக்
கதறும் மனங்கள்
எங்கள்
பார்த்தீபன்
பசியோடுதான் இருப்பான்...

சதியும் வெறியும்
ஒன்றாய்க் கலந்து
கருணை கனிமை
எதுவும் மறந்து
எங்கோ பிறந்து
மனிதம் துறந்து
எங்கள் மண்ணில்
மரணம் விதைத்து
துயரச் சுமையுன
எம்மைத் திணிக்கும்
கொடுமைப் படைகள்
எரியும் வரைக்கும்,
எங்கள்
பார்த்தீபன்
பசியோடுதான் இருப்பான்...

உயிரை உடலை
உறவைத் துறந்து
உணர்வு முழுதும்
தமிழைக் கலந்து
விடியும் காலைக்
கதிராய் விரிந்து
தமிழர் தேசக்
கனவை வரித்து
மண்ணின் மானம்
பெரிதாய் மதித்து
மண்ணுள் உறங்கும்
மாந்தர் கேட்கும்
விடுதலை வந்து
சேரும் வரைக்கும்,
எங்கள்
பாாத்தீபன்
பசியோடுதான் இருப்பான்...

சொந்த சுகங்கள்
அனைத்தும் துறந்து
துணிவுச் சிறகை
மனதில் அணிந்து
தலைவன் திசையில்
பயணம் தொடர்ந்து
அணியாய்த் திரளும்
தமிழர் படையின்
எழுச்சித் தீபம்
எரியும் வரைக்கும்,
மக்கள் புரட்சி
மண்ணில் வெடித்து
தமிழர் முழுதும்
புலியாய் விரைந்து
தாயகமெங்கும்
போரிடும் வரைக்கும்,
எங்கள்
பார்த்தீபன்
பசியோடுதான் இருப்பான்...

திசைகள் எதிலும்
பகையை முடித்து
நிலங்கள் முழுதும்
விரைவில் பிடித்துப்
புலியின் கொடியைக்
கரத்தில் எடுத்து
வெல்லும் சேதி
சொல்லும் வரைக்கும்,
எங்கள்
பார்த்தீபன்
பசியோடுதான் இருப்பான்...

ஆகவே...
பசித்த வயிற்றோடு
பாடையேறிய
எங்கள்
பார்த்தீபன் கனவுகள்
மேடையேறி முழங்கவல்ல
தீபமேற்றி வணங்கவல்ல,
களத்திலேறிப் பகைமுடிக்க
நெருப்பிலேறிக்
கொடிபிடிக்க
தீர்வதுங்கள்
திலீபனிற்குத் தேவையான
உணவை
உங்களால்தான்
சமைக்க முடியும்.

–செந்தோழன் –




# யாழ். கோட்டை முன்பாக லெப். கேணல் திலீபன் ஆற்றிய வரலாற்று உரை! 07.09.1987!

**செப்டம்பர் 07, 1987**

சுட்டெரிக்கும் வெய்யிலில் பசியோடும் பட்டினியோடும் இத்தனை நேரமும் நீங்கள் ஓர் உன்னதப்போராட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறீர்கள். யாழ் குடாநாடு முழுவதிலு முள்ள இந்திய இராணுவ முகாம்களின் முன்னால் இந்தப் போராட்டம் இன்று நடைபெறுகிறது. கொழுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் பசியொடும் பட்டினியோடும் மக்கள் போராடியதற்கு முதற்கண் விடுதலைப் புலிகளின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை எமது தோழர்கள் முழுமையான விஷயங்களை முழுமையான தெளிவுகளை உங்களுக்கு ஏற்படுத்தியிருப்பார்கள். ஆனால் எதிர் காலத்திட்டங்கள் என்ன என்பது சம்பந்தமான ஒரு சில விடயங்களைத் தெளிவுபடுத்தலாம் என நினைக்கிறேன். அனைத்திற்கும் முதல் நான் ஓர் உண்மையைத் திட்டவட்டமாகக் கூறுகிறேன்.



இந்த கோட்டை ஒல்லாந்தார் காலத்தில் கட்டப்பட்டது. இன்னும் நமிர்ந்து நிற்கின்றது. ஒல்லாந்த இராணுவம் இதனுல் பல இன ஒழிப்புகளை மேற்கொண்டது. மக்கள் ஆயிரக்கணக்கில் சிறை வைக்கப்பட்டனர். அடுத்து ஆங்கிலேயர் இக்கோட்டைக்குள் புகுந்தனர். ஆனால் ஒல்லாந்தரைவிட மோசமாக இவர்கள் எம்மை அடக்கினர். ஆங்கிலேயரை இங்கிருந்து விரட்ட நாம் சிங்களவருடன் கூட்டுச்சேர்ந்தோம்.

சிங்களவர்களுடன் கூட்டுச் சேர்ந்ததால் 1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்ததாகக் கூறப்பட்டது. ஆனால் நாம் கூட்டுச்சேர்ந்த சிங்கள மக்கள் எம்மை மிக மிக மோசமாக அடக்கி ஒடுக்கினார்கள். இந்தக் கோட்டை இராணுவ முகாமிலிருந்து எத்தனையோ உயிர்கள் பறிக்கப்பட்டன. தமிழ் மக்களின் கோடிக்கணக்கான சொத்துகள் அழிக்கப்பட்டன. இவையனைத்தும் எம்மால் மறக்கமுடியாதவை. யாழ்நகர் இன்று சோவை இழந்திருப்பதற்கு அடிப்படைத் காரணம் இந்தக் கோட்டை. இந்தக் கோட்டை இன்றுகூட எம் கையில் இல்லை. இந்தக் கோட்டையில் என்று புலிக்கொடி பறக்கிறதோ அன்று தான் எமது சுதந்திர விடிவு என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்றும் இங்கு இலங்கை - இந்திய இராணுவங்கள் குடியிருக்கின்றன. சிங்களவருடன் நாம் கூட்டுச்சோர்ந்து ஏறத்தாழ 30 வருடங்கள் கழிந்த பின்னரே அவர்களுடைய உன்மைச் சொரூபத்தை அறிய முடிந்தது. அன்றிலிருந்து இன்று வரை அவர்கள் எம்மை உதிரிகளாகக் கருதிக் கொன்றொழித்துக் கொண்டிருந்தார்கள். எனவே எமது நாட்டில் எமது இராணுவம் நிலைகொள்ளும் வரை எமது சுதந்திரத்தை எவரும் உறுதி செய்ய முடியாது. அதற்காகத் தான் நாம் போராடிக்கொணடிருக்கிறோம். தமிழீழம் கேட்கின்றோம். சகல அடக்கு முறைகளையும் உடைத்தெறியும் ஒரு சமதா்ம சோசலிச தமிழீழம் மிக விரைவில் இங்கு மலரும். அதுவரையில் நாம் எமது போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை.

ஒன்றை மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் கூறுகின்றேன். நாம் மீண்டும் ஆயுதம் ஏந்துவோம். எமது மக்கள் அழிக்கப்படும் நிலைதோன்றினால் ஆயுதம் ஏந்துவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. எமது போராட்டம் தமிழீழத்தை மட்டுமே நோக்கியுள்ளது. இது ஒரு இடைநிலையே தவிர முற்றுப் புள்ளியல்ல.

ஆனால் இந்த உண்மை இன்றும் பலருக்குப் புரியாமல் உள்ளது. இன்று யாழ் குடாநாட்டில் 09 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இவர்களிற் பலர் இன்றைய தமிழரின் நிலையைப் புரிந்துகொள்ளாதவர்களாகவே வாழ்கின்றனர். இவர்களின் தெளிவற்ற நிலையை நாம் உணர்கின்றோம். ஆனால் அவர்களையும் தெளிவுபடுத்தி எமது போராட்டத்தில் இணைய வைப்போம். ஒன்றை மட்டும் நீங்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இன்று எமக்கு ஏற்பட்டுள்ள இழிநிலையைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ளத் தவறினால் நாளை எமது வரலாறு மிகவும் பரிதாபத்திற்குரியதாய் இருக்கும்.

நாம் இன்று அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு ஒடுக்கப்படுகினறோம். எமது அடிப்படை உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்படுகின்றன. இதை நீங்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. எந்தெந்தக் காலகட்டங்களில் தமிழ் மக்கள் உணர்வோடு கொந்தளிப்போடு சுதந்திர உணர்வோடு போராடத் தலைப்படுகிறார்களோ அந்தந்தக் காலகட்டங்களில் எல்லாம் சமாதான ஒப்பந்தங்கள் உருவாக்கப்படுகின்றன. இந்த உண்மையை நீங்கள் மறந்துவிடக் கூடாது. 1957ல் ஏற்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தமாயினும் சரி அன்றைய காலகட்டங்களில் தமிழ் மக்கள் உணர்ச்சிக் கொந்தளிப்போடு செயற்பட்டார்கள் என்பதைக் காட்டுகின்றன. மக்கள் புரட்சி வெடிக்கக் கூடிய சூழ்நிலை அப்போது இருந்தது. அதைச் சமாளிக்க மழுங்கடிக்க ஒப்பந்தங்கள் எழுதப்பட்டன. ஒப்பந்தம் ஏற்பட்டபின் உருவான ஒரு தற்காலிக அமைதியில் மக்கள் திருப்திகண்டனர். அதனால் அவர்களது போராட்ட உணர்வு மழுங்கடிக்கப்பட்டது. பின்னர் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. இது தான் தமிழ் மக்களின் உண்மை நிலை.

இதே நிலைதான் இன்றும். ஏறக்குறைய 04 வருட தமிழீழப் போராட்டத்தின் உன்னதமான காலகட்டம். இந் நான்கு வருடப் போராட்டத்தில் பல அரிய சாதனைகளைப் படைத்துள்ளோம். இங்கு உங்கள் முன் இருக்கும் தொலைத்தொடர்பு நிலையத்தை நோக்கின் உங்களுக்கு விளங்கும். அந்த வகையின் நாம் நிலை நாட்டிய சாதனைகள் பல. ஆனால் அதே நேரம் 20,000 மக்களை இழந்துள்ளோம். எனினும் படிப்படியாகத் தமிழீழத்தை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தோம். தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை தற்கொலைப்படைத் தாக்குதல்களைக்கூட இறுதியாக நடத்திக்கொண்டிருந்தோம். தற்கொலைப்படைத் தாக்குதல் உலகளாவிய ரீதியில் மிக அரிதாகவே நடைபெறுகின்றது. ஐப்பானில் ஆரம்பித்த இவ்வகைத் தாக்குதல் தொடர்ந்து லெபணானிலும் இடம்பெற்றது. அதற்கடுத்ததாகத் தமிழீழ மண்ணில்தான் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. உலகளாவிய ரீதியில் அரிதாகவே கைக்கொள்ளப்படும் இத்தாக்குதலில் கூட நாம் இறங்கி எமது போராட்டத்தைப் படிப்படியாக வென்றெடுத்த காலகட்டத்தில் தான் ஒப்பந்தம் எழுதப்பட்டது. எமது போராட்டத்தை மழுங்கச்செய்ய ஏற்பட்ட



இவ்வொப்பந்தத்தை நாம் நிராகரித்தோம். இவ்வொப்பந்தத்தில் எமக்குரிய அடிப்படை உரிமைகள் எதுவும் பேணப்படவில்லை. தமிழ் மக்களின் முதுகில் குத்தித் துரோகமிழைத்த இவ்வொப் பந்தத்தை நாம் நிராகரித்த போதும் இந்திய அரசின்மீதும், இந்திய இராணுவத்தின் மீதும் கொண்ட நம்பிக்கையால் எமது ஆயுதங்களை ஒப்படைந்தோம்.

இன்று நாம் ஆயுதங்களை ஒப்படைத்தபின் எமக்கு விரோத மாகச் செயல்கள் நடைபெறுகின்றன. தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. தமிழீழப் பிராந்தியங்களில் சிங்கள மக்கள் பல்லாயிரக்கணக்கில் குடியேற்றப்படுகின்றனர். உங்களுக்குத் தெரியும். இந்த நாக விகாரை, எழுச்சியடைந்த எம் மக்களால் எவ்வாறு தாக்கப்பட்டதென்று. இதை மட்டுமல்ல சிங்கள மகா வித்தியாலயத்தையும் உடைத்தெறிந்தார்கள். யாழ் குடாநாட்டில் ஒரு சிங்கள மகன் கூட இருக்க முடியாது. ஆனால் இன்று இவ்வொப்பந்தத்தால் இன்றோ நாளையோ இந்த முற்ற வெளியில் கூட ஒரு சிங்களக் குடியேற்றம் இடம் பெறக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. மீண்டும் நாகவிகாரையைப் புதுப்பிக்க ஆலோசனைகள் நடைபெறு கின்றன. இவ்வாறான நிலைதான் இவ்வொப்பந்தத்தால் ஏற்பட்டுள்ளது. இதைத்தவிர எமக்குச் சாதகமாக எதுவுமே யில்லை.

எம்மைப் பலவீனப்படுத்தி நசுக்கவே முயல்கின்றனர். நாம் இன்றைய நிலையை மிக வழிப்போடு அவதானிக்க வேண்டும். தவறின் எமக்கு எதிர்காலமே இல்லை. எமது எதிர்காலத்துக் காகவே நாம் போராடுகின்றோம். இது ஒரு அகிம்சை தழுவிய போராட்டம். இப்போராட்டத்தின் உண்மைவடிவை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். இது அகிம்சை தழுவியதாயினும் நாளை எமது மக்கள் அழிக்கப்படும் நிலைதோன்றின் ஆயுதப் போராட்டமாக மாறும்.

நாம் ஆயுதத்தைக் கையளித்ததைச் சாக்காகக் கொண்டு சமூகவிரோதக் கும்பல்கள் இம்மண்ணில் உலாவுகின்றன. புலிகளின் நிர்வாகம் இருந்த காலகட்டத்தில் ஒரு சமூகவிரோதக் கும்பல் கூட இல்லை. கொள்ளை, கொலை இல்லை. ஆனால் இன்றோ தினசரி கொலைகொள்ளை. இறுதியாக நேற்றிரவு கூட இந்தச் சாந்தி தியேட்டருக்கருகில் உள்ள மினி சினிமாவில் கொலை கொள்ளை நடைபெற்றிருப்பது உங்களுக்குத் தெரி யும். இதற்காகத்தான் அக்கும்பல்களை நாம் தடை செய்தோம். நாம் இந்தியாவிலுள்ள RAW அமைப்பை முழுமையாகச் சந்தேகிக்கிறோம். அவ்வமைப்புத்தான் இச் சமூகவிரோதக் கும்பல்களை ஆயுதத்துடன் நம் மண்ணில் நடமாடவிட் டுள்ளது. சமூகவிரோதச் செயல்களைச் செய்யத் தூண்டி விடகிறது. நமது மக்களைப் பாதுகாக்க நாம் கிராமரீதியாகப் பாதுகாப்புக் குழுக்களை அமைத்தமை உங்களுக்குத் தெரியும். இக்குழுக்கள் கூட இச் சமூகவிரோதக் கும்பல்களால் தாக்கப்படு கின்றன. கடத்தப்படுகின்றன. குளப்பிட்டியில் மக்கள் பாதுகாப் புக்குழு கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டபோது இந்திய இராணுவம் அருகிலேயே நின்றது. இவ்வாறாயின் நாம் எவ்வாறு இந்திய இராணுவத்தின் மீது நம்பிக்கைகொள்ள முடியும்.

இச் சமூகவிரோதக் கும்பல்களுக்குத் துணை போவதுதான் இந்திய அரசின் வேலை என்பதைப் புரிந்துகொண்டோம். இதை எம்மால் ஒரு போதும் சகிக்கமுடியாது. ஒன்றை மிகத் தெளிவாகக் கூறிக்கொள்கிறேன். விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை மரணத்துக்கு அஞ்சாதவர்கள். துப்பாக்கிகளோ, சுற்றியுள்ள இரும்புக் கம்பிகளோ அவர்களை எதுவும் செய்ய முடியாது. அவர்கள் வாழவேண்டுமென்றோ, ஆளவேண்டு மென்றோ ஆசைவைத்ததில்லை. தமிழீழ இலட்சியமொன் றிற்காகவே அவர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். எமது இறுதி மூச்சுவரை மக்களுக்காகப் போராடத் தயாராயி ருக்கின்றோம். எமது மக்களுக்குச் சுதந்திரமும் சுபீட்சமும் கிடைப்பதற்காகவே எம் தற்கொலைப் படைகள் தயாராய் இருக்கின்றன. இதை இந்திய ஆட்சியாளர்களும் இந்திய இராணுவத்தினரும் புரிந்துகொள்ளவேண்டும் அவர்கள் மட்டு மல்ல முக்கியமாக இங்குள்ள சமூகவிரோதக் கும்பல்கள் புரிந்து கொள்ளவேண்டுமென்பதை மிகப் பகிரங்கமாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். நாம் வெறும் சொல்லளவில் நின்று விடுவதில்லை. இது அக் கும்பல்களுக்கு நன்கு தெரியும். நாம் குட்டக் குட்டக் குனிபவர்களல்ல.

எம்மிடம் ஆயுதமில்லை; நிராயுதபாணிகளாக நிற்கிறோம் எனக் கருதி மிகப் பயங்கரமான அடாவடித்தனங்களில் ஈடுபட் டுள்ளனர். எமது தோழர்களை அநியாயமாய்க் கொன் றுள்ளனர். இதையெல்லாம் நீங்கள் நன்கு அறிவீர்கள். நாம் தனித்து நின்றே இக் கும்பல்களை ஒரே நாளில் தடை செய்துவிடுவோம். இந்திய இராணுவத் துணையுடன் இவர்கள் செய்யும் அட்டூழியங்களை இனியும் எம்மால் சகிக்கமுடியாது. இறுதியாக ஓர் உண்மையைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மக்கள் முழுமையான எழுச்சியுடன் போராடினால் எந்தப் பெரிய இராணுவமும் எதிர்த்து நிற்க முடியாது. வியட்னாமிய மக்கள், உலகின் மிகப்பெரிய அமெரிக்க இராணுவத்துக்கெதிராக விடுதலைப்போரை நடத்தி பெற்றிபெற்றமை உங்களுக்குத் தெரியும். எமது மக்கள் பரிபூரணமாக எழுச்சி பெறவேண்டும். இன்று இந்நிலை இல்லாதது எனக்கு மிகுந்த வேதனையை அளிக்கின்றது. ஆறாத சோகத்தைத் தருகின்றது. எமது மக்களின் முழுமையான எழுச்சிநிலை தோற்றுவிக்கப்பட வேண்டும். எமது அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க வேண்டும். இத்ததைய எமது மக்களின் போராட்டத்துக்கு எவரும் மதிப்பளித்தேயாக வேண்டும்.







# திலீபனின் முப்பெரும் ஈகைகள்!

திலீபன் மறைந்து முப்பத்தியாறு ஆண்டுகள் ஓடி விட்டது. இவர் நினைவு அன்று போல் என்றும் எம் நெஞ்சில் ஈழப் பதிந் திருக்கும்.

பார்த்திபன் என்ற இயற் பெயருடையவர் திலீபன். தந்தையாரின் செல்பவ் புதல்வன். தாயன்பையறியாதே வளர்ந்து வந்தவர். அவர் தந்தை இராசையா அவர்களே இவரை வளர்த்தெடுத்தார். இவர் தகுந்த பிராயம் எய்தி கல்வி கற்பதற்காக இந்துக் கல்லூரி யில் சேர்ந்தார். இக் கல்லூரியின் இறுதிப் பயனான உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் தேறி மருத்துவக் கல்லூரிக்கு நுழைவும் சித்திக்கப் பெற்றார். அதை தான் வாழ்க்கையில் வேறு விதமாக ஈடுபடும் உயர்நோக்குடன் ஈகம் (1) செய்தார்.

இவ்வாறு அரசியலில் ஈடுபட்டுச் சேவை செய்து வரும் நாட்களில் உயர் இட்சியம் ஒன்று வந்து குறுக்கிட்டது. அதை அடைய உறுதி புண்டார். பெரும் ஈகை உணர்சியால் உந்தப்பட்டார். உண்ணநோன்பை நீரும் அருந்தாத வகை இறுதி மூச்சு இருக்கும் வரை மேற்கொண்டார்.

இதற்கு கற்பனை செய்ய முடியாத மன உறதி வேண்டும். இது சாத்வீகமான சாதனை. ஒருவரையும் துன்புறுத்தாது ஒருவருக் கும் தீங்கு விளைவிக்காதவாறு அமைதியாக நிகழ்ந்த சாதனை. தன்னுடலைத் தேய்த்து மாய்க்கும் அரிய சாதனை. அவர் இச்சாதனையில் தன் உயிரைப் புல்லென மதித்தார். வெற்றியும் பெற்றார்.

இவர் ஈகையின் உயர் சின்னம். தன்னுயிரையே ஈகை (2) செய்த பண்பின் சிறப்பினைப் போற்ற வார்த்தைகளே இல்லை.

**அன்பிலார் எல்லாம் தமக்குரியார் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு.**

என்ற பொன் மொழி என்பை மட்டும் தான் பிறர்க்குரியதாகச் செய்யும். தன் என்பை மட்டுமன்றிச் சரீரம் முழுவதையுமே மக்களுக்கு அர்ப்பணித்த ஈகையர். அத்துடன் நின்று விட வில்லை. அன்புட்பட சரீரம் முழுவதுமே முற்றும் நல்ல பயனை மாணவர்க்குத் தரவேண்டும் என்ற எண்ணத்துடன் இறந்த பின், தன் சரீரம் முழுவதும் என்புட்பட மருத்துவக் கல்லூரிக்கு வழங்கியிருக்கும் ஈகை (3) பெருந் ஈகையே.


23 வயதை எட்டிப் பிடிக்கும் இவ்விளைஞனின் இம் மூவகைத் ஈகைகள் ஈடு இணையற்றவை. எடுத்துக் காட்டாக விளங்கிக் கொண்டிருக்கும் மாபொரும் ஈகைகள்

**பெரும்பணியை**
**உங்களிடம்**
**விட்டுச் செல்கிறேன்.**

**–ஈகைச்சுடர் திலீபன்**



# 36 ஆண்டுகளாக



## பார்த்திபன்
## இப்போதும்
## பசியோடுதான் இருக்கிறான்


# MORTGAGE FINANCIAL

Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties

புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge, Private மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான
மோட்கேஜ், குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்

SUBRA
MORTGAGE SOLUTIONS

**Residential Mortgages**

1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits

**Commercial Mortgages**

1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits



NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com



Powered by MORTGAGE ALLIANCE

WE DEAL WITH ALL BANKS Brokerage # 10330

TD Canada Trust | Scotiabank | First National | radius financial
RFA | Equitable Bank | Home Trust | RMG | MCAP

Off: 416-660-5656 / Fax: 647-351-3099 / 1585 Markham Rd, Unit 406, Toronto ON M1B 2W1




# திருமலைப் படுகொலைகள் யூன், ஒகஸ்ட், செப்டம்பர் – 1985

இம்மாதங்களில் திருமலை மாவடடத்தில் பல படுகொலைகள் நடந்தேறின. பிரசைகள் குழுக்களின் இணைப்பு அமைப்பின் அறிக்கைகளின் படி முன்னூற்று பதினொரு தமிழர்கள் யூன் 1985 இல் திருமலையில் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. சற்றடே ரீவ்யூ நாளேடு 21.12.1985 இன்று வெளியிட்ட செய்தியில் இத்தொகை முன்னூற்று எண்பத்துமூன்று எனக் கூறியுது. ஜெரமி கிளிங் என்கிற செய்தியாளர் சாம்பல் தீவில் பலர் காணாமல் போயிருப்பதாகவும் அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாமென டெல்லி நீயூசில் தகவல் வெளியிட்டிருந்தார்.

1985 ஆம் அண்டு செப்ரெம்பர் மாதம் நான்காம் திகதிக் கும் ஒன்பதாம் திகதிக்குமிடையில் திட்டமிடப்பட்ட முறையில் மகிப் பெரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. திருகோணமலை நகரின் வடபகுதியிலிருந்து தமிழர்களைத் துரத்தும் நடவடிக்கையாக இவ்விராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இதில் ஆகாய வழியாக உலங்கவானூர்தியும் கடலிலிருந்து எறிகணைத் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன. சென்ரல் வீதி, பிரதான வீதி, ஏகாம்பரம் வீதி, வீரநகர், திருக்கடலூர், உப்புவெளி, மூன்றாம் கட்டை, நாவலர் றோட், உப்புவெளிச் சந்தி ஆகிய இடங்களில் கனரக ஆயுதங்கள் தரித்த இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் ஊர்காவற்படையினரும் இங்கு குவிக்கப்பட்டிருந்தனர். இவ்விரு குழுக்களும் சேர்ந்து தமிழாகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது தமிழர்களுக்குச் சொந்தமான ஆயிரத்து ஐநூறு வீடுகளும் கடைகளும் கட்டடங்களும் அழிக்கப்பட்டதுடன் தமிழர்களுக்குச் சொன்தமான வள்ளங்களும் சொத்துக்களும் சூறையாடப்பட்டன. இந்த நடவடிக்கையின் போது இருநூறு சிறுவர்கள் தங்கியிருந்த சிவானந்த தபோவனத்தின் கட்டடமும் தகர்த்து அழிக்கப்பட்டது. இந்தக் கோயில்கள் முற்றாக அழிக்கப்பட்டன. இருபத்தைந்து பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் அழிப்பதற்கு தமிழர்களுக்கு எந்தச் சொத்தும் இல்லை என்றவுடன், இத்தாக்குதல் நிறுத்தப்பட்டது. இத்தாக்குதல் நடவடிக்கை வெளியிற் தெரியாமல் இருக்க நாளேட்டு நிருபர்களோ, வெளிநாட்டு நிருபர்களோ இப்பகுதிக்குச் செல்லத் தடைவிதிக்கப்பட்டனர்.

# பருத்தித்துறை திக்கம் படுகொலை – 16.09.1984

16.09.1984 அன்று நாலு சிறீலங்கா படையினர் ஒரு கண்ணணி வெடித் தாக்குதலில் கொல்லப்பட்டனர். இதற்குப் பழிவாங்கும் நோக்கத்தில் சிறீலங்கா பொலிசார் 16 பொதுமக்களை தாக்கிக்கொன்றனர். அதோடு பருத்தித்துறையில் அமைந்துள்ள ஹாட்லிக்கல்லூரி நூல் நிலையமும் அதன் விஞ்ஞான பரிசோதனை அறைகளும் பொலிசாரால் தீமூட்டி எரிக்கப்பட்டது.



# நிலாவெளி படுகொலை – 16.09.1985

திருகோணமலை மாவடடத்தின் குச்சவெளிப் பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட நிலாவெளிப் பிரதேசமானது. திருகோணமலை நகரிலிருந்து பத்த கி. மீ. தூரத்திலுள்ளது. 1983 ஆம் ஆண்டு இனக்கொலையைத் தொடர்ந்து 1985 ஆம் ஆண்டு நிலாவெளி அகதி முகாம் மக்களால் நிறைந்து காணப்பட்டது.

16.09.1985 அன்று நிலாவெளியில் நிலைகொண்டிருந்த சிங்கள இராணுவமும் ஊர்காவற்படையினரும் சேர்ந்து அகதிமுகாமைச் சுற்றிவளைத்தனர். அங்கிருந்த முப்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்களைக் கைதுசெய்து. அவ்விடத்திலேயே நிறுத்தி வைத்துச் சுட்டத்தில் அனைவருமே உயிரிழந்தனர்.

**16.09.1985 நிலாவெளிப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. முருகேசு தங்கராசா (46)
2. கச்சுமுகைதீன் முகம்மது காலித் (33)
3. வேலு சிவசுந்தரம் (24)
4. வேலு சிதம்பரநாதன் (25)
5. செல்லத்தம்பி நிர்மலானந்தன் ( 26)
6. சோசுந்தரலிங்கம் அருட்குமரன் (20)
7. அந்தோனிப்பிள்ளை கபிரியேல் (-)
8. இராஜேந்திரன் (29)
9. செய்யதுபுகாரி அப்துரசாக் (32)
10. கந்தையா கந்தசாமி (28)
11. கணபதிப்பிள்ளை சௌந்தரராஜன் (28)
12. செல்லத்தம்பி ரட்ணராஜா (41)
13. நேசதுரை றெறன்ஸ் (19)
14. கதிர்காமத்தம்பி கனகசபை (39)
15. முகமட் காசிம் முகமட் ராசிக் (31)
16. தாமோதரம் பிள்ளை நேமிநாதன் (19)
17. வல்லிபுரம் தருமலிங்கம் (18)
18. தர்மதாஸ் உதயநேசன் (19)
19. சுப்பிரமணியம் காளிராஜா (20)
20. செல்வவினாயகம் ஜெயகோபன் (26)
21. இராசையா துரைநாயகம் (36)
22. தாமோதரம்பிள்ளை சண்முகதாசன் (24)
23. மாமாங்கம் ரஞ்சநேசன் (21)
24. அபுசாலிபு அப்துல்நாயீர் (21)
25. சித்திரவேல் மாரிமுத்து (53)
26. சிங்கராயர் கிலீற்றஸ் பிரேமதாஸ் (20)
27. சிவபாலன் கெங்காதரன் (34)
28. பொன்னுத்துரை பார்த்தீபன் (34)
29. யோகராசா (27)
30. இரத்தினசாமி பார்வதி (23)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# மண்டைதீவில் கைது செய்து காணாமற் போனவர்கள் 25.08.1990 – 23.09.1990

யாழ். நகரத்திற்குத் தெற்காக வேலணைப் பிரதேசசெயலகப் பிரிவினுள் ஆயிரத்து இருநூறிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற மண்டைதீவுப் பிரதேசம் அமைந்துள்ளது.

25.08.1990 அன்று சிங்கள இராணுவத்தினர் ஊர்காவற்துறையிலிருந்து மண்டைதீவு நோக்கி இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். இந்நடவடிக்கையின் போது மக்களைப் பாதுகாப்புக் கருதி ஆலயங்களிற் தங்குமாறு முதல் நாள் உலங்குவானூர்தியிலிருந்து துண்டுப் பிரசுரங்களை வழங்கி மக்களுக்கு அறிவித்தனர். இதன்படி மண்கும்பான், அல்லைப்பிட்டி போன்ற கிராமத்து மக்கள் மண்கும்பான் அந்தோனியர் தேவாலயத்திலும், அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் ஆலயத்திலும் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர்.

24.08.1990 அன்று மண்கும்பான் அந்தோனியார் ஆலயத்திலும், இருபத்தைந்தாம் திகதி அதிகாலை அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் கோயிலிலும் தஞ்சமடைந்த மக்களில் பதினைந்து வயதிற்கும் நாற்பது வயதிற்கும் இடைப்பட்டவர்களை சிங்கள இராணுவத்தினர் கைதுசெய்தனர். இதில் ஒரே குடம்பத்தைச் சேர்ந்த மூவர், இருவர் என மண்டைதீவில் இருபத்தெட்டுப் பேரும், அல்லைப்பிட்டியில் முப்பதிரண்டு பேரும், மண்கும்பானில் பத்துப் பேருமாக மொத்தம் எழுபது பேர் கைது செய்யப்பட்டனர்.

28.08.1990 இல் கைதுசெய்தவர்களில் ஒரு சிலர் விடுவிக்கப்பட்டனர். பின்பு 23.09.1990 சிங்கள இராணுவத்தினரும், துணைக் குழுக்களும் (ஈ.பி.டி.பி) சேர்நது மண்கும்பான் அ.த.க பாடசாலையிலிருந்து பதினெட்டு மாணவர்களைக் கைது செய்தனர். எல்லாமாக மூன்று கிராமத்திலும் எண்பத்தெட்டுப் பேர் கைதுசெய்யபட்டனர். ஆனால் இவர்கள் எவரும் இன்று வரை விடுதலையாகவில்லை.

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்ட ஒரோ குடும்பத்தைச் சேர்ந்த விஜயரட்ணம், சுகிர்தரட்ணம், பிரேமரட்ணம் ஆகிய மூன்று பிள்ளைகளின் தந்தையான யேசுரட்ணத்திடம் இது தொடர்பாகக் கேட்ட போது:

"கைது செய்யப்பட்ட என் பிள்ளைகளின் நிலை தொடர்பாக 1991 ஆம் ஆண்டு முதல் வாரத்தில் நாங்கள் சிறிதர் விதியில் இருக்கும் ஈ.பி.டி.பி. செயலகத்திற்குச் சென்று திரு. டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டோம். ஜி அப்போது அவர் "அநேகமாக மூன்று பிள்ளைகள் என்றால் ஒன்றும் நடந்திருக்காது நான் அனுராதபுரம் போய்வந்து சொல்கிறேன். ஜி என்றார். அப்போது நாங்கள் பிள்ளைகளின் ஆவணங்களைக் கொடுத்தபோது அதைப் பிரதி பண்ணித் தரும்படி கேட்டார். அதன்படியே நாங்கள் அடுத்த நாள் அவரிடம் கையளித்தோம்.

அதன் பின்பு கூட்டுப்படைத் தளபதியாக இறந்த திரு. டென்சில் கொப்பேகடுவ அவர்களிடம் மனு செய்தோம். நேரிலும் அவரிடம் பல தடவைகள் கேட்டோம். ஒவ்வொரு தடவையும், ஒவ்வொரு முறையும் டக்ளஸ் தேவானந்தா வோடு தொடர்பு கொண்டார்களா" என்று தான் கேட்பார். கடைசி முறையாக 13.05.1992 நானும், அப்போதைய கல்விப் பகுதி பிரதி அமைச்சர் திருமதி. இராஜமனோகரி புலேந்திரன் அவர்களும் திரு. டென்சில் கொப்பேகடுவ அவர்களைக் கேட்டபோது, அவர் நான் இம்முறை தீவுப்பகுதிக்ப் போய்வந்து உங்கள் பிள்ளைகளைக் காட்டுகிறேன் என்றார். அதன் பின்னர் 1992 ஆனி மாதம் இறுதி வாரத்தில் கொழும்பு பார்க் வீதியில் இருக்கும் ஈ.பி.டி.பி செயலகத்தில் திரு. டக்ளஸ் தேவானந்தாவைக் கேட்டோம். அவரும் தான் இம்முறை தீவுப்பகுதிக்குப் போய் வந்து சொல்லுவதாகக் கூறினார்.

14.08.1992 திருமலை சீ.சீ.எம்.பி சிறையில் எமது பிள்ளைகள் உட்பட எண்பது பேர் மதிய உணவின் பின்னர் பாதுகாப்பாக வெளியே கொண்டு செல்லப்பட்டனர் என தகவல் கிடைத்தது. அதன் பின்னர் 23.12.1994 இல் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவிடம் மனு பண்ணினோம். அப்போது அவர் ஆணைக் குழு விசாரணை செய்யப்போவதாகவும், அதற்கு எங்களை விண்ணப்பம் பண்ணும்படியும் சொன்னார். அதன்படியே ஆணைக்குழு விசாரணைக்கு விண்ணப்பித்தோம்.

12.06.1996 இல் ஆணைக்குழு விசாரணைக்கு வரும்படி அழைக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது. அப்போது ஆணைக்குழுவினர் உங்கள் பிள்ளைகளை திரு. டக்ளஸ் தேவானந்தாவிடம் கேளுங்கள் என்று கூறினார்கள். ஆனால் நாங்கள் கேட்கமுடியாது நீங்கள் கேட்டுச்சொல்லுங்கள் என்று கூறினோம். அதன்படி தாங்கள் கேட்டுச்சொல்லுவதாகக் கூறினார்கள். ஆனால் இதுவரை எவ்வித பதிலும் எனக்குக் கிடைக்கவில்லை" எனத் தெரிவித்தார்.

சிறீலங்கா இராணுவத்தினராலும் துணைக்குழுக்களாலும் கைது செய்யப்பட்டு காணாமற்போனவர்களில் பலர் சித்திரவதைகளின் பின் உயிரிழந்ததாகவும், அவர்களது உடல்களை மண்டைதீவில் வீட்டு வளவினுள் உள்ள கிணற்றிற் போட்டதாக ஊர் மக்கள் தெரிவித்தனர். இவர்களிற் சிலரின் எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டன. இவ்வாறு காணாமற்போய் உயிரிழந்தவர்களின் நினைவாக மண்டைதீவில் நினைவுக்கல் கட்டப்பட்டுள்ளது.

**25.08.1990 – 23.09.1990 வரை மண்டைதவில் கைது செய்து காணமற்போனவர்கள் விபரம்**

1. சூசைப்பிள்ளை செல்வநாயகம் (35)
2. இ. சுதாகரன் (20)
3. இ. விபுலானந்தர் (30)
4. இரட்ணம் ஜெயசீலன் (23)
5. உதயகுமார் (-)
6. ந. குகானந்தராசா (24)
7. பாலசிங்கம் (30)
8. பத்திநாதர் டயஸ் (22)
9. பத்திநாதர் செனியூட் (27)
10. பழனித்துரை சத்தியபாலன் (34)
11. பி.தவம் (18)
12. பி. ஜெயச்சந்திரன் (18)
13. பி. சதீஸ்வரன் (-)
14. பி. பத்மராசா (20)
15. ரி. இருதயராசா (26)
16. ரி. ஆரோக்கியநாதன் (23)
17. ரி. அருள்நேசன் (22)
18. ரி. யோகராசா (18)
19. ரி. ஞானேந்திரன் (25)
20. ரி. செல்வரட்ணம் (20)
21. ரி. சுந்தரலிங்கம் (24)
22. ரி. சாந்தலிங்கம் (20 )
23. ரி. சிமோன் (20 )
24. ரி. ராஜ்குமார் (32)
25. ரி. ராதாகிருஸ்ணன் (-)
26. ரி. ரவீந்திரன் (21)
27. வை. எட்வேட் (21)
28. த. பாலரட்ணம் (20)
29. திரநாயகம் சட்டநாத பிள்ளை (32)
30. மா. தவசீலன் (24)
31. மடுதீன் ஸ்ரானிக் (21)
32. மிசேல் ஸ்ரானிக் (19)
33. மிசேல் சில்வஸ்ரார் (32)
34. அ. அழகராசா (19)
35. அ. ஜெயசீலன் (23)
36. அன்ரன் அசில்லாஸ் (28)
37. அன்ரன் அருள்தாஸ் (26)
38. அந்தோனி ஆரோக்கிய ராசா (23)
39. அந்தோனி றொபேட் (20)
40. ஆர். முருகானந்தன் (21)
41. ஆர். ரவீந்திரன் (20)
42. அலம்பின் றொபேட் (18)
43. ஜெயக்குமார் (22)
44. ஜோர்ச் சில்வஸ்ரார் (20)
45. ஜேசுதாஸ் (-)
46. யோ. விஜயபாலன் (21)
47. நோபேட் ரமேஸ் (19)
48. கே. இந்திரகுமார் (21)
49. கே. இராசசேகரன் (21)
50. கே. பிரமதீஸ்வரன் (22
51. கே. பிறற்போல் (17)
52. கே. விஜயகுமார் (19)
53. பொ. காந்தலிங்கம் (24)
54. செ. சுவக்கிப்பிள்ளை (30)
55. சொர்ணலிங்கம் லிங்கேஸ்வரன் (21)
56. ச. சதானந்தராசா (28)
57. சாள்ஸ் அன்ரனி அன்னதாஸ் (27)
58. சி. அரவிந்தன் (20)
59. சி. சந்தியசீலன் (29)
60. சி. விமலதாஸ் (20)
61. சிவபாலசிங்கம் (28)
62. வி. டொன்போஸ்கோ (19)
63. விஜயரட்ணம் ரவி (23)
64. வில்பிரேட் தேவராசா (25)
65. எஸ். விறேமரட்ணம் (16)
66. எஸ். திருச்செல்வம் (-)
67. எஸ். மகேந்திரன் (20)
68. எஸ். அன்பழகன் (19)
69. எஸ். அருள்நேசன் (28)
70. எஸ். செல்வநாதன் (21)
71. எஸ். சுகிர்தரட்ணம் (19)
72. எஸ். சிவரூபன் (16)
73. எஸ். சிவகுமார் (19)
74. எஸ். சிவபாலன் (19)
75. எஸ். ரஞ்சித்குமார் (19)
76. எஸ். ரவீந்திரன் (15)
77. எஸ். லிங்கேஸ்வரன் (22)
78. என். இரட்ணசிங்கம் (21)
79. என். ஜேசுதாஸ் (45)
80. எம். சிந்தாத்துரை (28)
81. என். விஜயரட்ணம் (35)

**வேறு நாட்களில் காணாமற் போனவர்களின் விபரம்**

1. நிசோலஸ் டயஸ் எட்வின் (17) – 17.07.1996
2. பி. வரோதயநாதன் (18) – 25.05.1993
3. தாவீது பென்ஜமீன் (25) – 1992 ஒகஸ்ட்
4. என. சச்சிதானந்தராசா (24) – 1986
5. வி. பாலரஞ்சன் (39) – 1991 பெப்ரவரி

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங் களையும் பெறமுடியவில்லை.

# மாத்தளன் படுகொலை 18.09.1993

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்பரப்பினை ஒரு பக்க எல்லையாகக் கொண்டமைந்த கிராமங்களில் மாத்தளன் கிராமமும் ஒன்று. இக்கிராம மக்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கடற்றொழிலையே நம்பியிருந்தனர். அத்தோடு தமது பொழுதுபோக்கு மையங்களாக இந்தக் கடற்கரைகளையே பயன்படுத்தி வரலாயினர். இவர்கள் தமது நாளாந்த தேவைகளை ஈடுசெய்ய வேண்டுமாயின் நான்கு கி.மீ. இற்கு அப்பாலுள்ள புதுக்குடியிருப்புச் சந்திப் பகுதிக்கே செல்லவேண்டிய நிலையும் இரந்தது. தமது கடற்பரப்பில் பிடிக்கப்படும் மீன்களைக்கூட இவர்கள் நீண்ட தூரம் சென்றே மக்களுக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலையில் வாழ்ந்து வந்தார்கள்.

இலங்கையில் உள்நாட்டுப் பிரச்சனை தொடங்கிய காலத்திலிருந்து கடற்படையினர் கடலில் மீன்பிடிப்பதற்குத் தடைவிதித்ததுடன்., மீனவர்களைக் கடலில் தாக்கியும் வந்ததர்கள். ஆனாலும் மீனவர்கள் தொடர்ந்தும் கடற்றொழிலைப் பல சிரமங்களுக்கு மத்தியிலும் செய்து வந்தனர்.

18.09.1993 அன்று மாலை 3:45 மணியளவில் மாத்தளன் சந்தியில் கட்டப்பட்ட பொது மண்டபத்தின் திறப்புவிழாவிற்காக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளைச் சேர்ந்த இடம் பெயர்ந்த மக்களும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து அப்பகுதியில் வசித்த மக்களும் அப்பகுதியில் வாழ்ந்த மக்களும் அங்கு கூடினார். நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் மாலை நான்கு மணியளவில் விமானப்படையின் "உலங்கு வானூர்தி" அப்பகுதியால் சென்றது. நேரம் மாலை 5:30 மணிக்கு மாத்தளன் வான்பரப்பிற்குள பிரவேசித்த சிறீலங்காவின் விமானப் படையின் "புக்காரா" குண்டுவீச்சு விமானங்கள் பத்திற்கும் அதிகமான றொக்கட் குண்டுகளை மண்டபத்தினை நோக்கி வீசியதில் மூன்று குண்டுகள் மண்டபத்தின் மீது விழுந்தன. ஏனைய குண்டுகள் மண்டபத்தின் முன்புள்ள சிறிய வயற்பகுதிகளில் விழுந்து வெடித்தன. எங்கும் "ஐயோ" என்ற அவலக்குரலுடன் மக்கள் திக்குத்திசையறியாது சிதறியோடினர். மண்டபம் புகைமண்டலமாக மாறியது. இவ்விமானத் தாக்குதலில் இருபது பொதுமக்கள் அவ்விடத்தில் உடல் சிதறிப் பலியானார்கள்.

நாற்பதிற்கும் அதிகமானனோர் படுகாயமடைந்தனர். குறிப்பிட்ட பொதுமண்டபமும் முற்றாகச் சேதத்திற்குள்ளானது. தாக்குதல் நடந்த சிலமணி நேரத்தின்பின் காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ் மூலம் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.


**18.09.1993 மாத்தளன் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இன்ரிகிறேஸ் ஜோசப் (31)
2. இம்மானுவேல் ஆனந்தராஜா (19)
3. பிரான்சிஸ் அருள்தாஸ் (23)
4. பிலிப்புதவராசா சுஜாத்தா (10)
5. பரமானந்தம் (40)
6. தம்பிராசா குணசிங்கம் (18)
7. தியாகராஜா கண்ணன் (16)
8. மரியதாஸ் அன்ரன் ஜெயபாலன் (32)
9. மரியதாஸ் அன்ரன் யேசுதாஸ் (30)
10. முத்தையா துரைசிங்கம் (45)
11. மரியதாஸ் இன்மானுவேல் ஆனந்தராசா (19)
12. டானியல்பிள்ளை பிலிப்பு தவராசா (39)
13. அந்தோனிப்பிள்ளை சகாயநாயகி (18)
14. யோசப் வினிற்றா கிறேஸ் பிரெட்றிக் (31)
15. யேகமார்க் அன்ரனிதாஸ் (29)
16. செல்லையா செல்வம் (கண்ணன்) (16)
17. சியாத்தா திலீப்மேரி (09)
18. சின்னப்பு அல்போண்ஸ் (22)
19. சங்கரசிவம் புலேந்திரன் (15)
20. சங்கரசிவம் சுரேந்திரன் (18

**காயமடைந்தவர்களின் விபரம்:**

1. கந்தையா குமாரசாமி (45)
2. அன்னலிங்கம் சொர்ணலிங்கம் (37)

குறிப்பு: - இச்சம்பவத்திற் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங் களையும் பெறமுடியவில்லை.



# சாவகச்சேரி – சங்கத்தானை புக்காராக் குண்டுவீச்சு 28.09.1993

யாழ் நகரிலிருந்து கிழக்குப்புறமாக யாழ்-கண்டி நெடுஞ்சாலையில் சாவகச்சேரி நகர் அமைந்துளள்து. சாவகச்சேரி நகரப்பகுதியிலிருந்து ஐநூறு யார் தொலைவில் கண்டி வீதியின் கிழக்குப் பக்கமாக சங்கத் தானைக் கிராமம் அமைந்துள்ளது.

1990 இன் பின்னர் போர் தீவிர மடைந்தது. இதன்போது விமானங் கள் மக்கள் குடியிருப்புக்கள், பொது இடங்களென எங்கும் தமது தாக்கு தலை நடத்தின.

அத்துடன், சிங்கள இராணுவத் தினர் நீண்டதூர எறிகணைத் தாக்குதல்களையும் மேற்கொள்ளத் தொடங்கினார்கள். இதன்விளை வாகப் பொதுமக்கள் தம்மை விமானத் தாக்குதல், எறிகணைத் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக காப்பகளழிகளை அமைத்து வந்தனர்.

இக்கிராமத்தில் “உதயன் மரக் காலையில்” அமைந்திருந்த பதுங்குகுழி அயலில் வாழுகின்ற மக்களின் பாதுகாப்பரனாக இருந் தது. 28.09.1993 அன்று மாலை 5 மணியளவில் சாவகச்சேரி நகரப் பகுதியில் பெரும் இரைச்சலுடன் வந்த ஆஜன்ரினா நாட்டுத் தயாரிப் பான இரண்டு “புக்காரா” விமானங் கள் இரு தடவைகள் வானில் வட்டமிட்டன. பீதியுற்ற மக்களில் முப்பத்தைந்திற்கும் மேற்பட்டவர் கள் தம்மைப் பாதுகாக்க உதயன் மரக்காலையில் அமைக்கப்பட்ட காப்பகழிக்குள் சென்றனர். இவ் விமானங்கள் வீசிய முதலாவது குண்டு காப்பகழி மீது வீழந்து வெடித்ததால், காப்பகழிக்குள் ளிருந்த குழந்தைகள் உட்பட முப்பது பேர்வரை சம்பவ இடத்தில் மண்ணுக்குள் புதைந்த நிலையில் உயிரிழந்தார்கள். காப்பகழியில் தஞ்சமடைந்த மக்களில் ஐந்துபேர் மட்டும் காயங்களுடன் மீட்கப்பட் டனர்.

உயிரிழந்தவர்களின் நினைவாக சாவகச்சேரி சங்கத்தானை “உதயன் மரக்காலையில்” நினைவுத்தூபி எழுப்பப்பட்டுள்ளது.

**28.09.1993 அன்று சாவகச் சேரி – சங்கத்தானை புக்காராக் குண்டுவிச்சில் கொல்லப்பட் டடோர் விபரம்**

1. இரத்தினகோபால் சுதர்சன் (11)
2. நாகேஸ்வரி குருநாதன் (56)
3. கந்தையா செல்வராசா (40)
4. கணேசன் கௌசிகா (12)
5. பாலசுந்தரம் சந்திர சேகரம் (09)
6. பாலசுந்தரம் சுரேஸ் (12)
7. பாலசுந்தரம் ரதி (03)
8. தஸ்யனி பாலசுந்தரம் (02)
9. தங்கம்மா கணபதிப் பிள்ளை (56)
10. தங்கராசா சுசீலா (21)
11. மகேஸ்வரி செல்லையா (52)
12. அமுதலிங்கம் லச்சம்மா (53)
13. ஜெகதீஸ்வரன் ஜனனி (07)
14. ஜெகதீஸ்வரன் தினேஸ் (08)
15. ஜெகதீஸ்வரன் தசாஜினி (11)
16. ஜெகதீஸ்வரன் சாந்தினி (31)
17. கோபாலபிள்ளை சுதர்சன் (09)
18. கோபாலரத்தினம் சுபாஜினி (15)
19. பொன்னுத்துரை ஞானேஸ்வரி (60)
20. தெய்வேந்தீரன் நாகேந் திரன் (19)
21. செல்வராசா யசோதா (18)
22. செல்வராசா சுஜாதா (16)
23. சுரேக்கா கோபால ரட்ணம் (09)
24. சின்னராசா நிறஞ்சினி (13)
25. சின்னராசா பிரபா (10)
26. சின்னராசா பிரபாலினி (10)
27. சின்னராசா பவானி (21)
28. ரட்ணகோபால் துஸ்யேந் திரன் (09)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடிய வில்லை.

# கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயம் மீதான தாக்குதல் 29.09.1993

யாழ்ப்பாணத்தின் நல்லூர் பிரதேசத் தில் கொக்குவில் கிராமம் அமைந் துள்ளது. சைவசமய வளர்ச்சிக்கும், சைவ அபிவிருத்திக்கும் முன் னோடியாக இக்கிராமத்தில் நந்தா வில் எனும் ஊரில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் இற்றைக்கு இருநூற்றைம்பது வருடம் பழமை வாய்ந்ததாகவும், பல வரலாற்றுச் சிறப்பம்சங்களைக் கொண்டதாகவும் காணப்படுகின் றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இவ் வாலயத்தில் 1988 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினராலும், 1993 ஆம் ஆண்டு சிறீலங்கா விமானப்படையாலும் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

1988 ஆம் ஆண்டு ஆவணி மாதம் காலை 8:00 மணியளவில் ஆலயப் பகுதியாற் சென்ற இந்திய இராணு வத்தினர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டு நின்றவர் களைச் சுட்டதில் எஸ். சண்முகம் (நல்லூர் ப.நோ.கூ.ச. ஊழியர்), கண்ணன் (ஆலய பூசகர்), குலேந்திரன் (A.G.A கோப்பாய்) ஆகியோர் உயிரிழந்தார்கள். மேலும் ஐந்து பேர் காயமடைந் தனர்.

29.09.1993 காலை 10:00 மணி யளவில் சிறீலங்கா விமானப் படையின் “புக்காரா” விமானம் ஆலயம் மீது குண்டுத்தாக்குதலை நடத்தியதில் ஆலய வழிபாட்டில் நின்றவர்களில் மூன்று பெண்கள்




## யாழ் வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பாடசாலைப் படுகொலை 1995.09.22









# யாழ் வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பாடசாலைப் படுகொலை 1995.09.22





யாழ் மாவட்டத்தில் வடமராட்சியில் நாகர்கோயிற் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்து மக்களின் பிரதான தொழில் மீன்பிடித்தல் ஆகும். கிராமத்தில் 15.02.1956 இல் திரு. வி. நாகநாதன் அவர்களின் முயற்சியினால் நாகர்கோயில் வடக்கில் யாழ். நாகர்கோயில் நாகேஸ்வரர் வித்தியாலயம் அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டது. பின்னர் 1967 இல் யாழ். நாகர்கோயில் மகாவித்தியாலமாகத் தரம் உயர்த்தப்பட்டது.

1990 ஆம் ஆண்டு சிங்கள இராணுவ நடவடிக்கை காரணமாக மயிலிட்டிக் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் ஆறுநூறு குடும்பங்கள் நாகர்கோயிலிற்கு இடம்பெயர்ந்தன. நாறூறு மாணவர்களைக்கொண்டிருந்த பாடசாலையின் மாணவர் தொகை எழுநூறாக உயர்ந்தது. 1991 ஆம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் நடைபெற்ற சண்டையினால் வெற்றிலைக்ணேி, ஆழியாவளை, கட்டைக்காடு போன்ற கிராமமக்களும் நாகர்கோயிலிலேயே தஞ்சமடைந்தனர். 1993 ஆம் ஆண்டுக்குப் பின்பு மாணவர்களின் எண்ணிக்கை எண்ணூற்றுமுப்பதாக அதிகரித்தது. ஆசிரியர்களின் எண்ணிக்கை முப்பதாக அதிகரித்துக் காணப்பட்டது.

1995 ஆம் ஆண்டு செப்ரெம்பர் அருபத்தோராம் திகதி வடமராட்சியின் பல பாகங்களுக்கும் பலாலியிலிருந்து சிங்கள இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர். மறநாள் இருபத்திரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை 6:30 மணிக்கு வடமராட்சி கிழக்குப் பகுதியில் சிறீலங்கா விமானப் படையின் "புக்காரா" குண்டுவீச்சு விமானம் மணற்காடு கிறிஸ்தவ தேவாலயத்துக்கு அருகில் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதில் தேவாலயம் சேதமடைந்ததுடன், மணற்காட்டைச் சேர்ந்த இரத்தினம் அன்ரனிதாஸ் (08), மனோகரதாஸ் மரியஜித் (10), ஜோன்பொஸ்கோ கார்மிளா (05) ஆகிய மூவரும் உயிரிழந்ததுடன், பலர் படுகாயமடைந்தனர்.

அன்றைய நாள் (22.09.1995) வடமாரட்சி கிழக்கில் காலை பதற்றமாக இருந்தபோதும் நாகர்கோயில் மகாவித்தியாலயத்துக்கு வழமைபோல மாணவர்கள் வந்தனர். அன்றையநாள் எண்ணூற்றுமுப்பது மாணவரில் எண்ணூற்றுபத்து மாணவர்கள் வந்திருந்தனர். வெள்ளிக்கிழமை என்பதால் காலையில் இறைவழிபாடு ஆரம்பித்தது. இறைவழிபாட்டினைத் தொடர்ந்து நற்சிந்தனை இடம்பெற்றது. அன்றைய நற்சிந்தனையினை ஏழாம் ஆண்டில் கல்விகற்கும் "நவரத்தினசாமி உமாதேவி" எல்லோரையும் கவரக்கூடிய விதத்தில் இனிய குரலில் இருபத்தைந்து நிமிடம் உரையாற்றினார். இதனைத் தொடர்ந்து மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள்.

மதியம் 12:45 மணியளவில் வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது நாகர்கோயில் வான்பரப்பிற்குள் பிரவேசித்த சிறீலங்கா விமானப்படையின் இரண்டு "புக்காரா" விமானங்களிலிருந்து மாறி, மாறி எட்டு றொக்கட் குண்டுகள் பாடசாலையையும், கிராமத்தையும் நோக்கி வீசப்பட்டதினால் அப்பிரதேசம் புகை மண்டலமானது.

இத்தாக்குதலில் காலைப் பிரார்த்தனையில் உல்லோராலும் பாராட்டப்பட்ட "நவரத்தினசாமி உமாதேவி" உட்பட எழு மாணவர்கள் பாடசாலையினுள் உயிரிழந்தார்கள். படுகாயத்துடன் உயிருக்காகப் போராடிய பதின்மூன்று மாணவர்கள் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியிலும், வைத்திய சாலையிலும் இறந்தனர். மேலும் நாற்பத்திரண்டு மாணவர்கள் படுகாயமடைந்தனர். இன்னும் சில மாணவர்கள் தமது உடல் உறுப்புக்களை இழந்தனர். அன்று நடந்த புக்காராக் குண்டுவீச்சில் பாடசாலை மாணவர்களுடன் நாகர்கோயில் கிராமத்தைச் சேர்நத இருபத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களும் உயிரிழந்ததுடன், எண்பதைந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தார்கள். அன்றை தாக்குதலில் இருபது மாணவர்கள் உட்பட நாற்பது பேர் உயிரிழந்தனர். நாற்பத்திரண்டு மாணவர்கள் உட்பட நூறு பேர் காயமடைந்தனர்.

**இச்சம்பவத்தில் வலது காலை இழந்த ச. சிறிவித்தியா கூறுகையில...**

"அன்று புக்காரா விமானம் பாடசாலை அருகில் முதல் குண்டை போட்டவுடன் எல்லோரும் சிதறி ஓடினோம். அப்போது மீண்டும் விமான இரைச்சல் சத்தம் பெரிதாகக் கேட்ட போது நான் பாடசாலையிலுள்ள அத்திமரத்தின் கீழே விழுந்து படுத்து விட்டேன். குண்டு பாடசாலை வளாகத் திற்குள் விழுந்து வெடித்தது பாடசாலை முழுக்க புகை மண் டலமாக இருந்தது. எங்கும் ஓரே அழு குரல்கள் கேட்டது. நானிருந்த இடத்தில் இருந்து தலையைத் துக்கிப் பார்த்த போது எங்கும் இரத்தமாக இருந்தது. எனது உடம்பிலும் காலிலும் காயமடைந்திருந்தேன அப்போது நான் அத்திமரத்தை பிட்டு எனக் கருகிலிருந்து எனது ஒன்றுவிட்ட சகோதரியையும் கூட்டிக்கொண்டு ஓடும் நோக்குடன் எழும்ப முயன்ற போது என்னால் ஓடமுடியாமற் போய்விட்டது. அந்தநேரம் எனது அண்ணாதான் வந்து என்னைத் துக்கிக்கொண்டுபோய் மந்திகை வைத்தியசாலையிற் சேர்த்தார். அங்கு எனது வலது காலினைக் கழற்றினார்கள். அத்துடன் எனது வலது கையையும் கழற்ற வேண்டுமென்று கூறினார்கள். பின்னர் யாழ் போதனா வைத்திய சாலையில் மேலதிக சிகிச்சை பெற்றுகுணமடைந்தேன்."

**22.09.1995 அன்று யாழ் வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பாடசாலைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இராமநாதன் மேதினி (13)
2. இராமச்சந்திரன் சங்கீதா (14)
3. இராசரத்தினம் உமாகாந்தன் (16)
4. இராசரத்தினம் கவிதா (10)
5. இரவீந்திரராசா அமிர்தா (10)
6. உ.தர்சினி (12)
7. நாகமுத்து செல்தில்வேல் (15)
8. நவமணி மிதுரா (14)
9. நவரத்தினசாமி உமாதேவி (12)
10. குகசரவணைமலை தர்சினி (13)
11. கிருஸ்ணகோபால் தவசீலன் (13)
12. பூலோகராசா துஸ்யந்தி (13)
13. பாலச்சந்திரன் றெஜிதா (10)
14. த.சமித்தா (10)
15. தர்மலிங்கம் உசாநந்தினி (14)
16. தாமோதரம்பிள்ளை சகுந்தா (12)
17. தம்பிப்பிள்ளை கோபிதரன் (-)
18. மயில்வாகனம் கணநாதன் (13)
19. மகாலிங்கம் சண்முகவடிவேல் (16)
20. மார்க்கண்டு நாகலோசனி (10)
21. அன்ரன் மரிய மனோகரதாஸ் மரியறஜித் (09)
22. அன்ரனி மரியறோஸ் அன்ரனிதாஸ் (08)
23. அல்போன்ஸ் அமலவிஜி (14)
24. யோன் பொஸ்கோ கார்மிலரா (04)
25. செல்வகுலசிங்கம் செல்வதி (17)
26. செல்வம் (16)
27. சிதம்பரப்பிள்ளை சசிரூபி (11)
28. ராகவன் (16)

**காயமடைந்தவர்களின் விபரம்**

1. தங்கவேலாயுதம் றேணுகாயினி (12)
2. அ.றோமியா (10)
3. அக்கினேஸ்திரேசா கலிமண்ட் (12)
4. அக்கினேஸ் திரேசா அகிலதாஸ் (06)
5. அருமைலிங்கம் தாட்சாயணி (13)
6. சி. நரோசினி (09)
7. சி. சாரதா (45)

குறிப்பு: - இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



# அம்பாறை பொத்துவில் இரத்தன்குளம் படுகொலை - 17.09.2006

அம்பாறை பொத்துவில் பிரதேசத்திலிருந்து 11 கிலோ மீற்றர் தொலைவில் இரத்தன் குளம் உள்ளது. இந்த அணைக்கட்ட அமைந்துள்ள பிரதேசம் பொத்துவில் கிராமசேவகர் பிரிவிற்குப்பட்டது. எனினும் தற்போது அந்தக் கிராமம் சிங்களப் பகுதியிலுள்ள லபுகல கிராமசேவகர் பரிவிற்கு மாற்றப்பட்டுள்ளது. பொத்துவிலின் இரத்தன்குளம் பகுதியில் புத்தர்சிலை ஒன்றினை நிவும் முயற்சிகளை சிங்களவர்கள் மேற்கொண்டிருந்தனர். இதனையடுத்து அப்பகுதியில் சிங்களவர்களக்கும். தமிழ் முஸ்லிம்களுக்கும் இடையில் முறுகல் நலை ஏற்பட்டிருந்தது. அத்தோடு சிங்களவர்கள் பொத்துவிலிருந்து தமிழ் முஸ்லிம்களை முழுமையாக வெளியேற்றும் நோக்கில் அப்பகுதியில் வெனகல் என்னும் பெயரில் புதிதாக ஓர் பிரதேசசெயலகர் பிரிவை தனியாக உருவாக்கினர். இதனைத் தொடர்ந்து தமிழ் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே எல்லைச் சண்டைகளும், காணிப் பிரச்சனைகளும் தொடர்ந்து வண்ணமே இருந்தன. இதனால் இரு இனத் தலைவர்களுக்கும் இடையே முறுகல் நிலை மேலும் வலுப்பெற்றது.

இந்த நிலையில் மேற்படி குள அணைக்கட்டை புனரமைப்பதற்காக 2006 செப்ரெம்பர் 17 ஆம் நாள் தமிழ் முஸ்லிம் இளைஞர்கள் சென்றிருந்தனர். சிறீலங்கா அதிரடிப்படையினர் அங்கு அவர்களைக் குத்தியும், வெட்டியும், கழுத்தறுத்ததுமாக பத்து தமிழ் முஸ்லிம்களை படுகொலை செய்தனர். ஒருவர் படுகாயமடைந்த நிலையில் தமிழ் முஸ்லிம் மக்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனமதிக்கப்பட்டார். இந்த நிலையில் மேற்படி சம்பவ தினத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் சின்னப்பிள்ளை என்னுமிடத்தில் அமைந்துள்ள தமிழ் முஸ்லிம்களின் மையவாடிப் பகுதியில் சிங்களவர்கள் அத்துமீறி நுழைந்து ஒருவரின் உடலைப் புதைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து தமிழ் முஸ்லிகள், சிங்களவர்களுக்கிடையில் பெரும் இன முரண்பாடுகள் ஏற்பட்டன.

இவ்வாறு தமிழ் முஸ்லிம்கள் குடியிருக்கும் நிலங்களை தமது ஆதிக்கத்திற்குக் கீழ் கொண்டு வரவதற்கான முயற்சியில் ஈடுபட்டுவந்த சிங்களப் பேரினவாதிகள் தொடர்ந்தும் தமிழ் முஸ்லிம்களை ஒடுக்கும் முயற்சியின் ஒரு கட்டமாக அவர்களுக்கு எச்சரிக்கை ஒன்றினை விடக்கும் நோக்கிலேயே சிறீலங்கா விசேட அதிரடிப்படையினரால் இப்படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டதாக கருதப்படுகின்றது.

**இச்சம்பத்தின் போது உயிரிழந்தவர்களின் பெயர் விபரம்**

1. எம் அனுர்தீன் (15)
2. எம். நபார் (15)
3. எம். சமுதீன் (18)
4. எ.எம். பைசல் (19)
5. எல். அனிஸ் (19)
6. எம். ஜப்பார் (20)
7. எஸ்.எல். நிசாட் (-)
8. ஏ.எம். அஜ்மீர் (18)
9. எம். பைரூப் (19)
10. எம். ஐ. சியம் (-)

**காயமடைந்தவர்**

1. எம். மீரமுகைதீன் (55)

# கோணாவில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல் 27.09.1996

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசெயலர் பிரிவில் உள்ள டங்கியுள்ள கிராமங்களில் ஒன்று கோணாவிலாகும். அத்துடன் இது ஒரு விவசாயக்கிராமமாகும். இங்கு பலர் கூலித்தொழிலிகளாவர். இந்த கிராமத்து மக்கள் யுத்தகாலத்தில் பல தடவைகள் இடம்பெயர்ந்து பற்பல இன்னல்களையும் அனுபவித்தவர்களாவார்கள்.

1996 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் இருபத்தேழாம் திகதி காலை 11:30 மணியளவில் சிறீலங்கா விமானப் படையின் இரண்டு "கிபிர்" விமானங்கள் கோணாவில் காந்தி கிராமச்சந்தியில் குண்டுகளை வீசியது. இவ்விமானக்குண்டு வீச்சில் காந்தி கிராமச்சந்தியில் நின்ற மூன்று பொதுமக்கள் அவ்விடத்தில் உடல் சிதறிப்பலியானதுடன், பலர் படுகயமடைந்தனர். படுகாயமடைந்தவர்களில் இருவர் அக்கராயன் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற பின் சிகிச்சை பலனழிக்காமல் உயிரிழுந்தனர்.

**இச்சம்வத்தில் தகப்பனையிழந்த விமலேஸ்வரி சம்பவம் பற்றி கூறுகையில்**

"1996ஆம் ஆண்டு சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாக நாங்கள் இடம்பெயர்ந்து போய் இராஜன் குடியிருப்பிலே இருந்தோம். அன்றை தினம் அம்மா மதிய உணவைச் சமைத்துக் கொண்டிருந்தார். அப்பா மரக்கறி வாங்குவதற்காக காந்தி கிராமம் சந்திக்குச் சென்ற போது தான் கிபீர் விமானம் குண்டு போட்டது. அப்பா நெஞ்சுப்பகுதி முழுவதும் சிதைந்து போய் அவ்விடத்திலேயே இறந்து விட்டார். இதை அறியாத நானும் அம்மாவும் காந்தி கிராமத்திற்கு ஓடி வந்து பார்த்தபோது அப்பாவைக் காணவில்லை. சிலவேளை வீட்டிற்கு வந்தீருப்பார் என்று நினைத்து திரும்பவும் வீடு போய்ப் பார்த்த போது அங்கேயும் இல்லை. அப்பா இறந்தது தெரியாது நாங்கள் தேடித்திரிந்த போது தெரிந்த ஒரு அண்ணா வந்து சொன்னார், உங்களுடைய அப்பா காலில் காயம்பட்ட நிலையில் அக்கராயன் வைத்தியசாலையில் இருக்கிறார் என்று. உடனே நாங்கள் அவருக்குத் தேவையான பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வைத்தியசாலைக்குப் போனோம். அங்கே எனது அப்பாவின் உடலையும் தாத்தாவின் உடலையும் அத்தையும் சில உறவினர்களும் எடுத்து வைத்திருந்ததை கண்ட போது தான் இருவரும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டார்கள் என்பது தெரிந்தது. பின்னர் இருவரது உடல்களையும் அக்கராயன் முதலாம் இலக்க அரிசி அலை வளவில் வைத்து இறுதிக் கரியை களைச் செய்தோம். அப்பா இல்லாத துடன் வீடு வாசல்கள் இல்லாமல் மரங்களுக்கு கீழே இருந்து சரியாகக் கஸ்ரப்பட்டோம். மில்லுக்கப் போய் உமியைப் பிடைத்து அதில் வரும் அரிசியை எடுத்துச் சாப்பிட்டோம். அது இல்லாத வேளை வேறு ஆட்களின் காணியிற் போய் தேங்காயை எடுத்து வந்து அதை உரித்துச் சாப்பிட்டு வந்தோம். பின்னர் கஸ்ரம் தாங்கமுடியாமல் திரும்ப சித்தியினுடைய வீட்டிற்கு வந்து அதிலிருந்து எங்களுடைய சொந்த வீட்டிற்கு வந்திருத்தோம். சரியான கஸ்ரத்தின் மத்தியில் நெல்லுப் பிடைச்சுத் தான் சாப்பிடுகின்றோம். நான் படிப்பை விட்டு விட்டேன். எனது அண்ணாவும் அப்படித்தான் படிப்பை விட்டு விட்டார். தற்போது நானும் ஒரு அண்ணாவும் தங்கையும் அம்மாவும் மட்டுந்தான் இருக்கின்றோம். அம்மா புல் பிடுங்கப் போனாற் தான் நாங்கள் சாப்பிடுவது. இல்லாது விட்டால் நான் தான் ஏதாவது ஒரு வேலைக்குப் போகவேண்டும். நாங்கள் எந்தவிதக் குறையும் இல்லாது வாழ்ந்த வேளை எங்களுடைய அப்பாவை சிறீலங்கா விமானப்படை கொடூரமாகக் கொன்றதாற் தான் நாங்கள் இப்படிக் கஸ்ரப்படவேண்டி வந்திருக்கிறது. அப்பா அருந்திருந்தால் எங்களை நல்லபடியாகப் பார்த்து படிக்க வைத்திருப்பார். இப்போது எதிர்காலம் தொடர்பான கேள்விக் குறியுடன் மிகுந்த கஸ்டத்தின் மத்தியிலேயே எமது நாட்கள் செல்லுகின்றது."

**இச்சம்பவத்தின் கணவனை இழந்த வைகுந்தவாசன் பரிமளா என்பவர் கூறிகையில்...**

"எனது கணவர் ஒரு ஓவியர், விளம்பரம் பலகைகள் வரைவது அவரது தொழில், கிளிநொச்சி மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்து அக்கராயன் பக்கம் சென்று கொண்டிருந்தார்கள். கணவர் சந்தைக்குப் போய்விட்டு வருவதாகச் கூறிச் சென்ற சில நேரத்தின் பின் கிபீர் விமானங்கள் சுற்றி குண்டு போட்ட வுடனேயே நான் சந்திக்குப் போனேன். அங்கு அவரில்லை. அங்கு நிற்பவர்கள் சொன்னார்கள் அவர் காயப்பட்டு அக்கராயன் வைத்தியசாலைக்கு கொண்டுசென்று விட்டார்கள் என்று. பின்னர் நானும் மூத்த மகனுமாக வைத்திய சாலைக்குச் சென்றபோது அவர் உயிரிழந்துவிட்டார். செஞ்சிலுவைச் சங்கத்தினர் தான் அவரின் உடலை வீட்டிற்குக் கொண்ட வந்து தந்தார்கள். உரிய முறைப்படி தகனம் செய்தோம். அவர் இறந்த பிறகு பிள்ளைகளும் பெரிதாகப் படிக்க வில்லை. அக்கராயனுக்கு இடம் பெயர்ந்தும் பெரிய கஸ்ரத்தை நான் அனுபவித்தேன். அரிசி இடித்துக் கொடுப்பது புல்லுப் பிடுங்குவது போன்ற கூலித் தொழிலைச் செய்து தான் இன்றும் சீவியம் நடத்துகின்றேன் என்றார்."

**27.09.1996 அன்று கோணாவில் விமானக் குண்டுவிச்சுத் தாக்குதலில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இராசதுரை திருக்குமார் (20)
2. கந்தையா விஜயகுமாரி (31)
3. முத்துசாமி வைகுந்தவாசன் (39)
4. பெரியசாமி வேலு (61)
5. சிவனாண்டி ஜெனகாந் (15)

**காயமடைந்தவர்கள் விபரம்**

1. பொன்னையா ஜெயநாதன் (16)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



# புதுக்குடியிருப்பு மந்துவில் படுகொலை 15.09.1999



முல்லைத்தீவு மாவட்டத்தில் புதக் குடியிருப்புப் பிரதேசத்திற்கு அருகில் மந்துவில் கிராமம் அமைந்துள் ளது. இக்கிராமத்து மக்களின் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய வகையில் மந்துவில் சந் தியில் பொது நிறுவனங்கள், வியாபார நிலையங்கள், சிறிய சந்தை, கோயில், தேவாலயம் என்பன அமைந்துள்ளன. மந்து விற் கிராம மக்கள் நாளாந்த தேவைகளிற் பெரும்பாலான வற்றை இங்கெ பூர்த்திசெய்து வாழ்ந்து வந்தனர்.

15.09.1999 அன்று வழமைபோல குழந்தைகள், இளையவர், முதியவ ரென பலதரப்பட்டவர்களும் சந்திக் குத் தமது தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு வந்திருந்தனர். காலை 10:25 மணியளவில் சிறீலங்கா விமானப்படையின் இரண்டு "கிபீர்" குண்டுவீச்சு விமானங்கள் முல்லைத்தீவு வான் பரப்பினூடாக பற்நது வந்து மந்து விற் பகுதியை பத்து நிமிடங்களாக வட்டமிட்டு மக்கள் கூடிநின்ற மந்துவில் சந்தைப் பகுதிமீது குண்டுத் தாக்குதலை நடத்தின.

விமானத் தாக்குதலில் சம்பவ இடத்தில் பன்னிரண்டு பொது மக்கள் உயிரிழந்தனர். உயிரிழந் தவர்களின் உடல்கள் சில அவ் விடத்திலும், வீதியிலும், பற்றைக் குள்ளும், கிணற்றுக்குள்ளும் தூக் கி வீசப்பட்டிருந்தன. இறந்தவர் களின் உடல்கள் சிதைந்த நிலை யிலிருந்தன. படுகாயமடைந் திரந்தவர்களை அப்பகுதி மக்கள் வாகனங்களில் ஏற்றி புதுக்குடியிரப் பு வைத்தியசாலைக்குக் கொண்ட சென்றார்கள். இதில் பத்திற்கும் மேற்பட்டவர்கள் அன்று மாலையே உயிரிழந்தனர். இச்சம்பவத்தின் போது நாற்பதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். வியாபார நிலையங்கள், பயன்தரமரங்கள், கால்நடைகள் போன்ற பல இலட்சம் பெறுமதியான சொத்துக்களும் அழிந்தன.

**இச்சம்பவத்தில் கணவரை இழந்த சுப்பிரமணியம் சரஸ்வதி கூறும்போது...**

"எனது கணவர் காணியில் கிடைக் கும் தேங்காய்களை கொண்டு சென்று மந்துவில் சந்தியில் விற்றுவிட்டுவருவார். சம்பவ தினமன்றும் பத்துத் தேங் காய்களை விற்றுவிட்டு சாமான்கள் வாங்கி வரவென்று போனார். கிபீர் விமானங்கள் சந்திப் பகுதியில் குண்டுகளைப் போட்டதென்று அறிந்தவுடன், தகப்பனைத் தேடி மகன் பிறேமன் போனார். நான் என்ன நடந்ததோ என்று தெரி யாமல் பயத்துடனிருந்தேன். மகன் போன போது வேலிக்கரையில் நாடியைப் பொத்திப் பிடித்தபடி படுத்திருந்தாராம், உடனே வீதியில் வந்த மோட்டார் சைக்கிளை வாங் கி புதுக்குடியிருப்பு வைத்திய சாலைக்கு ஏற்றிக்கொண்டு போகும் போது இடை நடுவிலே இறந்து விட்டார். ஏற்கனவே எனது ஆறா வது மகன், 1985 ஆம் ஆண்டு சிறீலங்கா இராணுவப் பிரச்சனைக் குப் பயந்து, வவுனியாவில் இருந்த மூத்த மகனின் வீட்டில் இருந்து பத்தாம் ஆண்டு படித்தக் கொண்டு ருந்த வேளை, 1985 ஆம்ஆண்டு வைகாசி மாதம் இருபதாம் திகதி யன்று வவுனியா ஆச்சிக்குளம் பகுதியில் வைத்து சிறீலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். தற்போது பதின் நான்கு ஆண்டகளின் பின்னர் எனது கணவரையும் சிறீலங்கா விமானப்படையினர் குண்டு வீசில் கொன்றுள்ளனர்."

**15.09.1999 அன்று புதக்குடி யிருப்பு மந்துவில் படுகொலை யில் கொல்லப்பட்டோர் விரபம்:**

1. சின்னையா ஜெயபாலசிங்கம் (37)
2. சண்முகம் கிருபாகரன் (22)
3. சவிரி யோன் (52)
4. சங்கரப்பிள்ளை செல்வமாணிக்கம் (70)
5. ஞானசேகரம் இலட்சுமிப்பிள்ளை (43)
6. ஜெயராமன் சந்திரகுமார் (20)
7. அலன்றோஸ் கொண்டுயூசியஸ் (19)
8. அந்தோனிப்பிள்ளை (-)
9. ஆறுமுகம் ஜெயராமன் (50)
10. சின்னையா ஜெயபாலசிங்கம் (37)
11. பாக்கியநாதன் றீற்றம்மா (56)
12. தனராஜ் ஜெனோவி (24)
13. வேதநாயகம் செபஸ்தியாம்பிள்ளை (52)
14. துரைசிங்கம் சபாநாயகம் (21)
15. இராசநாயகம் உதயகுமார் (20)
16. இராசேந்திரம் சத்யகுமார் (25)
17. குணசிங்கம் ஜெயச்சந்திரன் (33)
18. கணபதிப்பிள்ளை சத்தியபாமா (25)
19. கனகசபை மிதிலா (26)
20. அன்ரனனிலியோ கிறிஸ்ரிஸ்புளோரன்ஸ் (54)
21. செல்லையா ஆறுமுகம் (59)
22. கணபதிப்பிள்ளை யோகராசா (36)
23. அன்ரனிதவராசா திரேசம்மா (50)
24. அன்ரனிலியோ மெல்றோஸ் (24)
25. சின்னத்தம்பி தம்பு (55)
26. ஜெயமஸ் ஜெயசங்கர் (33)
27. பத்மராசா ஜெனிற்றா (15)
28. சந்திரசேகரம் சயந்தினி (12)
29. தம்பையா சப்ரமணியம் (67)

**காயமடைந்தவர்களின் விபரம்:**

1. சூ. பேதுறுப்பிள்ளை (80)
2. இ. தனேஸ்வரி (55)
3. இ. மகேஸ்வரி (55)
4. நா. அருந்தவமலர் (52)
5. க. தங்கையா (45)
6. கனகையா (48)
7. சந்தையா நாகலிங்கம் (43)
8. கந்தையா வள்ளிப்பிள்ளை (35)
9. கதிரேசு தேவராசா (70)
10. கதிரேசு தேவராசா (39)
11. கி. அன்னலட்சுமி (61)
12. கிருஸ்ணபிள்ளை அன்னலட்சுமி (51)
13. குணசிங்கம் (50)
14. குணரத்தினம் நிறஞ்சன் (09)
15. பால்ராஜ் பாசமலர் (27)
16. பாலசிங்கம் பால்ராஜ் (29)
17. பத்மராஜா மதியமலர் (40)
18. பி. மரியமலர் (52)
19. பீற்றர்கென்றிலோல் லோறன்சியா (18)
20. சைலன் (03)
21. த. பாலசிங்கம் (66)
22. த. தனுசா (03)
23. த. தேவராசா (39)
24. தி. தர்சினி (17)
25. தியாகராசா தர்சினி (17)
26. தியாகாராசா செல்வாராணி (44)
27. ம. தனராஜ் (20)
28. மயில்வாகனம் (45)
29. மகாலிங்கம் தனராஜா (29)
30. மரியநாயகம் (48)
31. முத்துசாமி (48)
32. முத்துசாமி கோழிமனசாமி (48)
33. அ. இருதயராசா (20)
34. அ. மரியசோபனா (23)
35. அ. விதுச்ன (35)
36. அன்ரன் பெனடிற் (51)
37. அலன்றோஸ் மரியநாயகி (40)
38. ஜெ. ஜெயசங்கர் (30)
39. ஜெ. சரஸ்வதி (50)
40. ஜெயராமன் விமல்ராஜ் (06)
41. ஜெயராமு சரஸ்வதி (50)
42. ஜெயராமன் (60)
43. யோன் நான்சி (19)
44. கே. தவசீலன் (19)
45. கே. மேனகா (18)
46. கோபாலகிருஸ்ணன் பத்மாவதி (45)
47. பொ. வள்ளிப்பிள்ளை (90)
48. பெர்னான்டோ அனரலிவின்சன் (35)



49. பெரியதம்பி நடராசா (51)
50. தெ. மரியமலர் (68)
51. சே. மரியம்மா (68)
52. சேதுப்பிள்ளை (80)
53. செல்லையா சந்திரசேகரம் (27)
54. செல்லத்துரை மகேஸ்வரி (46)
55. ச. யோகராணி (41)
56. ச. லோகிதா (15)
57. ச. சர்மிலா (23)
58. சின்னத்தம்பி கந்தசாமி (37)
59. சீனியர் சிவநாதன் (18)
60. சிவகுரு சூரியமூர்த்தி (33)
61. சிவானந்தம் சுதாகரன் (19)
62. சிவநேசன் அழகேஸ்வரி (29)
63. சிவசுப்பிரமணியம் கம்சநந்தினி (21)
64. சுசிதரன் சூட்டி ( 29)
65. சரஸ்வதி (50)
66. சற்குணன் யோகராணி (41)
67. ராஜா சஜீபன் (03)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங்களையும்


JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Free Estimate!
Call today
$50 OFF
Broken Glass...?
We will fix it within 24 hour.
Let us help with...
● Replacement (Door & Windows)
● Custom Door & Windows
● Front Door & Patio Door
● Garden Door
● Door & Windows Re-Caulking (Important)
● Painting Doors & Windows
● Basement Separate Entrance Door
● Home Painting
● Spotlights installation
● California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com



# தொல்லியல் சுவடுகள்...

# இலங்கைத்தமிழர் வரலாறு மிக நீண்டது ஆரியர் வருகை என்பது அர்த்தமற்றது!

கலாநிதி கா. இந்திரபாலா அவர்கள் இலங்கையின் புகழ்பெற்ற தொல்லியல் ஆய்வாளரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசியரியருமாவார். இவர் 1968ஆம் ஆண்டு தனது கலாநிதிப் பட்டத்திற்காக எழுதிய ஆய்வுக் கட்டுரையில் 13ஆம் நூற்றாண்டிற்கு முன்பு தமிழர்களை இலங்கையில் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் இல்லை என நிறுவியிருந்தார். இவ் ஆய்வுக் கட்டுரை பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. அன்றிலிருந்து இன்றுவரை சிங்களப் பேரினவாதிகள், தமிழர்களை வந்தேறு குடிகளாகச் சித்தரிப்பதற்கு இவரது ஆய்வினை நன்கு பயன்படுத்தினார்கள். மறுபக்கத்தில் தமிழரசுக்கட்சியினர், சுதந்திரன் பத்திரிகை என்பன இந்திரபாலாவை தமிழனின் துரோகி என வர்ணித்தனர். 1968 ஆம் ஆண்டளவில் கிடைத்த தொல்லியல் சான்றாதாரங்களை விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்து பார்க்குமிடத்தில் கலாநிதி இந்திரபாலா அவர்கள் மேற்படி முடிவை எடுத்தது தவிக்க முடியாததாக இருந்ததை உணரக் கூடியதாக உள்ளது. அதன் பின்பே, கந்தரோடை, ஆனைக் கோட்டை, நாகர்கோவில், பொம்பரிப்பு, பெரியபுளியங்குளம் போன்ற பல இடங்களில் புதைபொருள் ஆய்வு செய்தபோது பூநகரி, முத்தையன்கட்டு ஆகிய இடங்களில் மேலாய்வு செய்த போதும் கிடைத்த சான்றாதாரங்கள் இலங்கைத்தீவின் ஆதிக் குடிகள் தமிழர்கள் என்பதை நிரூபித்தன. அத்துட்ன விஜயனின் வருகை என்பது கட்டுக்கதையானது. இதன் பின்பு கலாநிதி கா. இந்திரபாலா அவர்கள் எழுதிய பல கட்டுரைகளில் வரலாற்று உண்மையைப் பிரதிபலித்தார். தற்போது கலாநிதி கா. இந்திரபாலா அவர்கள் தனது 1968ஆம் ஆண்டு லண்டன் பல்கலைக் கழகத்திற்குச் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரையை இனி மேல் யாரும் பயன்படுத்தாவண்ணம் தடை செய்துள்ளார். மேலும் கலாநிதி கா. இந்திரபாலா அவர்கள் “இலங்கையின் திராவிடக் கட்டடக்கலை” என்ற நூலின் திருத்திய இரண்டாம் பதிப்பிற்கு கடந்த வருடம் அவர் எழுதிய முன்னுரையில் இலங்கையின் பூர்வீகக் குடிமக்கள் யார் என்ற சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார்.

இதனையே உண்மையானதும் இறுதியானதுமாகக் கருதலாம். இம் முன்னுரையில் அவர் “சிங்கள மக்களின் உருவாக்கத்திற்கு தமிழர் உட்பட பல இனங்கள் பங்களிப்பு செய்துள்ளன” என்றும் “சிங்கள மொழியின் உருவாக்கத்திற்கு தமிழும் பிற திராவிட மொழிகளும் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்துள்ளன” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் “ஆரியர் வருகை அவர்கள் குடியேற்றம் சிங்கள மக்கள் வருகை அவர்கள் குடியேற்றம் என்ற கருத்துக்கள் அர்த்தமற்றவையாகின்றன” என்று மேலும் அவர் கூறுகிறார். அவர் எழுதிய முன்னுரையின் சில பகுதிகளை கீழே தருகிறோம்.



திராவிடப் பாரம்பரியத்தைச் சித்தரிக்கும் வாஹல்கடகல தூண்கள் கி.பி. 2ஆம் நூற்றாண்டு




மோகினித் தெய்வச் சிற்பம் கி.பி. 3ஆம் நூற்றாண்டு

இலங்கைத் தமிழர் வரலாறு, வேறு வெளிநாட்டுத் தமிழர் வரலாற்றிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றது என்பதை தமிழ் நாட்டார் பலர் அறிந்திலர். மலேஷியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் வாழும் தமிழரைப் போன்றே இலங்கைத் தமிழரும் அண்மைக் காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சியின்போது சென்று குடியேறியவர்கள் என்று பலர் கருதுவர். ஆனால் இலங்கைத் தமிழர் வரலாறு ஒரு மிக நீண்ட கால வரலாறாகும்.

இலங்கைத் தமிழருக்கும் (குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழருக்கும்) தமிழ்நாட்டுத் தமிழருக்கும் இடையில் மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்கள், உணவு ஆகியவற்றை பொறுத்து பல வேறுபாடுகள் இன்று இருப்பதற்குக் காரணம் இலங்கைத் தமிழர் நீண்டகாலமாகத் தமிழ்நாட்டுத் தமிழருடன் பொதுத் தொடர்புகள் இல்லாது பிரிந்து வாழ்ந்து வந்தமை ஆகும். காலத்துக்குக் காலம் தமிழ்நாட்டின் பண்பாட்டு செல்வாக்கு இலங்கையிலும் பரவித் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தாலும், இரு பிரதேசத்துத் தமிழ்ப் பொதுமக்களும் நெருங்கிய தொடர்பில்லாது அண்மைக்காலம் வரை வாழ்ந்து வந்தனர்.

கி.மு. மூன்றாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் இலங்கையில்



# சோழர்காலப் பொலனறுவைச் சிவனாலயம்

வாழ்ந்த மக்கள்பற்றி அறிவதற்கு நமக்குக் கிடைக்கும் கல்வெட்டுக்களை ஆராய்ந்தால், பௌத்தம் முக்கியமாக பரவத் தொடங்கியபோது பல சிற்றரசுகளும் அரசு நிலையடையாத ஆதிக்குழுக்களும் (Fribes) அந்நாட்டில் பரவலாக இருந்த நிலையை அறியலாம். பல இனங்கள் நாட்டில் பரந்து காணப்பட்டன என்பதையும் உணரலாம். இந்த இனங்களிடையே பலமொழிகள், பல்வேறு மத நம்பிக்கைகள், பண்பாடுகள் ஆகியவை நிலவின எனலாம்.

கல்வெட்டுக்களிலும் பௌத்த நூல்களிலும் இந்த இனங்கள் சிலவற்றின் பெயர்கள் பேணப்பட்டுள்ளன. இவற்றுள் நாகர், கபோஜர் (காம்போஜர்) பரதர் போன்ற பெயர்கள் குறிப்பிடத்தக்கவை. இத்தகைய பல இனங்களுள் திராவிட மொழிகளைப் பேசும் இனங்களும் இருந்தன என்பதற்கும் சான்றுகள் கிடைத்துள்ளன. கல்வெட்டுக்களிலும் பௌத்த நூல்களிலும் தமிழர் (பிராகிருதக் கல்வெட்டில் தமெடப் பாளி மொழிப் பௌத்த நூல்களில் தமிழ்) குறிப்பிடப்படுவதுடன் கல்வெட்டுக்களில் திராவிட மொழிகளைச் சார்ந்த சொற்களாகிய “மருமகன்” (மருமகன), “பெருமகள்” (பருமக). “பெருமகன்” (பருமகளு) போன்ற சொற்கள் காணப்படுகின்றன.

அக்காலகட்டத்தில் சைவம், சமணம், பௌத்தம் வேறும் இயற்கை வழிபாடு ஆகியவை இலங்கையில் வாழ்ந்த மக்களுடைய மதங்களாகக் காணப்பட்டன. “சிவ” என்ற சிறப்புப் பெயர் மேற்கூறிய மூலாதாரங்களில் காணப்படுகின்றது. சில சிற்றரசர்கள்கூட “சிவ” என்ற பெயரைப் பெற்றிருந்தனர். இத்தகைய ஒரு சூழ்நிலையிலேதான் பௌத்தம் மேலோங்கிய மதமாகப் பரவி பல இனங்களை உள்ளடக்கி அவற்றுக்கு ஒரு பொது உயர்நிலை மொழியாகப் பௌத்த பிராகிருத மொழியைப் பயன்படுத்தி, இந்திய அரச மரபுகளைப் புகுத்தி, இலங்கை மக்களுடைய அரசியல் வளர்ச்சிக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் வழி வகுத்தது. இதன் விளைவாகப் பல இனங்களில் கலப்பு துரிதப்படுத்தப்பட்டது. பல மொழிகள் பிரகிருதமொழியால் இணைக்கப்பட்டு ஒரு புது மொழியாக சிங்கள மொழி உருவாகியது. அதனைப் பேசிய மக்களும் சிங்கள மக்களாக உருவாகினர். சிங்கள மக்களின் உருவாக்கத்துக்குத் தமிழர் உட்படப் பல இனங்கள் பங்களிப்பு செய்தன. தமிழர் பங்களிப்பு அன்று மட்டுமல்லாது தொடர்ச்சியாகத் தற்காலம் வரை ஏற்பட்டு வந்துள்ளது. அதேபோலச் சிங்கள மொழியின் உருவாக்கத்திற்குத் தமிழும் பிற திராவிட மொழிகளும் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்துள்ளன என்பதை மொழியிலாளர் ஒப்புக் கொள்வர்.

இத்தகைய பின்னணியில் இலங்கை வரலாற்றை நோக்கினால் ஆரியர் வருவை, அவர்கள் குடியேற்றம், சிங்கள மக்கள் வருகை அவர்கள் குடியேற்றம் என்ற கருத்துக்கள் அர்த்தமற்றவை ஆகின்றன.

வரலாறு தொடங்கிய காலத்திலிருந்து இலங்கையில் அரசியல், சமயம், மொழி, கலைகள் போன்ற பல்வேறு துறைகளில் தமிழர் பங்களிப்பு இடம்பெற்றுள்ளது. இவற்றுள் ஒரு முக்கியமான துறை கட்டடக்கலையாகும். பொதுப்படத் தென்னிந்தியாவிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் வளர்ந்த கட்டடக்கலையின் செல்வாக்கு கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பின்பாக, அதாவது பல்லவப் பேரரசின் காலத்திலிருந்து, இலங்கையில் பரவத் தொடங்கியது. (அதற்கு முன்பரவிய செல்வாக்குப் பற்றி அறியக் கூடியவகையில் தமிழ்நாட்டில் பழைய கட்டடங்கள் பேணப் படவில்லை) படிப்படியாக இச்செல்வாக்கு கூடிக்கொண்டேபோய், பதினாறாம் நூற்றாண்டின் பின், அதாவது இலங்கையில் நூற்றாண்டின் பின், அதாவது இலங்கையில் கண்டி மன்னர் காலம் எனப்படும் காலப்பகுதியில், மேலோங்கி வளர்ந்து ஒரு வகையில் தற்காலத்திலும் நிலைத்து நிற்கின்றது எனலாம். கண்டி மன்னர் காலத்தில் தென்னிந்தியக் கட்டடப் பாணியாகிய விஜயநகரநாயக்கர் கட்டடப்பாணி வளர்க்கப் பட்டது. தற்காலத்திலும் அதன் சாயலையுடைய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இலங்கை பிரித்தானியர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற பின்னர், அதாவது இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கண்டி, யாழ்ப்பாணம், அநுராதபுரம் ஆகிய இடங்களிலே கட்டப்பட்ட புதிய புகையிரத் நிலையங்கள், அரச அலுவலகங்கள் ஆகியவையும், கொழும்பில் அமைக்கப்பட்ட சுதந்திர மண்டபமும் திராவிடர் கட்டடக் கலைப்பாணியிலமைந்த தூண்களையும் பிற அம்சங்களையும் உடையனவாய்க் காணப்படுகின்றன.

முற்காலத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் வளர்ந்த கட்டடக்கலைக்கு நூலாக அமைந்த சிற்பஸாஸ்த்திரங்களிலே திராவிடக் கட்டட முறை மூன்று வகைப்பட்ட கட்டட முறைகளுள் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இந் நூல்களிலே திராவிடக் கட்டடமுறை என்பது பொதுவாகத் தென்னிந்தியாவில் வளர்ந்த கட்டடமுறையையே குறிக்கும். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே பிரெஞ்சு நூற்றாண்டின் ஆரம்பத்திலே பிரெஞ்சு ஆராய்ச்சியாளராகிய ஷோவோ துப்றெய் (Jouveaa Lubreull) என்பவர் தமிழ்நாட்டில் வளர்த்த பழைய கட்டடக்கலையை ஆராய்ந்து நூல்கள் எழுதியபோது “திராவிடக் கட்டடக் கலை” (Dravidian Architecture) என்ற பெயரைத் தமிழ் நாட்டில் பல்லவர் காலத்தில் இருந்து வளர்ந்து விஜயநகரக் காலத்தில் கன்னடப் பிரதேசங்களிலும் பரவிய தமிழ்க்கட்டடக் கலையை குறிப்பதற்குப் பயன்படுத்தினார். இவருக்குப்பின் எழுதிய பல ஆராய்ச்சியாளர் இப்பொருளிலேதான் திராவிடக் கட்டடக்கலை என்பதை பயன்படுத்தியுள்ளனர். கிரேவ்லி (Gravely) போன்ற ஒரு சிலர் தமிழ்க்கட்டடக்கலை (Thamilian Architecture) என்ற பெயரை திராவிடக் கட்டடக்கலை என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தியுள்ளனர்.

நன்றி: எரிமலை செப்டம்பர் 2000




**விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.**

**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு**
**437.345.4203**

# குருந்தூர் மலை தொடக்கம் கஜேந்திரகுமாரின் வீடுவரை!

செப்டம்பர் 03, 2023

**இலங்கைதீவின் சமகால பௌத்த அரசியல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஜனநாயக உள்ளடக்கம் இல்லை. அது தனது அரசியல் அபிலாசைகளை ஜனநாயகத்தின் மொழியில் வெளிப்படுத்துவதும் இல்லை. அதுவும் பிரச்சினையின் ஒரு பகுதிதான் – பேராசிரியர் ஜெயதேவ உயாங்கொட**

கடந்த வாரக் கட்டுரையில் கூறப்பட்டது போலவே கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானோடு பிக்குகள் மோதத் தொடங்கி விட்டார்கள்.

அது சட்டவிரோதம். தொல்லியல் திணைக்களம் குருந்தூர் மலையில் நீதிமன்றத்தின் ஆணையை மதித்து நடக்கவில்லை. மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரையிலும் கிட்டத்தட்ட ஓராண்டுக்கு முன் பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையை அமுல்படுத்த முடியவில்லை. செந்தில் தொண்டமான் கிழக்கின் ஆளுனராக நியமிக்கப்பட்டதும் அவ்வாறு சட்டவிரோதமாக முன்னெடுக்கப்படுகின்ற காணி அபகரிப்பு நடவடிக்கைகளை நிறுத்த முற்பட்டார்.

திருக்கோணமலையில் சற்று உயரமாக, குன்றுகளாகக் காணப்படும் எல்லா இடங்களிலும் விகாரைகளைக் கட்டுவது என்று ஒரு பகுதி தேரர்கள் முடிவெடுத்து விட்டார்கள் போலத் தெரிகிறது.

விகாரை உள்ளது. அங்கு மேலும் நிலத்தைப் பிடிக்கும் நடவடிக்கைகளை மக்கள் எதிர்க்கிறார்கள்.

திருக்கோணமலை, குச்சவெளி ஆகிய இரண்டு பிரதேச செயலர் பிரிவுகளினதும் எல்லையில் உள்ள ஆறாங்கட்டை அல்லது பெரியகுளம் என்ற இடத்தில் திருகோணமலை - நிலாவெளி வீதியில் ஒரு விகாரையைக் கட்ட முயற்சிக்கப்படுகிறது. கிழக்குப் பல்கலைக்கழக வளாகம் அதற்கருகே காணப்படுகிறது. பிரதேச சபை அதற்கு அனுமதி வழங்கவில்லை. எனினும் வழிபாட்டிடங்களைக் கட்டுவதற்கு பிரதேச சபையின் அனுமதி தேவையில்லை என்று பிக்குகள் நேற்று வெள்ளிக்கு கிழமை ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஒழுங்குபடுத்திக் கூறியுள்ளார்கள்.



திருகோணாமலை கச்சேரியில் நடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்குள் அத்துமீறிப் புகுந்த பிக்குகள் அடங்கிய குழுவை யாராலும் தடுக்க முடியவில்லை. அங்கே போலீஸ் இருந்தது. அரச உயர் அதிகாரிகள் இருந்தார்கள். அங்கிருந்த சிங்கள உயர் அதிகாரிகள் பிக்குகளைக் கண்டதும் எழுந்து நிற்கிறார்கள். சிறு தொகுதி தமிழ் அதிகாரிகள் எழுந்து நிற்கவில்லை. ஆளுநரும் எழுந்து நிற்கிறார். அவருடைய உதவியாளர் யாருக்கும் கைபேசியில் அழைப்பை எடுக்கிறார். ஆனால் யாராலும் அந்த இடத்திலிருந்து பிக்குக்களை அகற்ற முடியவில்லை. ஊடகவியலாளர்கள் சம்பவத்தை நேரலையாக ஒளிபரப்புகிறார்கள். அந்த இடத்தில் பிக்குவுக்கு பதிலாக வேறு யாராவது இருந்திருந்தால் சட்டப்படி கைது செய்திருப்பார்கள். ஆனால் இலங்கைத்தீவின் தேரவாத பிக்குகள் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள்.

பிக்குகள் மட்டுமல்ல, சிங்கள பௌத்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள்தான். நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி சரத் வீரசேகர இரண்டாவது தடவையாக முல்லைத்தீவு நீதிபதியை இழிவான வார்த்தைகளில் அவமதித்திருக்கிறார். நாடாளுமன்ற சிறப்புரிமை எனப்படுவது நீதிபதியை நீதிமன்றத்தை அவமதிப்பதற்கான ஒரு கவசமா? சரத் வீரசேகர அதை ஒரு கவசமாகத்தான் பயப்படுத்துகிறார். பிக்குகளும் சரத் வீரசேகரங்களும் சட்டத்தைக் கையில் எடுக்கிறார்கள். நீதிமன்றங்களை அவமதிக்கின்றார்கள்.

தையிட்டியில் விகாரை கட்டப்பட்டிருப்பது தனியார் காணியில்.

ஏற்கனவே கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் ஒரு விகாரை கட்டப்பட்டு விட்டது. வெருகலில், கல்லடியில், மலைநீதியம்மன் மலையில் 2006இல் ஒரு விகாரை கட்டப்பட்டு விட்டது. அந்த மலையில் முன்பு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தகவற் தொடர்புக் கட்டுமானம் ஒன்று இருந்தது. அதில் இப்பொழுது

அடுத்தது, புல்மோட்டைப் பகுதியில் முஸ்லிம்கள் செறிவாக வாழும் அரிசி மலைப் பகுதி. அங்குள்ள கடற்கரையில் காணப்படும் குறுணிக் கற்கள் அரிசி போல அழகாய் இருப்பதால் அப்பகுதிக்கு அப்படி ஒரு பெயர். அங்கேயும் ஒரு விகாரையைக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன.







அடுத்தது குச்சவெளியில். குச்சவெளி போலீஸ் நிலையத்திற்கு எதிராக ஒரு சிறிய குன்று. அங்கே ஒரு விகாரை ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டு விட்டது.

அடுத்தது, தென்னை மரவாடியில் உள்ள சிறிய மலை. அது யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமத்துக்கு யாத்திரைக்கு வரும் யாத்திரிகர்கள் இளைப்பாறும் ஒரு மலையடிவாரம். அதனால் அது கந்தசாமி மலை என்று அழைக்கப்படுகிறது. அங்கேயும் ஒரு விகாரையைக் கட்ட ஏற்பாடுகள் நடப்பதாகத் தகவல்.

தென்னை மரவாடிச் சந்தியில், முல்லைத் தீவுக்கு திரும்புமிடத்திலும் மூதூரில் மூன்றாங் கட்டைப் பகுதியிலும் விகாரைகளைக் கட்டுவதற்கு ஏற்பாடுகள் நடப்பதாக அப்பகுதி மக்கள் கூறுகிறார்கள்.

இவ்வாறு தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் செறிவாக வாழும் பிரதேசங்களில் குறிப்பாகப் பெரியகுளம் பகுதியில் விகாரை அமைக்கப்படுவதை செந்தில் தொண்டமான் தடுக்க முற்பட்டார். அதனால் திருகோணமலை கச்சேரியில் நடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைக் குழப்புவதற்கு, கச்சேரிக்கு முன்பாக பிக்குகள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். முடிவில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்குள் புகுந்து கூட்டத்தை குழப்பியிருக்கிறார்கள்.

செந்தில் தொண்டமான் மத்திய அரசின் அதிகாரங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு மாகாண ஆளுநர். ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள், மாகாண சபையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சரை விடவும் ஆளுநருக்கே அதிகாரம் அதிகம். தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாத ஆளுநர் பதவிக்கு ஒரு தமிழரை நியமித்ததன் மூலம் அவர் தீர்வைத் தரப்போகிறார் என்ற ஒரு தோற்றம் முதலில் கட்டியெழுப்பப்பட்டது. செந்தில் தொண்டைமானின் நியமனத்தின் பின்னணியில் இந்தியாவைத் திருப்திப்படுத்தும் நிகழ்ச்சிநிரல் உண்டு. ஆனால் பிக்குகள் ஆளுநரோடு மோதத் தொடங்கி விட்டார்கள்.

அண்மை மாதங்களாக சிங்கள பௌத்த மயமாக்கல் மற்றும் நிலப்பறிப்பு நடவடிக்கைகளில் பௌத்த மதகுருக்கள் முன்னிலையில் நிற்கிறார்கள். குருந்தூர் மலை தொடக்கம் கஜேந்திரகுமாரின் வீடு வரை பிக்குக்களே காணப்படுகிறார்கள். அது தற்செயலான ஒன்றாகத் தெரியவில்லை. திணைக்களங்களும் அரசபடைகளும் பொலிசும் வெளிப்படையாகச் செய்யமுடியாத விடயங்களுக்கு பிக்குக்கள் முன்னிறுத்தப்படுகிறார்களா? சிங்கள மக்கள் மத்தியில் பிக்குகளுக்கு மதிப்பு உண்டு. அவர்கள் சன்னியாசிகளாகப் பார்க்கப்படுகின்றார்கள். அதனால்தான் மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரையில் பல்சமயக் குழுவினரை முற்றுகையிட்டு வைத்திருந்த பிக்குவை அங்கு வந்த போலீஸ் அதிகாரி முதலில் காலில் விழுந்து வணங்கினார். அப்படித்தான் திருக்கோணமலைக் கச்சேரிக்குள் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தைக் குழப்பிய பிக்குக்கள் மாநாட்டு மண்டபத்துக்குள் நுழைந்ததும் பெரும்பாலானவர்கள் எழுந்து நிற்கிறார்கள். அவர்கள் சன்னியாசிகள் என்பதனால் அந்த மதிப்பு. அந்த மதிப்பை ஒரு கவசமாகப் பயன்படுத்தி ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் அவர்கள் முன்நிறுத்தப்படுகிறார்கள்.



அதாவது ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே சில ஆண்டுகளுக்கு முன் வாக்களித்தபடி ஆயிரம் விகாரைகளைக் கட்டி முடித்துவிட வேண்டும் என்று முடிவெடுத்து விட்டாரா? அடுத்த ஆண்டு முடிவதற்கிடையில் அவர் ஜனாதிபதித் தேர்தலை நடாத்த வேண்டும். அதற்கிடையே நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்த முடியுமோ தெரியவில்லை. சஜித்தின் தலைமை பலவீனமாக இருப்பது ரணிலுக்கு ஒரு வரப்பிரசாதம். எனினும் சஜித் ஏனைய கட்சிகளோடு ஒரு பெருங்கூட்டை உருவாக்கினால் அது ஒப்பீட்டளவில் சவாலாக மாறும்.

இம்முறை தமிழ் வாக்குகள் தனக்குக் கொத்தாக விழப்போவதில்லை என்று ரணிலுக்கு தெரிகிறது. ராஜபக்சகளின்



அனுசரணையோடு அவர் தேர்தலில் போட்டியிட்டால் தமிழ் வாக்குகளை முழுமையாகப் பெறமுடியாது. எனவே தமிழ் வாக்குகளுக்காக தமிழ் உணர்வுகளோடு சமரசம் செய்வதை விடவும் சிங்கள பௌத்த வாக்குகளை கவர்வதே அவருக்கு உடனடிக்கு இலகுவான வழி.

மேலும் அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதம் ஐநா மனித உரிமைகள் கூட்டத்தொடரின்போது ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய அறிக்கையோடு ஒரு புதிய தீர்மானம் நிறைவேற்றப்படலாம். தீர்மானம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் தொடர்ச்சியாக அமையுமா அல்லது புதியதாக அமையுமா என்று பார்க்கவேண்டும். முன்னைய தீர்மானத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவலகத்தின் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாகவும் அத்த தீர்மானத்தில் முடிவெடுக்கப்படக்கூடும். எனவே அக்காலகட்டம் இலங்கையில் சிங்கள பௌத்த உணர்வுகளை அதிகம் தூண்டக்கூடிய ஒரு காலகட்டமாக அமையும். அதைத்தொடர்ந்து ஜனாதிபதி தேர்தல் வரும். அதில் ராஜபக்சகளின் அனுசரணையோடு ரணில் களமிறங்குவாராக இருந்தால் அவர் ஐநா தீர்மானத்தின் விளைவாகத் தூண்டி விடப்பட்ட சிங்கள பௌத்த உணர்வுகளுக்கு தலைமை தாங்கி எப்படி அடுத்த ஜனாதிபதியாக வரலாம் என்றுதான் சிந்திப்பார்.

அதனால் இப்பொழுது நடக்கும் சிங்கள பௌத்த மயமாக்கல் மற்றும் நிலப்பறிப்பு நடவடிக்கைகள் மேலும் முடுக்கி விடப்படக்கூடிய அரசியற் சூழலே வளர்ச்சியடைந்து வருகிறது. இதில் சரத் வீரசேகர, உதய கமன்பில், விமல் வீர வன்ச, மேர்வின் டி சில்வா போன்றவர்கள் எழுப்பும் இனவாத அலையின் விளைவுகளையும் ரணில் தனக்குச் சாதகமாக அறுவடை செய்து கொள்வார். எனவே கூட்டிக்கழித்துப் பார்த்தால் அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள பௌத்த வாக்குகளைக் கவரத் தேவையான தனது தகைமையை எப்படி அதிகப்படுத்துவது என்றுதான் ரணில் சிந்திப்பார். அதாவது தமிழ் மக்களுக்கு எதிராக சிங்களபௌத்த மயமாக்கலையும் நிலப்பறிப்பையும் அவர் நிறுத்தக்கூடிய வாய்ப்புகள் மிகக்குறைவு.

அண்மையில் தமிழ் கட்சித் தலைவர்கள் சிலரைச் சந்தித்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் குருந்தூர் மலை தொடர்பாக அமெரிக்கா உற்றுக் கவனிப்பதாகக் கூறியதாக ஒரு செய்தி வெளிவந்தது. அதில் அவர் இந்துத் தீவிரவாத அமைப்புகளின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் விசாரித்திருக்கிறார். தமிழ் ஊடகங்களில் கூறப்படுவது போல அவர் வெளிப்படையாக ஆர்.எஸ்.எஸ் போன்ற அமைப்புகளைக் குறித்து எதுவும் பேசவில்லையாம். மேலும் அவர் உரையாடலின் போக்கில் குருந்தூர் மலை பற்றிச் சொல்லியிருக்கிறாரே தவிர, அதை அமெரிக்கத் தூதரகத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாடாக ருவிற்றரில் பதிவிட்டிருக்கவில்லை என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது.

மேற்கு நாடுகள், ஐநா போன்றன சிங்கள பௌத்த மயமாக்கலைக் குறித்து வெளிப்படையாக உத்தியோகபூர்வமாக எதையும் தெரிவித்திராத ஒரு சூழலில், பிக்குக்கள் அதைச் செய்யும்போது அதைத் தடுக்காமல் விடுவது ரணிலைப் பொறுத்தவரை தற்காப்பானது. அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அவருடைய வெற்றி வாய்ப்புக்களைப் பாதுகாப்பது.

நன்றி: நிலாந்தன்


AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


DEBT
SOLUTIONS
GTA INC.
CREDIT CARD &
DEBT SOLUTIONS
வங்கிக் கடன்களில்
80% வரையிலான
கழிவு
Reduce your
debts upto
80%
கடன் அட்டைகளினது தொல்லையா? வங்கிக்கடன் தொல்லையா? சம்பளத்தில் பறிமுதலா?
CREDIT CARD PROBLEMS, BANK LOAN PROBLEMS, WAGE GARNISHEE PROBLEMS
உங்கள் வங்கிக் கடன்களை திருப்பிச் செலுத்துவது சதவீதத்தில்
(PERCENTAGE) தீர்மானிக்கப்படமாட்டாது.
கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், கடன் தொடர்பான சட்டப் பிரச்சனை.
COLLECTION COMPANIES PHONING AT WORK OR HOME, LAWSUITS
உங்கள் வருமானம் (INCOME), செலவு (EXPENSES), என்பவற்றை வைத்து
உங்கள் கடன்களில் (DEBTS) சிறிய மாதாந்தத்தொகையை மட்டும் செலுத்தும்
முறை மூலம் உங்கள் மொத்தக் கடன்களில் (TOTAL DEBTS) இருந்து
விடுதலை பெறலாம்.
உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்.
We will protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIG,
Life Insurance, Stocks, Bonds & Shares)
DSC DEBT SOLUTION CANADA
Head Office Location:
10 Milner Business Court, Suite 300
Scarborough ON M1B 3C8
(One Block North of 401 on Markham)
2 Robert Speck Parkway, Suite 750
Mississauga ON, L4Z 1H8
2 Country Court Blvd, Suite 400
Brampton ON, L6W 3W8
Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Federal Government Registered & Certified (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation
Tel: 647-274-2832
www.debtsolutioncanada.ca

# சனல் நாலு யாருக்கு நன்மை செய்கின்றது?




09.09.2023

சனல் நாலு மீண்டும் ஒரு வீடியோவை வெளியிட்டிருக்கிறது. முன்னைய வீடியோவைப் போலவே, இதுவும் ஜெனீவா கூட்டத் தொடரை முன்னிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் கூறப்பட்ட தகவல்கள் உண்மையாக இருந்தால், இலங்கைத் தீவின் அரச கட்டமைப்பும் அதன் உபகரணங்களும் எந்தளவுக்கு நம்பகத் தன்மையற்றவை என்பதனை அது வெளிப்படுத்தியிருக்கிறது. அசாத் மௌலானா அந்த வீடியோவின் இறுதிப் பகுதியில் கூறுகிறார்… “அதிகாரத்துக்காக தமது சொந்த மக்களையே கொன்றிருக்கிறார்கள்” என்று.

அசாத் மௌலானா பிள்ளையானின் உதவியாளராக இருந் தவர். அவருடைய தகப்பன் ஈ.பி.ஆர்.எல்எப். இயக்கத்தில் இருந் தவர். சொந்தப் பெயர் மிகிலார். இயக்கப் பெயர் கமலன். தமிழகத்தில் அந்த இயக்கத்தின் தலைவர் பத்மநாபா கொல்லப் பட்டபோது அவரோடு கொல்லப்பட்டவர். அசாத் மௌலானா சனல் நாலு வீடியோவில், பிள்ளையானுக்கும் இலங்கை படைப் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளருக்கும் எதிராகச் சாட்சிய மளித்துள்ளார்.

இதுதொடர்பில் அனைத்துலக விசாரணை தேவை என்று ஏற் கனவே கர்தினால் மல்கம் ரஞ்சித் கூறி வருகிறார். முஸ்லிம் களும் அவ்வாறான கோரிக்கையை ஏற்கனவே முன்வைத்து விட்டார்கள். இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அக் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றார். அதாவது இலங் கைத்தீவின் மூன்று இனங்களும் வெவ்வேறு காரணங்களுக் காக அனைத்துலக விசாரணையைக் கேட்கின்றன. இலங் கைத்தீவின் உள்நாட்டு நீதி பரிபாலனக் கட்டமைப்பு; புலனாய்வுக் கட்டமைப்பு; ஆட்சிமுறைமை என்பவற்றின் தோல்வியை இது காட்டுகிறது?

ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவதற்காக எந்தக் கொடிய செய லையும் செய்யலாம்; யாரையும் கருவியாகப் பயன்படுத்தலாம் என்று ஒரு மனப்பாங்கு எங்கிருந்து தோன்றியது? அதுவும் தேரவாத பௌத்த பண்பாட்டுக்குள் அது எங்கிருந்து தோன் றியது? இனமுரண்பாட்டின் நேரடி விளைவு அது. ஒரு இனத்தை அழிப்பதன் மூலம் அல்லது இனப்பகையைத் தூண் டுவதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்றலாம் என்ற சிங்கள பௌத்த அரசுப் பாரம்பரியத்தின் தொடர் விளைவுகளில் ஒன்று தான் அது. முஸ்லிம்களுக்கு எதிராக சிங்கள பௌத்த உணர் வுகளைத் தூண்டி தனிச்சிங்கள பௌத்த வாக்குகளைத் திரட்டலாம் என்று நம்பியமை.

அந்த நம்பிக்கை பொய்க்கவில்லை. சிங்கள மக்கள் அந்தக் குடும்பத்துக்கு 2019இல் மூன்றில் இரண்டு பெரும்பான் மையை வழங்கினார்கள். ஆனால் அதே சிங்கள மக்கள் அந்தக் குடும்பத்தை ஓட ஓட விரட்டினார்கள். கடந்த ஆண்டு அந்தக் குடும்பம் ராணுவ முகாம்களிலும் வெளிநாடுகளிலும் ஒளிக்க வேண்டியிருந்தது. ஆனால் இந்த ஆண்டு அவர்கள் ஒப்பீட்டளவில் தற்காப்பு நிலைக்கு வந்து விட்டார்கள். லிபரல் முகமூடி அணிந்த ரணில் விக்ரமசிங்கவின் மறைவில் அவர்கள் படிப்படியாகத் தற்காப்பு நிலையில் இருந்து தாக்கும் நிலைக்கு முன்னேறத் தொடங்கிவிட்டார்கள். சனல் நாலு தொடர்பாக நாடாளுமன்றத்தில் ராஜபக்சகளின் கட்சிக்காரர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதிலிருந்து அதைத் தொகுத்துப் பார்க்கலாம்.

இவ்வாறு ராஜபக்சக்கள் தற்காப்பு நிலையில் இருந்து தாக்கும் நிலைக்கு முன்னேறுவதைத் தடுக்க வேண்டும் என்று மேற்கு நாடுகளும் விரும்பும் பன்னாட்டு நாணய நிதியமும் விரும்பும். அந்த விருப்பத்தை சனல் நாலு வீடியோ ஓரளவுக்கு நிறை வேற்றுமா? அந்த வீடியோவின் உடனடி விளைவாக ராஜபக்சக் களின் கீர்த்தி உலக அளவில் மேலும் கெடும். ராஜபக்சக்களின் அந்தஸ்து உலக அளவில் ஏற்கனவே கெட்டுப் போய்விட்டது. இப்பொழுது இந்த வீடியோ அதை மேலும் கெடுக்கும். ஆனால் அது அதன் எதிர்மறை விளைவாக உள்நாட்டில் அவர்களுக்கு ஆதரவைக் கூட்டக்கூடும். புலம்பெயர்ந்த புலிகள் அமைப் புகளும் வெள்ளைக்கார நாடுகளும் சேர்ந்து யுத்த வெற்றியை அபகரிக்கும் நோக்கத்தோடு உருவாக்கியதே அந்த வீடியோ என்று சொன்னால் அது சிங்கள பௌத்த கூட்டு உளவியலில் ஏதோ ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும்.

மேலும், அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதம் நடக்கவிருக்கும் ஐநா கூட்டத் தொடரும் சிங்கள மக்கள் மத்தியில் மேற்குக்கு எதி ரான உணர்வுகளை அதிகப்படுத்தும். செப்டம்பர் மாதத்திற்கு பின்னர்தான் ஜனாதிபதித் தேர்தல் வரும். எனவே தேர்தலில் மேற்கு நாடுகளுக்கும் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளுக்கும் எதிரான உணர்வலைகள் வாக்களிப்பில் தாக்கம் செலுத்தும். இப்படிப் பார்த்தால் சனல் நாலு வெளியுலகில் ராஜபக்சக்களின் அந்தஸ்தை குறைத்திருக்கின்றது. அதேசமயம் உள்நாட்டில் அவர்களுக்கு அனுதாபத்தைப் பெருக்கக்கூடும்.



ஆனாலும் ராஜபக்சக்கள் அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் தேர்தலில் போட்டியிடும் மனோநிலையில் இல்லை என்றே தெரிகிறது. அவர்களுக்குத் தங்களை எப்படித் தற்காத்துக் கொள் வது என்று தெரியும். உலக அளவில் தங்களுடைய அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளும் வரை அவர்களுக்கு ஒரு பதிலி தேவை. ரணில் விக்கிரமசிங்க அதற்கு மிகப் பொருத்தமானவர். அவருக் குப் பின் பதுங்குவதன்மூலம் ராஜபக்சக்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தம்மை மேலும் ஸ்திரப்படுத்திக் கொள்ளலாம். தென்னிலங்கையில் தன்னெழுச்சிப் போராட்டங்கள் தோற் கடிக்கப்பட்டு, கிட்டத்தட்ட ஓராண்டு காலத்துக்குள், ராஜபக்ச குடும்பம் பதுங்கும் நிலையிலிருந்து தற்காப்பு நிலைக்கு முன்னேறியிருப்பது அதைத்தான் காட்டுகின்றது. எனவே தம்மை முழுமையாக பலப்படுத்திக் கொள்ளும்வரை அவர்கள் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் குதிப்பார்களா என்பது சந் தேகமே.

அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் ஜனாதிபதித் தேர்தலைக் குறித்து இடைக்கிடை வீறாப்பாகக் கருத்துக்களைத் தெரிவித்து வந்தாலும், ராஜபக்சக்கள் வெளிப்படையாக வாய் திறப்பதில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அக் குடும்பத்தின் அடுத்த வாரிசாகக் கருதப்படும் நாமல் ராஜபக்ஸ தன்னை பலப்படுத்திக் கொள்ளும் வரையிலும் அவர்கள் பொறுத்திருப்பார்கள். எனவே அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க அவர்களுடைய பதிலியாக முன்னிறுத்தப்படும் வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. ராஜபக் சக்கள் ரணிலுக்கு இடைஞ்சலாக மேலெழுவதைத் தடுக்க சனல் நாலு வீடியோ உதவக் கூடும்.

இதில் ஒரு வினோதமான அரசியல் சமன்பாடு உண்டு. அதன் படி ராஜபக்சங்களுக்கு எதிரானது ரணிலுக்குச் சாதகமானது. ஆனால் அடுத்த ஆண்டு ராஜபக்சகளின் பதிலியாகத்தான் ரணில் களமிறங்கக்கூடும். ஆயின், அதில் அவருக்குக் கிடைக்க க்கூடிய வெற்றி யாருடைய வெற்றியாக இருக்கும்? அது அவ ருடைய சொந்த வெற்றியா அல்லது ராஜபக்சக்களின் வெற்றியா?

எதுவாயினும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்சக்கள் களமிறங்குவதை குறிப்பிடத்தக்க அளவுக்கு அந்த வீடியோ தடுக்கக்கூடும். அதே சமயம் அந்த வீடியோ தமிழ் அரசியலில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும்?

உடனடிக்கு அது கிழக்கில் பிள்ளையானுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். எனினும், அங்கேயும்கூட பிள்ளையானுக்கு ஒரு சாதகமான இடம் உண்டு. ஒரு முஸ்லிம் அவரைக் காட்டி கொடுத்து விட்டார் என்பதைத் தமிழ் முஸ்லிம் உறவுகளைப் பாதிக்கும் விதத்தில் உருப்பெருக்கினால், அது கிழக்கில் முஸ்லிம்களுக்கு எதிரான தமிழ் உணர்வுகளுக்குத் தலைமை தாங்கத் தேவையான பிள்ளையானின் தகைமை யை மேலும் அதிகப்படுத்தக்கூடும். சீயோன் தேவாலயத்தில் கொத்தாகக் கொல்லப்பட்ட குழந்தைகளுக்கு யார் பொறுப்பேற் பார்கள்?

இது உள்நாட்டளவில். அதேசமயம் அனைத்துலக அளவில் நீதிக்காகப் போராடும் தமிழ் அமைப்புகளுக்கு அந்த வீடியோ சாதகமானது. தமிழ் மக்களால் ஏற்கனவே குற்றஞ் சாட்டப்படும் ஒரு குடும்பத்தை அந்த வீடியோ மேலும் அனைத்துலக அள வில் அம்பலப்படுத்தியிருக்கிறது. இலங்கைத்தீவின் அரசுக் கட் டமைப்பை அது அபகீர்த்திக்கு உள்ளாக்கியிருக்கிறது. ஏற் கனவே அமெரிக்கக் கண்டம் ராஜபக்சங்களுக்கு ஆபத்தான ஒரு கண்டமாக மாறி விட்டது. அக்கண்டத்தில் உள்ள இரண்டு பெரிய நாடுகளான அமெரிக்காவும் கனடாவும் ராஜபக்சக் களுக்கு எதிராக நிர்ணயகரமான சில நகர்வுகளை முன்னெடுத் திருக்கின்றன. குறிப்பாக கனடா இரண்டு மூத்த ராஜபக்சங் களுக்கு எதிராகத் தடை விதித்திருக்கிறது. அவ்வாறு தடை விதிக்கப்பட்ட அதே காலப்பகுதியில், கடந்த மார்ச் மாதம் அமெரிக்கா ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. போர்க் குற்றங் களால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் அச்சட்டத்தின் பிரகாரம் இரண்டு மூத்த ராஜபக்சகளுக்கும் அமெரிக்காவில் நெருக்கடியுண்டு. தவிர,அமெரிக்காவும் கனடாவும் சில ராணுவ அதிகாரிகளுக்கு பயணத் தடை விதித்திருக்கின்றன. குறிப்பாக, இலங்கைத் தீவின் ராணுவத் தளபதி மற்றும் முன் னாள் கடற்படைத் தளபதி ஆகியோருக்கு எதிராகத் தடைகள் உண்டு. இவற்றுடன் கனடா இனப்படுகொலை தொடர்பில் தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறது.

இவற்றுடன் கடந்த ஆண்டு ஐநா தீர்மானம் ஒன்றின் பிரகாரம் போர்க் குற்றங்கள் தொடர்பான சாட்சிகளையும் சான்றுகளை யும் சேகரிப்பதற்கான அலுவலகம் ஒன்று இயங்கி வருகின்றது. அதில் சேகரிக்கப்படும் சான்றுகளும் சாட்சியங்களும் என் றைக்கோ ஒருநாள் இலங்கைக்கு எதிராகப் பயன்படுத்தப்படக் கூடியவை.

மேற்கண்ட நகர்வுகள் யாவும் மேற்கத்தியப் பரப்பில் நிகழ்ந் தவை. இவற்றுடன் அண்மையில் இந்தியாவில், ராமேஸ் வரத்தில் வைத்து உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்த கருத்தையும் சேர்த்துக் கொள்ளலாம். இலங்கைத்தீவில் இடம் பெற்றது ஒரு பெரிய மனிதப் படுகொலை அல்லது இனப்படு கொலை என்ற பொருள்பட அவர் பேசியிருந்தார்.

இந்த வரிசையில் கடந்த வாரம் சனல் நாலு வீடியோவும் வெளி வந்திருக்கிறது. மேற்கண்ட அனைத்து விடயங்களும் நீதிக் கான போராட்டத்தில் தமிழ் மக்களுக்குப் பலம் சேர்ப்பவை. இலங்கைத்தீவின் அரசியல் கலாச்சாரம் பொறுப்பு கூறும் பண் புடையது அல்ல என்பதை தமிழ் மக்கள் உலக சமூகத்தின் முன் நிரூபிப்பதற்கு அவை உதவும்.

நன்றி: நிலாந்தன்

# நித்திய ஜீவிதன்



நெஞ்சுக்குள் உருவம் வரைந்து
இவனின் நினைவுக்குப்
பூச்சொரிந்தபடி
மீதமாய் எத்தனைபேருளோம்
இன்றும்.
இவன் கனவுக்கு நீருற்றி
பூக்குமெனும் நம்பிக்கையுடன்
எத்தனைபேர்?
காலக்காற்றின் சுழலில் அகப்பட்டு
திசைக்கொன்றாயினோம்.
நாட்களின் வேக நகர்வுக்கு
ஈடுகொடுக்க இயலாது
இன்று நேற்றயதை மறக்கும்
இயல்பாயிற்று.
ஆயினும் எஞ்சியது இவன்
நினைவொன்றேயென
உண்மையுரைப்போர் எத்தனைபேர்.
காலத்தின் கால்களில் எத்தனைவேகம்
எவர்தடுக்க இயலும்.
அது பாடிக்கொண்டு பறக்கின்றது.
இவனை இழந்தும் பதினைந்து
வருடமாயிற்று
இத்தனை நீட்சியுள்ளும் இவன்
வாழ்கின்றான்.
அடிக்கடி இவன்
உச்சரிக்கப்படுகிறான்.
முன்னுதாரணமாக
மொழியப்படுகிறான்.
ஆதிக்கச் சிலந்திகள் எம்மில்
வலைபின்னும்
ஒவ்வொரு தடவையும்
ஆதர்ச ஒளியாக இவனே
பிரகாசிக்கின்றான்.
வாழ்வின் இடையில் போனாலும்
ஜென்மத்தின் முழுமையும் இவன்
சாவிலிருந்து.
சாவு முடிவல்ல
அதன்பின்னே ஒருவனின் நித்திய
ஜீவிதம்
ஆரம்பமாகிறது.
திலீபன் ஜீவிக்கின்றான்.
காலத்தின் எல்லைகளைக் கடந்து
இவன் நாமம் கடத்தப்படுகிறது.
எம் மண்ணின் பூக்களில்
பாடும் குயில்களின் பாடலில்
நல்லூர் மணியொலியில்
ஊரெழுவின் செம்மண் புழுதியில்
விடுதலைக்குக் கிளர்ந்தெழும்
மனங்களில்
திலீபன் ஜீவிக்கின்றான்.

-புதுவை இரத்தினதுரை- 2022

# தடைகள் தகரும் தமிழீழம் மலரும்

## பாகம் 01 மற்றும் பாகம் 02




தடைகள் தகரும் தமிழீழம் மலரும் –பாகம் ஒன்று நூலானது, தமிழீழ நாட்டின் யாழ். மாவட்டத்திலுள்ள பலாலி சிறிலங்கா வான்படைத் தளம் மீது மேற்கொள்ளப்பட்ட கரும்புலித் தாக்குதல்கள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டன என்பதைனையும், தடைகள் தகரும் தமிழீழம் மலரும் – பாகம் இரண்டு நூலானது தமிழீழ நாட்டின் யாழ். மாவட்டத்திலுள்ள அளவெட்டிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கரும்புலித் தாக்குதலையும் இயம்பி நிற்கின்றன.

இத்தாக்குதல்களில் பங்குபற்றி மீண்டும் தளம் திரும்பி, நீண்ட நெடுங்காலமாகக் கரும்புலி அணியில் பயணித்த சி. செ. புலிக்குட்டி அவர்களால் இந்நூல்கள் எழுதப்பட்டன.

காலத்தின் தேவை கருதியும், தமிழீழப் போராட்ட வரலாறுகள் தலைமுறை தலைமுறையாகத் தமிழ் மக்களின் கைகளில் வாழ வேண்டும் என்பதற்காகவும் மிகக் கடினமான பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இந்நூல்கள் எம்மால் வெளியீடு செய்யப்படுகின்றன.

அண்மையில் பல நாடுகளில் இந்நூல்கள் வெளியீடு செய்யப்பட்டு இப்போது கனடா மண்ணிலும் வெளியாகியுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வீரம் செறிந்த வரலாறுகளையும், உயர் ஈகம் செறிந்த வரலாறுகளையும் தமிழ் மக்களாகிய நீங்கள் அனைவரும் படித்து அறிதல் வேண்டும். இந்நூல்களை நீங்கள் பெற்றுக்கொள்வதற்கு கீழே தரப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளவும், நூல்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

நன்றி
அன்புடன் நிர்வாகம்.

**பங்களிப்பு $30**

தொடர்புகொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரி

tttamileelammalarum@gmail.com




செங்கதிர்ப் பரிதிவட்டம் கிழக்கு வானில் மெல்ல மெல்ல மேலெழுந்து கொண்டிருந்தது. எம்மண்ணில் ஓடிய குருதி வெள்ளத்தை நினைவூட்டுவதாக அதன் செவ்வொளி தமிழீழ மண்ணில் செம்மை பரப்பிக் கொண்டிருந்தது. பறவை இனங்களின் விடியல் கீதம் முன்னரைப்போல் பூபாளம் இசைக்கவில்லை. முகாரியாய் மெல்ல ஒலித்தது சோர்வாகக் காற்று வீசியது. தூரத்தேயிருந்து அம்மன் ஆலயமணி துல்லியமாக ஒலித்தது.

“நல்லா விடிஞ்சுட்டுது” என்ற வண்ணம் இராசையா வாத்தியார் அவசர அவசரமாக எழுந்தார்.

மனைவி நாகம்மா ஒன்பதே மாதமுடைய பேரன் சீலனை அணைத்தபடி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். சீலன் வாயில் பால்ப் போச்சியொன்று இருந்தது. “ம்...” என்ற பச்சா தாபம் கலந்து பெருமூச்சுடன் தன்னை வாஞ்சையுடன் பற்றியிருந்த பேரனின் கையை மெதுவாக அகற்றி விட்டு பரபரப்பாக எழுந்தாள். இனி அவள் ஒரு தொழிற்சாலை இயந்திரம் தான்.

வாத்தியார் காலைக்கடன்களை முடித்துவிட்டுப் பூரண ஆசார சீலராக நெற்றியில் திருநீறு துலங்க திண்ணைக்கு வரும்போது அவரை முந்திக்கொண்டு தேனீர் திண்ணைக்கு வந்தது.

“போற இடத்துக்குப் பார்த்துப் போங்கோ?” என்று நாகம்மா அவரை எச்சரிக்கும் போது தெருநாய்கள் சேர்ந்து வித்தியாசமாகக் குலைத்தன. “ம்... வாறாங்கள் போலை” என்றவாறு வாத்தியார் ஒழுங்கையைப் பார்த்தார்.

வேலிக்கு மேலாகச் சட்டியைக் கவிழ்த்தாற்போல் இரும்புத் தொப்பியும் வேலிக்குக் கீழ் இடைவெளியால் கறுப்பும் பச்சையுமாகச் சப்பாத்துகள் வரிசையாகச் சென்றன.





“எப்பதான் இவங்கள் துலையப் போறாங்களோ?” என்று முணுமுணுத்தபடி வாத்தியார் முற்றத்தில் இறங்கினார். “நல்லாப் போனாங்கள் இவ்வளவு சுகம் கண்டவங்கள் போவாங்களோ?” என்றாள் நாகம்மா.

இராசையா வாத்தியார் மனைவியை ஒருமுறை வாஞ்சையுடன் பார்த்தார். காலம் அவள் உடலில் எழுதிய கோலங்களை விட அங்கு நடந்த அசம்பாவிதங்கள் சிந்தனையிட்ட ஓவியங்கள் அதிகம். மெலிந்த உருவம் வாத்தியாரை விட ஆறுவயது குறைவான போதிலும் வயது அதிகமானது போன்ற தோற்றம். முகத்தில் வைராக்கியத்தின் உறுதி. அத்துடன் எதையோ இழந்த சோகம். இழப்புகளையும் கொடுமைகளையும் அநுபவித்து வற்றிப்போன நெஞ்சங்கள்தான் இன்று அவர்களது சொத்தாகும்.

தேநீரை அருந்திவிட்டு வேகமாக ஒழுங்கையில் இறங்கி நடந்தார் வாத்தியார். எமது வீதிகளில் உறைந்து உலர்ந்த செங்குருதிகளின் வடுக்கள் பிணமாகி நிணம் வடியக் கிடந்த மனிதக்கோலங்கள் அவர் நினைவுகளில் படம் போட்டன.

அவர்களது நாட்டின் எல்லைப்புறத்தில் மனித நடமாட்டமில்லாப் பிரதேசங்களில் காய்ந்து காத்திருந்த வல்லரசின் வீரர்கள் இங்கே பொடியளின் தற்பாதுகாப்புப் போரில் தடுமாறியதும் மீறி முன்னேற முயன்று பரலோகம் பறந்ததும் அந்த வெம்பிரசாரத்தில் அப்பாவி மக்கள் மீது பலம் பொருந்திய இராணுவமொன்றின் மீது முழுப்பலம் பிரயோகித்து போரிடுவது போல் போர் தொடுத்து அழிந்து ஒழிந்ததும் என்றும் எம்மண்ணில் வரலாற்றுக் காவியம், மறையாத கல்வெட்டோவியம்.

வாத்தியார் வெகுவேகமாகத் தன் கால்களை எட்டி நடை போட்டார். தெருத்திருப்பத்தில் திரும்பியபோது... சிலயார் தூரத்தில் இந்திய இராணுவத்தின் அந்த முகாம் அவரது கண்ணில் பட்டது. சற்றும் வேகத்தைத் தணிக்காமல் அந்த முகாமை நோக்கி நடந்தார் வாத்தியார்.

வாசலில் நின்ற சென்றி அவரை மறித்துச் சோதனையிட்டான். தனது பாஷையில் ஏதோ கேட்க வாத்தியார் பாஷை விளங்காமல் தடுமாறினார்.

அவரது நிலைகண்டு தமிழ்ச்சிப்பாய் ஒருவனை அந்த இராணுசிப்பாய் அழைத்துச் சொல்ல அவன் மொழி பெயர்த்தான்.

“என்ன சார் வந்த வேலை”

“மேஜர் ஐயாவைப் பார்க்க வந்தனான்” வாத்தியார் கூறினார்.

“ஏர்லி மோனிங் வந்திட்டீங்க மேஜர் வெளியே வரக் கொஞ்சம் சுணங்கும் அந்த பெஞ்சிலே உட்காருங்க” என்று முற்றத்தில் கிடந்த வாங்கொன்றைக் காட்டினான் அவன்.

இராசையா வாத்தியார் ஒரு பெருமூச்சுடன் தனது சால்வையால் வாங்கைத் தட்டியபின் உட்கார்ந்தார் தன்னைச் சுற்றி ஒரு முறை பார்த்தார்.

முன்னர் அப்பிரதேச மக்களுக்குச் சேவை செய்த சன சமூக நிலையம் இன்று கொடியவர் கூடாரம். எங்குபார்த்தாலும் புரியாத கரடுமுரடான பாஷைகளும் அதற்கேற்ற உருவங்களும்.

“எல். ரி. ரி. ஈ.?” அருகில் வந்த இராணுவத்தினன் ஒருவன் அவரைப் பார்த்துக் கேலியாகக் கேட்ட கேள்வி அது.

அவனுக்கு எதுவுமே கூற விரும்பாமல் தலையைக் குனிந்தார் வாத்தியார்.

ஏன்...ஏன் இந்தநிலை? எதற்காக இப்படி அவனுக்கு தலை குனிய வேண்டும் அவரது மனம் வேதனைப்பட்டது.

“எனது மண்ணில் எனது உரிமை நாட்டில் நான் எதற்கு அந்நியனுக்கு அடங்கித் தலைகுனிய வேண்டும்” வேதனை தாளாமல் அதன் வெப்ப வியர்வையைத் தனது சால்வையால் ஒற்றிக் கொண்டார்.

அவர் மனதில் பழைய நினைவுகள் அலையலையாக திரைப்படம் போல் கிளம்பியது.

சுசீலா இராசையா வாத்தியார் மகள்.

தமிழ் மகளின் அடக்கம், அழகு, அறிவு சுதந்திரதாகம் கொண்ட ஒரு பூரணப் படுத்தப்பட்ட பெண். அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்துக் குரலெழுப்பத் துணிந்த புதுமைப் பெண்.

தமது ஒரே மகளுக்கு அவளின் தகுதிக்கேற்ப கணவனைத் தேர்ந்தெடுத்து மணமுடித்து வைத்தனர் பெற்றோர்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த அந்தக் குடும்ப வாழ்வின் இனிய சின்னமாக வந்துதித்தான் சீலன்.



சீலன்... மீசாலையில் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்த போராளியின் நினைவாகக் குழந்தைக்கு அவளிட்ட பெயர்.

"விடுதலை என்பது சுயநலமேடையிலும் சுகபோக மாடியிலும் பிறப்பதல்ல" என்ற கருத்தில் அசையாத நம்பிக்கை கொண்டவன் சுசீலாவின் கணவன் கணேசன்.

வாய்வீச்சு மேடைப்பேச்சுப் பேசும் சிலர் சொல்வது போல் "நாங்களும் இறங்கிடுவம் என்னசெய்வது குடும்பகாரர்" என்ற வாய்ப்பாட்டில் பூரண வெறுப்புக் கொண்ட தம்பதிகள் அவர்கள். சாடைமாடையாக இதையறிந்த வாத்தியார் ஒருநாள் "தம்பி, என்னென்னவோ விசயம் எல்லாம் கேள்விப்படுறன்" என்று ஆரம்பித்தார்.

"என்ன மாமா?" என்று கேட்டான் கணேசன்.

"இந்த இயக்கத்தோடை கொஞ்சம் பழகுறீங்கள் போலை" கணேசன் மௌனம் சாதித்தான்.

"நீங்கள் குடும்பக்காரன் ஒரு பிள்ளைக்குத் தகப்பனாகப் போறீங்கள் இந்த வடமராட்சியெல்லாம் பிடிச்சுப் போட்டாங்களாம் உந்தக் கரைச்சல் எல்லாம் வேண்டாம் பேசாமல் விட்டிடுங்கோ" என்றார் வாத்தியார்.

கணேசன் வாத்தியாரை தீர்க்கமாக ஏறிட்டுப் பார்த்தான்.

"மாமா சொல்லிறனெண்டு கோவியாதையுங்கோ இப்பிடிச் சாட்டுச் சொல்லி விலகினால் நாங்கள் எப்ப எங்கட மண்ணிலை மனிசராத் திரியிறது. இண்டைக்கு நான்படுகிற கஷ்டத்தை நாளைக்கு என்ரை மகன் படக்கூடாது தலைநிமிர்ந்து தன்ரை நாட்டிலை தன்மானத்தோடு வாழவேண்டும்"

இராசைய வாத்தியார் வியப்போடு மருமகனைப் பார்த்தார்.

கணேசன் தொடர்ந்தான்.

"மாமா எதிரியின் துவக்கும் மற்ற ஆயுதங்களும் எங்கட குடும்பக்காரரை விலத்திவிட்டு வெடிக்கிறதில்லை எல்லாரையும் தான் கொல்லுது. குண்டுபட்டு சும்மா சாகிறதைவிட விடுதலைப் போராட்டத்திலை என்ரை பங்களிப்பைச் செலுத்தி சாகிறதிலை நான் பெருமைப்படுவன். இந்தப் போராட்டத்தின் சுமை என்ரை பிள்ளையின்ரை தலையிலை ஏறாமல் இருக்கவேணுமெண்டால் நான் என்ரை இலட்சியத்திலை இருந்து இறங்காமலிருக்க வேணும்" ஒரு வேகத்தோடு சொல்லி முடித்த மருமகனை இப்போது ஒரு புதியகோணத்தில் பார்த்தார் வாத்தியார்.

அங்கு மருமகன் கணேசனில்லை தந்தைக்கு உபதேசித்த கந்தன் தான் அவர் கண்களுக்குத் தெரிந்தன். புதிய அர்த்தத்தைப் புரிந்து கொண்ட வாத்தியார் மெருமிதத்துடன் விடை பெற்றுக் கொண்டார்.

இந்தியத் தலையீடு... ஒப்பந்தம்... இந்திய இராணுவத்தின் வருகை... மக்கள் போராட்டம் எனக் காலம் வெகுவேகமாக உருண்டது. அது யாருக்காகவும் காத்திருக்கவில்லை.





இந்த நேரத்தில் தான் ஒரு தியாகியின் உண்ணாவிரதப் போராட்டம் தமிழீழ வரலாற்றின் புதிய அத்தியாயத்தை எழுதிய சாத்வீகப் போராட்டம் ஆரம்பமாகிறது.



தமிழீழமெங்கும் ஒரே புரட்சி அலை நீர்கூட அருந்தாமல் தனது இளமை மீட்கும் இனிய கீதங்களை மறந்து சுயநலம் துறந்து 40 இலட்சம் மக்களின் விடிவுக்காக நிரந்தர ஒளிக்காக ஒரு திலீபம் தன்னையே உருக்கிக் கொண்டிருந்தது. வேலியோரம் மதில் மறைவுகளில் யன்னலூடாக வேடிக்கை பார்த்த மக்களை வீதிக்கு இறங்கி விடிவு நோக்கி விடுதலைப் பாதையில் வீறு கொண்டு நடக்க வைத்த தியாகப் போராட்டம்...

எங்கும் வேகம், எதிலும் வேகம், எவரிலும் வேகம்...

அகிம்சையை காந்தியத்தை உலகுக்கு அறிமுகப்படுத்திய இந்திய நாட்டினது அரசிடம் நீதி வேண்டி மெழுகுவர்த்தி யொன்று எரிந்துருகிக் கொண்டிருந்தது.

காந்தியின் போராட்டத்துக்கு புதிய வடிவம் கொடுத்து மகாத்மாவுக்கே பாடம் சொன்னது அந்த தீபம்.

ஆயுதமின்றி இரத்தமின்றிப் போராடும் வடிவத்துக்கு ஆயுதமேந்தியப் போராடிய போராளி ஒருவன் புதிய பரிணாமத்தைக் கொண்டிருந்தான். காந்தியை மறந்த தேசம் அதை அலட்சியப் படுத்தியது. அவமானப் படுத்தியது. திலீபம் அணைந்தது.

நாற்பது இலட்சம் மக்களுக்காகத் தன்னைத் துறந்து தீபம் அணைந்தது.

எல்லோர் மனத்திலும் கொந்தளிப்பு.

புதிய வேகம்.

இந்திய அரசின் பாராமுகப் போக்கின் மீது ஆத்திரம் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த வேளையில்...




12 போராளிகளின் தியாக மரணம்.

மேலும் தமிழ் மக்களுக்கெதிராக யுத்தமொன்றை வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் மீதான தாக்குதல் நடத்தியதன் மூலம் பிரகடனப்படுத்தியது இந்திய அரசு.

அந்த அடக்கு முறைக்கெதிராக ஆயுதம் ஏந்திய மக்கள் சக்தி. அதிலே கணேசனும் ஒருவன். போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி அடக்கு முறைக்கெதிராக ஆவேசத்துடன போராடினான்.

இந்தியா தமிழீழ மண்ணை அநியாயமாக யுத்தம் மூலம் ஆக்கிரமித்துக் கொண்டது. தலைமறைவான போராளிகளில் கணேசனும் ஒருவன்.

ஒரு நாள்...

தன் மனைவியையும் குழந்தையையும் பார்க்க ஆவலோடு ஒளிந்து வந்திருந்தான் கணேசன்.

கண்ணீருடன் தன் கணவனுக்கு உணவு பரிமாறினாள் சுசீலா. அமுது கொண்டிருந்த குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருக்கும் போது துரோகி ஒருவனின் தகவலொன்றினால் கணேசனின் வீடு சுற்றி வளைக்கப்பட்டது. திடீரென உள்ளே நுழைந்த சிப்பாய்கள் பால் குடித்துக் கொண்டிருந்த குழந்தையைப் பறித்தெடுக்க கணேசன் ஆவேசம் கொண்டு அவர்கள் மேல் பாய அவர்களின் துப்பாக்கிகள் முழுங்க துப்பாக்கிக் குண்டுகளால் கணேசன் துளைக்கப்பட்டுப் பிணமாகச் சாய்ந்தான்.

சுசீலா கதறினாள்.

அவளின் அழகு அந்தப் பாதகர்களைக் கவர வெறியுடன் அவளை நெருங்கி கதறக் கதற.

வீரத்தாயின் கற்புமலர் காமுகர்களினால் குதறியெறியப்பட்டது. ஆயிற்று... கணேசனின் பிணத்துடன் சிப்பாய்கள் போய் விட்டனர். அயலவர் அங்கு சென்றபோது அந்தக் குழந்தை நடந்த விபரீதம் புரியாமல் மயங்கிக் கிடக்கும் தாயின் மிகுதிப் பாலைக் குடிக்கக் கத்தியது.

அயலவர்களால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சுசீலா, ஆபத்தான கட்டம் தாண்டி உணர்வு வந்து போது அழுதாள். அரற்றினாள், ஆனால்... சாவதற்கு மட்டும் அவள் நினைக்கவில்லை.

இந்த நிலைக்குக் காரண கர்த்தாக்களைப் பழிவாங்க வேண்டும். தியாகங்களுக்கும் இழப்புகளுக்கும் பரிகாரம் கோழைத்தனமான தற்கொலையல்ல. பூரணப்படுத்தப்பட்ட விடுதலை. அவள் திடசங்கற்பம் பூண்டாள்.

பூரண சுகமடைந்து வீட்டுக்கு வந்த சுசீலா போராளிகளின் செயற்பாட்டிற்குதவினாள் என்ற பெயரில் கைது செய்யப்பட்டாள். வாத்தியாரின் நினைவோட்டத்தை அறுத்தது ஒரு பெண்ணின் குரல்.

"இண்டைக்கு நைற் வரமாட்டன் சேர்"

திடுக்குற்று குரல் வந்த திசையை நோக்கினார் வாத்தியார்.

ஒரு பெண்... இந்த மண்ணிற்குச் சொந்தமானவள் வெளியே வந்து கொண்டிருந்தாள்.

"வை டார்லிங்?" என்று மேஜர் அவள் கன்னத்தைக் கிள்ளியபடி கேட்டான்.

"ருடே மை சிஸ்டரின்ட டோட்டருக்கு போர்த்டே நான் நிற்க வேண்டும் என்றாள் அந்தப் பெண்.

"பாய் பாய்" விடை பெற்றாள்.

எமது தமிழன் மானமும் கலாச்சாரமும் அங்கு விடைபெற்றுக் கொண்டிருந்தது.

வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டார் இராசையா வாத்தியார்.

"யெஸ், வட் டூயூ வோண்ட" என்றவாறு அவரருகில் வந்தான் மேஜர். சுசீலாவைப் பார்ப்பதற்கான அநுமதிப் பத்திரத்தை அவரிடம் காட்டினார். மேஜர் இன்னுமொரு சிப்பாயிடம் எதோ சொல்ல... அவன் அவரை அழைத்துக்கொண்டு போய் ஒரு அறைக்குள் அமரவைத்து விட்டுச் சென்றான். சிறிது நேரத்தில் சுசீலாவை அழைத்து வந்தார்கள்.

இருவரையும் அருகருகே விட்டுவிட்டு சிறிது தூரத்தில் துப்பாக்கியுடன் காவலிருந்தான் ஒரு சீக்கியச் சிப்பாய். அவன் வாயில் பீடியொன்று புகைந்து கொண்டிருந்தது.

சிறிது நேரம் இருவரும் வேறெங்கோ பார்த்தபடி பேசாமலிருந்தார்கள். இருவரின் மனத்துள்ளும் பாசத்தின் பிரிவின் துயரத்தின் மோதல்கள்.

"அப்பா" துயரத்தில் அடைத்த குரல்.

வாத்தியார் மெதுவாகத் தன் மகளின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார். அவர் கண்களின் வெளியே குதிக்கத் தயாராகக் கண்ணீர் நிறைந்திருந்தது.

"வீட்டிலை அம்மா, சீலன் சுகமே" சுசீலா கேட்டாள்.

"ம்... சுகமாத்தான் இருக்கினம்" சொன்னவர் சிறிது நேரம் மௌனத்தின் பின் மீண்டும் தொடர்ந்தார்.

"எண்டாலும் நீயில்லாமல் உன்ரை பிள்ளை..." மேலே பேச முடியாமல் குரல் தழுதழுத்தது.

சுசீலாவின் அடித் தொண்டையிலிருந்து விசும்பல் ஒன்று வெடித்து அழுகையாகப் பரிணமிக்க அது வாத்தியாரையும் தொற்றிக் கொண்டது. இருவரும் சிறிது நேரம் அழுதனர்.

"அப்பா, என்னைப் பற்றிக் கவலைப்படாதையுங்கோ" சீலனைக் கவலைப்படாமல் உறுதியாக வளருங்கோ. நான் எப்ப வெளியாலை வாறனோ தெரியேல்லை. இண்டைய நிலையை நினைச்சு நினைச்சு நான் கவலைப்படேல்லை. எங்கட இலட்சியப் பாதையிலை இதெல்லாம் சர்வசாதாரணம். என்னைப் போல எத்தனையோ சகோதரிகள் இங்கை இருக்கினம். எங்கட இலட்சியம் நிறைவேற நாங்கள் உறுதியா இருக்கிறம். அடுத்த தலைமுறைக்கு போராட்டம் கைமாறக் கூடாது எண்ட நிலையும் உறுதியும் குலையேல்லை. எண்டாலும்... சீலனை உறுதியாய் வளருங்கோ. ஏனெண்டால் சிலவேளை அவன் இன்னொரு திலீபனாவோ மில்லராவோ மாறவேண்டி வரலாம். அதுக்கு இப்பவே அவனைத் தயாராக்குங்கோ. இதுதான் நீங்கள் எனக்குச் செய்ய வேண்டிய உதவி" அவள் குரல் தழுதழுத்தாலும் இலட்சியத்தின் வேட்கை அதில் தொனித்தது.

வாத்தியார் அவளது கையை இறுகப் பிடித்து உறுதியளிக்கும் போது பீடியுடன் உறவாடிய அந்தச் சீக்கியன் நேரமாகி விட்டது என்று அழைத்துப்போக வாத்தியார் சிறிது நேரம் அவள் போவதையே பார்த்து விட்டு திரும்பி வெளியே வந்தார்.

மேஜருடன் குலாவிய அந்தப் பெண்...

கொண்ட இலட்சியத்தில் தளராத சுசீலா...

ஓ... இன்னும் தமிழன் தன்மானமும் காலாச்சாரமும் பண்பாடும் விடை பெறவில்லை. சிறைக்குள்ளும் வேட்கையோடு வளர்ந்து கொண்டுதானிருக்கிறது.

வெளியே வாத்தியார் வந்தபோது வீதியின் இருமருங்கிலும் இராணுவச் சிப்பாய்கள் தொலைத்த ஏதோ பொருளைத் தேடுவதுபோல் அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களைத் தாண்டியதும் வாத்தியார் ஒருமுறை நின்று திரும்பிப் பார்த்தார்.


"ஓ... அந்நியர்களே உங்கள் காலடிகள் இந்த மண்ணை விட்டு ஓடும் நாள் வெகு தூரத்தில்லை. அதனால் இப்போது நடந்து போங்கள்" மனதுள் சொல்லியபடி தன் வீடு நோக்கி நடந்தார் உறுதியோடு.

இப்போது மழைமேகம் வானில் திரண்டு கொண்டிருப்பதால் வெயிலின்றி மந்தாரமாய் இருக்கின்றது. விரைவில் அவை கலைந்து மீண்டும் சூரிய ஒளி பூமியை ஆக்கிரமிக்கத்தான் போகிறது.

- திலீபம்

உலக வணிகம் ULAGA VANIKAM

# 2024



# LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY




## உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

**தொடர்புகளுக்கு 437.345.4203**

# திலீபனின் தாகம்



தமிழீழத் தாகத்தால் தண்ணீரும் குடியாமல்
ஊன் இன்றி உடலும் சோர்ந்து
பட்டினி கிடந்து பத்தியம் காத்து
எம்மை பைத்தியம் ஆக்கி விட்டு
பறந்து விட்டாயே அண்ணா
பரமனடி சேர்ந்து விட்டாய்.

அண்ணலே நீ சென்று பல்லாண்டு சென்றாலும்
அன்று நீ சொன்ன அரசியல் விளக்கங்கள்
எம் காதுகளில் கேட்குதையா
"மக்கள் போராட்டம் தொடரட்டும்
புரட்சி வெடிக்கட்டும் புதுயுகம் மலரட்டும்
மக்களே வழித்தெழுங்கள் தமிழீழம் காண்போம்" என்றாய்.

உன்னினத்தின் இடர் கண்டு இளவயதில் போர்சென்றாய்
ஓலமிடும் உன்னித்தின் ஓயாத துயரத்தில்
சொல்லில் அடங்காதாம் நீ பட்ட துயரங்கள்
புத்தனையும் காந்தியையும் சிந்திக்க வைத்தவனே
வித்தகனே உன்வீரம் வீணாகிப் போகாது விடி விளக்காய்
விண்ணில் நீயிருந்து உன் தோழருடன் காண்பாய் தமிழீழம்.

முப்பத்தாறு வருடங்கள் சென்றதண்ணா நீ சென்று
சத்தியமாய் சொல்கின்றோம் உன்னெண்ணம்
நிச்சயமாய் நிறைவேறும் சத்தியத்தின் புத்திரனே
உன்னை சாகடித்தவர்கள் சாக்கடைகள் பித்தர்கள்
நீயோ – காந்தியையும் வென்று விட்ட தமிழ்த்தாயின்
தவப்புதல்வன் தாகம் தீருமண்ணா உன் தமிழ்த் தாகம்.

ராஜீவ்காந்தி நீயொரு மைனஸ் காந்தி
பாரதத் தாயின் துகிலை உரிந்தாய் – எம்
பார்த்தீபனின் உயிரைக் குடித்தாய்
அண்ணல் காந்தியை அடித்து உதைத்தாய்
சாத்வீகத்தை சாகடித்தாய் பச்சைக் கருத்தைப்
பறித்து விட்டாயே உனக்குத்தானா நோபல் பரிசு.

நஞ்சு தின்று செத்தாலும் நாவரண்டு மாண்டாலும்
ஈழத்து வேங்கைகளோ மண்டியிட மாட்டாது
சாத்வீக போராட்டம் தெரியுமென்று எங்களுக்கு
காட்டி விட்டுப் போனாரே திலீபணண்ணா
காவியமும் படைத்து விட்டார் கதையெழுத வைத்து விட்டார்
மருத்துவராய் படிப்பவர்க்கு தன்னுடலை அளிக்கச் சொன்னார்.

கற்பூரம் கண்களைப் பொத்திக் கொண்டது
மெழுகுவர்த்தியோ மௌனமானது
சந்தணக்கட்டை சரிந்து வீழ்ந்தது
சாம்பிராணியும் உன் சரித்திரம் சொல்லுது
இமயம் உன்னை நிமிர்ந்து பார்க்குது
பாரதம் உன்னிடம் பாடம் படிக்குது.

நல்லை மண் உன்னை மண்டியிட்டு வணங்குதையா
வல்லை வெளி உனை நினைத்து வாய் விட்டு கதறுதையா
உன் ஊராம் ஊரெழுவும் உயிர் விடப் பார்க்குதையா
கண்கள் எல்லாம் நீர் நிறைந்து குளமாகி நிற்குதையா
கட்டாயம் உன் தமிழ்த்  தாகம் தீருமையா
முற்றாக நாம் தமிழீழம் காண்போமையா.

# 2009 யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இராணுவ துணைக்குழுக்கள் புலிகளோடு புலிகளாக ஊடுருவியிருந்தார்கள்!

08.09.2023



விக்கிலீக்ஸ் தகவல்களின் படி 2009 யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் புலிகளது பகுதியில் இராணுவ துணைக்குழுக்கள் புலிகளோடு புலிகளாக ஊடுருவியிருந்தார்கள் என்பதனை மகிந்தராஜபக்சவே ஒப்புக்கொண்டிருந்தார். 08.09.2023 நாடாளுமன்ற உரை கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

அடுத்த நாடாளுமன்ற அமர்விலே ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பான விவாதம் நடைபெற இருக்கிறது. எனினும் துரதிஸ்டவசமாக நானும் எனது சக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கஜேந்திரனும் அவ்விவாதத்தின் போது இங்கு பிரசன்னமாகி இருக்க முடியாத காரணத்தினால் அது குறித்தானதும் சனல் 4 தொலைக்காட்சி ஆவணம் குறித்தானதுமான எனது கருத்துகளை இன்று இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

அந்த சனல் 4 காணொலியில் சொல்லப்பட்ட விடயங்கள், வடகிழக்கு மக்களுக்கு குறிப்பாக தமிழர்களுக்கு ஒன்றும் வியப்பானதல்ல, அது பழகிப்போன விடயங்கள் தான்.

மக்கள் எழுச்சிக்கு எதிரான நடவடிக்கைகளை (Counter Insurgency) அரசாங்கம் எவ்வாறு கொண்டு செல்கின்றது என்பது குறித்து போர் நடந்த கால்பகுதியில் நாம் பலதடவை வெளிப்படுத்தி இருக்கிறோம். குறிப்பாக நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த 2001-2010 வரையான காலப்பகுதியில், சிறீலங்கா அரசும் இராணுவமும் எவ்வாறு இதை மேற்கொண்டார்கள் என்பதை பலதடவைகள் நாம் சுட்டிகாட்டி இருந்தோம், துரதிஸ்டவசமாக நாம் சொல்வதை செவிமடுப்பதற்கு அப்போது யாரும் இருந்திருக்கவில்லை .

இன்று அவைக்கு தலைமை தாங்கும் நீங்கள், ஒரு கல்வியலாளர் எனும் அடிப்படையில் நான் சொல்வதைகருத்தில் எடுப்பீர்கள் என நம்புகிறேன்., யுத்தமாக இருக்கட்டும், எதிர்புரட்சி நடவடிக்கைகளாக இருக்கட்டும், அங்கு முதலில் பலியிடப்படுவது 'உண்மை' தான்.

இந்த இடத்தில் நான் ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் பற்றி கூற விரும்புகிறேன். இந்த ஈஸ்டர் தாக்குதலை அதன் உண்மையான பின்புலத்துடனேயே நாம் பார்க்க வேண்டும். வெளிவந்திருக்கும் தகவலகளின் அடிப்படையில் இரு விடயங்கள் நடந்திருக்கலாம் எனும் முடிவுக்கு நாங்கள் வரலாம்.

ஒன்றில், தமக்கு தேர்தல் மூலமாகவோ அல்லது வேறுவிதமாக கிடைக்கும் அனுகூலங்களுக்காக அரசாங்க்மே பின்னணியில் இருந்து இந்த ஒரு குரூர தாக்குதலை நடத்தியிருந்திருக்கலாம். அல்லது, இப்படியான ஒரு தாக்குதல் சில தீவிரவாத குழுக்களினால் நடாத்தப்படப்போகின்றது என்பதை தெளிவாக அறிந்து கொண்ட அப்போதைய அரசாங்கம், தமது இராணுவபுலனாய்வு கட்டமைப்பின் தொடர்புகளின் ஊடாக, ஏதோ ஒரு வழியில், அவர்கள் எவ்வாறு அந்த தாக்குதலை மேற்கொள்ள வேண்டும் என்பதை வழிநடத்தியிருந்தார்கள்.

இப்படியான ஒரு பாரிய அழிவுடனான குண்டுத்தாக்குதல் நடைபெற இருப்பதை அறிந்து அதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதை விடுத்து, அந்த தாக்குதல் எப்படி நடைபெறவேண்டும் எனும் நடவடிக்கையை அரசே முன்னெடுத்திருக்கலாம்.

சிறீலங்காவின் பாதுகாப்புத்துறை இப்படியாக அம்பலப்பட்டு நிற்பது இது ஒன்றும் முதல் தடவையல்ல. விக்கிலீக்ஸ் ஆவணங்களில் அமெரிக்க தூதரகத்தின் அதிகாரி ஒருவர் , மகிந்த ராஜபக்ஸ கூறியதாக அமெரிக்க இராஜாங்க திணைக்கள் செயலருக்கு 2009.05.05 அன்று அனுப்பிய தகவல்களில் படி:-

'வன்னி யுத்தகாலங்களில் மக்கள் வாழும் இடங்களிற்கு சிறீலங்கா அரச படையினர் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொள்ளாது, ஏனெனில் சிறீலங்கா இராணுவத்தை சேர்ந்த ஆழ ஊடுருவும் படையின் தமிழ் பேசும் முகவர்கள், தமிழ் மக்கள் வாழ்ந்துவந்த பாதுகாப்பு வலயத்தினுள், தமிழ் பேசும் அரச முகவர்கள் வன்னி மக்களுடன் மக்களாக கலந்து நின்று புலிகளின் காப்பரணை உடைத்து வெளியேறும் வகையில் அவர்களை ஒழுங்குபடுத்தல்களை செய்து வருவதாக" அபோதைய ஜனாதிபது மகிந்த ராஜபக்ஸ தெரிவித்திருந்தார்.

இந்த விடயத்தில் நான் கூறவருவது என்னவெனில்:-

இப்படியான வகையில் தமிழ் பேசும் இராணுவ துணைக்குழுக்கள் தமிழர் வாழும் பிரதேசத்துக்குள் ஊடுருவ விடப்பட்டு, அவர்கள் விடுதலைப் புலிகளோடு, வேறுபிரித்தறிய முடியாதவாறு, இயங்கிவந்திருக்கிறார்கள் என்பதை ராஜபக்ஸ அவர்களே அமெரிக்க தூதரகத்துக்கு கூறியிருக்கிறார் என்பதை தான் நான் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

06.10.2020 அன்று ரணில் விக்கிரமசிங்க ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் வழங்கும் போது, சிறீலங்கா இராணுவ புலனாய்வு பிரிவானது தமிழ்பேசும் மக்களை இணையவிடாது தமிழர்களாகவும் முஸ்லிம்களாகவும் தனித்து பிரித்துவைத்திருப்பதற்கே எப்போதும் முனைப்புக்காட்டியது என தெரிவித்திருந்தார்.

(இவை 07.10.22 பத்திரிகைகளில் அறிக்கையிடப்பட்டிருந்தன.)

தமிழர்களிற்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பிளவுகளை ஏற்படுத்துவற்கும் அதன் மூலம் முஸ்லிம்களை தனியானதொரு இனத்துவ அடையாளத்தை கோரவைப்பதற்குமாக கடுமையான பிரயத்தனம் செய்திருந்தனர்.

இதன்மூலம், தமிழ் பேசும் மக்களிற்கான அடையாளத்தை வலியுறுத்தி தன் அரசியல் பயணத்தை தமிழரசு கட்சி மூலம் மேற்கொண்டிருந்த முன்னாள் அமைச்சர் கௌரவ அஸ்ரப் அவர்கள் போன்றவர்களை கூட அதில் இருந்து விலகி, தனியானதொரு அடையாளத்தை கோரவைத்தது.

இவையெல்லாம் எதை வெளிப்படுத்துகிறது எனில், யுத்தத்தின் தன்மையும் அதை எவ்வாறு இராணுவம் கொண்டு நடத்தியது என்பதும் மிக மிக இரகசியமானதும் ஆழமானதுமான விடயங்களை கொண்டிருந்தது என்பதையும் அதனால், அதன் உள்ளிருந்து கூட ஒருபோதும் உண்மைகளை கண்டறியமுடியாது என்பதைத் தான் வெளிப்படுத்தி நிற்கிறது.

ஈஸ்டர் தாக்குதல்களை பொறுத்தவரை, ஒரு குறித்த கட்சிமீது இங்கு குற்றம் சுமத்தப்படுகிறது. ஆனால், இந்த இலங்கைத் தீவை இரு துருவங்களாக பிளந்த இனப்பிரச்சினை என வரும போது, இந்தநாட்டின இனத்துவ பரிமாணங்களின் அடிப்படையில் இந்த நாட்டின் ஆட்சியை எப்போதும் தன்னகத்தே வைத்திருக்கபோவது சிங்கள பெரும்ன்பான்மையினரே என்பதால், இந்த நாட்டின் அரச கட்டமைப்பு இனத்துவ ரீதியில் எப்போதும் பாரபட்சமானதாகவே இருக்கிறது .

ஆதலால், இந்நிலையில் உண்மைகள் வெளிக்கொணரப்படவேண்டுமெனில் இங்கு ஒரு சர்வதேச விசாரணையாலேயே அது முடியும். ஈஸ்டர் குண்டுதாக்குதலின் உண்மைகளை கண்டறிவதற்கு ஒரு சர்வதேச விசாரணை வேண்டும் என நீங்கள் கூறுகின்றீர்கள். நான் இங்கு இருக்கும் உறுப்பினர்களை பார்த்து கேட்கிறேன்.

உங்களுக்கு மனச்சாட்சி என ஒன்று இருக்குமானால், உண்மைகள் வெளிக்கொண்டுவரப்படவேண்டும் என நீங்கள கருதுவது உண்மையாக இருந்தால், ஏன், நாங்கள் எப்போதும் இலக்கு வைக்கப்படுபவர்களாக, பாதிக்கப்படுபவர்களாக இருக்கிறோம்? தமிழர்கள் ஏன் அப்படி உணர்கிறார்கள்? என நீங்கள் உண்மையிலேயே கண்டறிய விரும்பினால் - தமிழர்கள் ஏன் இங்கு துருவமயப்பட்டு நிற்கிறார்கள்? என்பதை கண்டறிய விரும்பின், எது தேவை? என நீங்களே யோசித்து கொள்ளுங்கள்.

உண்மைகளை கண்டறியாமல் இவற்றை அடைய முடியுமா? என்பதையும் உண்மைகளை கண்டறியாமல், இந்த நாட்டில் தமிழர்களுக்கு ஒரு எதிர்காலம் இருக்கின்றது என நீங்கள் எவ்வாறு அவர்களுக்கு நம்பிக்கையைகொடுக்க முடியும்? என்பதையும் நீங்களே உங்கள் மனச்சாட்சியிடம் கேட்டுக்கொள்ளுங்கள்.

இந்த உண்மைகளை கண்டறிவதற்கு இங்கு இப்போது இருக்கின்ற ஒரே வழி, சர்வதேச விசாரணையொன்றுதான். உண்மைகளை கண்டறிவதில் இருந்து, சரவ்தேச விசாரணைகளில் இருந்து ஏன் நீங்கள ஒளித்து ஓடமுனைகிறீர்கள்? என்பதை புரிந்துகொள்ளவே முடியவில்லை .

இங்கே இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சரத்போன்சேகா, ஈஸ்டர் தாக்குதலுக்கு ஒரு சரவ்தேசவிசாரண்னையை தனது நேற்றைய உரையில் கோரியிருந்ததாக செய்திகளில் படித்திருந்தேன். அந்த கோரிக்கையை நான் வரவேற்கிறேன்..

ஆனால் அதே சரவ்தேச விசாராணை, இங்கு நடந்த யுத்தம் குறித்தும் நடைபெற வேண்டும். இங்கே ஆளும் தரப்பிலும் சரி எம்மோடு இங்கு எதிர்த்தரப்பில் இருப்பவர்களும் சரி, எமது அமைப்பை விடுதலைப்புலிகளுக்கு சார்பான ஒரு அமைப்பாக செயற்படுவதாக குற்றம் சுமத்துவார்கள்.

அதேநேரம் விடுதலைப் புலிகள் யுத்தக்குற்றம் இழைத்ததாகவும் குற்றம் சுமத்துவார்கள். அப்படி நீங்கள் கூறுகிறபடி நாங்கள் விடுதலைப் புலிகளுக்கு சார்பானவர்களாக இருப்பின், நீங்கள் கூறுகிறபடி விடுதலைப் புலிகள் யுத்தக் குற்றம் இழைத்தவர்கள் எனில், நாங்களே கேட்கிறோம், ஒரு சரவ்தேச விசாரானையை கொண்டுவாருங்கள் என.

அதில் விடுதலைப்புலிகள் விசாரிக்கப்படுவார்கள் என்பதற்காக நாம் சர்வதேச விசாராணைக் கோரிக்கையில் இருந்து ஓடி ஒளியவில்லையே. உண்மைகளை கண்டறிவற்கான ஒரு சர்வதேச விசாரணை குறித்து நாம் பயந்து ஓடவில்லை எனில், ஏன் நீங்கள மட்டும் அதுகுறித்து பயந்து ஓடுகிறீகள்?

ஒளித்து மறைக்கவேண்டிய உண்மைகள் உங்களிடத்தில் இல்லாதவிடத்து நீங்கள சர்வதேச விசாரணைகுறித்து ஓடி ஒளிய தேவையேயில்லை.

நான் மீண்டும் மீண்டும் உங்களிடம் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இந்த நாடு சகலவிதத்திலும் அடிமட்டத்தை அடைந்திருக்கிறது.

இதிலிருந்து மீண்டு இனியாவது, ஒரு புதிய தொடக்கத்தை நாம் செய்யவேண்டுமாக இருந்தால், அனைவரும் அறியும் வகையில் உண்மைகள் வெளிக்கொண்டுவரப்பட்டு, அவை மீள நிகழாமை உறுதிப்படுத்தப்படவேண்டும் . அப்போதுதான் இந்த நாடு எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கெல்லாம் நீடித்து நிலைக்க கூடிய நேர்மையான் ஒரு தீர்வு, உருவாகும்



# யாழ்ப்பாணக் கோட்டை காலக் கண்ணோட்டம்!

## யாழ். கோட்டை அமைப்பு

1625ஆம் ஆண்டு பெப்ரவரி பிலிப் தே ஒலிவேறா என்ற போர்த் துக்கேயத் தளபதி நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை அடி அத்தி வாரத்தோடு கிளறி அக்கோயிலின் கற்குவைகளைப் பயன் படுத்தி யாழ்ப்பாணக் கோட்டையைக் கட்டி முடித்தான்.

1629ஆம் ஆண்டு சிங்களப்படைகள் இக்கோட்டையை 13 நாட் களுக்கு முற்றுகையிட்டனர். இம் முற்றுகை தோல்வி கண்டது. இதுவே கோட்டையில் முதல் முற்றுகையாகும்.

1658ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ஆம் திகதியில் இருந்து யூன் மாதம் 21ஆம் திகதிவரை ஒல்லாந்தர் போர்த்துக்கேயர் வச மிருந்து கோட்டையை முற்றுகையிட்டனர். இந்த 107 நாள் முற்றுகையின் பின் போர்த்துக்கேயர் சரணடைந்தனர். இது கோட்டையின் இரண்டாவது முற்றுகை.

1695ஆம் ஆண்டு ஒல்லாந்தரினால் யாழ்ப்பாணக் கோட்டை புதுப்பித்துக் கட்டப்பட்டது. ஒல்லாந்தரால் தென் கிழக்காசியாவில் கட்டப்பட்ட கோட்டைகளில் பெரியதும் பலமானதும் யாழ். கோட்டையாகும்.

1795 செப்டம்பர் 23, இக் கோட்டை ஆங்கிலேயர் வசமாகி திருத்தி அமைக்கப்பட்டது.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் இக் கோட்டையில் ஒரு பகுதி சிறைக்கூடமாக விளங்கியது. மறுபகுதியில் உயரதி காரிகள் தங்கும் இடமாக உபயோகிக்கப்பட்டது.

## காலக் கண்ணோட்டம்

1971 மார்ச் 14, றோகண விஜய வீர என்ற (ஜே.வி.பி) புரட் சியாளர் இங்கு சிறை வைக்கப்பட்டார். 1971 ஏப்ரல் 05ஆம் திகதி நள்ளிரவு 11:30 மணிக்கு றோகண விஜயவீர கோட்டைச் சிறையை உடைத்து தப்பியோட எடுத்த முயற்சி தோல்வி கண்டது.

1977 இல் யாழ்ப்பாணத்தில் போராட்டங்கள் நிகழத் தொடங் கின. பாதுகாப்புப் படையினரும் பொலிஸ் பிரிவு உயரதி காரிகளும் கோட்டையைத் தமது வதிவிடமாகக் கொள்ளத் தொடங்கினர். ஈழப் போராட்டத்தில் ஆரம்ப கர்த்தாக்களாக விளங்கிய 42 இளைஞர்கள் இங்குதான் விசாரிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

1984 யூலை 10, யாழ். கோட்டை ஈழத்தமிழ் போராளிக ளினால் முற்றுகையிடப்பட்டது. இந்த முற்றுகைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட தளபதி கிட்டு தலைமை தாங்கினார். 1987 ஆகத்து 03, இந்திய அமைதிகாக்கும் படை யாழ்ப்பாணக் கோட்டைக்குள் பிரவேசிக்கும் வரை இந்த முற்றுகை தொடர்ந்து இருந்தது. சரியாக மூன்று ஆண்டுகள் 23 நாட்கள் இந்த முற்றுகை நடந்தது. யாழ்ப்பாணக் கோட்டை வரலாற்றில் மிக நீண்டகால முற்றுகை இதுவே. இது கோட்டையின் மூன்றாவது முற்றுகை ஆகும்.

இக் கால கட்டத்தில் கோட்டைக்கு இருந்து சிறீலங்கா இரா ணுவத்தினர் வெளியே வரமுயலும் வேளைகளில் பயங்கரமாக வெளியிலிருந்து தாக்கப்பட்டு அவர்கள் கோட்டைக்குள் முடக்கி வைக்கப்பட்டனர். அதனால், இராணுவத்தினர் கோட்டைக்குள் இருந்து எறிகணைத் தாக்குதல்களையும் வெகுதூரம் பாய் கின்ற ஆட்லறி எறிகணை தாக்குதல்களையும் மேற்கொண்டு வந்தனர்.

1687ஆம் ஆண்டு ஆரம்பதில் எறிகணை தாக்குதலோடு பொம்மர் விமானமும், உலங்குவானூர்திகளும் யாழ்ப் பாணத்தை அழிப்பதில் ஈடுபட்டன.


ஒப்பறேசன் பூமலை (இந்திய அரசினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை) முடிவுற யூலை 29, 1987 இல் இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தானது. ஆகத்து 03ஆம் திகதி விடுதலைப் புலிகள் அனுமதியுடன் இந்தியப்படை யாழ்ப் பாணக் கோட்டைக்குள் பிரவேசித்தது. இந்திய அமைதிப்படை இலங்கையை விட்டு வெளியேறியதும் சிறீலங்கா இராணுவம் கோட்டைக்குள் பிரவேசித்தது.

1990ஆம் ஆண்டு யூன் 11ஆம் திகதி விடுதலைப்புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்குமான சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்து மீண்டும் அன்றில் இருந்து இக்கோட்டை விடுதலைப் புலிகளால் முற்றுகையிடப்பட்டது.

106 நாட்களாக நடாந்தப்பட்ட இந்த முற்றுகைக்காலங்களில் இரு தரப்பினருக்கும் இடையில் கடும் தாக்குதல்கள் நடை பெற்றன. கோட்டை இராணுவத்தினருக்கு உதவியாக இக் காலப்பகுதியில் விமானப்படையின் குண்டு வீச்சு விமானங் களான “மாசெற்றி” களும், அவ்ரோ விமானங்கள் (பொதிகள் போட) பாரிய விமானமான வை 12 ஆகியனவும் தாக்குதலில் ஈடுபட்டன. கடந்த 1990.09.13ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் மாசெற்றி விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.

செப்டம்பர் 26, 1990 இல் சிறீலங்கா அரச படையினர் கோட் டையை விட்டு வெளியேறினர். தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி பானு அவர்கள் களம் பல கண்ட கோட்டையில் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.









36ஆம் ஆண்டு
வீரவணக்கம்
36th Year
Veeravanakkam
SEPT
26
2023
"மக்கள் புரட்சி வெடிக்கட்டும்
சுதந்திர தமிழீழம் மலரட்டும்"
ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன்
இராசையா பார்த்தீபன் [ஊரெழு, யாழ்ப்பாணம் 27.11.1963-26.09.1987]
Lt. Col. Thileepan
இந்திய அரசிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து, தமிழ் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை இந்திய அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் எனக்கேட்டு சாகும் வரை உண்ணா நோன்பு [15.09.1987-26.09.1987] இருந்து ஈகைச் சாவடைந்தார்.
Martyr died on a hunger strike till death (15.09.1987-26.09.1987) demanding five demands from the Government of India to fulfill the promises made to the Tamil people.
லெப். கேணல் குமரப்பா
லெப். கேணல் புலேந்திரன்
இந்திய – சிறீலங்கா சமாதான ஒப்பந்த காலப்பகுதியில் கடலில் பயணம் செய்த தளபதிகளை சிறீலங்கா கடற்படை கைது செய்து கொழும்பிற்கு கொண்டுசெல்ல முற்பட்டவேளை 05.10.1987 அன்று சயனைட் உட்கொண்டு வீரச்சாவை தழுவிக்கொண்ட லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட்ட பன்னிரு வேங்கைகளுக்கும் எமது 36ஆம் ஆண்டு வீரவணக்கம்
2ம் லெப். கஸ்தூரி
வீரவேங்கை ரஞ்சினி
வீரவேங்கை தயா
2ம் லெப். மாலதி
10.10.1987 அன்று கோப்பாய் பகுதியில் இந்தியப் படையுடன் நடந்த மோதலில் முதல் பெண் மாவீரரான 2ம் லெப். மாலதி மற்றும் அவருடன் 2ம் லெப். கஸ்தூரி, வீரவேங்கை ரஞ்சினி, வீரவேங்கை தயா ஆகிய மாவீரர்களுக்கும் எமது 36ஆம் ஆண்டு வீரவணக்கம்
தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் 10 அக்டோபர்
கேணல் சங்கர்
26.09.2001 அன்று முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் வீதியில் சிறீலங்கா ஆழ ஊடுருவும் படையினரால் நடாத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் வீரச்சாவடைந்தார். இம் மாவீரருக்கு எமது 22 ஆம் ஆண்டு வீரவணக்கம்
வைத்தியலிங்கம்
சொர்ணலிங்கம்
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் The thirst of the Thamils is the Homeland of Thamileelam
சங்கத்தமிழ்